பரிசுத்த வேதாகம

வகுப்புகள்

“உம்முடைய வசனமே சத்தியம்” - யோவான் 17:17

பரிசுத்த வேதாகம வகுப்புகள்

“உம்முடைய வசனமே சத்தியம்” - யோவான் 17:17

முன்னுரை

கிறிஸ்துவுக்குள் பிரியமுள்ள சகோதர, சகோதரிகளே நம்முடைய பரம பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

தேவனுடைய மிகுந்த கிருபையினால் வேதத்தில் பழைய ஏற்பாட்டில் உள்ள 39 புத்தகங்கள் குறித்தும், அவைகளை எளிதாக படித்து புரிந்துகொள்வது எப்படி என்பதைக் குறித்தும் இந்த புத்தகத்தில் பதிவிட்டிருக்கிறோம். மட்டுமல்ல, மல்கியாவிற்கும்-மத்தேயுவிற்கும் இடையில் இருக்கின்ற 400 வருட கால பகுதியில் நடந்த சம்பவங்களை குறித்தும் சுருக்கமாக இந்த புத்தகத்தில் தெரியப்படுத்தியிருக்கிறோம்.

இந்த புத்தகத்தின் வெளியீட்டாளாராக எங்களுடைய முக்கிய நோக்கம் கிறிஸ்தவர்களாகிய நாம் வேதத்தை படித்து அதன் அர்த்தங்களை புரிந்து கொள்ளவேண்டும் என்பதே.

தேவனுடைய நாமம் மகிமைப்படுவதாக!
ஆமென்!

பொருளடக்கம்

1.	கிறிஸ்தவர்கள் இன்று வேதத்தை எப்படி படிக்கிறார்கள்	1
2.	ஏன் வேதத்தை படிக்க வேண்டும்?	3
3.	எப்படி வேதத்தை படிக்க வேண்டும்?	5
4.	வேதத்தின் மகத்துவங்கள்	6
5.	பழைய ஏற்பாட்டு புத்தகங்களை குறித்து ஒரு ஆய்வு	9
6.	கிரேக்க மொழியில் வேதாகமம்	13
7.	எபிரேய பாஷையில் வேதாகமம்	16
8.	எபிரேய – கிரேக்க மொழிபெயர்ப்பு	20
9.	பரிசுத்த வேதாகமம் எபிரேயு–தமிழ் (ஆதியாகமம் முதல் 1 இராஜாக்கள் வரை)	23
10.	1 இராஜாக்கள் முதல் உன்னதபாட்டு வரை	29
11.	ஏசாயா முதல் தானியேல் வரை	33
12.	ஓசியா முதல் மல்கியா வரை	40
13.	ஆதியாகமம்	41
14.	யோபு	44
15.	யாத்திராகமம்	48
16.	லேவியராகமம்	52
17.	எண்ணாகமம் – 1	61
18.	எண்ணாகமம் – 2	67
19.	உபாகமம்	72
20.	யோசுவா	75
21.	நியாயாதிபதிகள்	82
22.	ரூத்	89
23.	1 சாமுயேல்	91
24.	2 சாமுயேல்	96
25.	1 இராஜாக்கள் – பாகம் – 1	101
26.	நீதிமொழிகள்	105
27.	பிரசங்கி	111
28.	உன்னதபாட்டு	115
29.	1 இராஜாக்கள் – பாகம் – 2	119
30.	1 இராஜாக்கள் – பாகம் – 3	123
31.	2 இராஜாக்கள் – பாகம் – 1	129

32.	2 இராஜாக்கள் – பாகம் – 2	133
33.	2 இராஜாக்கள் – பாகம் – 3	137
34.	2 இராஜாக்கள் – பாகம் – 4	140
35.	ஏசாயா – பாகம் – 1	143
36.	ஏசாயா – பாகம் – 2	147
37.	ஓசியா	155
38.	மீகா	161
39.	ஆமோஸ்	165
40.	செப்பனியா	170
41.	யோயேல்	174
42.	ஆபகூக்	179
43.	ஒபதியா	184
44.	யோனா	190
45.	நாகூம்	195
46.	எரேமியா – பாகம் – 1	201
47.	எரேமியா – பாகம் – 2	208
48.	புலம்பல்	219
49.	எசேக்கியேல் – பாகம் – 1	223
50.	எசெக்கியேல் – பாகம் – 2	228
51.	எசேக்கியேல் – பாகம் – 3	232
52.	தானியேல் – பாகம் – 1	236
53.	தானியேல் – பாகம் – 2	241
54.	எஸ்றா	246
55.	1 நாளாகமம்	250
56.	2 நாளாகமம்	256
57.	ஆகாய்	265
58.	சகரியா	268
59.	எஸ்தர்	273
60.	நெகேமியா	277
61.	மல்கியா	282
62.	சங்கீதம் – பாகம் – 1	286

63. சங்கீதம் – பாகம் – 2 289
64. சங்கீதம் – பாகம் – 3 296
65. சங்கீதம் – பாகம் – 4 303
66. மல்கியா–மத்தேயு இடைப்பட்ட காலப்பகுதி – பாகம் – 1 310
67. மல்கியா–மத்தேயு இடைப்பட்ட காலப்பகுதி – பாகம் – 2 315
68. மல்கியா–மத்தேயு இடைப்பட்ட காலப்பகுதி – பாகம் – 3 319

“உம்முடைய வசனமே சத்தியம்”

யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 1

ஏன் இந்த ஆராய்ச்சி வகுப்பு?

1. இன்று கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகவும் குறைந்து போன ஒரு காரியம் வேதம் வாசிப்பது.
2. கிரமமாக, அதிகாரம், அதிகாரமாக வேதம் வாசிப்பது குறைந்து போய்விட்டது.
3. இந்த வகுப்பின் மூலம் முழு வேதாகமத்தை குறித்த அறிவை நாம் பெற்று கொள்ள வேண்டும்.
4. இந்த வகுப்பின் மூலம் சத்தியம் சொல்லும் சகோதரர்களுக்கும், சத்தியம் கேட்கும் சகோதர, சகோதரிகளுக்கும் வேதத்தின் மீது ஒரு வாஞ்சை, விருப்பம் உண்டாக வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

இன்று கிறிஸ்தவர்கள் வேதத்தை எப்படி வாசிக்கிறார்கள் ?

1. கடமைக்காக வேதத்தை வாரம் ஒரு தடவை தொடுகிறவர்கள் உண்டு.
2. எனக்கு ஒன்றும் தூண்டுதல் இல்லை என்று வாசிக்காதவர்கள் உண்டு.
3. கவனமின்றி படிப்பவர்கள் இருக்கிறார்கள்.
4. மனதில் ஏற்றாமல், எப்படி வாசிப்பது என்று தெரியாமல் எங்கு படித்தோம்? என்ன படித்தோம்? என்று தெரியாமல், நினைக்காமல் வாசிப்பவர்கள் இருக்கிறார்கள்.
5. 3000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களை குறித்து ஆராய்ச்சி செய்தவற்கு வேதம் படிப்பவர்கள் இருக்கிறார்கள். (ஆராய்ச்சிக்காக மட்டும்)
6. அருகில் உள்ளவர்கள் படிப்பதினால் வேதம் படிப்பவர்கள் உண்டு.
7. மற்றவர்களை நியாயம் தீர்ப்பதற்கும், தான் வேதம் வாசிப்பவர் என்பதை மற்றவர்களுக்கு காட்டி கொள்வதற்கும் வேதம் வாசிப்பவர்கள் உண்டு.
8. வேதம் படித்து முடிக்க எவ்வளவு காலம் ஆகிறது என்பதை அறிந்து கொள்ள படிப்பவர்கள் இருக்கிறார்கள்.
9. தாவீது எப்படி சிங்கத்தையும், கரடியையும் கொன்றிருப்பார் என்பதை அறிந்து கொள்ள வேதம் வாசிப்பவர்கள் உண்டு.
10. வேறு எதுவும் புத்தகம் இல்லை என்பதால் வேதத்தை வாசிப்பவர்கள் உண்டு.
11. ஏன், எதற்கு என்று தெரியாமல் வேதம் வாசிப்பவர்கள் உண்டு. (கடமைக்காக)

12. எதிர்கருத்து (மாற்று கருத்து) சொல்வதற்காக வேதம் வாசிக்கிறவர்கள் இருக்கிறார்கள்.
13. தன் தந்தையின் கண்ணாடியை அணிந்து படிப்பவர்கள் உண்டு. தந்தை எவ்வளவு புரிந்து கொண்டாரோ அதை அளவு புரிந்து கொள்பவர்கள் உண்டு.
14. வேத விளக்க உரையாளர்கள் சொல்வதை மட்டும் புரிந்து கொண்டு அதன்படி மட்டும் படிக்கும் கூட்டமும் உண்டு.
15. ஏற்கனவே மனதில் இருக்கும் கருத்தை ஒப்பிட்டு பார்க்க வேதம் படிப்பவர்கள் இருக்கிறார்கள்.
16. கற்று கொள்வதற்காக அல்ல, கற்று கொடுக்க வேதம் வாசிப்பவர்கள் உண்டு.
17. சிறு, சிறு அதிகாரங்கள் (சங்கீத புத்தகம்) மட்டும் வாசிப்பவர்கள் உண்டு.
18. புரிந்ததை மட்டும் (வரலாற்று சம்பவங்கள்) படிப்பவர்கள் உண்டு.
19. தின தியான புத்தகங்கள் மட்டும் வாசிப்பவர்கள் உண்டு.
20. வாக்குதத்தங்கள் மட்டும் படிப்பவர்கள் உண்டு.
21. ஒரு வசனத்தை மட்டும் படித்து அதை உரிமையாக்கி கொள்பவர்கள் உண்டு. (உ.ம். யாத் 9 : 16 , ரோமர் 7 : 17)
22. அவசர, அவசரமாக படிப்பது, பிரசங்கத்தில் கேட்டதை மட்டும் குறித்து வைத்து படிப்பது, எவ்வித ஆராய்ச்சி புத்தகங்களும் இன்றி சுயமாக யூகித்து படிப்பவர்கள் உண்டு.

இதனால் இன்று அநேகருக்கு
வேதத்தின் மகத்துவங்களை புரிந்து கொள்ள முடியவில்லை.

... உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை
நீர் மகிமைப்படுத்தியருக்கிறீர் (சங் 138 : 2)



“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 2

ஏன் வேதத்தை படிக்க வேண்டும்?

1. பிதாவாகிய தேவன் வேதத்தை வாசிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். (ஏசா 34 : 16)
2. கர்த்தர் இயேசு சொல்லியிருக்கிறார் (யோவான் 5 : 39)
   கர்த்தர் இயேசு வேதம் படித்தார் (லூக்கா 4 : 16)
3. பரிசுத்த ஆவி நமக்கு கொடுக்கப்பட்டதின் நோக்கம் (யோவான் 16 : 13)
4. வேதத்தை படிக்கும்போது தவறான எண்ணங்கள் போகும் (மத் 22 : 29)
5. நல்ல குணங்கள் உருவாகும் (அப் 17 : 11)
6. நம்மை புத்திமானாக்குகிறது (மத் 7 : 24)
7. நம்மை சுத்தமாக்குகிறது (சங் 119 : 9)
8. சாத்தானை வெல்ல உதவுகிறது (மத் 4 : 4)
9. வேதத்தில் அதிசயங்கள் உண்டு (சங் 119 : 18)
10. நாம் அறியாத, நமக்கு எட்டாத காரியங்கள் உண்டு (எரே 33 : 3)
11. வேதத்தில் மகத்துவங்கள் உண்டு (ஓசியா 8 : 12)
12. மேன்மையும், அருமையுமான காரியங்கள் உண்டு (II பேது 1 : 4)

13. சங் 19 : 7 - 11

- குறைவற்றது (நிறைவானது - திருவிவிலியம்)
- ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் (புத்துயிர் அளிக்கும்)
- சத்தியம் - இது உண்மை (மற்றவேதங்கள் பொய்)
- பேதையை ஞானியாக்கும்
- இருதயத்தை சந்தோஷப்படுத்தும்
- தூய்மையானது
- கண்களை தெளிவாக்கும்
- நீதியானது
- பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பபடதக்கது.
- தேனிலும், தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமானது. (தேனிலும் தேனடையினின்று சிந்தும் தெளிதேனிலும் இனிமையானவை)

❖ நம்மை எச்சரிக்கும்.

❖ இவைகளை வாசித்து கைகொள்ளும் போது நமக்கு மிகுந்த பலன் உண்டு (அவற்றை கடைபிடிப்போருக்கு மிகுந்த பரிசுண்டு).

14. இன்று உலகத்தில் நமக்கு எவ்வளவோ முக்கியமான காரியங்கள் இருக்கின்றன. ஆனால் தேவனுக்கு முக்கியமான ஒரு காரியம் உண்டு. முக்கியமான ஒரு காரியத்தை தேவன் **செய்யப் போகிறார். அது என்ன?**

(ஏசா 42 : 21) அவர் வேதத்தை முக்கியப்படுத்தி அதை மகிமையுள்ளதாக்குவார்.

NIV : கர்த்தர் தமது அற்புதமான போதனைகளை
மகிமைப்படுத்த விரும்புகிறார்.

(தி.வி) ஆண்டவர் தம் நீதியின் பொருட்டுத் தம் திருச் சட்டத்தை
சிறப்பித்து மேன்மைப்படுத்த ஆர்வமுற்றார்.

15. தேவன் தமது வார்த்தையை சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும்
மகிமைப்படுத்தி இருக்கிறார் (சங் 138 2)

(தி.வி) அனைத்திற்கும் மேலாக உமது வார்த்தையை நீர்
மேன்மையுற செய்துள்ளீர்.

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 3

எப்படி வேதத்தை வாசிக்க வேண்டும் ?

1. ஜெபத்தோடு வாசிக்க வேண்டும்.
2. விசுவாசத்தோடு வாசிக்க வேண்டும்.
3. அமைதியான சூழ்நிலையில் வாசிக்க வேண்டும்.
4. உற்சாக மனநிலையில் வாசிக்க வேண்டும்.
5. குடும்பமாக வாசிக்க வேண்டும். (உபா 6 : 6, 7)
6. புத்தகம், புத்தமாக வாசிக்க வேண்டும்.
7. அதிகாரம், அதிகாரமாக வாசிக்க வேண்டும்.
8. சம்பவம், சம்பவமாக வாசிக்க வேண்டும்.
9. கேள்வி கேட்டு வாசிக்க வேண்டும்.
10. ஒப்பிட்டு படிக்க வேண்டும் (மற்ற மொழியாக்க பைபிளுடன்)
11. தியானம் செய்து படிக்க வேண்டும் (சங்க 1 : 1, 2 சங் 119 : 97)
12. சரித்திரத்தோடு ஒப்பிட்டு பார்த்து படிக்க வேண்டும்.
13. தேடி வாசிக்க வேண்டும்.
14. இன்று தேவன் என்னோடு என்ன பேசுகிறார் என்று கவனித்து வாசிக்க வேண்டும்.

வேதத்தை வாசிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

1. ஜீவன் தருகிறது (மத் 4 : 4, யோபு 23 : 12, யோவான் 6 : 63)
2. வெளிச்சம் தருகிறது (சங் 119 : 105)
3. இரட்சிப்பை தருகிறது (II தீமோ 3 : 15)
4. ஆவிக்குரிய வளர்ச்சிக்கு பலன் தருகிறது (1 பேதுரு 2 : 3)
5. ஆரோக்கியத்தை தருகிறது (தீத்து 2 : 1)
6. பரிசுத்த ஆவியை அதிகம் பெற உதவுகிறது (II தீமோ 3 : 16)
7. புது சிருஷ்டி பிறந்ததே வசனத்தினால்தான் (யாக் 1 : 18)

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 4

வேதத்தின் - மகத்துவங்கள்

1. 66 புத்தகங்களைக் கொண்ட முழு வேதாகமமானது பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது.
2. 66 புத்தகங்களில் 1189 அதிகாரங்கள் உள்ளது.
3. 1189 அதிகாரங்களில் 31,173 வசனங்கள் உள்ளது.
4. 31,173 வசனங்களில் தமிழ் வேதாகமத்தில் 8,10,697 வார்த்தைகளும், 7,73,692 வார்த்தைகள் ஆங்கில வேதாகமத்திலும் பதிவு செய்யப்பட்டு உள்ளது.
5. 8,10,697 வார்த்தைகளில் 35,66,480 எழுத்துக்கள் கொண்டதாக வேதாகமம் அமையப் பெற்றுள்ளது.
6. 6,468 கட்டளைகள் வேதத்திலுள்ளது.
7. 3,121 வாக்குத்தத்தங்கள் வேதத்தில் இடம் பெற்றுள்ளது.
8. 3,294 கேள்விகள் அமைந்துள்ளன.
9. வேதத்தில் தேவன் என்கிற வார்த்தை 3,358 முறை இடம் பெற்றுள்ளது.
10. கர்த்தர் என்கிற வார்த்தை 6.853 முறை இடம் பெற்றுள்ளது.
11. ஆண்டவர் என்கிற வார்த்தை 1,855 முறை இடம் பெற்றுள்ளது.
12. இயேசு என்கிற வார்த்தை 979 முறை இடம் பெற்றுள்ளது.
13. வேதத்திலேயே பெரிய பெயர்:-

    மகேர் சலால் அஷ் பாஷ் - (ஏசாயா 8 : 1) (ஏசாயா தீர்க்கதரிசியின் மகனுடைய பெயராகும்).
14. வேதத்திலேயே சிறிய பெயர்:-

    சோ - இவர் எகிப்தின் இராஜா. (2 இராஜா 17-4)

    நோ – என்கிற பட்டணம். (எசே 30 : 14 – 16)
15. 66 புத்தகத்திலேயே பெரிய வசனம் தானி 5 : 23
16. ஆங்கில வேதாகமத்தில் பெரிய வசனமாக அமையப்பெற்றிருப்பது: எஸ்தர் 8 : 9 (இந்த வசனத்தில் 89 வார்த்தைகளும், 425 எழுத்துக்களும் இடம் பெற்றுள்ளது).
17. வேதத்திலேயே சிறிய வசனம்:- யோவான் 11 : 35
18. வேதத்திலேயே பெரிய புத்தகம் சங்கீதம். (150 அதிகாரங்களைக் கொண்டுள்ளது).
19. வேதத்திலேயே சிறிய புத்தகம்- II யோவான் - (13 வசனங்களை மட்டுமே கொண்டுள்ளது).

20. வேதத்திலேயே **பெரிய அதிகாரம் 119-ம் சங்கீதம்** - (176 வசனங்களைக் கொண்டுள்ளது).
21. வேதத்திலேயே **சிறிய அதிகாரம் 117-ம் சங்கீதம்** - (2 வசனங்களை மட்டுமே கொண்டுள்ளது).
22. வேதத்திலேயே **மைய புத்தகம் மீகா, நாகூம்.**
23. 1,189 அதிகாரங்களின் **மைய அதிகாரம் சங்கீதம் 117.**
24. 31,173 வசனங்களில் **மைய வசனம் சங்கீதம் 118 : 8**

39 புத்தகங்கள் அடங்கியுள்ள பழைய ஏற்பாடு:-

மொத்த அதிகாரங்கள்	-	929
மொத்த வசனங்கள்	-	23,214
மொத்த வார்த்தைகள்	-	5,92,439
மொத்த எழுத்துக்கள்	-	27,28,100
பெரிய புத்தகம்	-	சங்கீதம் (150 அதிகாரம்)
சிறிய புத்தகம்	-	ஓபதியா (21 வசனங்கள்)
மைய புத்தகம்	-	நீதிமொழிகள்
பெரிய அதிகாரம்	-	119-ம் சங்கீதம் (176 வசனங்கள்)
சிறிய அதிகாரம்	-	117-ம் சங்கீதம் (2 வசனங்கள்)
மைய அதிகாரம்	-	யோபு 20-ம் அதிகாரம்
பெரிய வசனம்	-	தானியேல் 5 : 23
சிறிய வசனம்	-	1 நாளாகமம் 1 : 25
மைய வசனம்	-	2 நாளாகமம் 20 : 17, 18

27 புத்தகங்கள் அடங்கியுள்ள புதிய ஏற்பாடு:-

மொத்த அதிகாரங்கள்	-	260 அதிகாரங்கள்
மொத்த வசனங்கள்	-	7,959
மொத்த வார்த்தைகள்	-	1,81,253
மொத்த எழுத்துக்கள்	-	8,38,380
பெரிய புத்தகம்	-	மத்தேயு, அப்.நடபடிகள் (28 அதிகாரங்கள்)
சிறிய புத்தகம்	-	2 யோவான் (13 வசனங்கள்)
மைய புத்தகம்	-	2 தெசலோனிக்கேயர்
பெரிய அதிகாரம்	-	லூக்கா 1-ம் அதிகாரம் (80 வசனங்கள்)
சிறிய அதிகாரம்	-	2 யோவான் (13 வசனங்கள்)
மைய அதிகாரம்	-	ரோமர் 8, 9

பெரிய வசனம்	-	வெளி 50 : 4
சிறிய வசனம்	-	யோவான் 11 : 35
மைய வசனம்	-	அப்போஸ்தலர் 27 : 17

1. **மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்** எழுதின சுவிசேஷங்களும், **அப்.பவுல், பேதுரு, யாக்கோபு, யூதா** ஆகியோர் எழுதின நிருபங்களைக் கொண்டும் 27 புத்தகங்களாக அமைந்துள்ளதே இந்த புதிய ஏற்பாடாகும்.
2. அப்.புவுல் **ரோமர், I, II கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலேசெயர், I, II தெசலோனிகேயர்** ஆகிய சபைகளுக்கு எழுதின 9 கடிதங்களும்.
3. **I, II தீமோத்தேயு, தீத்து, பிலமோன்** ஆகியோருக்கு தனிப்பட்ட முறையில் எழுதின 4 கடிதங்களும் இந்தப் புதிய ஏற்பாட்டு நூலில் அமைந்துள்ளது.
4. மற்றும் **எபிரேயர், யாக்கோபு, I, II பேதுரு, I யோவான் வெளிப்படுத்தின விசேஷம்** ஆகிய பொதுவான ஆறு நிருபங்களும் அமைந்துள்ளது.
5. மேலும் **அப்.யோவான் தனிப்பட்ட முறையில் அம்மாளுக்கும் அவர்களுடைய பிள்ளைகளுக்கு எழுதிய II யோவான் எனப்படும் நிருபமும், காயுவுக்கு எழுதின III யோவான் எனப்படும் நிருபமும்** இந்தப் புதிய ஏற்பாட்டில் அமையப்பெற்றுள்ளது.
6. இப்படியாக மகத்துவமான தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய 66 புத்தகங்கள் அடங்கிய சத்திய வேதாகமமானது பலதரப்பட்ட தொழில் செய்து கொண்டிருந்த **தீர்க்கதரிசிகள், ஆசாரியங்கள், மீன்பிடிப்பவர்கள், இராஜாக்கள், ஞானிகள், ஆடு மேய்ப்பவர், அத்திப்பழ வியாபாரி, ராணுவ வீரர், கவிஞர், வேதபாரகர், கூடார தொழில் செய்பவர், சிறைக்கைதி, மருத்துவர், பாடகர் இப்படி** அநேக தேவனுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியின் மூலம் ஏவப்பட்டு **பழைய ஏற்பாடு 1600** வருடங்களைக் கொண்டும் **புதிய ஏற்பாடு 100** வருடங்களைக் கொண்டும் மொத்தம் **1700 வருடங்களாக** எழுதி முடிக்கப்பட்டதாகும்.



"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

<u>பரிசுத்த வேதாகமம்</u>

<u>வகுப்பு - 5</u>

❖ வேதத்தில் மொத்தம் 1189 அதிகாரங்கள் உள்ளன.

வேதவார்த்தைகளை அதிகாரங்களாக பிரித்தவர்

கார்டினல் ஹீகோ டி எஸ் கேரா

(Cardinal Hugo De S. caro)



கார்டினல் ஹீகோ டி எஸ் கோரா

கி.பி. 1234-ல் அதிகாரங்களாக பிரித்தார்.

❖ வேதத்தில் மொத்தம் 31.173 வசனங்கள் இருக்கினறது.

தேவவார்த்தைகளை வசனங்களாக பிரித்தவர்.

ராபெர்ட்ஸ் ஸ்டிபென்ஸ் (Robertus Stephanus)

கி.பி. 1551-ல் வசனங்களாக பிரித்தார்.

ராபெர்ட்ஸ் ஸ்டிபென்ஸ்

<u>முதல்பக்கம்</u>

பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்த வேதாகமம்.

இதில் இரண்டு பிரிவுகள் இருக்கிறது.

1. பழைய ஏற்பாடு.
2. புதிய ஏற்பாடு

ஆங்கிலத்தில் இதன் பெயர் பைபிள் (Bible)

❖ **<u>பைபிள் என்ற பெயர் எப்படி வந்தது?</u>**

கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது.

பிப்லியா (Biblia) - இது பன்மை சொல்.

இதன் அர்த்தம் "**புத்தகங்களின் புத்தகம்**"

இதன் இன்னொரு அர்த்தம் "**எழுதப்பட்ட ஒரு பத்திரம்**"

இன்னொரு பெயர் "**ஏற்பாடு**" **(Testament)**

"**சாகும் நேரத்தில் எழுதப்பட்ட உயில்**" என்ற பெயரும் உண்டு.

அடுத்து பார்க்கும் போது,

இது
எபிரேயு கிரேக்கு என்னும் மூல பாஷைகளிலிருந்து
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

இங்கு எத்தனை மொழிகள் சொல்லப்பட்டு இருக்கிறது?

1. எபிரேயு.
2. கிரேக்கு
3. தமிழ்

- அநேகர் தமிழ்வேதம் ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. என்று நினைக்கின்றனர். இது தவறு.
- தமிழ் பைபிள் எபிரேயு, கிரேக்க மொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது.
- எனவே வேதத்தை சரியாக விளங்கி கொள்ள வேண்டுமாளால், **"மூல பதத்திற்கு"** போய் பார்க்க வேண்டும்.
- ஆங்கிலத்தில் பார்ப்பது நல்லது என்றாலும் முழுமையானது அல்ல.

எபிரேயு, கிரேக்க பானஷயில் எதை மொழி பெயர்த்து இருக்கிறார்கள்?

பழைய ஏற்பாடு	-	எபிரேயு பானஷ
புதிய ஏற்பாடு	-	கிரேக்க பானஷ

இரண்டாம் பக்கம்

பழைய ஏற்பாட்டின் ஆகமங்கள்.

ஆதியாகமம் முதல் மல்கியா வரை 39 புத்தகங்கள்

இந்தப்பட்டியல்.

"நிகழ்ச்சிகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்படவில்லை".
"தலைப்புகளின் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது".

- இது நாம் வேத புத்தகங்களை குறித்து அறிந்திருக்க வேண்டிய முக்கிய விஷயம்.
- பழைய ஏற்பாட்டு புத்தகங்களின் வரிசை தலைப்புகளின் அடிப்படையில் இருக்கிறது.

- ❖ நிகழ்ச்சிகள் அதாவது சரித்திரம் தெரிந்திருந்தால் தான் வேதம் புரியும்.
- ❖ சரித்திரம் புரிந்து வேதம் படிக்க வேண்டும்.

<u>இப்போது பழைய ஏற்பாட்டு புத்தகங்களைப்பார்க்கலாம்.</u>

ஆதியாகமம் - மல்கியா = 39 புத்தகங்கள்

<u>பழைய ஏற்பாட்டு அட்டவணையை 4 பிரிவுகளாக பிரிக்கலாம்.</u>

1. பிரமாணபுத்தகம் (சட்ட புத்தகம்)
2. வரலாற்று புத்தகங்கள்.
3. கவிதைப் புத்தகங்கள்.
4. தீர்க்கதரிசன புத்தகங்கள்.

<u>1. பிரமாண புத்தகம் (சட்ட புத்தகம்)</u>

1. ஆதியாகமம்
2. யாத்திராகமம்
3. லேவியராகமம்
4. எண்ணாகமம்
5. உபாகமம்.

<u>2. வரலாற்று புத்தகங்கள் (சரித்திர புத்தகங்கள்)</u>

1. யோசுவா
2. நியாயாதிபதிகள்
3. ரூத்
4. I சாமுயேல்
5. II சாமுயேல்
6. I இராஜாக்கள்
7. II இராஜாக்கள்
8. I நாளாகமம்
9. II நாளாகமம்
10. எஸ்றா
11. நெகேமியா
12. எஸ்தர்.

3. கவிதைப் புத்தகங்கள்

1. யோபு
2. சங்கீதம்
3. நீதி மொழிகள்
4. பிரசங்கி
5. உன்னதப்பாட்டு

4. தீர்க்கதரிசன புத்தகங்கள் (2 பிரிவு)

I. பெரிய தீர்க்க தரிசன புத்தகங்கள்

II சிறிய தீர்க்க தரிசன புத்தகங்கள்.

I. பெரிய தீர்க்க தரிசன புத்தகங்கள்

1. ஏசாயா
2. ஏரேமியா
3. புலம்பல்
4. எசேக்கியேல்
5. தானியேல்

II . சிறிய தீர்க்க தரிசன புத்தகங்கள்

1. ஓசியா
2. யோயேல்
3. ஆமோஸ்
4. ஒபதியா
5. யோனா
6. மீகா
7. நாகூம்
8. ஆபகூக்
9. செப்பனியா
10. ஆகாய்
11. சகரியா
12. மல்கியா

இந்த பிரிவுகளின் அடிப்படையில் வேதம் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. தலைப்புகள் அடிப்படையில் அமைக்கப்பட்டு இருக்கிறது.



"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 6

எபிரேயு பானஷயில் பழைய ஏற்பாடு

- எபிரேயு பானஷயில் பழைய ஏற்பாடு புத்தகங்கள் மொத்தம் **24 புத்தகங்கள்**.
- எபிரேயு பானஷயில் பழைய ஏற்பாட்டுக்கு "**தானாக்" (TaNaK)** என்று பெயர்.
- யூதர்கள் இந்த தானாக் -ஐ தான் இன்று வரை படிக்கிறார்கள்.
- யூதர்கள் பைபிள் படிப்பதில்லை.
- இரட்சிக்கப்பட்ட யூதர்கள் தவிர பாரம்பரிய யூதர்கள் யாரும் பைபிள் படிக்க மாட்டார்கள்.
- யூதர்களிடம் இருப்பது தானாக் மட்டும்தான்.

தானாக்

தானாக்கில் 24 புத்தகங்கள் என்று பார்த்தோம்.
நமக்கு 39 புத்தகங்கள் இருக்கிறது.
நாம் வைத்திருக்கும் பழைய ஏற்பாட்டிற்கும், யூதர்கள் வைத்திருக்கும் தானாக் இரண்டுக்கும் என்ன வித்தயாசம்?

தானாக்கில் புத்தகங்கள் குறைந்திருக்கிறதா?

இல்லை. அதே புத்தகங்கள் அப்படியே இருக்கிறது.

பின்பு எப்படி புத்தகங்கள் குறைந்தது?

1. I சாமுயேல், II சாமுயேல் தானாக்கில் "**சாமுயேல்**" என்று ஒரே புத்தகமாகவும்,
2. I இராஜாக்கள் , II இராஜாக்கள் தானாக்கில் **"இராஜாக்கள்**" என்று ஒரே புத்தகமாகவும்.
3. I நாளாகமம் , II நாளாகமம் தானாக்கில் "**நாளாகமம்"** என்று ஒரே புத்தகமாகவும்
4. **எஸ்றா, நேகேமியா** தானாக்கில் ஒரே புத்தகமாகவும்
5. **ஓசியா முதல் மல்கியா** வரை (12 புத்தகங்கள்) ஒரே புத்தகமாகவும் தானாக்கில் அமைக்கப்பட்டு இருக்கிறது.

எனவே அவர்களுக்கு **24 புத்தகங்கள்**
நமக்கு **39 புத்தகங்கள்**

<u>இப்போது தானாக்கில் உள்ள் 24 புத்தகங்கள் குறித்தும் பார்க்கலாம்.</u>

தானாக் -ஐ ஆரம்பத்தில் 2 பிரிவுகளாக பிரித்திருந்தனர்.

1. தோரா (TORAH)
2. நெபீம் (NEBHIM) இதை நபீம் என்றும் சொல்லலாம்.

<u>1. தோரா</u>

இதில் 5 புத்தகங்கள் அடங்கும் (ஆதியாகமம் முதல் உபாகமம் வரை)
முதல் 5 புத்தகங்களுக்கு தோரா என்று பெயர்
யூதர்கள் தோராவிற்கு மிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.
இதை வாசிக்கும் போது யூதர்கள் எழுந்து நின்று தான் வாசிப்பார்கள்.

<u>2. நெபீம்</u>

இதில் 19 புத்தகங்கள் அடங்கும்.

தோரா – ***நியாயப்பிரமாணம்*** என்றும்

நெபீம் - ***தீர்க்கதரிசன ஆகமம்*** என்றும் அழைக்கப்பட்டது. *(மத் 5 : 17) (மத் 11 : 13) (மத் 22 :36 - 40) (அப் 13 : 15)*

தோராவிற்கு தலைவராக ***மோசேயையும்***,

நெபீம் -க்கு தலைவராக ***எலியாவையும்*** வைத்தார்கள்.

மோசே, எலியா சேர்த்து சொல்லப்படும் இடங்கள் தானாக்கை குறிப்பதாக இருக்கிறது (மத் 17 : 3)

<u>இதன் பின்பு தானாக்கை 3 பிரிவுகளாக பிரித்தனர்.</u>

1. தோரா (TORAH)
2. நெபீம் (NEBHIM)
3. கெத்து பீம் (KETHUBIM)

<u>1 .தோரா (TORAH)</u>

1. ஆதியாகமம்
2. யாத்திராகமம்
3. லேவியராகமம்
4. எண்ணாகமம்
5. உபாகமம்.

2. நெபீம் (NEBIM)

1. யோசுவா
2. நியாயாதிபதிகள்.
3. சாமுயேல்
4. இராஜாக்கள்
5. ஏசாயா
6. எரேமியா
7. எசேக்கியேல்
8. சிறிய தீர்க்க தரிசன புத்தகங்கள்
   (ஓசியா முதல் மல்கியா வரை)

எபிரேயு தானாக்

3. கெத்து பீம் (KETHUBIM)

1. சங்கீதம்
2. நீதி மொழிகள்
3. யோபு
4. உன்னதப்பாட்டு
5. ரூத்
6. புலம்பல்
7. பிரசங்கி
8. எஸ்தர்
9. தானியேல்
10. எஸ்றா, நெகேமியா
11. நாளாகமம்

எபிரேயு மொழியில் 24 புத்தகங்கள்

மூன்று பிரிவுகள்

1. தோரா. 2. நெபீம். 3. கெத்துபீம்.

தமிழ் மொழியில் 39 புத்தகங்கள்

நான்கு பிரிவுகள்

1. பிரமாண புத்தகம்
2. வரலாற்று புத்தகங்கள்
3. கவிதைப் புத்தகங்கள்
4. தீர்க்கதரிசன புத்தகங்கள்

எபிரேயு எழுத்துக்கள்

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 7

எபிரேயு பானஷயில் (தானாக்) 24 புத்தகங்கள் நமக்கு தமிழில் மொழி பெயா்ப்பு செய்யும் போது எப்படி 39 புத்தகங்கள் ஆனது?

இதற்கான பதில் வரலாற்று பிண்ணனியில் நாம் பார்க்க வேண்டும்.

1. பழைய ஏற்பாடு மல்கியாவோடு முடிகிறது.
2. புதிய ஏற்பாடு மத்தேயுவில் ஆரம்பிக்கிறது.
3. பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் **400 வருஷங்கள்** இடைப்பட்ட காலங்கள் ஆகும்.

இந்த 400 வருஷங்களில் நடந்த சம்பவங்கள்

கிரேக்க சாம்ராஜ்யம் உலக ராஜ்யமாக இருந்தது.
இந்த கிரேக்க சாம்ராஜ்யத்தை நிறுவியவா் **மகா அலேக்சாண்டர்.**
இவா் ஒரு சட்டம் கொண்டு வந்தாா்.
ஒரே ஆட்சி ஒரே மொழி.
எங்கும் கிரேக்க மொழி ஆட்சி மொழியாக அமல்படுத்தப்பட்டது.

- இந்த நாட்களில் சிதேக்கியா ராஜாவின் காலத்தில் பாபிலோனுக்கு சிறை பிடிக்கப்பட்ட யூதா்கள் 70 வருஷம் முடிந்து திரும்பி வரும்போது சிறைப்பட்டு சென்றவா்கள் எல்லோரும் திரும்பி வரவில்லை. அநேகா் பல இடங்களுக்கு சிதறடிக்கப்பட்டிருந்தனா். இவா்களில் அநேகா் எபிரேய மொழியை அறியாதிருந்தனா். ஆனால் இவா்கள் அனைவரும் கிரேக்க மொழியை அறிந்திருந்தனா்.
- இந்த கிரேக்க ஆட்சி காலத்தில் “**எலியேசா்**” என்ற ஆசாரியன் இருந்தாா். இவா் கிரேக்க மன்னன் இரண்டாம் டாலமியின் அனுமதியின் பேரில் 72 போ் கொண்ட ஒரு குழு அமைத்து அவா்களை அலேக்சாந்திரியா பட்டணத்தில் பாரோஸ் என்ற தீவிற்கு கொண்டு போய்

  எபிரேய மொழியில் இருந்த தானாக்கை (பழைய ஏற்பாடு) கிரேக்க மொழியில் மொழி பெயா்த்தாா்.

- கி.மு. 250-ல் எபிரேய மொழியில் இருந்த தானாக் கிரேக்க மொழியில் மொழி பெயா்க்கப்பட்டது.

கிரேக்க எழுத்துக்கள்



கிரேக்க மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட

தானாக் அதாவது பழைய ஏற்பாட்டிற்கு

செப்டுவஜின்ட் (SEPTUVAGINT)

என்று பெயர்.

- இவ்வாறு சிரேக்க மொழியில் தானாக்கை மொழியாக்கம் செய்யும்போது சாமுயேல், ராஜாக்கள் போன்ற புத்தகங்கள் பக்கங்கள் அதிகமாகியது. எனவே இவைகளை இரண்டாக பிரித்தார்கள். இப்போது மொத்த புத்தகங்கள் 39 ஆனது.

நாம் நினைவில் வைக்க வேண்டியது

பழைய ஏற்பாட்டுக்கு எபிரேயு பானஷயில் "**தானாக்**" என்று பெயர் (24 புத்தகங்கள்)

கிரேக்க பானஷயில் "**செப்டுவஜின்ட**" என்று பெயர் (39 புத்தகங்கள்)

செப்டுவஜிண்ட் -ல் 39 புத்தகங்கள் 4 பிரிவுகளாக பிரித்தனர்.

(தானாக்கில் 3 பிரிவு மறந்துவிட கூடாது).

1. பஞ்சாகமம்.
2. வரலாற்று ஆகமங்கள்.
3. கவிதை புத்தகங்கள்.
4. தீர்க்க தரிசன புத்தகங்கள்.

இதை அடிப்படையாக கொண்டே தமிழ் வேதம் மொழி பெயர்க்கப்பட்டது. இதைத்தான் வேதத்தின் முதல் பக்கத்தில் பார்க்கிறோம்.

எபிரேயு - கிரேக்கு – தமிழ்

- ஆங்கிலத்திலிருந்து தமிழ் வேதம் மொழி பெயர்க்கப்படவில்லை.
- ஆங்கில வேதமும் கூட இதே போல மூலபானஷயிலிருந்து தான் மொழி பெயர்க்கப்பட்டது.

இதற்குபின் கிரேக்கிலிருந்து இத்தாலிக்கு மொழியாக்கம் செய்தனர்.

இதன் பெயர் L X X - இலத்தீன் பைபிள்

L	-	50
X	-	10
X	-	10
		70

70 பேர் கொண்ட குழு எபிரேயுவிலிருந்து கிரேக்குக்கு மொழி பெயர்த்ததால் இலத்தீன் பைபிளுக்கு **LXX** என்ற பெயர் வந்தது.

1. எபிரேயு மொழியில் எழுதப்பட்ட பழைய ஏற்பாடு முதலில் கிரேக்க மொழியிலும் பின்பு இலத்தீன் மொழியிலும், பின்பு பிரெஞ்ச் மொழியிலும் பின்பு ஆங்கில மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டு இன்று ஏறக்குறைய 2300 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு உலகமெங்கும் உள்ள 90 சதவீத ஜனங்களின் கைகளில் "**பரிசுத்த வேதாகமம்**" தவழ்ந்து கொண்டு இருக்கிறது.

திருவிவிலியம்

1. எபிரேயு பானஷயில்	24 புத்தகங்கள்
2. நமக்கு பழைய ஏற்பாட்டில்	39 புத்தகங்கள்
3. திருவிவிலியத்தில்	46 புத்தகங்கள்

❖ 39 புத்தகங்கள் திருவிவிலியத்தில் எவ்வாறு 46 புத்தகங்கள் ஆனது?

பழைய ஏற்பாட்டுக்கும், புதிய ஏற்பாட்டுக்கும் இடையில் 400 ஆண்டுகள் என்று பார்த்தோம். இந்த 400 ஆண்டுகளில் ஒரு சில நிகழ்ச்சிகள் நடந்தன.

- ❖ அலேக்சாந்தர் மரணம்.
- ❖ அவருடைய 4 தளபதிகள் மூலம் ஆட்சி பிரிக்கப்படுகிறது.
- ❖ இந்த நாட்களில் யூதர்களுக்கும், கிரேக்கர்களுக்கும் பிரச்சனை கிளம்புகிறது.
- ❖ இஸ்ரயேல் தேசத்தில் இருந்த யூதர்கள் கிரேக்கருக்கு விரோதமாய் எழும்புகிறார்கள்.
- ❖ கிரேக்கருக்கு விரோதமாய் எழும்பின யூத கூட்டத்தாருக்கு **மக்கபெயர்** என்று பெயர்.
- ❖ யூதர்களை கிரேக்கர்கள் கொடுமைப்படுத்த ஆரம்பித்தனர்.
- ❖ இதனால் யூதர்களில் **அரசியல் ரீதியாக** ஒரு குழுவும், **மதரீதியாக** ஒரு குழுவும் எழும்பினார்கள்.
- ❖ அரசியல் ரீதியாக எழும்பினவர்கள் **சதுசேயர்** எனவும், மதரீதியாக எழும்பினவர்கள் **பரிசேயர்** எனவும் அழைக்கப்பட்டனர்.
  (இது போன்ற பெயர்களை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்க முடியாது).
- ❖ இந்த 400 வருடங்களில் கிரேக்க சாம்ராஜ்யம் போய் **ரோம சாம்ராஜ்யம்** வருகிறது.

❖ இந்த 400 வருடங்களில் சில ஆகம புத்தகங்களை சில மனிதர்கள் எழுதினார்கள். இந்த ஆகம புத்தகங்களை பின் நாட்களில் பழைய ஏற்பாட்டு புத்தகங்களோடு சேர்த்தார்கள். இப்போது 39 புத்தகங்கள் 46 ஆனது. இதைத்தான் இன்று கத்தோலிக்க சபையார் பயன்படுத்தி வருகிறார்கள்.

ஏன் இதை நாம் தள்ளிவிட்டோம்?

இதன் பெயரே **தள்ளுபடி ஆகமம்**
எனவே நாம் தள்ளி விட்டோம்.

கத்தோலிக்க வேதத்தில் இருக்கும் 7 புத்தகங்களின் பெயர்.

1. தொபியாசு ஆகமம்.
2. யூதித் ஆகமம்.
3. ஞான ஆகமம்.
4. சீராக் ஆகமம்.
5. பாரூக் ஆகமம்.
6. I மக்கபே ஆகமம்.
7. II மக்கபே ஆகமம்.

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 8

பரிசுத்த வேதாகமம் மொழிபெயர்பு (எபிரேயு - கிரேக்கு)

- எபிரேயு பாஷையில் பழைய ஏற்பாடு – 24 புத்தகங்கள் **“தானாக்”**
- கிரேக்கு பானையில் இதை மொழி பெயர்க்கும் போது 39 புத்தகங்கள் **“செப்டுவஜின்ட்”**
- கத்தோலிக்க வேதத்தில் பிற்சேர்க்கை ஆகமங்கள் **“அப்போகரிப்பா”** என்று பெயர்.

கத்தோலிக்க வேதத்தில் பிறசேர்க்கை ஆகமங்கள் (அப்போகரிப்பா) எப்போது பைபிளில் இணைக்கப்பட்டது?

புதிய ஏற்பாட்டு காலத்தில் பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் நாட்களில் போப் ஆட்சி காலத்தில் சேர்க்கப்பட்டது.

இந்த பிற்சேர்க்கை ஆகமங்களை படிக்கலாமா?

படிக்கலாம். ஆனால் அது வேதம் அல்ல. தேவன் அதை அங்கீகரிக்கவில்லை.

பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் 400 வருட சரித்திரம் இருக்கிறது. இதை தெரிந்து கொண்டு புதிய ஏற்பாடு படிக்கும் போதுதான் புதிய ஏற்பாட்டை முழுவதுமாக புரிந்து கொள்ள முடியும்.

எபிரேய மொழியிலிருந்து கிரேக்கு பாஷையில் வேதம் மொழி பெயர்க்கும் போது நடந்த ஒரு சில காரியங்கள் குறித்துப் பார்க்கலாம்.

ஏன் எபிரேயு பாஷையிலிருந்து கிரேக்கு பாஷைக்கு வேதத்தை மொழி பெயர்த்தார்கள்?

கிரேக்க மன்னன் **“இரண்டாம் தாலமி”** காலத்தில்தான் இந்த மொழி பெயர்ப்பு வேலைகள் நடந்தது. இவருடைய முழு பெயர் **தாலமிபிலாடெல்பஸ் (Ptolemy Philadelphus)**



தாலமிபிலாடெல்பஸ்

ஏன் இவர் கிரேக்க மொழி பெயர்ப்புக்கு ஒத்துக் கொண்டார்?

யூதர்கள் மத வைராக்கியம் நிறைந்தவர்கள். தங்கள் ஆலய கூடுகைகளில் எபிரேயு பாஷையில்தான் வேதத்தை வாசித்து கொண்டு இருந்தார்கள். இப்போது கிரேக்கு பாஷையில் மொழி பெயர்த்துவிட்டால் ஆராதனையை கிரேக்கு பாஷையில் நடத்த ஆரம்பித்து விடுவார்கள். சில காலத்திற்குள் சுத்தமாக தங்கள் தாய் மொழியை மறந்து கிரேக்க மொழிக்குள் வந்து விடுவார்கள் என்று நினைந்து இந்த மொழி பெயர்ப்பு வேலையை செய்யுமாறு கூறினார்.



இதற்கு யூத ரபிமார்கள் சம்மதித்தார்கள்.

72 பேர் கொண்ட குழு இதை செய்தார்கள் என்று பார்த்தோம்.
70 பேர் என்றும் சொல்கிறார்கள்.
ஏனென்றால் செப்டுவஜன்ட் என்றால் கிரேக்கில் 70 என்று அர்த்தம்.
அதனால் தான் இலத்தினில் மொழி பெயர்க்கும் போது **LXX** என்று பெயர் வைத்தார்கள்.

எபிரேயு பாஷையிலிருந்து கிரேக்கும் பாஷைக்கு மொழி பெயர்க்கும் போது நடந்த ஒரு சில காரியங்கள்

- இந்த மொழி பெயர்ப்பில் ஈடுபட்டவர்கள் 70 பேர் (72 என்றும் சொல்கிறார்கள்) என்று பார்த்தோம்.
- **எலியேசர்** என்ற ஆசாரியனின் தலைமையில் யாருடைய தொந்தரவும் இருக்கக் கூடாது என்பதற்காக **அலேக்சாந்திரியா** பட்டணத்தில் **பாரோஸ்** என்ற தீவில் இந்த 70 பேரும் தங்க வைக்கப்பட்டு அங்குதான் மொழிபெயர்த்தார்கள்.
- இதை **பாப்பிரஸ்** துண்டுகளில் (புல்லில் இருந்து உருவாக்கப்பட்ட தாள்) மையை கொண்டு எழுதினார்கள். (இந்த பாப்பிரஸ் என்ற வார்த்தையே பைபிள் ஆனது).
- இவ்வாறு மொழியாக்கம் செய்யும் போது ஒரு யூத ரபீ எபிரேய வேதத்திலிருந்து ஒரு வசனத்தை வாசிக்க, மற்றொருவர் இதை கிரேக்கிலே சொல்லுவார். அவ்வாறு சொல்லும்போது கர்த்தர் அதாவது **யெகோவா** என்ற பதம் வரும் போதெல்லாம், அதை உச்சரிக்கும் முன்பாக யூத ரபீ மார்கள் தங்களை சுத்திகரித்து கொள்வார்கள்.

- குளித்து, வாயை சுத்தம் செய்து கொண்டு வந்து, அமா்ந்து தேவனுடையை நாமத்தை சொல்வார்கள். எழுதுகிறவர் தன் பழைய எழுத்தாணியை வைத்துவிட்டு ஒரு புதிய எழுத்தாணியை எடுத்து கொண்டு புதிய மையை மாற்றி எழுதுவார்.
- ஒரே வசனத்தில் 4 முறை கா்த்தா் என்று வந்தாலும் ஒவ்வொரு முறையும் தன்னை சுத்திகரிப்பார். எழுதுபவரும் சலிக்காமல் பேனாவையும், மையையும் மாற்றுவார்.

இப்படியாய் எபிரேயுவிலிருந்து (தானாக்) கிரேக்கு வேதம் (செப்டுவஜின்ட்) வந்தது.

"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 9

பரிசுத்த வேதாகமம் மொழி பெயர்ப்பு (எபிரேயு - தமிழ்)

தமிழ் வேதத்தை மொழி பெயர்த்தவர்

'சீகன் பால்கு'

ஜெர்மன் நாட்டை சேர்ந்தவர்

முழு பெயர் - பர்த்தலோமேயு சீகன்பால்டு

BARTHOLOMEW ZIEGENBALG

பிறந்த தேதி - 10-07-1682

இவர் புதிய ஏற்பாட்டை முதலில் தமிழில் மொழி பெயர்த்தார்.

1708 – தொடங்கி 1711 – (4 வருஷங்கள்) மொழி பெயர்த்து முடித்தார்.

- சீகன் பால்கு தமிழை கற்பதில் மிகவும் **கஷ்டப்பட்டார்.**
- திண்ணை பள்ளி கூடத்தில் சிறுவர்களுடன் அமர்ந்து **மணலில் எழுதி** தமிழ் எழுத்துக்களை படித்தார். (கையில் இரத்தம் வர)
- தமிழை கற்கும் வரை **தன் தாய் மொழி உட்பட எந்த மொழி நூல்களையும் படிக்க கூடாது** என்று வைராக்கியம் கொண்டு படித்தார்.
- ஒரு நாளைக்கு **10 மணிநேரம்** படித்தார்.
- **8 மாதங்களில்** தமிழில் பிழையின்றி பேசவும், எழுதவும் துவங்கிவிட்டார்.
- இவர் மொழி பெயர்த்த **புதிய ஏற்பாடு 494** பக்கங்களைக் கொண்டது.
- அடுத்ததாக மொழி பெயர்ப்பை அச்சடிக்க வேண்டும்.
- அச்சு இயந்திரம் **இங்கிலாந்திலிருந்து** வந்தது.
- அச்சு இயந்திரம் மிகப்பெரியதாக இருந்தது. அதை இயக்க ஆளில்லை.
- தரங்கம்பாடியில் இருக்கிறவர்கள் அதை வினோத பொருளாக பார்க்க ஆரம்பித்தார்கள்.
- இதை இயக்க ராணுவத்தில் ஒருவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை அழைத்து வந்தார்.
- ஜெர்மனியிலிருந்து அச்சு எழுத்துக்கள் வந்தது. அவை மிகவும் பெரியதாக இருந்தது.

❖ தன்னுடைய முயற்சியில் தளராத சீகன்பால்கு தரங்கம்பாடியிலே அவரே அச்செழுத்துக்களை வார்ப்பிக்கவும் ஆரம்பித்துவிட்டார்.



முதல் தமிழ் வேதாகமம்

முதல் தமிழ் அச்சு இயந்திரம்



அச்சகம், அச்செழுத்து வார்ப்பு இவையிரண்டும் இந்தியாவில் முதன் முதலில் துவங்கப்பட்டது நமது தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில்தான். முதலில் அச்சடிக்கப்பட்ட புத்தகமும் வேதபுத்தகம்தான்.

இதுவே தமிழ்வேதம் மொழிபெயர்க்கபட்ட வரலாறு ஆகும்.

→



→

ஜான் கூட்டன் பார்க்

வேதத்தில் அடுத்த பக்கம்

பழைய ஏற்பாட்டின் ஆகமங்கள்

ஒவ்வொரு புத்தகத்தில் இருக்கும் காரியங்களின் பதிவை சுருக்கமாக பார்க்கலாம்.

1. ஆதியாகமம்

இந்த புத்தகத்தில் ஆதாமிலிருந்து 2000 வருட நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இந்த ஆதியாகமத்தை 4 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. சிருஷ்டிப்பு
2. வீழ்ச்சி
3. ஜலப்பிரளயம்
4. தேசங்கள் பிரிதல்.

4 முக்கிய நபர்களின் வாழ்க்கை முறை இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

1. ஆபிரகாம்.
2. ஈசாக்கு
3. யாக்கோபு
4. யோசேப்பு,

   யோசேப்பின் மரணத்தோடு இந்த புத்தகம் முடிகிறது.

2. யாத்திராகமம்

ஆதியாகமத்தில் யோசேப்பின் காலத்தில் எகிப்து சென்ற ஜனங்களை **மோசே மூலமாக** தேவன் மீட்டு வருவதை இந்த புத்தகம் குறிக்கிறது.

- வருகிற வழியில் **பிரமாணங்கள்** கொடுக்கிறார்.
- **ஆசரிப்பு கூடாரம்** எப்படி கட்ட வேண்டும் என்று சொல்கிறார்.
- தேவன் சொன்னபடி **ஆசரிப்பு கூடாரம் கட்டப்படுகிறது**.

இதைக்குறித்து கூறும் புத்தகம் யாத்திராகமம்.

3. லேவியராகமம்.

இந்த ஆசரிப்பு கூடாரத்தில் **லேவி கோத்திரத்தார் செய்ய வேண்டிய வேலைகள், பலி செலுத்த வேண்டிய காரியங்கள்** குறித்து கூறும் புத்தகம் லேவியராகமம்.

4. எண்ணாகமம்

வனாந்திரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் செல்லும்போது என்னென்ன காரியங்கள் நடந்தது என்பதை குறித்து கூறும் புத்தகம் எண்ணாகமம். சுமார் **38 வருட சம்பவங்கள்** இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

5. உபாகமம்

இதில் முழுக்க, முழுக்க **மோசேயின் செய்தி** (கடைசி பிரசங்கம்) பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவன் இஸ்ரயேல் ஜனங்களுக்கு என்னவெல்லாம் செய்தார் என்பதை குறித்து கூறும் நூல் உபாகமம்.

இதன் முடிவில் மோசே மரிக்கிறார்.

இவர் இடத்திற்கு அடுத்து வருகிறார். யோசுவா.

6. யோசுவா

யோசுவா தலைமையில் இஸ்ரயேல் ஜனங்கள் **கானான் தேசத்தை எப்படி கைப்பற்றினார்கள்** என்பதையும், ஒவ்வொரு கோத்திரத்திற்கும் **தேசத்தை பங்கிட்டு கொடுப்பதை** பற்றியும் யோசுவா புத்தகம் கூறுகிறது. இதன் முடிவில் யோசுவா மரிக்கிறார்.

7. நியாயாதிபதிகள்

கானான் வந்த இஸ்ரயேல் ஜனங்களை யோசுவாவிற்கு பிறகு சரியாக வழி நடத்த ஆட்கள் இல்லை. எனவே இஸ்ரயேல் ஜனங்கள் அவ்வப்போது தேவனைவிட்டு விலகுகிறார்கள். தேவன் அவர்களை தண்டிக்கிறார். புறஜாதி மக்கள் கையில் இஸ்ரயேலரை ஒப்பு கொடுக்கப்படுகிறார்கள். அவர்கள் மனந்திரும்பும் போது அவர்களை இரட்சிக்க **நியாயாதிபதிகளை எழுப்புகிறார்.**

இதை குறித்து கூறும் புத்தகம் நியாயாதிபதிகள்

இதில் மொத்தம் **12 நியாயாதிபதிகள்** வருகிறார்கள்.

8. ரூத்

நியாயாதிகளின் நாட்களில் **ஒரு குடும்பத்தில்** (கணவன், மனைவி, பிள்ளைகள்) **நடந்த சம்பவத்தை** பற்றி கூறும் புத்தகம் ரூத்.

9. I சாமுயேல்

நியாயாதிபதிகளின் ஆட்சி முறை (நியாயவிசாரிப்பு) தொடர்கிறது.

2 நியாயாதிபதிகள் குறித்தும் பார்க்கிறோம்.

1. **ஏலி**
2. **சாமுயேல்**

ஏலியின் பிள்ளைகள் சரியில்லை என்று சாமுயேலை தேவன் தேர்ந்தெடுக்கிறார். சாமுயேலின் பிள்ளைகள் சரியில்லை என்றவுடன், இஸ்ரயேல் மக்கள் புறஜாதி மக்களைப் போல் தங்களுக்கும் ராஜா வேண்டும் என்று கேட்கிறார்கள்.

இப்போது வேதத்தின் காட்சி மாறுகிறது.

இதை நன்கு கவனிக்கவேண்டும்.

இது வேத வரலாற்றில் ஒரு திருப்பு முனை.

எகிப்தில் இருந்து கானான் வந்த இஸ்ரயேல் ஜனங்களுக்கு

இதுவரை நியாயாதிபதிகளின் நியாய விசாரிப்பு இருந்தது.

இனி ராஜாக்களின் ஆட்சி ஆரம்பிக்கிறது.

முதல் ராஜா சவுல் மற்றும்

இவருடைய ஊழியக்காரன் **தாவீது** பற்றி இந்த புத்தகம் கூறுகிறது.

இந்த I சாமுயேல் புத்தகம் 4 முக்கிய நபர்களை குறித்து பதிவு செய்கிறது.

1. ஏலி
2. சாமுயேல்
3. சவுல்
4. தாவீது

இந்த புத்தகத்தின் முடிவில் சவுல் மரிக்கிறார்.

10. II சாமுயேல்

சவுலுக்கு பிறகு **தாவீது** ராஜாவாகிறார்.

தாவீதின் அரசாட்சியில் நடந்த சம்பவங்களை பற்றி கூறும் புத்தகம் II சாமுயேல்.

11. I இராஜாக்கள்

தாவீது மரணமடைகிறார்.

அவர் மகன் சாலமோன் ராஜாவாகிறார்.

சாலமோனின் ஆட்சி முறையை பற்றி **I இராஜா 1 முதல் 11 அதிகாரங்கள்** வரை கூறுகிறது.

I இராஜாக்கள் 12-ம் அதிகாரத்திலிருந்டது காட்சி மாறுகிறது.

இஸ்ரயேல் தேசம் 2 ஆக பிரிகிறது.

இதுவும் வேத வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.

இஸ்ரயேல் தேசத்தில் இதுவரை 12 கோத்திரங்களுக்கு ஒரே ராஜா அரசாளுகிறார். இதன்பிறகு தேசம் இரண்டாக பிரிகிறது.

10 கோத்திரம் தனியாகவும்

2 கோத்திரம் தனியாகவும் பிரிகிறது.

உம்முடைய வசனமே சத்தியம்” **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 10

சென்ற வகுப்பில் ஆதியாகமம் முதல் I இராஜாக்கள் 12 அதிகாரங்கள் வரை உள்ள காரியங்கள் குறித்தும் பார்த்தோம்.

முதல் ராஜா **சவுல்**

இரண்டாவது ராஜா **தாவீது**

மூன்றாவது ராஜா **சாலமோன்**

இதற்கு பிறகு தேசம் **2** ஆக பிரிகிறது.

1. இஸ்ரயேல் தேசம் (10 கோத்திரம்)
2. யூதா தேசம் (2 கோத்திரம்)

ஏன் தேசம் 2 ஆக பிரிந்தது?

காரணம் சாலமோன ராஜா

I இராஜா 11 : 4 - 13

இதன்பிறகு வேதத்தை கவனித்து படிக்க வேண்டும்.

இந்த ராஜாக்கள் புத்தகத்தை கவனித்து படிக்காவிட்டால் நம்மால் தீர்க்கதரிசன புத்தகங்களையும் படித்து புரிந்து கொள்ளமுடியாது. காரணம் ராஜாக்களின் நாட்களில் தான் தீர்க்கதரிசிகள் வாழ்ந்தார்கள். ராஜாக்களின் நாட்களில் தான் தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். எனவே ராஜாக்களின் புத்தகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இராஜாக்களின் புத்தகத்தை புரிந்து கொள்ளாவிட்டால் தீர்க்கதரிசன புத்தகங்களையும் படித்து புரிந்து கொள்ளமுடியாது.

I இராஜா 13 அதிகாரத்திலிருந்து, II இராஜாக்கள் முடிய பிளவுப்பட்ட இஸ்ரயேல் தேசத்தில் வந்த இராஜாக்கள் குறித்து, அவர்கள் ஆட்சி முறை குறித்து பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

II இராஜாக்கள்

இதை இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.

- 1 அதிகாரம் முதல் 17 அதிகாரம் வரை.
- 18 அதிகாரம் முதல் 25 அதிகாரம் வரை.

10 கோத்திரத்தில் வந்த இஸ்ரயேல் ராஜாக்கள் தேவனுக்கு விரோதமாய் நடந்து கொண்டதால், தேவன் அவர்களை புறஜாதி ராஜாவாகிய அசீரியா ராஜாவிடம் ஒப்படைக்கிறார். II இராஜா 17 : 5, 6

இதுவும் இஸ்ரயேல் தேசத்தில் நடந்த முக்கிய நிகழ்ச்சி ஆகும்.

இதன் பிறகு மீதி இரண்டு கோத்திரம் (யூதா ராஜ்யம்) யூத ராஜாக்களால் அரசாளப்படுகிறது.

- இதன் கடைசி ராஜா சிதேக்கியா.
- இவருடைய நாட்களில் பாபிலோன் ராஜா நேபுகாத் நேச்சார் யூதாவை சிறை பிடிக்கிறார். யூத ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைப்பட்டு போகிறார்கள். இதோடு II இராஜாக்கள் புத்தகம் முடிவடைகிறது.

13. I நாளாகமம்

14. II நாளாகமம்

இஸ்ரயேல் ஜனங்கள் சிறையிருப்புக்கு சென்றபின், ராஜாக்கள் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவுபடுத்தி பார்ப்பது போல் இந்த புத்தகங்கள் அமைந்துள்ளது.

II சாமுயேல், I இராஜாக்கள், II இராஜாக்கள் புத்தகங்களில் நடந்த அநேக காரியங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

15. எஸ்றா



பாபிலோனுக்கு சிறைப்பட்டு சென்ற இஸ்ரயேல் ஜனங்கள் 70 வருடம் முடிந்து மீண்டும் இஸ்ரயேல் தேசத்திற்கு திருப்பி வருவதை குறித்தும், அங்கு இடிந்து போன தேவாலயத்தை கட்டி தேவனை தொழுது கொள்வதை குறித்தும் எஸ்றா புத்தகம் கூறுகிறது.

16. நெகேமியா

நெகேமியாவின் தலைமையில் ஒரு குழு எருசலேமிற்கு வந்து எருசலேமின் அலங்கத்தை (மதிற்சுவர்) கட்டுவதை குறித்து நெகேமியா புத்தகம் கூறுகிறது.

17. எஸ்தர்

பெர்சிய ராஜாக்களின் நாட்களில் நடந்த ஒரு சம்பவம் எஸ்தர் புத்தகம் ஆகும். இந்த சம்பவம் நெகேமியா காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு சுமார் **30 ஆண்டுகளுக்கு முன்** எஸ்தர் சம்பவம் நடந்ததாக கூறுகிறார்கள்.

- இத்துடன் பழைய ஏற்பாட்டு சரித்திர சம்பவங்கள் முடிவுக்கு வருகிறது.
- இதன் பிறகு 400 வருடம் கழித்து புதிய ஏற்பாடு ஆரம்பிக்கிறது.

இதுவரை நாம் பார்த்தில் முக்கிய நிகழ்ச்சிகள்

1. கானான் தேசம் இஸ்ரயேலர் வந்த பிறகு **இஸ்ரயேல் தேசம்** என்று அழைக்கப்படுகிறது.
2. இங்கு முதலில் **நியாயாதிபதிகள் ஆட்சி முறை.**
3. அடுத்து **ராஜாக்கள் ஆட்சிமுறை.**
4. இஸ்ரயேல் தேசம் **2 ஆக பிளவுப்படுகிறது.**
5. 10 கோத்திரம் **அசீரியா ராஜாவினால்** சிறைபிடிக்கப்படுகிறது.
6. 2 கோத்திரம் சில வருடங்களுக்கு பிறகு **பாபிலோன் ராஜாவினால்** சிறை பிடிக்கப்படுகிறது.
7. **70 வருடம் கழித்து** இஸ்ரயேலர் திரும்ப தங்கள் தேசத்திற்கு வருகிறார்கள்.

இதன்பிறகு நாம் பார்ப்பது கவிதை புத்தகங்கள்

18. யோபு



கவிதை புத்தகங்கள் வரிசையில் முதல் நூல்.
வேதாகமத்தில் எழுதப்பட்ட புத்தகங்களில் முதல் நூல்.
ஆபிரகாமின் காலத்தில் ஊத்ஸ் தேசத்தில் வாழ்ந்த தேவபக்தியுள்ள ஒரு மனிதரை குறித்து கூறும் புத்தகம் யோபு.

19. சங்கீதம்

இதுவரை நாம் பார்த்த வேதத்தின் முக்கிய மனிதர்களான **மோசே, தாவீது, சாலமோன்** எழுதிய பாடல்கள் மற்றும் **ஆசாப், கோராகுபுத்திரர்** போன்றவர்கள் எழுதிய பாடல்களையும் **வரிசைப்படுத்தாமல்** கலந்து சங்கீத புத்தகம் காணப்படுகிறது.

மோசே காலம் முதல் இஸ்ரயேலர் பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து திரும்பி வரும் வரை அவ்வப்போது தேவ ஜனங்களால் பாடப்பட்ட பாடல்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

20. நீதி மொழிகள்

சாலமோன் ராஜா எழுதியது.

தேவனிடம் பெற்ற ஞானத்தை கொண்டு எழுதியது.

இதில் எல்லா நீதி மொழிகளும் **சாலமோன் எழுதியது அல்ல.**

ஆகூர், லேமுவேலின் தாய் என்பவர்களும் இந்த புத்தகத்தின் இறுதியில் எழுதியிருக்கிறார்கள்.

இந்த புத்தகத்தை I இராஜா 4 : 32 படிக்கும் போது இணைத்துப்படிக்க வேண்டும்.

21. பிரசங்கி

ஆசிரியர் சாலமோன்.

சாலமோனின் கடைசி நாட்களில் (எல்லாவற்றையும் ஆண்டு அனுபவித்த பிறகு) எழுதப்பட்ட ஒரு புத்தகமாக கருதப்படுகிறது.

22. உன்னதப்பாட்டு

ஆசிரியர் சாலமோன்

இது சாலமோன் ஆட்சியின் தொடக்க காலத்தில் எழுதப்பட்டதாக கூறப்படுகிறது.

1. சாலமோனுக்கு பிறகு தேசம் 2 ஆக பிளவுப்படுகிறது.

   வடக்கு தேசம் - இஸ்ரயேலின் 10 கோத்திரங்கள்

   தெற்கு தேசம் - 2 கோத்திரங்கள்

2. இஸ்ரயேலின் 10 கோத்திரங்களில் மொத்தம் 19 ராஜாக்கள் ஆளுகை செய்கிறார்கள்.

3. யூதாவின் 2 கோத்தரங்களில் மொத்தம் 20 ராஜாக்கள் ஆளுகை செய்கின்றனர்.

இதன் தொடர்ச்சியை அடுத்த வகுப்பில் பார்க்கலாம்.

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 11

இன்று நாம் பார்க்க இருப்பது **தீர்க்கதரிசிகளின் புத்தகம்.** தீர்க்க தரிசிகளின் புத்தகத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் நாம் ராஜாக்களின் புத்தகத்தை குறித்தும், ஒவ்வொரு ராஜாக்களை குறித்தும் அறிந்திருக்க வேண்டும். இப்போது முழு இஸ்ரயேல் தேசத்தை ஆண்ட ராஜாக்களை குறித்துப் பார்க்கலாம்.

இஸ்ரயேல் தேசத்தின் ராஜாக்கள்

சவுல் (40)
தாவீது (40)
சாலாமோன் (40)

வடக்கு ராஜ்யம்
(10 கோத்திரம்)
இஸ்ரயேல் தேசத்தில் வந்த ராஜாக்கள்

19 ராஜாக்கள்

தெற்கு ராஜ்யம்
(2 கோத்திரம்)
யூதாவில் வந்த ராஜாக்கள்

20 ராஜாக்கள்

1	யெரோபெயாம்	(22)	1	ரெகோபெயாம்	(17)
2	நாதாப்	(2)	2.	அபியாம்	(3)
3.	பாஷா	(24)	3.	ஆசா	(41)
4.	ஏலா	(2)	4.	யோசபாத்	(25)
5.	சிம்ரி	(7 நாட்கள்)	5.	யோராம்	(8)
6.	உம்ரி	(12)	6.	அகசியா	(1)
7.	ஆகாப்	(22)	7.	அத்தாலியாள்	(7)
8.	அகசியா	(2)	8.	யோவாஸ்	(40)
9.	யோராம்	(12)	9.	அமத்சியா	(29)
10.	யெகூ	(28)	10.	உசியா (அசரியா)	(52)
11.	யோவகாஸ்	(17)	11.	யோதாம்	(16)
12.	யோவாஸ்	(16)	12.	ஆகாஸ்	(14)
13.	2-ம் யெரோபெயாம்	(41)	13.	எசேக்கியா	(29)
14.	சகரியா	(6 மாதம்)	14.	மனாசே	(55)
15.	சல்லூம்	(1 மாதம்)	15.	ஆமான்	(2)
16.	மெனாகேம்	(10)	16.	யோசியா	(31)
17.	பெக்காகியா	(2)	17.	யோவகாஸ்	(3 மாதம்)
18.	பெக்கா	(20)	18.	யோயாக்கீம்	(11)
19.	ஓசேயா	(9)	19.	யோயாக்கீன்	(3 மாதம் 10 நாள்)
			20.	சிதேக்கியா	(11)
	அசீரியா ராஜா சிறை பிடித்தல்			**(பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் சிறை பிடித்தல்)**	

இந்த அட்டவணையில் இப்போது முழு இஸ்ரயேல் (சமஸ்த இஸ்ரயேல்) ஆண்ட 3 ராஜாக்களை குறித்தும், பிளவுப்பட்ட இஸ்ரயேல் தேசத்தில் வந்த ராஜாக்களை குறித்தும் (10 கோத்திரம், 2 கோத்திரம்) பார்க்கிறோம்.

இப்போது தீர்க்கதரிசிகளின் புத்தகத்தை இந்த ராஜாக்களின் அட்டவணையோடு பொருத்தி எந்த ராஜாக்களின் நாட்களில் இந்த தீர்க்கதரிசிகள் வாழ்ந்து, தீர்க்க தரிசனம் சொன்னார்கள் என்பதை குறித்து இப்போது பார்க்கலாம்.

23. ஏசாயா



<u>ஏசாயா 1 : 1</u>

யூதாவின் ராஜாக்கள்
உசியா (10),
யோதாம் (11),
ஆகாஸ் (12)
எசேக்கியா (13)
இவர்கள் நாட்களில் தீர்க்கதரிசனம் சொன்னார்.

24. எரேமியா

<u>எரேமியா 1 : 1 - 3</u>

யோசியா 16-வது ராஜா
யோயாக்கீம் 18-வது ராஜா
சிதேக்கியா 20-வது ராஜா

இஸ்ரயேலர் சிறைப்பட்டு போகும் வரைக்கும் இவர் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

25. புலம்பல்

இந்த புத்தகம் எழுதியவர் எரேமியா தீர்க்கதரிசி யூத ஜனங்களை பாபிலோன் ராஜா நேபுகாத் நேச்சர் சிறைபிடித்து போனபோது பாடிய பாடல். இது பழைய எபிரேய ஒப்பாரி பாடல்களுக்கு ஒப்பாக பாடப்பட்டுள்ளது.

26. எசேக்கியேல்



எசேக்கியேல் 1 : 1 - 2

யோயாக்கீன் (யூதாவின் 19-வது ராஜா)
இவருடைய நாட்களில், இவருடைய சிறையிருப்பின்
5-ம் வருஷத்தில் எசேக்கியேல் தீர்க்க தரிசனம் சொல்லியிருக்கிறார்.

27. தானியேல்

தானி 1 : 1

யூதாவின் ராஜாவாகிய யோயாக்கீம்
அரசாண்ட மூன்றாம் வருஷத்தில்....
யோயாயாக்கீம் (யூதாவின் 18-வது ராஜா)

இதிலிருந்து பாபிலோன் சாம்ராஜ்யம், மேதோ, பெர்சிய சாம்ராஜ்யம் நாட்கள் வரை தானியேல் இருந்திருக்கிறார்.

உம்முடைய வசனமே சத்தியம்”　　　　யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 12

இதுவரை பெரிய தீர்க்கதரிசிகளின் புத்தகம் ஏசாயா, ஏரேமியா, எசேக்கியேல், தானியேல் குறித்து பார்த்தோம். இன்று சிறிய தீர்க்கதரிசிகளின் புத்தகத்தை குறித்து பார்க்கலாம்.

28. ஓசியா

ஓசியா 1 - 1 யூதா தேசத்தின் ராஜாக்களாகிய

உசியா - 10-வது ராஜா

யோதாம் - (11) **ஆகாஸ்** (12) **எசேக்கியா** (13)

என்பவர்களின் நாட்களிலும்

இஸ்ரயேல் தேசத்தின் (யெஸ்ரயேலின்) ராஜாவாகிய **யெரொபெயாம்** (13 வது ராஜா) என்பவனின் நாட்களிலும் பெயேரின் குமாரனாகிய ஓசியாவிற்கு உண்டான கர்த்தருடைய வசனம்.

இவர்களின் நாட்களில் ஓசியா தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

29. யோயேல்



இவர் யாருடைய நாட்களில் தீர்க்கதரிசனம் சொன்னார்? இவருடையட தீர்க்கதரிசனத்தில் ராஜாக்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை. வேத வல்லுநர்கள் இவருடைய தீர்க்க தரிசனத்தை வைத்து இரண்டு கருத்து தெரிவிக்கின்றனர்.

- **ஆமோஸ்** தீர்க்கனின் காலத்தில் வாழ்ந்தவர் என்றும்.
- **எலிசா** தீர்க்கதரிசியின் நாட்களில் வாழ்ந்தவர் என்றும் கூறுகின்றனர்.

30. ஆமோஸ்



ஆமோஸ் 1-1 யூதாவின் ராஜாவாகிய உசியா, இஸ்ரயேலின் ராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய யெரோபெயாமின் நாட்களிலும்.

யூதா ராஜா உசியா (10-வது ராஜா)

இஸ்ரயேலின் ராஜா யெரோபெயாம் (13-வது ராஜா)

இவர்கள் நாட்களில் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

31. ஒபதியா

இந்த புத்தகத்தில் ராஜாக்கள் பெயர் குறிப்பிடபடவில்லை. இவர் எழுதிய தீர்க்கதரிசன வாக்கியங்களை வைத்து இவர் யூதாவின் ராஜாவாகிய **யோராம் (5-வது ராஜா)** நாட்களில் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கலாம் என்று யூகிக்கின்றனர்.

32. யோனா



இந்த புத்தகத்திலும் ராஜாக்கள் பெயர் இல்லை.

யோனா1-1 அமித்தாயின் குமாரனாகிய யோனா என்று வருகிறது.

II இராஜா 14 - 25 – காத்தேப்பேர் ஊரானாகிய அமித்தாய் என்னும் தீர்க்கதரிசியின் குமாரன் யோனா என்று வருகிறது.

II இராஜா 14 - 23 - இஸ்ரயேலின் ராஜாவாகிய யோவாசின் குமாரன் **யெரோபெயாம் ராஜாவாகி....** என்று வருகிறது. இதிலிருந்து யோனா தீர்க்கதரிசி இஸ்ரயேலின் ராஜாவாகிய **யெரோபெயாம் (13-வது ராஜா)** நாட்களில் வாழ்ந்தவர் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. **(இவர் நினிவே பட்டணத்திற்கு தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்).**

33. மீகா

மீகா 1-1

யோதாம் (11-வது ராஜா)
ஆகாஸ் (12-வது ராஜா)
எசேக்கியா (13-வது ராஜா)

நாட்களில் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

34. நாகூம்

நினிவேக்கு சொல்லப்பட்ட இரண்டாவது தீர்க்கதரிசன புத்தகம். யோனாவின் காலத்தில் மனந்திரும்பினார்கள். இதன்பிறகு அவர்கள் தேவனுக்கு பிரியமில்லாமல் வாழ்ந்திருக்கிறார்கள். எனவே அவர்களை எச்சரித்து நாகூம் தீர்க்கதரிசியை தேவன் தீர்க்கதரிசனம் சொல்ல வைத்திருக்கிறார்.

(**பாபிலோன் ராஜாவின் நாட்களுக்கு முன் இது சொல்லப்பட்டிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது**).

35. ஆபகூக்

இதிலும் ராஜாக்கள் பெயர் இல்லை.

இதில் காணப்படும் செய்தியை வைத்து இரண்டு கருத்துக்கள் கூறப்படுகிறது.

- **மனாசே (14-வது ராஜா)** ராஜாவின் காலம் என்றும்
- **யோயாக்கீன் (19-வது ராஜா)** ராஜாவின் காலம் என்றும் கருத்துக்கள் பதிவு செய்கின்றனர்.

36. செப்பனியா

செப்பனியா 1-1 ஆமோனின் புத்திரனாகிய யோசியா

ஆமோன் (15-வது ராஜா)

யோசியா (16-வது ராஜா)

இவர்கள் நாட்களில் செப்பனியா தீர்க்கதரிசனம் சொல்லியிருக்கிறார்.

இந்த தீர்க்தரிசிகளோடு ராஜாக்களின் காலம் முடிவுக்கு வருகிறது.

37. ஆகாய், **38. சகரியா**



இஸ்ரயேல் ஜனங்கள் பாபிலோனுக்கு சிறைபிடிப்பில் சென்று 70 வருஷம் கழித்து திரும்பி வந்து தேவாலயம் கட்டும்போது ஆகாய், சகரியா தீர்க்கதரிசனம் சொல்லி இருக்கிறார்கள்.

எஸ்றா 5 : 1 அப்பொழுது **ஆகாய் தீர்க்கதரிசியும்,** இத்தோவின் குமாரனாகிய **சகரியா என்னும் தீர்க்கதரிசியும்,** யூதாவிலும் எருசலேமிலுள்ள யூதருக்கு இஸ்ரயேல் தேவனின் நாமத்திலே தீர்க்கதரிசனம் சொன்னார்கள்.

39. மல்கியா

இந்த தீர்க்கதரிசியின் காலம் திட்டமாய் சொல்ல முடியவில்லை. இவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் வைத்து **நெகேமியாவின்** காலத்தில் இவர் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்க வேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

பழைய ஏற்பாட்டின் காரியங்களை சுருக்கமாக புரிந்து கொள்ள 10 தலைப்புகள்

1. சிருஷ்டிப்பு
2. வீழ்ச்சி
3. ஜலப்பிரனயம்
4. முற்பிதாக்களின் வரலாறு
5. இஸ்ரயேலர் எகிப்தின் அடிமைதனத்திலிருந்து விடுதலை பயணம்.
6. இஸ்ரயேலர் கானான் தேசம் சென்றடைதல்.
7. கானான் தேசத்தில் (இஸ்ரயேல் தேசம்) நியாயாதிபதிகளின் காலம்.
8. இஸ்ரயேல் தேசத்தில் ராஜாக்களின் காலம்.
9. பாபிலோன் சிறையிருப்பின் காலம்.
10. சிறையிருப்புக்கு பிந்தைய வரலாறு.

இதை தலைமுறையாக பிரிக்கும் போது

- ஆபிரகாம் முதல் தாவீது வரை – 14 தலைமுறை
- தாவீது முதல் பாபிலோனுக்கு சிறைபட்டு போகும் வரைக்கும் - 14 தலைமுறை
- பாபிலோனுக்கு சிறைப்பட்டு போன கால முதல், கா்த்தா் இயேசு வரைக்கும் 14 தலைமுறை

மத் 1 : 17 ஆபிரகாம் முதல் கா்த்தா் இயேசு வரை மொத்தம் 42 தலைமுறை



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 13

ஆதியாகமம் - GENESIS

எபிரேய பெயர்	-	பெரேஷித் ((Beresnith)
பொருள்	-	ஆதியிலே (In the Beginning)
கிரேக்க பெயர்	-	ஜெனிசிஸ் (Genesis)
பொருள்	-	துவக்கம்
எழுதியவர்	-	மோசே
யாருக்கு எழுதினார்	-	இஸ்ரேயல் ஜனங்களுக்கு

ஆதியாகமத்தின் சிறப்பு

1. வேதாகமத்தின் முதல் புத்தகம்
2. தோராவின் (5 புத்தகங்கள்) முதல் புத்தகம்
3. மொத்தம் 50 அதிகாரங்கள் & வசனங்கள் : 1533.
4. நீண்ட கால பகுதி கொண்ட புத்தகம்.

ஆதியாகமத்தை (50 அதிகாரங்கள்) 3 பிரிவுகளாக பிரிக்கலாம்.

முதல் பிரிவு	-	அதிகாரம் 1 முதல் 11 வரை
இரண்டாம் பிரிவு	-	அதிகாரம் 12 முதல் 36 வரை
மூன்றாம் பிரிவு	-	அதிகாரம் 37 முதல் 50 வரை

முதல் பிரிவு - (1 - 11)

1.	சிருஷ்டிப்பு	1- 2 அதிகாரங்கள்
2.	வீழ்ச்சி	3 அதிகாரம்
3.	காயீனும், ஆபேலும்	4 அதிகாரம்
4.	சேத்தின் வம்ச வரலாறு	5 அதிகாரம்
5.	நோவாவின் வம்ச வரலாறு	6 அதிகாரம்
6.	ஜலப்பிரளயம்	7- 8 அதிகாரங்கள்
7.	ஜலப்பிரளயத்திற்குபின் நோவாவின் வம்சவரலாறு	9 அதிகாரம்
8.	பாபேல் கோபுரம் கட்டப்படுதல், சேமின் வம்ச வரலாறு ஆபிரகாமின் தந்தை தேராகின் மரணம்	10- 11 அதிகாரங்கள்

இரண்டாம் பிரிவு (13 - 36)

1. ஆபிரகாமின் வரலாறு — 12 - 25 அதிகாரங்கள்
2. ஈசாக்கின் வரலாறு — 26 அதிகாரம்
3. யாக்கோபின் வரலாறு — 27 - 36 அதிகாரங்கள்

மூன்றாவது பிரிவு

1. யூதாவின் வரலாறு — 38 அதிகாரம்
2. யோசேப்பின் வரலாறு — 37, 39 - 50 அதிகாரங்கள்

ஆதியாகமத்தின் முக்கிய கதா பாத்திரங்கள்

1. ஆதாம் — 2- 3 அதிகாரங்கள்
2. காயீன் — 4 அதிகாரம்
3. ஆபேல் — 4 அதிகாரம்
4. சேத் — 5 அதிகாரம்
5. நோவா — 6 – 9 அதிகாரங்கள்
6. நோவாவின் பிள்ளைகள் — 10 -11 அதிகாரங்கள்
7. ஆபிரகாம் — 12 – 25 அதிகாரங்கள்
8. ஈசாக்கு — 25 – 26 அதிகாரங்கள்
9. யாக்கோபு — (27 – 36 அதிகாரங்கள்
10. யோசேப்பு — 37 – 50 அதிகாரங்கள்

வம்ச வரலாறு

ஆதி	4	ஆதாமின் வம்ச வரலாறு (காயீன், ஆபேல்)
ஆதி	5	சேத்தின் வம்ச வரலாறு
ஆதி	10	நோவாவின் வம்ச வரலாறு
ஆதி	36	ஏசாவின் வம்ச வரலாறு

பூலோக ரீதியாக ஆதியாகமம்

1. பாபிலோன் — 2 – 11 அதிகாரங்கள்
2. கானான் — 12 – 36 அதிகாரங்கள்
3. எகிப்து — 37 – 50 அதிகாரங்கள்


துருக்கி
அசீரியா
நினிவே
டைக்ரீஸ்
நதி
சைப்ரஸ்
தமஸ்கு
யூப்ரடீஸ்
நதி
பாபிலோன்
இஸ்ரயேல்
பாபிலோன்
ஏதேன்
தோட்டம்
அரேபியா
பாலைவனம்
எருசலேம்
சினாய்
ஆதியாகமத்தின் முக்கிய இடங்கள்
MADE FOR
BIBLESTUDYPODCASTS


ஆபிரகாம் பிரயாணம் பண்ணின தேசங்கள்
கருப்புக்
கடல்
காஸ்பியன்
கடல்
வான்
ஏரி
டைக்ரிஸ் நதி
ஆரான்
நினிவே
மெசபத்தோமியா
ஐபிராத்து நதி
பாபிலோன்
ஊர்
பெர்சியன்
கல்ஃப்
மத்தியத்தரைக் கடல்
கானான்
சீகேம்
பெத்தேல்
ஆயி
ஹீப்ரோன்
சோதோம்
எகிப்து
நைல் நதி
நெகவ்
பாலைவனம்
செங்கடல்
1
2
3
4
5
6
7
0
300
km

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 14



யோபு JOB

எபிரேய பெயர்	-	இய்யோப் (Iyov)
பொருள்	-	துன்பபட்டவர் (அ) மனந்திரும்பியவர்
இதன் ஆசிரியர்	-	மோசே (அல்லது) யோபு

யோபுவின் சரித்திரம் உண்மை சமபவம் என்பதற்கான வேத ஆதாரம்:-

எசேக்கியேல் 14 : 14

யாக்கோபு 5 : 11

இந்த நூலின் சிறப்பு:-

1. ஆதியாகமம் எழுதப்படுவதற்கு முன் எழுதப்பட்ட முதல் புத்தகம்.
2. முதல் கவிதை நூல்.
3. வேதாகத்தின் மிக பழமையான நூல்.
4. சாத்தானை குறித்து அதிகமான காரியங்கள் இந்த புத்தகத்தின் மூலம் புரிந்து கொள்ள முடிகிறது.

யோபுவின் சரித்திரம் ஆதியாகமத்தின் மையத்தில் (ஆபிரகாமின் காலத்தில்) நடந்ததிற்கான ஆதாரம்

1. ஊத்ஸ் தேசம் - (ஆதி 10 : 23)
2. பிள்ளைகள் - (அதிகமான பிள்ளைகள் இருந்தது)
3. திரளான ஆஸ்தி - கால்நடைகள், ஒட்டகங்கள், கழுதைகள்
4. விருந்து செய்தல்
5. பலியிடுதல் - (யோபு 1 : 5)
6. வயது குறிப்பு - இந்த நிகழ்ச்சிகளுக்கும் பின் யோபு 140 வருடம் உயிர் வாழ்ந்திருக்கிறார் (யோபு 42 : 16)
7. ஜாதிகள் - கல்தேயர், சபேயர்
8. சர்வ வல்லவர் என்ற நாமம், ஆதி 17 : 1



யோபு புத்தகம்

வேதத்தில் 18-வது புத்தகம்

42 அதிகாரங்கள் 1070 வாசனங்கள்

முக்கிய கதாபாத்திரங்கள்

1. யோபு
2. யோபுவின் மனைவி
3. **யோபுவின் நண்பர்கள்**
   - A. தேமானியரான எலிப்பாஸ்
   - B. சூகியரான பில்தாத்
   - C. நாகமாத்தியரான சோப்பார்
4. பூசியராகிய எலிகூ

இதை படிக்கும் முறை

3 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. யோபுவின் துன்பங்கள் (1, 2 ஆதிகாரங்கள்)
2. யோபுவிற்கும் அவர் நண்பர்களுக்கும் நடந்த விவாதங்கள் (3 – 37 அதிகாரங்கள்)
3. யோபுவிற்கு கிடைத்த விடுதலை (38 – 42 அதிகாரங்கள்)

I. யோபுவின் துன்பங்கள் (1 , 2 அதிகாரங்கள்)

1. யோபுவின் குடும்ப பிண்ணனி - (1 : 1 – 5 வசனங்கள்)
2. சாத்தானின் முதல் தாக்குதல் - (1 : 6 – 22 வசனங்கள்)
3. சாத்தானின் இரண்டாவது தாக்குதல் - (2 : 1 – 10 வசனங்கள்)
4. யோபுவின் நண்பர்கள் வருகை - (2 : 11 – 13 வசனங்கள்)

II. யோபுவிற்கும் அவர் நண்பர்களுக்கும் நடந்த விவாதங்கள் (3 : 39 அதிகார்ங்கள்)

முதல் சுற்று

1.	யோபுவின் புலம்பல்	(3- ம் அதிகாரம்)
2.	எலிப்பாஸின் உரை	(4 : 1 – 5 :27)
	யோபுவின் பதில்	(6, 7 அதிகாரங்கள்)
3.	பில்தாத்தின் உரை	(8 – ம் அதிகாரம்)
	யோபுவின் பதில்	(9 , 10 அதிகாரங்கள்)
4.	சோப்பாரின் உரை	(11- ம் அதிகாரம்)
	யோபுவின் பதில்	(12, 13, 14 அதிகாரங்கள்)

இரண்டாம் சுற்று

1.	எலிப்பாஸின் உரை	(15 – ம் அதிகாரம்)
	யோபுவின் பதில்	(16, 17 அதிகாரங்கள்)
2.	பில்தாத்தின் உரை	(18- ம் அதிகாரம்)
	யோபுவின் பதில்	(19 – ம் அதிகாரம்)
3.	சோப்பாரின் உரை	(20 – ம் அதிகாரம்)
	யோபுவின் பதில்	(21 – ம் அதிகாரம்)

மூன்றாம் சுற்று

1.	எலிப்பாஸ் உரை	(22 – ம் அதிகாரம்)
2.	யோபுவின் பதில்	(23, 24 அதிகாரங்கள்)
3.	பில்தாத்தின் உரை	(25 – ம் அதிகாரம்)
4.	யோபுவின் பதில்	(26 – 31 அதிகாரங்கள்)

எலிகூ – வின் வார்த்தைகள்

32 – 37 அதிகாரங்கள்

III. யோபிற்கு கிடைத்த விடுதலை (38 - 42 அதிகாரங்கள்)

1. யோபிற்கு தேவன் அளிக்கும் பதில் (38 - 42 அதிகாரங்கள்)
2. யோபு மனம் வருந்துதல் (42 : 1 - 6)
3. யோபு விற்கு கிடைத்த விடுதலை (42 : 7- 19)

இந்த புத்தகத்தின் சுருக்கம்

1. தேவனுக்கு பிரியமான மனிதா் யோபு
2. இவரை தேவனை விட்டு விலக்குவதற்கு தேவனுடைய அனுமதியோடு சாத்தான் சோதிக்கிறாா்.
3. யோபு எல்லாவற்றையும் இழக்கிறாா்.
4. யோபுவின் நண்பா்கள் வந்து அவருடைய தவறுகள்தான் இந்த துன்பத்திற்கு காரணம் என்கின்றனா்.
5. யோபு அதை மறுக்கிறாா். ஆனால் தனக்கு ஏன் தேவன் இதை அனுமதித்தாா் என்று தெரியாமல் தவிக்கிறாா்.
6. இதன் பின்பு எலிகூ ஒரு சில காரியங்கள் விளக்குகிறாா்.
7. அதன்பிறகு தேவன் பதில் கூறுகிறாா்.
8. யோபு உண்மை அறிந்து மனம் வருந்துகிறாா்.
9. மீண்டும் விடுதலை, ஆசீா்வாதம் பெற்று கொள்கிறாா்.



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 15

யாத்திராகமம் EXODUS

எபிரேய பெயர் - ஷெமோத் (Shemot)

பொருள் - பெயர்களாவன, நாமங்களாவன

ஆசிரியர் - மோசே

வேதத்தின் 2 வது புத்தகம்

(மோசே எழுதிய 2-வது புத்தகம்)

40 அதிகாரங்கள், 1213 வசனங்கள்

எழுதப்பட்ட இடம்

வனாந்தரத்தில் இஸ்ரயேல் ஜனங்களை வழிநடத்தி வந்த போது மோசேயால் எழுதப்பட்டது.

யாத்திராகமத்தின் சிறப்பு

1. பழைய ஏற்பாட்டில் மற்ற 38 புத்தகங்களை காட்டிலும் **அதிக அற்புதங்கள்** குறித்து எழுதப்பட்ட புத்தகம்.
2. இஸ்ரயேவருக்கு தேவன் கொடுத்த முதல் பிரமாணம் "**பஸ்கா**" இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.
3. இஸ்ரயேலருக்கு தேவன் கொடுத்த **10 கட்டளைகள் (10 கற்பனைகள்)** இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.
4. **ஆசரிப்பு கூடாரம்** செய்வது குறித்த காரியங்கள் இதில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

இதை படிக்கும் முறை

இந்த யாத்திராகம் புத்தகத்தில் மொத்தம் **40 அதிகாரங்கள்** இருக்கிறது.

இதை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

I எகிப்தில் இஸ்ரயேல் ஜனங்கள் (1 – 13 அதிகாரங்கள்)

II வனாந்தரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள் (14 – 40 அதிகாரங்கள்)

முதல் பகுதி :- எகிப்தில் இஸ்ரயேல் ஜனங்கள் (1 – 13)

1. யோசேப்பின் மரணத்திற்குப் பின் எகிப்தில் இஸ்ரயேலரின் நிலை ((1 அதிகாரம்)
2. மோசேயின் பிறப்பு - வாழக்கை வரலாறு (2- 4 அதிகாரங்கள்)
3. மோசே மூலம் தேவன் எகிப்தில் செய்த காரியங்கள் (10 வாதைகள்) (5 -11 அதிகாரங்கள்)
4. பஸ்காவின் பிரமாணம் (12, 13 அதிகாரங்கள்)

இரண்டாம் பகுதி :- வனாந்தரத்தில் இஸ்ரயேல் ஜனங்கள்

1. எகிப்திலிருந்து புறப்பட்டு செங்கடலை கடக்கிறார்கள் (14 அதிகாரம்)
2. மாராவின் தண்ணீர் மதுரமாகுதல் (15 அதிகாரம்)
3. மன்னா பெறுவது (16 அதிகாரம்)
4. கன்மலையிலிருந்து தண்ணீர் பெறுதல், அமலேக்கியரோடு யுத்தம் (17 அதிகாரம்)
5. மோசேயின் மாமா எத்திரோவின் வருகை (18 அதிகாரம்)
6. சீனாய் மலையின் பயங்கர காட்சி (19 அதிகாரம்)
7. தேவன் 10 கட்டளைகள் கொடுத்தல் (20 அதிகாரம்)
8. மற்ற பிரமாணங்கள் கொடுத்தல் (21- 23 அதிகாரங்கள்)
9. தேவன் மோசேயை அழைத்து ஆசரிப்பு கூடாரம் அமைப்பது பற்றி கூறுதல் (24 -31 அதிகாரங்கள்)
10. இஸ்ரயேலர் பொன் கன்றுகுட்டி செய்தல், அதனால் ஏற்பட்ட தேவ கோபம் (32, 33 அதிகாரங்கள்)
11. தேவன் மீண்டும் மோசேயிடம் பிரமாணங்கள் கொடுத்தல் (34 அதிகாரம்)
12. ஆசரிப்பு கூடாரம் செய்வதற்கான ஆயத்தப்படுதல்
    ஆசரிப்பு கூடாரம் நிறுவுதல் } (35 -40 அதிகாரங்கள்)

இந்த புத்தகத்தில் நாம் பார்க்கும் முக்கிய கதாபாத்திரங்கள்

1. மோசே
2. பார்வோன்
3. பார்வோனின் மகள்
4. மோசேயின் பெற்றோர்
5. மிரியாம்
6. ஆரோன்
7. மோசேயின் மாமன் எத்திரோ
8. பெசலேயேல்
9. யோசுவா
10. அமலேக்கியர்

முக்கியமான இடங்கள்

1.	எகிப்து	-	இஸ்ரயேலர் இருந்தது
2.	மீதியான்	-	மோசே 40 வருடம் இருந்தது
3.	கோசேன் நாடு	-	இஸ்ரயேலர் எகிப்தில் இருந்த இடம்
4.	பித்தோம், ராமசேஸ்	-	இஸ்ரயேலர் எகிப்தில் கட்டிய 2 பட்டணங்கள்
5.	பாகால் செபோன்	-	இஸ்ரயேலர் செங்கடலை கடந்த இடம்
6.	மாரா	-	தண்ணீர் கசப்பு - பின்பு மதுரம்
7.	ஏலீம்	-	12 நீரூற்றுகள் 70 பேரீட்சை மரங்கள்
8.	சீன் வனாந்தரம்	-	இஸ்ரயேலர் மன்னா பெற்று கொள்ளுதல்
9.	ரெவிதீம்	-	முதல்தடவை கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படுதல் / அமலேக்கியரோடு யுத்தம்
10.	சீனாய் மலை	-	10 கட்டளைகள், பிரமாணங்கள் பெற்றது, ஆசரிப்பு கூடாரம் அமைப்பது குறித்து தேவன் சொன்னது.

யாத்திராகம நூலின் முக்கிய இடங்கள்



உம்முடைய வசனமே சத்தியம்”   யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 16

லேவியராகமம் LEVITICUS

எபிரேய வார்த்தை	-	வய்யிக்ரா (Vayikra)
இதன் பொருள்	-	தேவன் அழைப்பு விடுக்கிறார் / அவர் அழைக்கிறார்
ஆசிரியர்	-	மோசே
		வேதத்தின் **மூன்றாவது புத்தகம்**
		மொத்தம் 27 அதிகாரங்கள்
		859 வசனங்கள்
எழுதப்பட்ட இடம்	-	வனாந்திரம், சீனாய் மலை

லேவியராகமத்தின் சிறப்பு

1. எந்த புத்தகத்திலும் கூறப்பட்டதை விட **“பரிசுத்தம்** “ என்ற வார்த்தை 152 தடவைகளுக்கு மேல் இந்த புத்தகத்தில் வருகிறது.
2. **பாவ நிவாரண பலியின் நாள்** குறித்து இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. **யூபிலி வருஷத்தை** குறித்து இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.
4. எகிப்தில் புறஜாதி ஜனங்கள் மத்தியில், விக்கிரக வணக்கத்தில் இருந்த தம்முடைய ஜனங்களை தம்முடைய ஜனங்களாக, தமக்கு பிரியமான ஜனங்களாக அவர்கள் மாற என்ன செய்ய வேண்டும் என்பதை இந்த புத்தகத்தில் தேவன் கூறியிருப்பதை பார்க்க முடிகிறது.
5. யாத்திராகமத்தை போல இதில் எந்த **பயண குறிப்புகளும் இல்லை.**

இந்த புத்தகத்தில் முக்கியமான வசனம்

“நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்காளக

5 தடவை இந்த வசனம் இந்த புத்தகத்தில் வருகிறது.

லேவி 11 : 45, 11:45, 19:2, 20:7, 20:26

இதை படிக்கும் முறை

இந்த லேவியராகத்தில் மொத்தம் **27 அதிகாரங்கள்**

இதை 2 பிரிவுகளாக பிரிக்கலாம்.

I. தேவனை பரிசுத்தமாக தொழுது கொள்வது எப்படி? (1 -10 அதிகாரங்கள்)

II. தேவனோடு பரிசுத்தமாய் நடப்பது எப்படி? (11 – 27 அதிகாரங்கள்)

I . தேவனை பரிசுத்தமாக தொழுது கொள்வது எப்படி?

1. பலிகள் (1 - 7 அதிகாரங்கள்)
2. ஆசாரியத்துவம் (8 – 10 அதிகாரங்கள்)

II. தேவனோடு பரிசுத்தமாக நடப்பது எப்படி?

1. சுத்திகரிப்புக்கான பிரமாணங்கள் (11 – 15 அதிகாரங்கள்)
2. ஆராதனை (16 – 17 அதிகாரங்கள்)
3. அற நெறிச்சட்டங்கள் (18 – 20 அதிகாரங்கள்)
4. ஆசாரியத்துவ பிரமாணங்களும், பண்டிகைகளும் (21 முதல் 24 : 9 வரை)
5. சிட்சையின் பிரமாணங்கள் (24 : 10 முதல் 23 வரை)
6. ஓய்வு நாள் மற்றும் சொத்துக்கள் பற்றிய பிரமாணங்கள் (25 அதிகாரம்)
7. சாபமும், ஆசிர்வாதமும் (26 அதிகாரம்)
8. பொருத்தனைகள் (27 அதிகாரம்)

இந்த புத்தகத்தில் காணப்படும் முக்கிய நபர்கள்

1. மோசே
2. ஆரோன்
3. நாதாப்
4. அபியூ
5. எலியேசர்
6. இத்தமார்

முக்கிய நிகழ்ச்சி

நாதாப் - அபியூ சம்பவம் - (லேவி 10 : 1 - 8)



அதிகாரம் - 1

தகனபலி செலத்துவதற்கான பிரமாணம்



1. மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்டது (3 - 9)
2. ஆட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்டது (10 - 13)
3. பறவைகளிலிருந்து எடுக்கப்பட்டது 14 - 17

அதிகாரம் -2

போஜனபலி செலுத்துவதற்கான பிரமாணம்

1. மெல்லிய மாவினாலான போஜபைலி (1 - 12)
2. முதற்கனி காணிக்கை தகனம் (13 - 16)

அதிகாரம் - 3

சமாதானபலி செலுத்துவதற்கான பிரமாணம்



1. மாட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்ட சமாதானபலி (1 - 5)
2. ஆட்டு மந்தையிலிருந்து எடுக்கப்பட்டது (6)
3. ஆட்டு குட்டியை பலியாக செலுத்த வேண்டுமானால் (7 - 11) செம்மறி ஆடு
4. வெள்ளாட்டை பலி செலுத்த வேண்டுமானால் (12 - 17)

அதிகாரம் -4

பாவநிவாரண பலிக்கான பிரமாணம்

1. ஆசாரியன் அறியாமல் செய்த பாவத்திற்கான பாவ நிவாரணபலி (1 - 12)
2. இஸ்ரயேல் மக்கள் அறியாமல் செய்த பாவத்திற்கான பாவ நிவாரண பலி (13 - 21)
3. பிரபுக்களுக்கான பலி (22 - 26)
4. சாதாரண மக்களுக்கான பலி (27 - 35)

அதிகாரம் -5

குற்ற நிவாரண பலிக்கான பிரமாணம்

1. பார்த்ததை குறித்து சரியாக சாட்சி சொல்லாவிட்டால், அசுத்தமான பொருட்களை தொட்டதிற்கு, பதறி ஆணையிட்டதற்கான குற்ற நிவாரண பலி (1 - 13)
2. பரிசுத்த பொருட்களை குறித்த காரியத்தில் குற்றம் (14 - 16)
3. செய்ய தகாததை செய்தற்கான குற்ற நிவாரணபலி (17 - 19)

அதிகாரம் - 6

1. அறிந்தும் பாவம் செய்ததற்கான குற்ற நிவாரணபலி (1 - 7)
2. சர்வாங்க தகன பலிக்குரிய பிரமாணம் (8 - 13)
3. போஜன பலியின் பிரமாணம் (14 - 18)
4. ஆசாரியனை அபிஷேகம் செய்யும் நாளில் செலுத்த வேண்டிய பலி (19 - 23)
5. பாவ நிவாரண பலியின் பிரமாணம் (24 - 30)

அதிகாரம் - 7

1. குற்ற நிவாரண பலியின் பிரமாணம் (1 - 10)
2. சமாதான பலியின் பிரமாணம் (11 - 21)
3. கொழுப்பு, இரத்தம் சாப்பிடகூடாது என்பதற்கான பிரமாணம் (22 - 27)
4. ஆசாரியனுக்கு சேர வேண்டிய பங்கு (28 - 38)

அதிகாரம் -8

1. ஆரோனும், அவர் குமாரரும் மோசேயால் அபிஷேகம் செய்து பரிசுத்த மாக்கப்படுதல் (1 - 13)
2. அவர்களுக்கான பாவ நிவாரணபலி (14 - 17)
3. அவர்களுக்கான சர்வாங்க தகனபலி (18 - 21)
4. அவர்களை பிரதிஷ்டை செய்வதற்கான பிரதிஷ்டைகுரிய பலி (22 - 30)

அதிகாரம் - 9



1. ஆரோனுக்கு இஸ்ரயேல் ஜனங்குளுக்குமான பாவநிவாரணபலியும், சர்வாங்க தகனபலியும் (1 - 22)
2. மோசேயும், ஆரோனும் மக்களை ஆசிர்வதிக்கின்றனர் (23)
3. கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு வந்து பலியை எரிக்கிறது. (24)
   இது தேவனுடைய அங்கிகரிப்பை குறிக்கிறது.

அதிகாரம் - 10

1. நாதாபும், அபியூவும் அந்நிய அக்கினியை கொண்டு வந்து மரித்தல் (1 - 8)
2. ஆசாரியபணிக்கு செல்லும் போது ஆசாரியர்கள் மது அருந்த கூடாது (9 - 11)
3. பரிசுத்த பொருட்களை சாப்பிடுவது சம்பந்தமான பிரமாணங்கள் (9 - 19)

அதிகாரம் - 11

இஸ்ரயேல் புசிக்க கூடியது, புசிக்க கூடாது பற்றிய பிரமாணங்கள்.

அதிகாரம் -12

1. கர்ப்பவதிகளுக்கான பிரமாணங்கள் (1 - 5)
2. பரிசுத்தப்படுதலுக்காக செலுத்த வேண்டிய பலிகள் (6 - 8)

அதிகாரம் - 13

குஷ்டரோகம் குறித்த பிரமாணம்

அதிகாரம் -14

1. குஷ்டரோகியை பரிசுத்தப்படுத்தலுக்கான பிரமாணம் மற்றும் பலிகள் (1 - 32)
2. வீட்டிற்கு குஷ்டரோகம் ஏற்பட்டால் அதற்கான பிரமாணம் (33 - 47)
3. வீட்டை சுத்தப்படுத்துவதற்கான பிரமாணங்கள் (48 - 57)

அதிகாரம் - 15

1. ஆண்கள் சுத்திகரிப்பதற்கான பிரமாணங்கள் (1 - 18)
2. உதிர ஊறல் உள்ள பெண்களுக்கான பிரமாணங்கள் (19 - 33)

அதிகாரம் - 16

1. பிரமான ஆசாரியனுக்குரிய ஒழுங்கு முறைகள் (1 - 10)
2. அவருக்கான பாவ நிவாரணபலி (11 - 34)



அதிகாரம் -17

மிருகங்கள் ஆசாரிப்பு கூடாரத்தில் பலி செலுத்துவதற்கான பிரமாணங்கள்.

அதிகாரம் -18

1. முறையற்ற திருமண உறவு (1 - 18)
2. முறையற்ற உடலுறவுகள் (19 - 30)

அதிகாரம் -19

அநேக பிரமாணங்கள் திரும்பவும் சொல்லப்படுகிறது.

அதிகாரம் - 20

அந்நிய வணக்கம் , மந்திரவாதம் , பெற்றோரை சபித்தல் , விபச்சாரம் போன்றவற்றிக்கான அண்டனை.

அதிகாரம் -21

ஆசாரியனின் உறவினர் இறந்தால் ஆசாரியன் செய்ய வேண்டியது.



அதிகாரம் -22

ஆசாரியனுக்குரிய பிரமாணங்கள்.

1. ஆசாரியன் தீட்டுப்பட்டிருக்கும் போது பரிசுத்த பொருட்களை தொடக்கூடாது (1 - 9)
2. ஆசாரியன் வீட்டில் உள்ளவர்களில் யார் யார் பரிசுத்த உணவை சாப்பிடலாம் (10 - 16)
3. பலி பொருட்கள் யாவும் பழுதற்ற வையாயிருக்க வேண்டும் (17 - 25)
4. பலி செலுத்தப்படும் விலங்குகளுக்கான குறைந்த வயது (26 - 33)

அதிகாரம் -23

கர்த்தருடைய பண்டிகைகள்

1. ஓய்வு நாள் (1 - 3)
2. பஸ்கா (4, 5)
3. புளிப்பில்லா அப்ப பண்டிகை (6 - 8)
4. முதல் அறுவடைப் பண்டிகை (9 - 14)
5. பெந்தேகோஸ்தே பண்டிகை (15 - 22)
6. எக்காளப் பண்டிகை (23 - 25)
7. பாவநிவா்த்தி பண்டிகை (26 - 32)
8. கூடாரப் பண்டிகை (33 - 44)



அதிகாரம் 24

ஆசரிப்பு கூடாரத்தில் செய்ய வேண்டிய காரியங்கள்

1. குத்துவிளக்கு எண்ணெய் (1 - 4)
2. சமுகத்தப்பம் (5 - 9)
3. இஸ்ரயேல் பெண்ணின் மகன் தேவனை நிந்தித்தல் (10 - 16)
4. கொலைக்கு தண்டனை (17 - 22)
5. தேவ நாமத்தை தூஷிப்போர் கல்லெறியப்பட வேண்டும் (23)

அதிகாரம் -25

9. தேசத்திற்கு ஓய்வு காலம் - யூபிலி பிரமாணம் (1 - 18)
10. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்புவோருக்கான ஆசிர்வாதம் (19 - 46)
11. அடிமைகளின் எஜமானர்களுக்கு உரிய விதிகள் (47 - 55)

அதிகாரம் -26

1. தேவனுக்கு கீழ்படிவர்களுக்கான ஆசிர்வாதம் (1 - 13)
2. தேவனுக்கு கீழ்படியாதவர்களுக்குரிய தண்டனை (14 - 46)

அதிகாரம் - 27

1. பொருத்தனை குறித்த பிரமாணங்கள் (1 - 8)
2. கர்த்தருக்கான காணிக்கைகள் (9 - 13)
3. தசமபாக சட்டங்கள் (30 - 34)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 17

எண்ணாகமம் (Numbers) பகுதி – I

எபிரேய வார்த்தை - ப்மிட்பார் (Bamidbar)

இதன் பொருள் - வனாந்திரத்தில்

ஆசிரியர் - மோசே

- வேதத்தின் 4-வது புத்தகம்
- மொத்தம் 36 அதிகாரங்கள்
- மொத்த வசனங்கள் 1288

எழுதப்பட்ட இடம் - வனாந்திரம்

எண்ணாகமத்தின் சிறப்பு

1. இஸ்ரயேலரின் 40 வருட வனாந்திர பயணத்தை இந்த புத்தகம் பதிவு செய்கிறது.
2. 40 வருடத்தில் அவர்கள் எந்தெந்த இடங்களுக்கு அலைந்து சென்றார்கள் என்பதை இந்த புத்தகம் விரிவாக கூறுகிறது.
3. 20 வயதிற்கு மேல் உள்ள யுத்தமனுஷரின் எண்ணிக்கை ஒவ்வொரு கோத்திரத்திலும் எண்ணப்பட்டு பதிவு செய்யப்பட்டு உள்ளது.
4. கானானை நோக்கிய பயணத்தில் ஒவ்வொரு கோத்திரமும் எந்தெந்த பகுதியில் பாளையம் இறங்க வேண்டும் (தங்க வேண்டும்) என்பதை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
5. ஏன் 40 வருடம் இவர்கள் அலைய வேண்டி இருந்தது என்பதை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது. (வேவு பார்த்து வந்தவர்களில் 10 பேரின் துர்செய்தி மற்றும் இஸ்ரயேலரின் அவிசுவாசம்). காதேஸ் பர்னேயாவிலிருந்து 11 நாட்களில் முடிய வேண்டிய பயணம் 38 ஆண்டுகள் ஆனது.
6. பிலேயாமின் சம்பவம்.

இதை படிக்கும் முறை

I. இஸ்ரேயல் மக்கள் வனாந்திரத்தில் நடந்து கொண்டவிதம் - 2 மாத சம்பவம் (1 - 12 அதிகாரங்கள்)

II. இஸ்ரேயல் மக்களுக்கு வனாந்திரத்தில் நடந்த அற்புதங்களும், சோதனைகளும் 38 வருட சம்பவம் (13 – 25 அதிகாரங்கள்)

III. புதிய தலைமுறையினர் பற்றிய விபரங்கள்
(எகிப்தில் இருந்து புறப்படாத, வனாந்திரத்தில் பிறந்தவர்கள் பற்றிய விவரங்கள்) (26 – 36 அதிகாரங்கள்)

அதிகாரம் - 1

1. இஸ்ரயேலரை மோசே கணக்கிடுதல் (1 - 46)
2. லேவியரை கணக்கில் சேர்க்காமல் அவர்களை தேவாலயத்து பணிக்கென நியமித்தல் (47 - 54)

அதிகாரம் - 2

ஒவ்வொரு கோத்திரங்களும் பாளயமிறங்க வேண்டிய ஒழுங்கு முறை.

அதிகாரம் - 3

லேவியரின் ஊழியங்கள்.

அதிகாரம் -4

1. லேவியரின் ஊழியங்கள் (1 - 16)
2. ஆசாரியர்களின் பதவிக்கடமைகள் (17 - 33)
3. கோகாத்தியரின் எண்ணிக்கை (34 - 37)
4. கெர்சோனியரின் எண்ணிக்கை (38 - 41)
5. மெராரியரின் எண்ணிக்கை (42 - 49)

அதிகாரம் - 5

1. தீட்டுப்பட்டவர்களுக்கான பிரமாணங்கள் (1 - 4)
2. மீறுதல்களுக்கு அபராதம் (5 - 8)
3. பரிசுத்த பொருட்கள் ஆசாரியர்களுக்கு உரியது (9 - 10)
4. கணவன், மனைவி பிரச்சனையில் விசாரணை (11 - 31)

அதிகாரம் - 6

1. நசரேய விரதம் குறித்த பிரமாணங்கள் (1 - 23)
2. ஆசாரியன் ஆசிர்வதிக்க வேண்டிய முறைமை குறித்து (24 - 27)

அதிகாரம் - 7

1. கோத்திர தலைவர்களின் காணிக்கைகள் (1 - 88)
2. கிருபாசனத்திலிருந்து மோசேயோடு பேசும் தேவன் (89)

அதிகாரம் - 8

1. குத்துவிளக்கு ஏற்றப்பட வேண்டிய முறை (1 - 4)
2. லேவியரை பரிசுத்தப்படுத்த வேண்டிய முறை (5 - 22)
3. லேவியர் ஊழியத்தில் சேர வேண்டிய வயதும், இளைப்பார வேண்டிய வயதும் (23 - 26)

அதிகாரம் - 9

1. பஸ்கா ஆசரிப்பு (1 - 8)
2. பஸ்கா இரண்டாம் வாய்ப்பு (9 - 14)
3. மேகஸ்தம்பம் இஸ்ரயேலரை வழிநடத்துகிறது (15 - 23)

அதிகாரம் - 10

1. வெள்ளி எக்காளங்களின் பயன்கள் (1 - 10)
2. இஸ்ரயேலர் சீனாயிலிருந்து பாரான் வனாந்தரத்திற்கு புறப்படுதல் (10 : 11 - 34)
3. மோசேயின் ஆசிர்வாதங்கள் (35 - 36)

அதிகாரம் -11

1. இஸ்ரயேலர் முறையிடுதல் - மன்னா வெறுப்பாகிறது (1 - 30)
2. தேவன் கோபத்தில் காடைகள் கொடுத்தல் (31 - 35)

அதிகாரம் -12

1. மிரியாமும், ஆரோனும் மோசேக்கு விரோதமாக பேசுதல் (1 - 9)
2. மிரியாம் குஷ்டரோகியாதல், மோசே மிரியாமுக்காக ஜெபித்தல் (10 - 16)

அதிகாரம் - 13

1. கானானை வேவு பார்க்க சென்றவர்கள் குறித்த விபரங்கள். (1 - 27)
2. அவர்கள் கொடுத்த தவறான தகவல்கள் (துர்ச்செய்தி) (28 - 33)

அதிகாரம் -14

1. துர்ச்செய்தி கேட்ட மக்களின் முறையீடு (1 - 10)
2. அதனால் ஏற்பட்ட தேவ கோபம் (11 - 44)

அதிகாரம் - 15

பலிகள் குறித்த பிரமாணங்கள்.

அதிகாரம் - 16

1. கோராகின் கிளர்ச்சி (1 - 3)
2. மோசேக்கு விரோதமாக எழும்புதல் (4 - 19)
3. அவர்களுடைய அழிவு (20 - 50)

அதிகாரம் - 17

ஆரோனின் கோல் துளிர்த்தல் சம்பவம்.

அதிகாரம் - 18

ஆசாரியர்கள் மற்றும் லேவியரின் வேலைகள்.

அதிகாரம்- 19

தீட்டு நீக்கும் சிவப்பு கடாரியின் சாம்பல்.

அதிகாரம் - 20

1. மிரியாமின் மரணம் (1 - 6)
2. மோசே இரண்டாம் தடவை கண்மலையை அடித்தல் (7 - 25)
3. ஆரோனின் மரணமும், எலெயாசரின் பதவி ஏற்பும் (26 - 29)

அதிகாரம் - 21

1. கானானிய ராஜா தோற்கடிக்கப்படுதல் (1 - 3)
2. ஏதோம் தேசத்தை சுற்றி செல்லுதல் (4)
3. இஸ்ரயேலர் முறுமுறுத்தல் கொள்ளிவாய் சர்ப்பத்தால் அழிக்கப்படுதல் (5 - 8)
4. வெண்கல சர்ப்பம் உண்டாக்கப்படுதல்.

அதிகாரங்கள் - 22, 23, 24

பிலேயாமின் சம்பவம்.

அதிகாரம் - 25

மோவாபியருடன் இஸ்ரயேலர் செய்த தவறு அதனால் ஏற்பட்ட தேவ தண்டனை.

அதிகாரம் - 26

இஸ்ரயேலர் மீண்டும் எண்ணப்படுதல்.

அதிகாரம் - 27

1. செலோப்பியாத்தின் புதல்வியரின் சொத்துரிமை குறித்த விபரங்கள் (1 - 11)
2. தனக்கு பின்னாக ஒருவரை நியமிக்க மோசே விண்ணப்பித்தல்.
   யோசுவா நியமிக்கப்படுதல் (12 - 23)

அதிகாரம் - 28

இஸ்ரயேலர் செலுத்த வேண்டிய காணிக்கைகள், பலிகள்.

அதிகாரம் - 29

எக்காளங்களின் பண்டிகைகள், பலிகள்.

அதிகாரம் - 30

பொருத்தனைகள் குறித்த பிரமாணங்கள்.

அதிகாரம் - 31

1. மீதியாணியருடன் இஸ்ரயேலரின் யுத்தம், பிலேயாம் கொலை செய்யப்படுதல். (1 - 12)
2. மீதியானிய பெண்களை கொலை செய்யாமல் பிடிக்கப்பட்டதற்கு படைத்தலைவர்களுடன் மோசேயின் கோபம் (13 - 54)

அதிகாரம் - 32

ரூபன் கோத்திரம், காத் கோத்திரம் யோர்தானுக்கு முன்னமே தங்களுக்கு இடம் தரவேண்டும் என்று கேட்டல்.

அதிகாரம் -33

இஸ்ரயேலரின் பயண தொகுப்பு.

அதிகாரம் - 34

1. கானான் நாட்டின் எல்லைகள் (1 - 15)
2. நாட்டை பங்கிட்டு கொடுப்போரின் பெயர்கள் (16 - 29)

அதிகாரம் - 35

லேவியருக்கு கொடுக்கப்பட்ட பட்டணங்கள் குறித்த விபரம்.

அதிகாரம் - 36

செலோப்பியாத்தின் குமாரத்திகளுக்கு கொடுக்கப்பட்ட இடங்கள்.

உம்முடைய வசனமே சத்தியம்"   யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 18

எண்ணாகம் பகுதி – II

எண்ணாக புத்தகத்தின் சுருக்கம்

1. எண்ணிக்கையை குறிக்கிறது (2 வித எண்ணிக்கை) 1 மற்றும் 26 அதிகாரங்கள்)
2. இஸ்ரயேலா் வழியில் எப்படி நடந்து சென்றார்கள் என்பதை சொல்கிறது.
3. இஸ்ரயேலா் வனாந்திரத்தில் போகும் போது என்னவெல்லாம் சந்தித்தார்கள் என்று கூறுகிறது.

எண்ணாகமத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் - 12 நிகழ்ச்சிகள்

1. மன்னாவிற்காக இஸ்ரயேலா் முறுமுறுத்தல் மற்றும் தேவன் காடைகள் கொடுத்தல் (11 அதிகாரம்)



2. மிரியாம், ஆரோன் மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தல், மோசே மிரியாமுக்காக ஜெபித்தல் (12 அதிகாரம்)

3. வேவு பார்க்க சென்ற 12 பேரில் 10 பேர் துர்ச்செய்தி சொன்னது (13 அதிகாரம்)



4. துர்ச்செய்தி சொன்னதினால் ஏற்பட்ட தேவ கோபம் (14)



5. கோராகின் கூட்டத்தார் மோசேக்கு விரோதமாக எழும்புதல். அதனால் அவர்களுக்கு ஏற்பட்ட அழிவு (16 அதிகாரம்)

6. ஆரோனின் கோல் துளிர்த்த சம்பவம் (17 அதிகாரம்)

7. மிரியாமின் மரணம் / மோசே இரண்டாம் தடவை கன்மலையை அடித்தல் / ஆரோனின் மரணம் (20 அதிகாரம்)

8. இஸ்ரயேலரின் முறுமுறுப்பு / தேவன் கொள்ளிவாய் சர்ப்பத்தை அனுப்புதல் / வெண்கல சர்ப்பம் உண்டாக்கப்பட்டு அதை நோக்கிப் பார்த்தவர்கள் பிழைத்தல் (21 அதிகாரம்)

9. பிலேயாமின் சம்பவம் (23 - 24 அதிகாரங்கள்)



10. மோவாபியருடன் இஸ்ரயேலர் செய்த தவறு (25 அதிகாரம்)
11. தனக்கு பின்னாக ஒருவரை நியமிக்க மோசே விண்ணப்பித்தல், யோசுவா நியமிக்கப்படுதல் (27 அதிகாரம்)



12. ரூபன் கோத்திரம், காத் கோத்திரம் யோர்தானுக்கு முன்னமே தங்களுக்கு இடம் தர வேண்டும் என்று கேட்டு பெறுதல் (32 அதிகாரம்)

முக்கியமான இடங்கள் (10 இடங்கள்)

1. சீன் வனாந்திரம்	-	20 வயதிற்கு மேற்பட்ட புருஷர்களின் எண்ணிக்கை கணக்கெடுத்தல் (முதல் தடவை) (1 அதிகாரம்).
2. பாரான் வனாந்திரம்	-	வேவுகாரர் 12 பேரை இங்கிருந்து தான் மோசே கானன் தேசத்திற்கு வேவு பார்க்க அனுப்புகிறார் (13 அதிகாரம்).
3. காதேஸ் பர்னேயா	-	மிரியாம் இந்த இடத்தில்தான் மரணமடைகிறார். மோசே இரண்டாவது தடவை கன்மலையை இங்குதான் அடிக்கிறார். (20)
4. ஆராத்	-	கானானியனாகிய ஆராத் ராஜாவோடு யுத்தம் (21 : 1 – 3)
5. ஏதோம்	-	ஏசாவின் வம்சத்தார் வாழும் இடம். இதன் வழியாய் செல்ல ஏதோமின் ராஜா அனுமதிக்கவில்லை. இஸ்ரயேலர் ஏதோமை சுற்றி கடந்து போகும்படி கர்த்தர் கட்டளையிடுகிறார். ▪ ஆரோன் மரித்தது இங்குதான். ▪ கொள்ளிவாய் சர்ப்பத்தால் அழிவு / வெண்கல சர்ப்பம் உண்டாக்கப்பட்டது இங்குதான் (21 – 4 – 9)
6. அம்மோன்	-	அம்மோன் ராஜா சீகோனை முறியடித்து அம்மோன் தேசத்தை இஸ்ரயேலர் கைப்பற்றுகின்றனர் (21 : 21 – 25)
7. பாசான்	-	பாசானின் ராஜா ஓகை இஸ்ரயேலர் தோற்கடித்தல் (21 : 33 – 35)
8. மோவாப் சமவெளி	-	எரிகோவிற்கு எதிராக, யோர்தானுக்கு கிழக்கே இந்த இடத்தில் இஸ்ரயேலர் பாளயமிறங்கினர் (22 : 1)
9. மோவாப்	-	இஸ்ரயேலரை சபிக்கும்படி மோவாபின்ராஜா பிலேயாமை கூலிக்கு அழைத்தது இங்குதான் (எண் 22 – 24)
10. கீலேயாத்	-	ரூபன் கோத்தரமும், காத்கோத்திரமும் இந்த இடத்தில்தான் வாழ விரும்பி இடம் கேட்டனர் (32 அதிகாரம்)

முக்கிய மனிதர்கள்

1. மோசே
2. ஆரோன்
3. மிரியாம்
4. யோசுவா
5. காலேப்
6. எலியாசர்
7. கோராகின் புத்திரா
8. பிலேயாம்

எண்ணாகம நூலின் முக்கிய இடங்கள்







உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்



வகுப்பு - 19

உபாகமம் DEUTERONOMY

எபிரேய பெயர் : டேவரீம் (Devarim)

இதன் பொருள் : வசனங்களாவன (or)
இரண்டாவது நியாயப்பிரமாணம்

ஆசிரியர் : மோசே

வேதத்தின் 5-வது புத்தகம் (தோராவின் கடைசி புத்தகம்)

அதிகாரங்கள் மொத்தம் : 34

வசனங்கள் மொத்தம் : 958

எழுதப்பட்ட இடம் : மோவாபின் சமவெளி

யாருக்கு எழுதினார் : கானான் தேசத்திற்கு செல்ல இருந்த புதிய தலைமுறையினருக்கு

உபாகமத்தின் சிறப்பு

1. இந்த புத்தகத்தில் இருந்து கர்த்தர் இயேசு அநேக வசனங்களை எடுத்து பேசியிருக்கிறார் (உதாரணம் : சோதனையின் போது பேசிய மூன்று வசனங்களும் இந்த புத்தகத்திலிருந்து பேசி இருக்கிறார்.). (உபா 8 : 3 – மத் 4 : 4) (உபா 6 : 16 – மத் 4 : 7) (உபா 6 : 13 - மத் 4 : 10)
2. புதிய ஏற்பாட்டில் ஏறக்குறைய 80 முறை உபாகம புத்தகத்திலிருந்து வசனங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.
3. இந்த புத்தகத்தில் தேவன் இஸ்ரயேலருக்கு செய்ததை மீண்டும் அவர்களுக்கு நினைப்பூட்டுதல், மீண்டும் அவர்களை தேவனுக்கென்று அர்பணிக்க உற்சாகப்படுத்துதல் போன்ற காரியங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

4. 2 மாத சம்பவங்கள் இதில் அடங்கி இருக்கிறது.
   1. ஒரு மாதம் மோசே பேசிய செய்திகள்.
   2. மோசேயின் மரணம் முடிந்து ஒரு மாதம் துக்கம் அனுசரித்தபின்பு புறப்படுகின்றனர்.

இதை படிக்கும் முறை

மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

I. தேவன் இஸ்ரயேலருக்கு என்ன செய்தார் (1 : 1 முதல் 4 : 43 வரை)

II, தேவன் இஸ்ரயேலரிடம் என்ன எதிர்பார்க்கிறார் (4 : 44 முதல் 26 : 19 வரை)

III. தேவன் இஸ்ரயேலருக்கு என்ன செய்யப்போகிறார் (27 அதிகாரம் முதல் 34 வரை)

I. தேவன் இஸ்ரயேலருக்கு என்ன செய்தார்? (1 : 1 முதல் 4 : 43 வரை)

1 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் (பாலை வனபகுதியில்) இஸ்ரயேல் ஜனங்களின் முற்கல அனுபவங்களை எடுத்துரைக்கும் கால பகுதி இதில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

2 இஸ்ரயேல் ஜனங்களுக்கு கீழ்ப்படியாமையினால் வந்த தண்டனையை குறித்தும், கீழ்ப்படிவதினால் வரும் ஆசிர்வாதங்களையும் கூறுகிறார்.

3 லேவியராகமம், எண்ணாகமத்தின் சுருக்கம் முதல் 3 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

4 4-வது அதிகாரத்தில் தேவ பிரமாணங்களின் சிறப்பு தன்மையை வெளிப்படுத்துகிறார். (4 : 1 - 43)

II. தேவன் இஸ்ரயேலரிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார்? (4 : 43 – 26 : 19)

1. 5 முதல் 10 அதிகாரங்களில் 10 கட்டளைகளின் விளக்கம் உள்ளடக்கி மோசே பேசியுள்ளார்.
2. இஸ்ரயேலர் ஆசரிக்க வேண்டிய கட்டளைகள் (12 முதல் 16 : 17 வரை)
3. சமுதாய பிரமாணங்கள் (சட்டங்கள்) (16 : 18 முதல் 26 : 19 வரை)



III. தேவன் இஸ்ரயேலருக்கு என்ன செய்ய போகிறார்? (27 – 34)

1	தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிதலினால் உண்டாகும் ஆசிர்வாதம், கீழ் படியாமையினால் ஏற்படும் தண்டனை	(24 – 30 அதிகாரங்கள்)
2.	யோசுவாவை தனக்கு பின் இஸ்ரயேல் ஜனங்களை வழி நடத்த நியமித்து, அவரை ஆசிர்வதிக்கிறார்.	(31 அதிகாரம்)
3.	மோசேயின் பாட்டு	(31 – 32 அதிகாரங்கள்)
4.	மோசே 12 கோத்திரங்களை ஆசிர்வதித்தல்	(33 அதிகாரம்)
5.	பிஸ்காவின் கொடுமுடியில் ஏறி கானானை பார்வையிடுகிறார், மோசேயின் மரணம் , மோசேயை குறித்து வேதம் கொடுக்கும் சாட்சி	(34 அதிகாரம்)



முக்கிய நபர்கள்

1. மோசே
2. யோசுவா

முக்கிய நிகழ்ச்சி

மோசேயின் மரணம் (34 அதிகாரம்)



உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 20

யோசுவா (JOSHUA)



எபிரேய பெயர் - யேஹொஷீஅ (Yhoshua)
பெயர் அர்த்தம் - கர்த்தராகிய இரட்சிப்பு
ஆசிரியர் - யோசுவா (யோசுவா 24 : 26)

- வேதத்தின் 6-வது புத்தகம்
- வரலாற்று நூல்கள் வரிசையில் முதல் புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 24
- வசனங்கள் மொத்தம் - 658

எழுதப்பட்ட இடம் - மோவாபின் சமவெளி மற்றும் கானான்

யோசுவா புத்தகத்தின் சிறப்பு

1. யோர்தான் நதி தடுக்கப்பட்டு, இஸ்ரயேல் ஜனங்கள் உலர்ந்த தரை வழியாய் கடந்து சென்ற வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சி இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. ராகாபை குறித்தும், அவர் விசுவாசத்தை குறித்தும் அறிந்து கொள்கிறோம்.
3. எரிகோ கோட்டை இடிந்து விழுந்த சம்பவம் இதில் உள்ளது.
4. யோசுவா இஸ்ரயேலரை எவ்வாறு கானானுக்குள் வழிநடத்தி, கானான் தேசத்தை பங்கிட்டு கொடுத்தார் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.
5. யோசுவாவின் கடைசி உரை இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
6. யோசுவாவின் மரணத்தோடு இந்த புத்தகம் முடிகிறது.

இதை படிக்கும் முறை

2 பிரிவுகளாக பிரிக்கலாம்

1. வாக்கு தத்த நாட்டை (கானான் தேசம்) வெற்றி கொள்ளுதல் .
(1 – 12 அதிகாரங்கள்)
2. வாக்கு தத்த நாட்டை பங்கிட்டு கோத்திரங்களை குடியேற்றுவித்தல் .
(13 – 24 அதிகாரங்கள்)

I. வாக்கு தத்த நாட்டை வெற்றி கொள்ளுதல் (1 – 12 அதிகாரங்கள்)

1. கானானுக்குள் நுழைய ஆயத்தமாகுதல் (1 – 4 அதிகாரங்கள்)
2. கானானை போரிட்டு சுதந்தரித்தல் (5 – 12 அதிகாரங்கள்)

II. வாக்கு தத்த நாட்டை பங்கிட்டு கோத்திரங்களை குடியேற்றுவித்தல் (13 – 24 அதிகாரங்கள்)

1. கானானை கோத்திரங்களுக்கு பங்கிட்டு கொடுத்தல் (13 – 21 அதிகாரங்கள்)
2. இஸ்ரயேலரோடு உடன்படிக்கையை உறுதிப்படுத்துதல் (22 – 24 அதிகாரங்கள்)

காலம்

பகுதி I 1 – 12 அதிகாரங்கள் (7 வருட நிகழ்ச்சி)

பகுதி II 13 – 24 அதிகாரங்கள் (18 வருட நிகழ்ச்சி)

முக்கிய நிகழ்ச்சிகள்

1. **ராகாபின் சம்பவம் (2 அதிகாரம்)**





2. யோர்தானை கடந்து செல்லுதல் (3, 4 அதிகாரங்கள்)

3. எரிகோ கோட்டையை தகர்த்தல் (6 அதிகாரம்)

4. ஆகானின் தவறு (7 அதிகாரம்)



5. கிபியோனியர் சம்பவம் (9 அதிகாரம்)



முக்கிய நபர்கள்

1. யோசுவா
2. ராகாப்
3. ஆகான்
4. காலேப்
5. எலெயாசர்

முக்கியமான 10 இடங்கள்

1. சித்தீம்

இங்கிருந்துதான் யோசுவா புத்தகத்தின் வரலாறு ஆரம்பிக்கின்றது (3 : 1)

2. யோர்தான் நதி

கர்த்தருடைய பெட்டியை சுமந்த ஆசாரியர்களின் கால் பட்டவுடனே யோர்தானின் ஓட்டம் தடைபட்டு, உலர்ந்த தரை வழியாக இஸ்ரயேலர் யோர்தானை கடந்து செல்கின்றனர் (3 - 4 அதிகாரங்கள்)

3. கில்கால்

இஸ்ரயேலர் யோர்தானை கடந்து முதலில் இங்குதான் தங்கினார்கள். இங்கு விருத்த சேதனம் பண்ணப்படுகிறது. பஸ்காவை ஆசரிக்கிறார்கள் (5 அதிகாரம்)

4. எரிகோ

இஸ்ரயேலர் துதித்து எரிகோ மதில் இடிந்து விழுந்த சம்பவம் (6 அதிகாரம்)

5. ஆயி

ஆகானின் கீழ்படியாமையினால் இஸ்ரயேலர் தோல்வியடைகின்றனர். பாவத்திற்கான தண்டனை கொடுக்கப்பட்டபின், மீண்டும் போர் தொடுக்க தேவன் கட்டளையிட்டபின், இஸ்ரயேலர் வெற்றி பெறுகின்றனர். (7 – 8 அதிகாரங்கள்)

6. ஏபால் மற்றும் கெரிசீம் மலைகள்

இங்கு யோசுவா ஒரு பலிபீடத்தை கட்டுகிறார்
இங்கு நியாயப் பிரமாணம் (ஆசிர்வாதம், சாபம்) வாசிக்கப்படுகிறது. (8 அதிகாரம்)

7. கிபியோன்

கிபியோனியர் இஸ்ரயேலரோடு உடன்படிக்கை செய்து பின்பு இஸ்ரயேலருக்கு அடிமையாக்கப்படுதல் (9 அதிகாரம்)

8. ஆயலோன் பள்ளதாக்கு

கிபியோனியரோடு போர் தொடுத்த எதிரிகளை யோசுவா முறியடித்த இடம் (10 அதிகாரம்)

9. சீலோ

இஸ்ரயேலர் ஆசரிப்பு கூடாரத்தை இங்கு அமைக்கின்றனர்.
இஸ்ரயேலரின் 7 கோத்திரங்களுக்கு சீட்டு போட்டு தேசத்தை பங்கிட்டு கொடுத்தல். (யோசுவா 18 : 10)

10. சீகேம்

இஸ்ரயேலருக்கு யோசுவா கொடுத்த இறுதி பிரசங்கம் (24 அதிகாரம்)



அதிகாரம் - 1

மோசேக்கு பின் அடுத்த தலைவராக யோசுவா நியமிக்கப்படுதல்.

அதிகாரம் - 2

ராகாபின் சம்பவம்.

அதிகாரம் -3, 4

யோர்தானை கடந்து செல்லுதல்.

அதிகாரம் - 5

விருத்தசேதனம் புதுபிக்கப்படுதல், பஸ்கா ஆசரித்தல்.

அதிகாரம் -6

எரிகோ கோட்டை இடிந்து விழும் சம்பவம்.

அதிகாரம் -8

ஆகானின் சம்பவம்.

அதிகாரம் -9

கிபியோனியர், இஸ்ரயேலரோடு இணைகின்ற சம்பவம்.

அதிகாரம் -10

1. 5 ராஜாக்கள் (எருசலேம், எபிரோன், யர்மூத், லாகீஸ், எக்லோன்) இஸ்ரயேலரோடு போர் செய்தல் யோசுவா அவர்களை முறியடித்தல்.
2. சூரியன், சந்திரனை தரித்து நிற்க வைத்து போரிடுதல்.

அதிகாரம் -11

ஆத்சோர், எமோரியர், ஏத்தியர், பெரிசியர், எபூசியர். ஏவியர் உட்பட அநேக ராஜாக்களை தோற்கடித்தல்.

அதிகாரம் -12

இதுவரை இஸ்ரயேலர் ஜெயித்த ராஜாக்களின் பட்டியல் மொத்தம் 31 ராஜாக்கள்.

அதிகாரம் - 13

1. இதுவரை இஸ்ரயேலர் கைப்பற்றாத நாட்டின் எல்லைகள் (1 - 15)
2. இரண்டரை (2½) கோத்திரங்களுக்கு யோர்தானுக்கு கிழக்கே கொடுத்த உரிமைக்கான வாக்குத்தத்தங்கள் (16 - 32)
3. லேவி கோத்திரத்திற்கு எதுவும் கொடுக்கப்படவில்லை (33)

அதிகாரம் - 14

1. ஒன்பதரை (9 ½) கோத்திரங்களுக்கு இடங்கள் சீட்டுப்போடப்படுகின்றன.
2. எபிரோன் மலை காலேப்பிற்கு கொடுக்கப்படுகிறது.

அதிகாரம் - 15

யூதா கோத்திரத்திற்கு கிடைத்த இடங்கள்.

அதிகாரம் - 16, 17

யோசேப்பின் புத்திரருக்கு (எப்பிராயீம் மற்றும் மனாசே பாதி கோத்திரம்) கிடைத்த இடங்கள்.

அதிகாரம் - 18

1. ஆசாரிப்பு கூடாரம் சீலோவிலே நிறுவப்படுகிறது.
2. 7 கோத்திரங்களுக்கு இடங்களை தேர்வு செய்ய யோசுவா ஆட்களை அனுப்புகிறார் (18 : 2 - 6)
3. பென்யமீன் புத்திரருக்கு கிடைத்த இடங்கள் (11 - 28)

அதிகாரம் - 19

சிமியோன், செபுலோன், இசக்கார், ஆசேர், நப்தலி, தாண் ஆகிய கோத்திரங்களுக்கு கிடைத்த இடங்கள்.

அதிகாரம் - 20

அடைக்கலப்பட்டணங்கள் கர்த்தரின் கட்டளைப்படி வேறு பிரிக்கப்படுகின்றன.

அதிகாரம் - 21

லேவியருக்கான பட்டணங்கள் சீட்டு போடப்படுகிறது.

அதிகாரம் - 22

1. இரண்டரை கோத்திரத்தை (2½) ஆசீர்வதித்து வழியனுப்புதல்.
2. அவர்கள் அங்கு ஒரு பலிபீடம் கட்டுதல்.
3. அதனால் ஏற்படும் ஒரு சில பிரச்சனைகள்.

அதிகாரம் - 23, 24

1. யோசுவாவின் அறிவுரைகள், இறுதி பிரசங்கம்.
2. யோசுவாவின் மரணம் (24 : 29, 30)
3. ஆரோனின் குமாரன் எலேயாசர் மரணம் (24 - 33)



பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 21

நியாயாதிபதிகள் (JUDGES)

எபிரேய பெயர் - ஷோபெற்றிம் (Shoptim)

பெயர் அர்த்தம் - நியாயாதிபதி / ஆளுபவர் / மீட்பவர் / இரட்சகர்

எழுதியவர் - சாமுயேல் தீர்க்கதரிசி.

- வேதத்தின் 7-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் 21
- வசனங்கள் மொத்தம் 618

இப்புத்தகத்தின் சிறப்பு

யோசுவாவின் மரணத்திற்கு பிறகு சிறிது காலம் சென்ற பின் இஸ்ரயேல் ஜனங்கள் தேவனைவிட்டு விலக ஆரம்பிக்கிறார்கள். தங்களை வழி நடத்த ஆள் இல்லாததினால் ஜனங்கள் அவரவர் விருப்பப்படி நடக்க ஆரம்பிக்கிறார்கள். இப்போது தேவன் பகைஞர் மூலம் அவர்களை ஒடுக்கிறார்.

இப்போது இஸ்ரயேலர் தேவனை நோக்கி கூப்பிடுகிறார்கள். அவ்வாறு அவர்கள் கூப்பிடும் போது தேவன் அவர்களுக்கு **நியாயாதிபதிகளை** ஏற்படுத்துகிறார். இதை குறித்து கூறுவது தான் இந்த நியாயாபதிகளின் புத்தகம். (நியா 2: 8 – 16)

இதை படிக்கும் முறை

1.	முகவுரை	(1,2 அதிகாரங்கள்)
2.	இஸ்ரயேலில் எழும்பின் நியாதிபதிகள் குறித்த விவரங்கள்	(3-16 அதிகாரங்கள்)
3.	இஸ்ரயேலருக்குள் நடந்த பிரிவினை வாழக்கை	(17-21 அதிகாரங்கள்)

I முகவுரை (1, 2 அதிகாரங்கள்)

1.	கானான் தேசத்தை கைப்பற்றுவதில் இஸ்ரயேலரின் தோல்வி	(1 அதிகாரம்)
2.	இஸ்ரயேலில் தேவனுடைய நியாயத்தீர்ப்பு	(2 அதிகாரம்)

II. இஸ்ரயேலில் எழும்பின நியாயாதிபதிகள் (3-16 அதிகாரங்கள்)

வ. எண்	நியாதிபதி	நியாயம் விசாரித்த நாட்கள்	ஆதார வசனம்
1.	ஒத்தனியேல்	40 வருஷம்	3 : 7 - 11 வசனங்கள்
2.	ஏகூத்	80 வருஷம்	3: 12 - 30 வசனங்கள்
3.	சம்கார்	-	3: 31 வசனம்
4.	தெபோராள், பாராக்	40 வருஷம்	4, 5 அதிகாரங்கள்
5.	கிதியோன்	40 வருஷம்	6 - 8 அதிகாரங்கள்
6.	தோலா	23 வருஷம்	10: 1, 2 வசனங்கள்
7.	யாவீர்	22 வருஷம்	10:3-5 வசனங்கள்
8.	யெப்தா	6 வருஷம்	10 : 6 முதல் 11 : 40 வரை
9.	இப்சான்	7 வருஷம்	12 : 8 - 10 வசனங்கள்
10.	ஏலோன்	10 வருஷம்	12 : 11 - 12 வசனங்கள்
11.	அப்தோன்	8 வருஷம்	12 : 13 - 15 வசனங்கள்
12.	சிம்சோன்	20 வருஷம்	13 - 16 அதிகாரங்கள்

III இஸ்ரயேலருக்குள் நடந்த பிரிவினை வாழ்க்கை (17 - 21 அதிகாரங்கள்)

இந்த 5 அதிகாரங்களை (17–21) இந்த புத்தகத்தின் பின்னிணைப்பாக கொள்ளலாம். தேவனை விட்டு சொந்த வழிகளுக்கு திரும்பிய இஸ்ரயேலரின் உள்நாட்டு குழப்பத்தையும், ஒழுக்க சீர் குலைவுகளின் பயங்கரத்தையும் இங்கு நாம் பார்க்கிறோம்.

1. விக்கிரக ஆராதனை என்ற பாவம் / தாண் கோத்திரம் இடம் பிடித்தல் (17, 18 அதிகாரங்கள்)
2. ஒழுக்க கேடு என்ற பாவம் - (19 அதிகாரம்)
3. பென்யமீனருக்கு எதிராக இஸ்ரயேலர் எடுத்த முடிவு - (20, 21 அதிகாரங்கள்)

நியாயாதிபதிகளின் நாட்களில் இஸ்ரயேலரை அடிமைப்படுத்தின் எதிரிகள்

1.	மெசொப்பொத்தாமியாவின் ராஜா கூஷான் ரிஷதாயீம்	(5 வருஷம்)	நியாதி : 3 : 8
2.	எக்லோன் என்னும் மோவாபின் ராஜா	(18 வருஷம்)	நியாதி : 3 : 12
3.	பெலிஸ்தியர்	-	நியாதி : 3 : 31
4.	யாபீன் என்னும் கானானியருடைய ராஜா	(20 வருஷம்)	நியாதி : 4 : 1-2
5.	மீதியானியர்	(7 வருஷம்)	நியாதி : 6 : 1
6.	பெலிஸ்தியர், அம்மோனியர்	(18 வருஷம்)	நியாதி : 10 : 6-7
7.	பெலிஸ்தியர்	(40 வருஷம்)	நியாதி : 13 : 1

முக்கியமான இடங்கள்

1. போகீம்

இஸ்ரயேலரின் தவறை கர்த்தருடைய தூதனானவர் வந்து சுட்டி காட்டிய இடம் (நியாய 2: 1 – 5)

2. எரிகோ

பேரீட்சை மரங்களின் பட்டணம் என்ற பெயர் இதற்கு உண்டு. இதை மோவாபின் ராஜா பிடிக்கிறார். இவரை ஏகூத் கொலை செய்கிறார். (3 : 11 – 30)

3. ஆத்சோர்

கானானியருடைய ராஜா யாபீன் இந்த இடத்தை சேர்ந்தவர். இவரை தெபோராள் மற்றும் பாராக் முறியடிக்கிறன்றனர். (நியாதி 4, 5 அதிகாரங்கள்)

4. மோரேமேடு

கிதியோன் மீதியானியரை முறியடித்த இடம் (நியா 7-1)



5. சீகேம்

அபிமேலேக்கை சீகேம் பட்டணத்தார் ராஜாவாக்கின இடம். (நியா 9-5-6)

6. அம்மோனியரின் தேசம்

யெப்தா இஸ்ரயேலரை மீட்டு, போரிட்டு பிடித்த இடம் (நியா 11 – 32, 33)

7. திம்னாத்

சிம்சோன் பெலிஸ்திய பெண்ணை கண்டு திருமணம் செய்ய முடிவெடுத்த இடம் (நியா 14 – 1, 2)

8. சோரேோக் பள்ளதாக்கு

தெலீலாளுடன் சிம்சோனுக்கு சிநேகம் ஏற்பட்ட இடம் (நியா 16-4)

9. காசா

சிம்சோன் கண்களை குருடாக்கி பெலிஸ்தியர் இந்த இடத்திற்குதான் கொண்டு சென்றனர்.

10. எப்பிராயீம் மலைநாடு

மீகா என்பவர் வாழ்ந்த இடம் (நியா 17-1)

11. தாண்

தாண் கோத்திரத்தார் லாயீசுக்கு சென்று இந்த இடத்தை பிடித்து அதற்கு தாண் என்று பெயரிடுகின்றனர். (நியா 18-27-29)

12. கிபியா

இந்த இடத்தில் இருந்த பென்யமீன் கோத்திரத்தார் ஒழுக்க கேடான காரியங்களை செய்தனர்.

13. மிஸ்பா

கிபியாவிலிருந்த பென்யமீனரை தண்டிக்க வேண்டியது குறித்து இஸ்ரயேலர் இங்குதான் கூடி முடிவெடுத்தனர்.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரயேல் தேசம்

நியாயாதிபதிகள் புத்தகத்தின்
முக்கிய இடங்கள்
மத்திய தரைக்கடல்
சிரியா
11.தாண்
3.ஆத்சோர்
கலிலேயா கடல்
4.மோரேமேடு
யோர்தான் நதி
5.சீகேம்
10.எப்பிராயீம்
மலைநாடு
13.மிஸ்பா
2.எரிகோ
6.அம்மோனியர்
12.கிபியா
1.போகீம்
7.திம்னாத்
8.சோரேக்
பள்ளத்தாக்கு
9.காசா
சவக்கடல்
1.போகீம்
2.எரிகோ
3.ஆத்சோர்
4.மோரேமேடு
5.சீகேம்
6.அம்மோனியர்
7.திம்னாத்
8.சோரேக்
பள்ளத்தாக்கு
9.காசா
10.எப்பிராயீம்
மலைநாடு
11.தாண்
12.கிபியா
13.மிஸ்பா

முக்கிய நபர்கள்

1. கிதியோன்



2. யெப்தா



3. சிம்சோன்



உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 22

ரூத் (RUTH)

எபிரேய பெயர் : ரியூத் (Rut)

இதன் பொருள் : நட்பு (அ) ஐக்கியம்

ஆசிரியர் : இந்த ரூத் புத்தகத்தில் எந்த இடத்திலும் ஆசிரியர் பற்றிய குறிப்பு இல்லை. யூத பாரம்பரியபடி **சாமுயேல் தீர்க்கதரிசி** இதை எழுதியிருக்க வேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

- வேதத்தின் 8 வது புத்தம்
- மொத்தம் 4 அதிகாரங்கள்
- மொத்தம் 85 வசனங்கள்

காலம் : நியாயாதிபதிகளின் காலம் (ரூத் 1 – 1)

இப்புத்தகத்தின் சிறப்பு

1. மிகச்சிறிய புத்தகம் (85 வசனங்கள்)
2. குடும்ப பிண்ணனி நிறைந்தது
3. தேவனுக்கு பிரியமில்லாதவர்களாய் இஸ்ரயேல் ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்க **களங்கமற்ற அன்பு, கபடற்ற பக்தி** நிறைந்த ஒரு துணிவுள்ள பெண்ணாகிய ரூத்தை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
4. இஸ்ரயேல் மக்களோடும், இஸ்ரயேலின் தேவனோடும் அன்பு பாராட்ட தனது **சொந்த உறவுகளையும், பாரம்பரியங்களையும் உதறிவிட்டு** பெத்லகேமிற்கு வந்து சேர்ந்த மோவாபிய பெண்ணான ரூத்தை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.

<u>இதை படிக்கும் முறை</u>

4 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. நகோமியும், ரூத்தும் பெத்லகேம் திரும்புதல்
2. ரூத் போவாஸின் களத்தில் உழைத்தல்
3. போவாஸ் ரூத் சந்திப்பு
4. போவாஸ் ரூத் திருமணம்.

<u>முக்கிய நபர்கள்</u>

1. நகோமி
2. ரூத்
3. போவாஸ்

<u>முக்கிய வசனம்</u>

ரூத் 1-16 : அதற்கு ரூத்; நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து, என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம்; என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன்.

<u>முக்கிய இடம்</u>

<u>1. பெத்லகேம்</u> எலிமேலேக்கின் குடும்பம் பஞ்சத்திற்கு முன் இஸ்ரயேலில் இருந்த இடம்.

<u>2. மோவாப் தேசம்</u> எலிமேலேக்கு குடும்பத்துடன் சென்ற இடம் / லோத்திற்கு தனது சொந்த மகள் மூலம் பிறந்த பிள்ளையின் சந்ததியே மோவாபியர் (ஆதி 19: 30-37) இவர்கள் வாழ்ந்த இடம் மோவாப் தேசம்.



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 23

I சாமுயேல் I SAMUEL

எபிரேய பெயர்	-	ஷ்மூஏல் (Sh'muel)
இதன் பொருள்	-	தேவனிடம் கேட்டுப்பெற்று கொள்ளப்பட்டவர்
ஆசிரியர்	-	சாமுயேல் தீர்க்கதரிசி

- வேதத்தின் 9-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 31
- வசனங்கள் மொத்தம் - 810

இந்த புத்தகத்தன் சிறப்பு

1. **நியாயாதிபதிகளின் நியாய விசாரிப்பின் முடிவும், ராஜாக்களின் ஆட்சியின் ஆரம்பமும்** இந்த புத்தகத்தில் இடம் பெறுகிறது.
2. **ஆசாரியன் ஏலி** மற்றும் இஸ்ரயேலின் **கடைசி நியாயாதிபதி சாமுயேல்** குறித்தும், இஸ்ரயேலின் **முதல் ராஜா சவுலை** குறித்தும், அவருடைய **ஊழியக்காரனாகிய தாவீதை** குறித்தும் இதில் அறிந்து கொள்கிறோம்.
3. ஜெபத்தின் வல்லமை குறித்தும், ஜெபவீராங்கனை **அன்னாளை** குறித்தும் அறிந்து கொள்கிறோம்.
4. **மாற்றம்** என்ற காரியம் இதில் விசேஷமாக காணப்படுகிறது.

1.	ஏலியிடமிருந்து – சாமுயேல்	-	ஆசாரியத்துவ மாற்றம்
2.	சாமுயேலிடமிருந்து – சவுல்	-	ஆசாரியத்துவத்திலிருந்து ராஜரீக மாற்றம்
3.	சவுலிடமிருந்து – தாவீது	-	ராஜரீக மாற்றம்

இதை படிக்கும் முறை

இதை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. இஸ்ரயேலின் கடைசி நியாயாபதியான சாமுயேலின் வரலாறு
(1-8 அதிகாரங்கள்)

2. இஸ்ரயேலின் முதல் ராஜாவான சவுலின் வரலாறு
(9-31 அதிகாரங்கள்)

3. சவுலின் ஊழியக்காரனாயிருந்த தாவீதின் வரலாறு
(16-31 அதிகாரங்கள்)

முக்கியமான கதாபாத்திரங்கள்

1.	அன்னாள்	(1-2 அதிகாரங்கள்)
2.	ஏலி ஆசாரியன்	(1-4 அதிகாரங்கள்)
3.	சாமுயேல் தீர்க்கதரிசி	(3-25 அதிகாரங்கள்)
4.	சவுல் ராஜா	(9-31 அதிகாரங்கள்)
5.	தாவீது	(16-31 அதிகாரங்கள்)

முக்கிய நிகழ்ச்சி

இஸ்ரயேலர் கானான் தேசம் வந்த பிறகு தேவன் அவர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்தது நியாயாதிபதிகளின் ஆளுகை. ஆனால் இஸ்ரயேல் ஜனங்கள் ராஜா வேண்டும் என்கிறார்கள். (1 சாமு 8-5). இதனால் நியாயாதிபதிகளின் ஆட்சி முறையிலிருந்து ராஜாக்களின் ஆட்சி முறைக்கு இஸ்ரயேல் தேசம் மாறுகிறது. இது முக்கிய நிகழ்ச்சி ஆகும்.

முக்கிய இடங்கள்

1. ராமா	சாமுயேல் பிறந்த இடம் (1 சாமு 1 : 19, 20)
2. சீலோ	ஆசாரிப்பு கூடாரம் இருந்த இடம் (1 சாமு 1 : 3)
3. கீரியாத் யாரீம்	உடன்படிக்கை பெட்டியை பெலிஸ்தியர் எடுத்து சென்று அவர்கள் மேல் தேவதண்டனை தொடர்ந்ததால், அவர்கள் இஸ்ரயேல் தேசத்துக்கு உடன்படிக்கை பெட்டியை திருப்பி அனுப்பிய இடம் (1 சாமு 6 : 21, 7 : 1)
4. மிஸ்பா	இஸ்ரயேலரை சாமுயேல் மனந்திரும்பும்படி அழைப்பு கொடுத்தல், இஸ்ரயேலர் கூடிவந்து பாவ அறிக்கை செய்த இடம் (1 சாமு 7: 3 - 6)
5. கில்கால்	சவுல் ராஜாவான பிறகு அம்மோனியரோடு செய்த முதல் யுத்தம். சவுல் ராஜ்யபாரத்தை ஏற்படுத்தி கொண்ட இடம் (1 சாமு 11 : 11 - 15)
6. ஏலா பள்ளதாக்கு	தாவீது கோலியாத்தை கொன்ற இடம் (1 சாமு 17 : 2)
7. சீப் வனாந்திரம்	தாவீது சவுலுக்கு பயந்து ஒளிந்திருந்த இடம் (1 சாமு 26 : 1 : 2)
8. காத்	சவுலின் கைக்கு தப்பி, தாவீது பெலிஸ்திய தேசத்தில் ஆகீஸ் என்னும் ராஜாவினிடத்தில் போய் சேர்ந்த இடம் (1 சாமு 27:2)
9. சிக்லாக்	ஆகீஸ் ராஜா தாவீதுக்கு கொடுத்த இடம் (1 சாமு 27:5, 6)
10. கில்போவா மலை	சவுலும் அவர் குமாரரும் மரித்த இடம் (1 சாமு 31 : 1 - 6)

உடன்படிக்கை பெட்டியின் பயணம்



ஏலி ஆசாரியனின் புதல்வர்கள் தேவனுடைய பெட்டியைச்
சீலோவிலிருந்து எடுத்து எபேனேசரின் சமவெளியிலிருந்த
போர் முனைக்குக் கொண்டு சென்றனர். அங்கிருந்து
ஆப்பெக்கிற்கு கொண்டு சென்றனர். பெட்டியைக் கைப்பற்றிய
பெலிஸ்தியர் முதலில் அதனை அஸ்தோத்திற்கும் தொடர்ந்து காத்திற்கும்
பின்பு எக்ரோனிற்கும் கொண்டு சென்றனர்.
ஒவ்வொரு இடங்களிலும் தேவன் அனுப்பிய வாதை பெலிஸ்தியரை
பின் தொடர்ந்ததினால் பெட்டியை இஸ்ரேயேலுக்கு திருப்பியனுப்பினர்.
அவ்வாறு ஒரு மாட்டு வண்டியில் ஏற்றப்பட்ட பெட்டி பெத்ஷிமேசிற்கு வந்தது.
பின்பு அதனை அங்கிருந்து எடுத்து கீரியாத்யாரீமிலிருந்த எலெயாசரின் வீட்டிற்கு
கொண்டு போய் வைத்தனர்.

1 சாமுயேலின் முக்கிய இடங்கள்
10.கில்போவாமலை
மத்திய தரைக்கடல்
யோர்தான் நதி
2.சீலோ
4.மிஸ்பா
5.கில்கால்
1.ராமா
3.கீரியாத்யாரீம்
சவக்கடல்
8.காத்
7.சீப் வனாந்தரம்
6.ஏலா பள்ளத்தாக்கு
9.சிக்லாக்
1.ராமா
2.சீலோ
3.கீரியாத்யாரீம்
4.மிஸ்பா
5.கில்கால்
6.ஏலா பள்ளத்தாக்கு
7.சீப் வனாந்தரம்
8.காத்
9.சிக்லாக்
10.கில்போவாமலை

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 24

II சாமுயேல் II SAMUEL

எபிரேய மொழியில் சாமுயேல் ஒரே புத்தகமாக இருக்கிறது.

ஆசிரியர் : யூத பரம்பரை கூற்றுப்படி சாமுயேல் தீர்க்கதரிசி என்று கூறுகிறார்கள். ஆனால் இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் சாமுயேல் இறந்த பிறகு நடந்த காரியங்கள் ஆகும்.

I நாளா 29 : 29–30 –ன் அடிப்படையில் நாத்தான் மற்றும் காத் தீர்க்கதரிசி எழுதியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்,



காத் தீர்க்கதரிசி

- வேதத்தின் 10-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 24
- வசனங்கள் மொத்தம் - 695

தாவீது ராஜா

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. தாவீது ராஜாவின் ஆட்சி கால வரலாற்றை கூறுகிறது.
2. தேவ ஆளுகையின் கீழ் சிறப்பாக ஆட்சி எவ்வாறு நடந்தது என்பதை இந்த புத்தகம் கூறுகிறது.
3. தாவீதின் சிறப்புகள் மட்டுமல்ல அவருடைய தவறுகளும் இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றது.

இதை படிக்கும் முறை

மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.	தாவீதின் வாழ்க்கையில் நடத்த வெற்றிகள்	(1-10 அதிகாரங்கள்)
2.	தாவீதின் வாழ்க்கையில் நடந்த தோல்விகள்	(11-12 அதிகாரங்கள்)
3.	தாவீதின் வாழ்க்கையில் அவருக்கு வந்த பாடுகள்	(13-24 அதிகாரங்கள்)

முக்கிய நபர்கள்

1. **தாவீது ராஜா**
2. **யோவாப்** - தாவீதின் படை தலைவர்
3. **அப்னேர்** - சவுலின் படை தலைவர்
4. **இஸ்போசேத்** - சவுலின் மகன்.
5. **மேவி போசேத்** - யோனத்தானின் மகன்
6. **சீபா** - மேவி போசேத்தை வளர்த்தவர்
7. **ஊசா** - உடன்படிக்கை பெட்டியை தொட்டு மரித்தவர்
8. **மீகாள்** - சவுலின் குமாரத்தி / தாவீதின் முதல் மனைவி
9. **பத்சேபாள்** - உரியாவின் மனைவி
10. **உரியா** - தாவீதின் படை வீரர்
11. **நாத்தான் தீர்க்கதரிசி** - தாவீதின் தவறை சுட்டி காட்டியவர்



12. **அம்னோன்** - தாவீதின் மூத்தகுமாரன்
13. **தாமார்** - தாவீதின் குமாரத்தி
14. **அப்சலோம்** - தாமாரின் அண்ணன்

15. **சீமேயி** - தாவீதை தூஷித்தவா்

16. **அகித்தோப்பேல்** - தாவீதுக்கு விரோதமாக அப்சலோமிற்கு ஆலோசனை கொடுத்தவா்

17. **பா்சிலா** - மகனாயீம் என்ற இடத்தில் தாவீது அப்சலோமிற்கு தப்பி சென்றபோது தாவீதுக்கு உதவியாய் இருந்தவா்.

18. **காத் தீா்க்க தரிசி** - தாவீது யுத்த மனுஷரை இலக்கம் பாா்த்து தேவதண்டனை பெறும் போது தேவ வாா்த்தையை தாவீதிடம் சொன்னவா்

19. **அா்வனா** - இவருடைய நிலத்தை விலைக்கு வாங்கி பலிசெலுத்திய பிறகு வாதை நிறுத்தப்படுகிறது. இங்குதான் சாலமோன் ராஜாவான பிறகு ஆலயம் கட்டுகிறாா்.

முக்கிய இடங்கள்

1. எபிரோன்: சவுல் இறந்த பிறகு தாவீது யூதா கோத்திரத்திற்கு மட்டும் ராஜாவாக இருந்த போது வசித்த இடம் (II சாமு 2 : 1 , 2)

2. எருசலேம்: எபூசியரின் கீழ் இருந்த எருசலேமை தாவீது மீட்டு, அதை தாவீதின் நகரம் என்று பெயரிடுகிறாா். (II சாமு 5: 6 , 7)

3. ரெப்பாயீம் பள்ளதாக்கு: தாவீது பெலிஸ்தியரை முறியடித்த இடம் (II சாமு 5: 17, 25)

4. மோவாப்: தாவீது இந்த பட்டணத்தை பிடித்து அவா்களிடமிருந்து கப்பம் வாங்கினாா். (II சாமு 8 : 2)

5. ஏதோம் : இஸ்ரயேலரின் எதிரிகளாக இருந்த ஏதோமியரை தாவீது ஜெயித்து தன்னை சேவிக்கிறவா்களாக்கினாா். (II சாமு 8 : 14)

6. ரப்பா: அம்மோனியரின் தலைநகா் ரப்பா. இதை தாவீது பிடிக்கிறாா். (II சாமு 12 : 29)

7. மகனாயீம் : அப்சலோமிற்கு தப்பி தாவீது ஓடிப்போன இடம் (II சாமு 17 : 24)

8. எப்பிராயீம் காடு: அப்சலோமின் படையும், தாவீதின் படையும் மோதிக் கொண்ட இடம் அப்சலோம் இங்கு கொல்லப்படுகிறாா். (II சாமு 18 : 6)

9. **ஆபேல்:-** தாவீது ராஜாவிற்கு விரோதமாக இஸ்ரயேலரை வழி நடத்திய சேபா என்பவர் தாவீதுக்கு பயந்து பதுங்கிய இடம். யோவாப் இந்த நகரை முற்றுகையிடுகிறார். ஆபேல் குடிகள் சேபாவை கொன்றவுடன் யோவாப் அரண்மனை திரும்புகிறார். (II சாமு 20 : 15 - 22)

தாவீது ராஜா முறியடித்த முக்கிய எதிரிகள்

1. எபூசியர் (II சாமு 5 : 6)
2. சீரியர் (II சாமு 8 : 11)
3. மோவாபியர் (II சாமு 8 : 11)
4. அம்மோன் புத்திரர் (II சாமு 8 : 11)
5. பெலிஸ்தியர் (II சாமு 8 : 11)
6. அமலேக்கியர் (II சாமு 8 : 11)
7. ஏதோமியர் (II சாமு 8 : 14)



II சாமுயேலின் முக்கிய இடங்கள்



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 25

I. இராஜாக்கள் I KINGS



எபிரேய வார்த்தை : மேலேக்கிம் (M'lakhim)

இதன் பொருள் : ராஜாக்கள் (அ) அரசர்கள்

ஆசிரியர் : எரேமியா தீர்க்கதரிசி என்று கருதப்படுகிறது.

- வேதத்தின் 11-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 22
- வசனங்கள் மொத்தம் - 816

எழுதப்பட்ட இடம்:- சமஸ்த இஸ்ரயேல்

இப்புத்தகத்தில் சிறப்பு:-



1. சாலமோனின் ஞானம், அவருடைய ஆட்சி முறை குறித்து அறிந்து கொள்கிறோம்.
2. சாலமோன் கட்டிய தேவாலயம், அரண்மனை குறித்து இதில் பார்க்கிறோம்.
3. சாலமோனின் வீழ்ச்சி குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
4. பிளவுப்பட்ட இஸ்ரயேல் குறித்தும், அதன் ராஜாக்கள் குறித்தும் அறிந்து கொள்கிறோம்.
5. தீர்க்க தரிசிகளில் மிக முக்கியமானவரான எலியா குறித்தும், அவர் மூலம் தேவன் செய்த அற்புதங்கள் குறித்தும் அறிந்து கொள்கிறோம்.

இதை படிக்கும் முறை:-

இதை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.	சாலமோனின் ஆட்சி காலம் (அ) சமஸ்த இஸ்ரயேல்	(1-11 அதிகாரங்கள்)
2.	பிளவுப்பட்ட இஸ்ரயேல் மற்றும் யூதா	(12-22 அதிகாரங்கள்

முதல் பிரிவு

I.சாலமோனின் ஆட்சி காலம் (1-11 அதிகாரங்கள்)

1.	சாலமோன் ராஜாவாக (பட்டத்திற்கு வர) நடந்த முயற்சிகள்	(1, 2 அதிகாரங்கள்)
2.	சாலமோனின் ஞானம் மற்றும் மேன்மைக்கு எடுத்து காட்டுகள்	(3, 4 அதிகாரங்கள்)
3.	சாலமோன் தேவாலயம் கட்டி, அதை பிரதிஷ்டை பண்ணுதல்	(5-8 அதிகாரங்கள்)
4.	சாலமோனின் வெளிநாட்டு உறவுகளும், புகழும்	(9-10 அதிகாரங்கள்)
5.	சாலமோனின் வீழ்ச்சிக்கான காரணங்கள்	(11 அதிகாரம்)

முக்கிய நபர்கள்:-

1. தாவீது - முதிர்வயதில் நடந்த காரியங்கள் மற்றும் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. (I இராஜா 2 : 10)

2. பத்சேபாள் - சாலமோன் ராஜாவாக முயற்சி எடுக்கிறார் (I இராஜா 1:11-40)



3. நாத்தான் தீர்க்கதரிசி - சாலமோன் ராஜாவாக ஆதரவு அளிக்கிறார்.

4. சாலமோன் - இந்த புத்தகத்தின் முக்கிய நபர் அவருடைய ஆட்சிமுறை.

5. அதோனியா - தாவீதுக்கு அடுத்து ராஜாவாக சதி ஆலோசனை செய்தவர் (I இராஜா 1:5 – 9)

6. யோவாப் - அதோனியாவுக்கு துணையாய் இருந்தவர் (I இராஜ 2:28)



7. சீமேயி - தாவீதை தூஷித்தவர் சாலமோனால் கொல்லப்படுகிறார் (I இராஜா 2:36-46)

8. ஈராம் - தீருவின் ராஜா, ஆலயம்கட்ட அரண்மனை கட்ட உதவியவர் (I இராஜா 5:10)

9. சேபா நாட்டு ராஜஸ்திரி - சாலமோனின் ஞானத்தை கேட்டு சாலமோனை பார்க்க வந்தவர் (I இராஜா 10:-1,2)

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 26

நீதி மொழிகள் (PROVERBS)

எபிரேய பெயர் : மிஷ்லே (Mishlei)

இதன் பொருள் : முது மொழிகள் (அ) பழமொழிகள்.

ஆசிரியர் : சாலமோன் என்று பொதுவாக கூறலாம்.
ஆனால் கடைசி இரண்டு அதிகாரங்கள் (30, 31)
ஆகூர், லேமுயேல் ஆகியோரால் எழுதப்பட்டது.

- வேதத்தின் 20-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 31
- வசனங்கள் மொத்தம் - 915



இந்த புத்தகத்தின் சிறப்பு

1. ஞானமுள்ள சிந்தையுடன் தேவனுக்கு பிரியமாய் எப்படி தேவபக்தியுடன் வாழ முடியும் என்பதை போதிக்கிறது.
2. கவிதை வடிவத்தில் சிறு சிறு உவமைகளுடன் காணப்படுகிறது.
3. கேள்விகளுடன் ஒரு சில வசனங்கள் இருப்பது இதன் சிறப்பு (நீதி 6 : 9 / 23 : 5 / 27 : 4 / 31 : 10).
4. இரண்டு, மூன்று வரிகளில் ஒவ்வொரு வசனமும் அமைந்திருப்பது இதன் சிறப்பு ஆகும்.
5. நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் எப்படி சிறப்பாக வாழவேண்டும் என்பதை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
6. தேவனை எப்படி தேடவேண்டும்?
7. பெற்றோரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்.?
8. பிள்ளைகள், நண்பர்கள். அயலாகத்தாரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? இவைகளை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
9. வாழ்க்கையில் வரும் சிக்கல்களை எப்படி எதிர் கொள்வது என்பதை குறித்து கூறுகிறது.
10. இதில் மொத்தம் 31 அதிகாரங்கள். தினம் ஒரு அதிகாரம் வாசித்தால் மாதம் ஒரு முறை இந்த புத்தகத்தை படித்து முடிக்கலாம்.

இதை படிக்கும் முறை (31 அதிகாரங்கள்)

1.	முன்னுரை	(1 : 1 - 6 வசனங்கள்)
2.	இளைஞர்களுக்கான அறிவுரைகள்	(1 : 7 முதல் 8 : 36 வரை)
3.	எல்லா மக்களுக்கான போதனைகள்	(9 : 1 முதல் 24: 34 வரை)
4.	எசேக்கியா ராஜா தொகுத்த சாலமோனின் நீதி மொழிகள்	(25 - 29 அதிகாரங்கள்)
5.	ஆகூரின் நீதி மொழிகள்	(30 அதிகாரம்)
6.	லேமுயேலின் நீதி மொழிகள்	(31 அதிகாரம்)



அதிகாரம் - 1

1. முன்னுரை (1 - 6)
2. தேவனுக்கு பயப்படவும், பெற்றோரை கணம் பண்ணவும் அழைப்பு (7 - 19)
3. நிந்தனைக்காரருக்கு கண்டிப்பு (20 - 33)

அதிகாரம் - 2

1. ஞானம் தனது பிள்ளைகளுக்கு தேவபக்தியை வாக்குதத்தம் செய்கிறது (1 - 10)
2. ஞானம் தனது பிள்ளைகளுக்கு நேரான பாதையை காட்டுகிறது (11 - 22)

அதிகாரம் - 3

1. கீழ்படியவும், விசுவாசிக்கவும் அறிவுரை (1 - 12)
2. ஞானத்தை பெறுவதால் ஏற்படும் நன்மை (13 - 26)
3. நன்மை செய்ய அறிவுரை (27 - 35)

அதிகாரம் - 4

1. சாலமோனின் தந்தை அவருக்கு அறிவைப் போதிக்கிறார் (1 - 6)
2. ஞானத்தின் முக்கியத்துவம் (7 - 27)

அதிகாரம் -5

1. ஞானத்தை சம்பாதிக்க சாலமோன் அழைப்பு விடுக்கிறார் (1, 2)
2. பரஸ்திரீ (விலைமாது) இவரின் இனிப்பு சொற்களில் மயங்க கூடாது (3 - 14)
3. சொந்த மனைவியோடு மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் (15 - 23)

அதிகாரம் -6

1. ஒருவருக்கு கடன் வாங்கி கொடுக்க உதவுவதால் வரும் ஆபத்து (1 - 4)
2. சோம்பேறியாக இருப்பதில் உள்ள ஆபத்து (6 - 15)
3. தேவன் வெறுக்கும் 7 காரியங்கள் (16 - 19)
4. கீழ்படிதலின் ஆசிர்வாதங்கள் (20 - 24)
5. விலைமாது உயிரை வேட்டையாடுகிறாள் (25 - 35)

அதிகாரம் - 7

1. ஞானம் உன்னை தவறுகளில் இருந்து காக்கும் (1 - 5)
2. சிற்றின்பம் நாடும் தீய பெண்ணின் சூழ்ச்சி (6 - 21)
3. பேதையான வாலிபனின் பரிதாப முடிவு (22 - 27)

அதிகாரம் -8

1. ஞானத்தின் கீர்த்தியும், மகிமையும் (1 - 9)
2. ஞானத்தின் பெரும் மதிப்பு (10 - 21)
3. ஞானத்தின் பழமை (22 - 31)
4. ஞானம் சம்பாதிப்பதற்கான வாஞ்சை (32 - 36)

அதிகாரம் - 9

1. ஞானத்தை குறித்த போதனைகள் (1 - 12)
2. மதியற்றதனத்தை குறித்த காரியங்கள் (13 - 18)

இனிவரும் வசனப்பகுதிகள் (அதிகாரம் 22 வரை)
ஒப்பீடுகள் என்ற தலைப்பில் அமைந்துள்ளன.

அதிகாரம் - 10

நற் செயல்கள், தீய செயல்கள் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 11

நீதிமான் (உத்தமன்), துன்மார்க்கன் ஒப்பிடுதல்

அதிகாரம் - 12

நல்லவர், தீய இருதயமுள்ளவர் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 13

உற்சாக முள்ளவர், சோம்பேறி ஒப்பிடுதல்.

அதிகாரம் - 14

மூடன், ஞானி ஒப்பிடுதல்,

அதிகாரம் - 15

பலவகையான நற்பண்புகள், துர்குணங்கள் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 16

மேன்மையான பண்புகள், தீமையான பண்புகள் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 17

சண்டை, அமைதி ஒப்பிடுதல்.

அதிகாரம் - 18

பலவகையான நற்பண்புகள், தீய பண்புகள் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 19

பல வகையான நற்போதனைகள்.

அதிகாரம் - 20

நற்பண்புகளையும், தீயபண்புகளையும் ஒப்பிடுதல்.

அதிகாரம் - 21

பல வகையான நற்பண்புகள் மற்றும் தீய பண்புகள் பற்றிய விவரங்கள்.

அதிகாரம் - 22

உத்தம பண்புகளையும், தீய பண்புகளையும் ஒப்பிடுதல்.

நீதி 22 : 20 (திருவிவிலியம்)

அறிவும், நல்லுரையும் தரக்கூடிய முப்பது
முதுமொழிகளை நான் உனக்கென்று
எழுதி வைத்திருக்கிறேன் அல்லவா?

இந்த 30 அறிவுரைகள் என்ன என்பதை
நீதி 22 - 22 முதல் 24 - 21 வரை (65 வசனங்கள்) சொல்லப்பட்டு இருக்கிறது.

அதிகாரம் - 25

1. ராஜாக்களைப் பற்றிய கருத்துக்கள் (1 - 8)
2. வழக்குகளை பேசி முடித்து தீர்வு காண்பது குறித்து (9 - 28)

அதிகாரம் - 26

மூடர்களை பற்றியும், சோம்பேறிகள் பற்றியும், தொடர்பில்லாத வழக்குகளில் தலையிடுவோரைப் பற்றிய கருத்துக்கள்.

அதிகாரம் -27

தன்னலத்தையும், உண்மையான அன்பையும், வழக்குகளுக்கு விலகுவதையும், வீட்டு காரியங்களை கவனிப்பதையும் குறித்த காரியங்கள்.

அதிகாரம் -28

பக்தியின்மை, வேத ஒழுக்கங்கள் பற்றிய போதனைகள்.

அதிகாரம் -29

1. பொதுவான ஆட்சி, இரகசிய தண்டனை பற்றிய கருத்துக்கள்.
2. கோபத்தையும், அகந்தையையும் பற்றிய கருத்துக்கள்.

அதிகாரம் -30

1. தமது விசுவாசத்தை பற்றி ஆகூரின் அறிக்கை (1 - 7)
2. அவரது ஜெபத்தின் இரண்டு காரியங்கள் (8 - 16)
3. பெற்றோருக்கு கீழ்படியாதோருக்கு வரும் தண்டனை (17)
4. ஞானியை ஆச்சர்யப்படுத்திய காரியங்கள் (18 - 19)
5. விபச்சாரஸ்திரீயை குறித்து, பூமி சஞ்சலப்படுகிறதை குறித்த காரியங்கள் (20 - 23)
6. பூமியில் சிறியவைகளாயிருந்தும், ஞானமுள்ளவைகள் குறித்து (24 - 32)

அதிகாரம் - 31

லேமுயேலுக்கு அவரது தாய் சொன்ன உபதேசங்கள்

1. கற்பை குறித்து , மதுபானத்தை குறித்து (1 - 9)
2. குணசாலியான ஸ்திரீயை குறித்து (10 - 31)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 27

பிரசங்கி (ECCLESIASTES)

எபிரேய பெயர்	:	கொஹேலேத் (KOHOLET)
இதன் பொருள்	:	சபையில் பிரசங்கம் செய்பவர் / கூடிவரச் செய்பவர்
ஆசிரியர்	:	சாலமோன் (பிரசங்கி 1 : 1 / 1 : 12)

- வேதத்தின் 21-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் - 12
- வசனங்கள் மொத்தம் - 222

இந்த புத்தகத்தின் சிறப்பு:-

1. மாயை என்ற வார்த்தை இந்தப் புத்தகத்தின் முக்கிய வார்த்தையாகும். சுமார் 35 தடவை இந்த வார்த்தை வருகிறது.
2. தேவ உறவு இல்லாத வாழ்க்கையில் ஏற்படும் வெறுமை, அதனால் ஏற்படும் சோர்வை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
3. மனித வாழ்க்கையின் பொருள் என்ன என்பதை இதன் ஆசிரியர் இந்த புத்தகத்தின் முடிவில் கூறி முடிக்கின்றார். (பிரசங்கி 12-13)
4. **இந்த புத்தகத்தில்**
    - சூரியனுக்கு கீழ் என்ற வார்த்தை சுமார் 29 முறையும்.
    - ஞானம் என்ற வார்த்தை சுமார் 52 முறையும்.
    - மனுஷன் என்ற வார்த்தை சுமார் 47 முறையும்
    - தீமை என்ற வார்த்தை சுமார் 22 முறையும் வருகிறது.

“சூரியனுக்கு கீழே எல்லாம் மாயை
இந்த தீமை நிறைந்த உலகில் மனுஷனுக்கு தேவை ஞானம்”
என்பதை சாலமோன் அதில் குறிப்பிடுகிறார்.



இதை படிக்கும் முறை:-

இதை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.	மாயையான வாழ்க்கைப் பற்றிய அறிவிப்பு	(1:1 முதல் 1 :11 முடிய)
2.	மாயையான வாழ்க்கைப் பற்றிய உதாரணங்கள்	(1:12 முதல் 6:12 வரை)
3.	மாயையான வாழ்க்கையிலிருந்து விடுதலை	(7-12 அதிகாரங்கள்)

அதிகாரம் - 1

1. முகவுரை (1 - 3)
2. இந்த பூமியில் காரியங்கள் மாறுவதில்லை (4 - 8)
3. எதுவும் புதியது அல்ல (9 - 11)
4. சூரியனுக்கு கீழ் மனிதனின் அனைத்து உழைப்புகளும் வீண் (12 - 18)

அதிகாரம் -2

1. மனிதன் சந்தோஷமாய் இருப்பதற்காக செய்கின்ற யாவும் வீண் (1 - 11)
2. பூமியில் பெறுகிற யாவற்றிலும் பயனில்லை (12 - 16)
3. மகிழ்ச்சி என்பது தேவன் தரும் பரிசு (17 - 26)

அதிகாரம் - 3

1. அனைத்திற்கும் ஒரு காலம் உண்டு, இன்ப, துன்பங்களை கொண்டதே மனித வாழ்வு (1 - 10)
2. தேவன் உலகை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறாா். (11 - 17)
3. மனிதா்களையும், விலங்குகளையும் ஒப்பிட்டு பேசுகிறாா். (18 - 22)

அதிகாரம் - 4

1. மரித்து போவது நல்லதா என்பதை குறித்து (1 - 3)
2. ஏன் இவ்வளவு கடினமாய் வேலை செய்ய வேண்டும் ? (4 - 8)
3. நண்பா்கள் குடும்பம் இருப்பது நமக்கு பலம் கொடுக்கிறது (9 - 12)
4. ஜனங்கள், அரசியல் மற்றும் புகழ் குறித்து (13 - 16)



அதிகாரம் - 5

1. பொருத்தனை செய்வதில் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். (1 - 7)
2. ஒவ்வொரு ராஜாவுக்கும் மேல் ஒரு ராஜா உண்டு (8, 9)
3. செல்வத்தால் மகிழ்ச்சியை வாங்க முடியாது (10 - 17)
4. திருப்தியான வாழ்வு தேவனின் பரிசு (18 - 20)

அதிகாரம் - 6

1. பயனற்ற சேமிப்பு (1, 2)
2. நன்மை எதுவும் அனுபவிக்காமல் நீண்ட ஆயுள் கிடைத்து பயனில்லை (3 - 8)
3. கண்ணின் விருப்பங்களும், ஆசையின் அலைச்சல்களும் வீண் (9 - 12)

அதிகாரம் - 7

ஞானத்தின் மேன்மை

அதிகாரம் -8

1. ராஜாவை கணம் பண்ண வேண்டும், தேவ வழிநடத்துதலுக்கு கீழ்படிய வேண்டும் (1 - 11)
2. செல்வமிக்க துன்மார்க்கருடன் வாழ்வதை விட, பக்தியுள்ள ஏழையுடன் வாழ்வது நன்று (12 - 17)

அதிகாரம் - 9

1. சன்மார்க்கனுக்கும், துன்மார்க்கனுக்கும் ஒரேவிதமாய் சம்பவிக்கிறது (1 - 6)
2. இவ்வுலகில் மகிழ்ச்சியாய் வாழ்வது எப்படி (7 - 12
3. பெலத்தை பார்க்கிலும் ஞானமே உத்தமம் (13 - 18)

அதிகாரம் - 10

ஞானத்தை குறித்தும், பேதமை குறித்தும், ஐஸ்வரியத்தை குறித்தும் இந்த அதிகாரம் கூறுகிறது.

அதிகாரம் - 11

1. தானதருமங்களைப் பற்றிய அறிவுரைகள் (1 - 8)
2. வாலிப வயதிலேயே வாழ்வின் முடிவை குறித்து சிந்திக்க வேண்டும் (9 - 10)



அதிகாரம் - 12

1. வாலிப வயதில் தேவனை நினைக்க வேண்டும். முதுமையில் வரும் பிரச்சனைகள் (1 - 12)
2. தேவனுக்கு பயப்படுதலே மனிதரின் மிக முக்கிய கடமை (13, 14)



உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 28

உன்னதபாட்டு (SONG OF SONGS)

எபிரேய பெயர் : ஷீர் ஹெஷ்ஷீறீம் (Shir Hashrim)

இதன் பொருள் : பாடல்களின் பாடல்

ஆசிரியர் : சாலமோன் (உன் 1 : 1)

- ❖ வேதத்தின் 22-வது புத்தகம்
- ❖ அதிகாரங்கள் மொத்தம் : 8
- ❖ வசனங்கள் மொத்தம் : 117

இந்தப் புத்தகத்தின் சிறப்பு :-

1. ஒரு காதல் கவிதையாக இந்த புத்தகம் அமைந்துள்ளது.
2. இதை நேரிடையான அர்த்தத்தில் பார்ப்பதை விட ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் இந்த புத்தகத்தைப் பார்க்கும் போது இதில் உள்ள ஆழமான ஆவிக்குரிய அர்த்தங்களை நாம் அறிந்து கொள்ள முடியும்.
3. மணவாளனாகிய கர்த்தர் இயேசுவுக்கும், மணவாட்டியாகிய சபைக்கும் ஒப்பிட்டு இந்த புத்தகத்தை பார்க்கும் போது இந்த வசனங்களில் இருக்கும் ஆவிக்குரிய இரகசியங்களை நாம்புரிந்து கொள்ள முடியும்.

இதை படிக்கும் முறை :-

3 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.	திருமணத்தை நாடும் காதல்	(1 : 1 முதல் 3 : 5 வரை)
2.	திருமணத்தின் போது காதல்	(3 : 6 முதல் 5 : 1 வரை)
3.	திருமணத்திற்கு பின் காதல்	5 : 2 முதல் 8 : 14 வரை)

I. திருமணத்தை நாடும் காதல் :-

1.	மணமகளின் காதல் விருப்பம்	(1 : 1 முதல் 1 : 8 வரை)
2.	ஒருவருக்கொருவர் காதலை வெளிப்படுத்துதல்	(1 : 9 முதல் 2 : 7 வரை)
3.	ராஜா மணமகளின் வீட்டில்	2 : 8 முதல் 2 : 17 வரை)
4.	மணமகளின் பிரிவு கனவு	3 : 1 - 5

II. திருமணத்தின் போது காதல் :-

1.	திருமண ஊர்வலம்	(3 : 6 முதல் 3 : 11 வரை)
2.	மணமகளின் அழகு சிறப்பு	(4 : 1 – 15)
3.	திருமண இன்பம்	(4 : 16 முதல் 5 : 1 வரை)

III. திருமணத்திற்கு பின் காதல் :-

1.	மணமகளின் இரண்டாவது பிரிவு கனவு	(5 : 2 – 7)
2.	மணமகனின் அழகு புகழ்ப்படுதல்	(5 : 8 முதல் 6 : 3 வரை)
3.	மணமகளின் அழகு புகழ்ப்படுதல்	(6 : 4 முதல் 7 : 10 வரை)
4.	தனது வீட்டுக்கு செல்ல மணமகள் விரும்புதல்	(7 : 11 முதல் 8 : 4 வரை)
5.	பயணம் செய்து வீட்டை அடைதல்	(8 : 5 – 14)

- ❖ முகவுரை : 1 : 1
- ❖ முதலாம் சந்திப்பு : 1 : 2 – 2 : 7
- ❖ இரண்டாம் சந்திப்பு : 2 : 8 – 3 : 5
- ❖ மூன்றாம் சந்திப்பு : 3 : 6 – 5 : 1
- ❖ நான்காம் சந்திப்பு : 5 : 2 – 6 : 3
- ❖ ஐந்தாம் சந்திப்பு : 6 : 4 – 8 : 4
- ❖ முடிவுரை : 8 : 5 - 14

முக்கிய நபர்கள் :-

- ❖ சாலமோன் ராஜா
- ❖ சூலமித்தி
- ❖ சூலமித்தியின் சகோதரர்கள்
- ❖ எருசலேம் குமாரத்திகள்



சூலமித்தியைப் பற்றிய சாலமோனின் வர்ணனைகள்

1. பிரியம் (1 :15)
2. ரூபவதி (1 : 15)
3. புறாக்கண்கள் உடையவள் (1 : 15)
4. முட்களுக்குள்ளே லீலி புஷ்பம் (2 : 2)
5. கீலேயாத் மலையில் தழை மேயும் வெள்ளாட்டு மந்தையைப் போன்ற கூந்தல் உடையவள் (4 : 1)
6. மயிர் கத்தரிக்கப்பட்ட பின் கரையேறி வரும் ஆடுகளைப் போன்ற பற்களை உடையவள் (4 : 2)
7. சிவப்பு நூலுக்கு சமமான உதடுகளை உடையவள் (4 : 3)
8. வெடித்த மாதளம் பழத்தைப் போன்ற கன்னங்களை உடையவள் (4 : 3)
9. இன்பமான வாக்கு உடையவள் (4 : 3)
10. கோபுரம் போன்ற நீண்ட கழுத்தை உடையவள் (4 : 3)
11. லீலி புஷ்பங்களுக்கு இடையே மேயும் இரட்டை மான்குட்டிகளுக்கு ஒத்த ஸ்தனங்களை உடையவள் (4 : 5)

12. பழுது இல்லாத பூரண ரூபவதி (4 : 7)
13. மனவாளி (4 : 8)
14. சகோதரி (4 : 9)
15. இதயத்தை கவர்ந்தவள் (4 : 9)
16. நேசம் நிறைந்தவள் (4 : 10)
17. பரிமள தைலம் பூசியவள் (4 : 10)
18. தேன் ஒழுகும் உதடுகளை உடையவள் (4 : 11)
19. லீபனோனின் வாசனை வீசும் ஆடையை உடுத்தியவள் (4 : 11)
20. தேனும், பாலும் நாவின் கீழ் உடையவள் (4 : 11)
21. அடைக்கப்பட்ட தோட்டம் (4 : 12)
22. மறைவு கட்டப்பட்ட நீரூற்று (4 : 12)
23. முத்தரிக்கப்பட்ட கிணறு (4 : 12)
24. கனி நிறைந்த தோட்டத்துக்கு சொந்தகாரி (4 : 13 – 15)
25. எனது தோட்டம் (5 : 1)
26. எனது தேன் கூடு (5 : 1)
27. எனது திராட்சை ரசம் (5 : 1)
28. எனது வெள்ளை போளமும், கந்தவர்க்கமும் (5 : 1)

<u>நேசரை குறித்து சூலமித்தி</u>

1. வெள்ளை போளச் செண்டு (1 : 12)
2. மரு தோன்றிப் பூங்கொத்து (1 : 14)
3. காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் (2 : 3)
4. வெளிமானுக்கும், மரைக்குட்டிக்கும் ஒப்பாயிருக்கிறார் (2 : 9)
5. லீலிபுஷ்பங்களுக்குள்ளே மேய்கிறவர் (2 : 16)
6. வெள்ளைப் போளத்தினாலும், சாம்பிராணியினாலும் வர்த்தகருடைய சகலவித கந்தகப் பொடியினாலும் உண்டாகிய வாசனையை வீசி, தூப ஸ்தம்பங்களைப் போல் வனாந்தரத்திலிருந்து வருகிறவர் (3 : 6)
7. வெண்மையும், சிவப்புமானவர் (5 : 10)
8. பதினாயிரம் பேர்களில் சிறந்தவர் (5 : 10)
9. தலை தங்கமயமானவர் (5 : 11)
10. சுருள், சுருளாகவும், காகத்தைப் போல் கருமையான தலைமயிரை கொண்டவர் (5 : 11)
11. தண்ணீர் நிறைந்த நதிகளின் ஓரமாய் தங்கும் புறா கண்களுக்கு ஒப்பான கண்களை கொண்டவர் (5 : 12)

12. பாலில் கழுவப்பட்ட, நேர்த்தியாய் பதிக்கப்பட்ட கண்களை கொண்டவர் (5 : 12)
13. கந்தவர்க்கப் பாத்திகளைப் போலவும், வாசனையுள்ள புஷ்பங்களைப் போலவும் கன்னங்கள் கொண்டவர் (5 : 13)
14. லீலி புஷ்பங்களைப் போல உதடுகளை கொண்டவர் (5 : 13)
15. படிகப்பச்சை பதித்த பொன் வளையல்கள் போல கரங்களை கொண்டவர் (5 : 14)
16. இந்திர நீல இரத்தினங்கள் இழைத்த பிரகாசமான யானை தந்தத்தைப் போன்ற அங்கம் கொண்டவர் (5 : 14)
17. பசும்பொன் ஆதாரங்களின் மேல் நிற்கிற வெள்ளைக்கல் தூண்களைப் போன்ற கால்களை கொண்டவர் (5 : 15)
18. லீபனோனைப் போலவும், கேதுருக்களைப் போலவும் சிறப்பான ரூபம் கொண்டவர் (5 : 15)
19. மதுரம் போன்ற வாய் அவருக்கு இருக்கிறது (5 : 16)
20. முற்றிலும் அழகுள்ளவர் (5 : 16)
21. என் சிநேகிதர் (5 : 17)

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 29

I. இராஜாக்கள் (I. KINGS)

பகுதி – II

I இராஜாக்கள் 1 அதிகாரம் முதல் 10 அதிகாரம் வரை சாலமோன் ராஜாவின் ஆட்சி முறை குறித்து பகுதி – I –ல் பார்த்தோம்.

I இராஜாக்கள் 11 அதிகாரம்

- ❖ சாலமோன் ராஜாவின் பின்மாற்றம் (11 : 1 - 8)



- ❖ சாலமோனின் மீது தேவ கோபம் (11 : 9 - 13)
- ❖ சாலமோனுக்கு எதிராக எழும்பின விரோதிகள்.

    1. ஏதோமியனாகிய ஆதாத் (I இராஜா 11 : 14)
    2. எலியாதாவின் குமாரனாகிய ரேசோன் (I இராஜா 11 : 23)
    3. நேபாத்தின் குமாரனாகிய யெரோபெயாம் (I இராஜா 11 : 26)

- ❖ யெரோபெயாமை குறித்த காரியங்கள் (11 : 26 - 43)

I இராஜாக்கள் 12 அதிகாரம்.

1.	யெரோபெயாம் எகிப்திலிருந்து வருதல்	(12 : 1 - 3)
2.	இஸ்ரயேல் ஜனங்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கடினமான வேலையிலிருந்து லகுபடுத்த கேட்கின்றனர்.	(12 : 4 – 5)
3.	ரெகோபெயாம் முதியோரின் ஆலோசனையை தள்ளி, வாலிபரின் ஆலோசனையை கேட்டு கடினமான பதில் உரைத்தல்	(12 : 6 - 14)
4.	பத்து கோத்திரத்தார் ரெகோபெயாமோடு எதிர்த்து நிற்கின்றனர்.	(12 : 15 - 16)
5.	இஸ்ரயேலின் 10 கோத்திரத்திற்கு யெரோபெயாம் ராஜாவாகுதல்	(12 : 20)

ரெகோபெயாம்



யெரோபெயாம்

இதன் பிறகு வேதத்தில் இருக்கும் வசனபகுதிகள் இரண்டு ராஜ்யங்களை குறித்து பதிவு செய்கிறது.

1. 10 கோத்திரங்கள் அடங்கிய இஸ்ரயேல் ராஜ்யம்.
2. 2 கோத்திரங்கள் அடங்கிய யூதா ராஜ்யம்.

இஸ்ரவேலும் யூதாவும்
சீதோன்
தமஸ்கு
தீரு
பெனிக்கேயா
தாண்
சீரியா
(அராம்)
மத்தியதரைக்கடல்
கர்மேல் மலை
மெகித்தோ
சமாரியா
திர்சா
சீகேம்
பெனியேல்
சீலோ
பேதேல்
எரிகோ
மிஸ்பா
கேபா
எருசலேம்
நெபோ மலை
கிபெத்தோன்
லாகீஸ்
எப்ரோன்
உப்புக்கடல்
மோவாப்
பெலிஸ்தியா
பெயெர்ஷெபா
எகிப்துக்கு
யூதா
ஏதோம்
கிலோமீட்டர்
0
50


பிளவுப்பட்ட இஸ்ரயேல் தேசம்
கலிலேயா
கடல்
இஸ்ரயேல்
சீகேம்
மத்திய தரைக்கடல்
எருசலேம்
யூதா
சவக்கடல்
யெரோபெயாம்
ரெகோபெயாம்

I. இராஜாக்கள் 12-ம் அதிகாரத்திலிருந்து இனிவருகின்ற அதிகாரங்களில் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்

1. **தேசம் இரண்டாக பிளவுப்பட்டதை** அறிந்திருக்க வேண்டும்.

2. எந்நெந்த ராஜாக்கள், எந்தெந்த காலங்களில் இஸ்ரயேலின் மேலும் (10 கோத்திரம்), யூதாவின் மேலும் (2 கோத்திரம்) ராஜாவானார்கள் என்பதை கவனிக்க வேண்டும்.

3. இனி வருகின்ற வேத பகுதிகளை படிக்கும் போது, அது

   - **இஸ்ரயேலின் 10 கோத்திரத்தை குறிக்கிறதா?** (அல்லது)
   - **யூதாவின் 2 கோத்திரத்தை குறிக்கிறதா?**

   என்று கவனிக்க வேண்டும்.

4. இனி வரும் வேத பகுதிகளில்,

   இரண்டு தேசத்தை குறித்தும்,
   அதில் வருகின்ற ராஜாக்கள் குறித்தும்,
   அந்தந்த ராஜாக்களின் நாட்களில் நடந்த சம்பவங்களை குறித்தும்,
   அந்த ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த தீர்க்க தரிசிகளை குறித்தும்

   கவனமாக ஆராய்ந்து படிக்க வேண்டும்.

5. இஸ்ரயேல் தேசத்தில் மொத்தம் **19 ராஜாக்களும் யூதா தேசத்தில் மொத்தம் 20 ராஜாக்களும்** வருகிறார்கள். இவர்கள் ஆட்சி காலத்தில் இருந்த **புற ஜாதி ராஜாக்கள் (சீரியர், அசீரியர், பாபிலோனியர் (கல்தேயர்), மேதோ-பெர்சியர்)** இவர்களை குறித்தும் அறிந்து படிக்க வேண்டும்.

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 30

I இராஜாக்கள் (I KINGS)

பகுதி – III Part III

1. சவுல் (40 வருடம்)
(I சாமு 9 - 31, 1 நாளா 10 அதிகாரம்)

2. தாவீது (40 வருடம்)
(I சாமு 16 முதல் - II சாமு 24 வரை, 1 நாளா 11 முதல் 29)

3. சாலமோன் (40 வருடம்)
(I இராஜா -1 – 11, II நாளா 1 – 9)

பிளவுப்பட்ட இஸ்ரயேல் தேசம் :-

10 கோத்திரங்கள் அடங்கிய இஸ்ரயேல் ராஜ்யம் வடக்கு தேசம் (I இராஜா 11:36)		2 கோத்திரங்கள் அடங்கிய யூதா ராஜ்யம் தெற்கு தேசம் (II நாளா 11:3)	
1.	**யெரோபெயாம்** 22 வருஷம் ஆட்சி (1 இராஜா 14 : 20)	1.	**ரெகோபெயாம்** 17 வருஷம் ஆட்சி (I இராஜா 14 : 21)
	யெரோபெயாமின் 18-ம் வருஷத்தில் (I இராஜா 15 : 1)	2.	**அபியாம்** 3 வருஷம் ஆட்சி I இராஜா 15 : 2
	யெரோபெயாமின் 20-ம் வருஷத்தில் (I இராஜா 15 : 9)	3.	**ஆசா** 41 வருஷம் ஆட்சி (I இராஜா 15 : 9 : 10)
2.	**நாதாப்** 2 வருஷம் ஆட்சி (I இராஜா 15 : 25)		ஆசாவின் 2-ம் வருஷத்தில் (I இராஜா 15 : 25)
3.	**பாஷா** 24-வருஷம் ஆட்சி (I இராஜா 15 : 33)		ஆசாவின் 3-ம் வருஷத்தில் (I இராஜா 15 : 33)
4.	**ஏலா** 2 வருஷம் ஆட்சி (I இராஜா 16 : 8)		ஆசாவின் 26-ம் வருஷத்தில் (I இராஜா 16 : 8)
5.	**சிம்ரி** 7 நாள் ஆட்சி (I இராஜா 16 : 15)		ஆசாவின் 27-ம் வருஷத்தில்
6.	**உம்ரி** 12 வருஷம் ஆட்சி (I இராஜா 16 : 23)		ஆசாவின் 31-ம் வருஷத்தில்
7	**ஆகாப்** 22 வருஷம் ஆட்சி (I இராஜா 16 : 28)		ஆசாவின் 38-ம் வருஷத்தில்
	ஆகாபின் 4-ம் வருஷத்தில் (I இராஜா 22 : 41)	4.	**யோசபாத்** 25 வருஷம் ஆட்சி (I இராஜா 22 : 41, 42)
8.	**அகசியா** 2 வருஷம் ஆட்சி (I இராஜா 22 : 51)		யோசபாத்தின் 17-ம் வருஷத்தில்

I இராஜாக்கள் புத்தகத்தில் வரும் ராஜாக்கள்

இஸ்ரயேலில் (10 கோத்திரம்) 8 ராஜாக்கள் :-

1.	யெரோபெயாம்	I இராஜா 12 : 25 - 14 : 20
2.	நாதாப்	I இராஜா 15 : 25 - 32
3.	பாஷா	I இராஜா 15 : 33 - 16 : 8
4.	ஏலா	I இராஜா 16 : 8 - 16 : 14
5.	சிம்ரி	I இராஜா 16 : 15 - 20
6.	உம்ரி	I இராஜா 16 : 21 - 28
7.	ஆகாப்	I இராஜா 16 : 29 - 22 : 40
8.	அகசியா	I இராஜா 22 : 51 - 53

யூதாவில் (2 கோத்திரம்) 4 ராஜாக்கள் -

1.	ரெகோபெயாம்	I இராஜா 14 : 21 - 31	II நாளா 10 - 12 அதிகாரங்கள்
2.	அபியாம்	I இராஜா 15 : 1 – 8	II நாளா 13 அதிகாரம்
3.	ஆசா	I இராஜா 15 : 9 - 24	II நாளா 14 - 16 அதிகாரங்கள்
4.	யோசபாத்	I இராஜா 22 : 41 - 50	II நாளா 17 - 20 அதிகாரங்கள்

தேவ மனிதர்களுடளான தேவ தொடர்ப் -

1.	ஆதாம்	தேவன் நேரிடையாக தொடர்பு	(ஆதி 3 : 8)
2.	நோவா	தேவன் நேரிடையாக தொடர்பு	(ஆதி 6 : 3
3.	ஆபிரகாம்	தேவன் நேரிடையாக தொடர்பு	(ஆதி 12 : 1)
4.	ஈசாக்கு	தேவன் நேரிடையாக தொடர்பு	(ஆதி 26 : 2 - 5)
5.	யாக்கோபு	தேவன் நேரிடையாக தொடர்பு	(ஆதி 28 : 10)
6.	மோசே	தேவன் நேரிடையாக தொடர்பு	(யாத் 3 : 4)
7.	யோசுவா	தேவன் நேரிடையாக தொடர்பு	(யோசுவா 1 : 1)
		கர்த்தருடைய சேனையின் அதிபதி	(யோசுவா 5 : 13 - 15)
8.	நியாயாதிபதிகள்	தெபோராள் கர்த்தருடை தீர்க்கதரிசி	(நியா 4 : 41 (நியா 2 : 1, 6 : 11, 12)
9.	சவுல்	சாமுயேல் தீர்க்கதரிசி	(I சாமு 9 : 15, 16)

10.	தாவீது	நாத்தான், காத்	II சாமு 12 : 1, II சாமு 24 : 11
11.	சாலமோன்	தரிசனம் மூலமாக	I இராஜா 11 : 9
12.	யெரோபெயாம்	அகியா தீர்க்கதரிசி	I இராஜா 11 : 29, 14 : 1 - 16
13.	ரெகோபெயாம்	சேமாயா தீர்க்கதரிசி	I இராஜா 12 : 22
14.	அபியா	இத்தோவ் தீர்க்கதரிசி	II நாளா 13 : 22
15.	ஆசா	அசரியா	II நாளா 15 : 1
16.	பாஷா	யெகூ	I இராஜா 16 : 1
17.	ஆகாப்	எலியா தீர்க்கதரிசி	I இராஜா 17 : 1
18.	யோசபாத்	மிகாயா யகாசியேல் எலியேசர்	I இராஜா 22 : 8 II நாளா 20 : 14 II நாளா 20 : 37

இஸ்ரயேலரின் எதிரிகள் -

1.	அமலேக்கியர்	ரெவிதீம் (வனாந்திரம்)	யாத் 17 : 6
2.	ஆராத் ராஜா	வனாந்திரம்	எண். 21 : 1 - 3
3.	அம்மோனியரின் ராஜா சீகோன்	வனாந்திரம்	எண். 21 : 21 - 25
4.	பாசானின் ராஜா ஓக்	வனாந்திரம்	எண். 21 : 33 - 35
5.	மோவாபின் ராஜா பாலாக்	வனாந்திரம்	எண். 22 - 24
6.	எரிகோ	(யோசுவா 6 அதிகாரம்)	
7.	ஆயி	(யோசுவா 7, 8 அதிகாரங்கள்)	
8.	31 ராஜாக்கள்	(யோசுவா 13 : 9 - 24)	
9.	நியாயாதிபதிகள் நாட்களில் மெசெப்பதோமியாவின் ராஜா, மோவாபியர், பெலிஸ்தியர், கானானியர், மீதியானியர், அம்மோனியர், (நியாய 3 - 13)		
10.	சாமுயேலின் நாட்களில்	பெலிஸ்தியர் (1 சாமு 7 : 7 - 13)	
11.	சவுலின் நாட்களில்	பெலிஸ்தியர் (I சாமு 13, 31)	

12.	தாவீதின் நாட்களில்	பெலிஸ்தியர், மோவாபியர், சீரியர், அம்மோனியர், எபூசியர், II சாமு 8
13.	சாலமோனின் நாட்களில்	யுத்தமில்லை, I இராஜா 4 : 24 (I நாளா 22 : 9)
14.	ரெகோபெயாம் நாட்களில்	எகிப்தின் ராஜா சீஷாக் (I இராஜா 14 : 25 - 26)
15.	ஆசா ராஜாவின் நாட்களில்	சீரியாவின் ராஜா பெனாதாத் (I இராஜா 15 : 17 - 21)
16.	ஆகாப் ராஜாவின் நாட்களில்	சீரியாவின் ராஜா பெனாதாத் (I இராஜா 20 : 26)

இரண்டு ராஜ்யங்களுக்குள் (யூதா - இஸ்ரயேல்) யுத்தம் -

1.	ரெகோபெயாம், யெரோபெயாம் நாட்களில் யுத்தம்	(I இராஜா 15 : 6)
2.	அபியா, யெரோபெயாம் நாட்களில் யுத்தம்	(I இராஜா 15 : 7)
3.	ஆசா, பாஷா நாட்களில் யுத்தம்	(I இராஜா 15 : 32)
4.	ஆகாப், யோசபாத் நாட்களில் சமாதானம்	(II நாளா 18 : 1)

முக்கிய நிகழ்ச்சிகள் -

1.	சாலமோன் ஞானம் பெற்று கொள்ளுதல்	(I இராஜா 3 : 4 - 14)
2.	சாலமோன் கட்டிய தேவலாயம்	(I இராஜா 6 அதிகாரம்)
3.	சேபாவின் ராஜஸ்திரி வருகை	(I இராஜா 10 அதிகாரம்)
4.	சாலமோனின் வீழ்ச்சி	(I இராஜா 11 அதிகாரம்)
5.	தேசம் பிளவுபடுதல்	(I இராஜா 12 : 15 - 16)
6.	யெரோபெயாம் 2 பொன் கன்று குட்டிகள் செய்தல்	(I இராஜா 12 : 25 - 33)
7.	ஆகாபின் நாட்களில் 3 ½ வருஷம் பஞ்சம்	(I இராஜா 17 : 1)
8.	எலியா தீர்க்கதரிசி வானத்திலிருந்து அக்கனி வரவழைத்து பலியை பட்சிக்க செய்தல்	(I இராஜா 18 : 21 - 40)
9.	மிகாயா தீர்க்கதரிசி சொல்லிபடி ஆகாபின் மரணம்	(I இராஜா 22 அதிகாரம்)

முக்கிய இடங்கள் -

1.	கிபியோன்	கர்த்தர் சாலமோனுக்கு தரிசனமான இடம். சாலமோன் ஞானத்தை பெற்று கொண்டது (I இராஜா 3 : 4 - 14)
2.	சீகேம்	10 கோத்திரத்தின் முதல் தலைநகர் (I இராஜா 12 : 25)
3.	எருசலேம்	2 கோத்திரம் (யூதாவின்) தலைநகர்.
4.	தான், பெத்தேல்	யெரோபெயாம் பொன்கன்று குட்டிகள் வைத்த இடம்.
5.	திர்சா	10 கோத்திரத்தின் இரண்டாவது தலைநகர் (I இராஜா 15 : 33)
6.	சமாரியா	10 கோத்திரத்தின் மூன்றாவது தலைநகர் (I இராஜா 16 : 24)
7.	கர்மேல் மலை	பாகாலின் தீர்க்க தரிசிகளுக்கு எலியா சவால் விட்ட இடம் (I இராஜா 18 அதிகாரம்)
8.	கீலேயாத்தின் ராமோத்	ஆகாப் ராஜா இறந்த இடம் (I இராஜா 22)



முக்கிய நபர்கள்

தாவீது

சாலமோன்

ரெகோபெயாம்

யெரோபெயாம்



எலியா

ஆகாப்

யேசபேல்

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 31

II இராஜாக்கள் (II KINGS)

முதல் பாகம் PART - I

எபிரேய மொழியில் I இராஜாக்கள், II இராஜாக்கள் ஒரே புத்தகமாக இருக்கிறது.

- ஆசிரியர் : எரேமியா
- வேதத்தின் 12-வது புத்தகம்
- அதிகாரங்கள் மொத்தம் : 25
- வசனங்கள் மொத்தம் : 719

புத்தகத்தின் சிறப்பு

1. தேவன் வாக்குதத்தம் செய்து அழைத்து வந்த நாட்டில், தேவ ஜனங்கள் தேவனை விட்டு விலகி, உடன்படிக்கையை மீறி, நியாயப்பிரமாணத்தை மறந்து, விக்கிரகாரதனை செய்து, சீர்கேடான வாழ்க்கையில் மூழ்கியதால் அவர்கள் மீது வந்த நியாயத்தீர்ப்பை இந்த புத்தகம் கூறுகிறது.

2. இஸ்ரயேலின் 10 கோத்திரங்களில் வந்த 19 ராஜாக்களின் முடிவும் அவர்கள் அசீரியா ராஜாவினால் சிறைபிடிக்கப்பட்டு, அடிமைகளாக கொண்டு போகப்படுவதை இந்த புத்தகம் கூறுகிறது.

3. யூதாவின் 2 கோத்திரங்களில் வந்த 20 ராஜாக்களில் ஒரு சில சிறப்பான ராஜாக்கள், தேவபயமுள்ள ராஜாக்கள் வந்த போதும், கடைசி நாட்களில் வந்த பக்தியற்ற, தேவபயமற்ற, பாவத்தை பெருக்கிய யூதா ராஜாக்களினால் யூதாவின் 2 கோத்திரமும் பாபிலோன் ராஜாவினால் சிறைபிடிக்கப்பட்டு அடிமைகளாக கொண்டு போகப்பட்டதை இந்த புத்தகம் கூறுகிறது.

4. புறஜாதி ராஜாக்கள் சீரியர், ஆசீரியர், எகிப்தியர், பாபிலோனியர் குறித்து இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.

5. தீர்க்கதரிசி எலியா, எலிசா, ஏசாயா, ஏரேமியா, எசேக்கியேல், தானியேல் மற்றும் சிறிய தீர்க்கதரிசிகள் இந்த ராஜாக்களின் நாட்களில் வாழ்ந்து தீர்க்க தரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் என்பது இந்த புத்தகத்தின் சிறப்பு ஆகும்.

6. இந்த புத்தகத்தை மையப்படுத்தியே வேதத்தில் ஏறக்குறைய **15 புத்தகங்கள்** பதிவு செய்யப்பட்டுள்ளன.
7. **எலிசா தீர்க்கதரிசி அவருடைய ஊழியங்கள், அவர் மூலம் தேவன் செய்த அற்புதங்கள்** இந்த புத்தகத்தில் விபரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் சிறப்பு ஆகும்.



8. **சமஸ்த இஸ்ரயேல் (12 கோத்திரங்கள்) முதல் ராஜா சவுல், தாவீது, சாலமோனுக்கு பிறகு 2 ஆக பிரிந்து சில ஆண்டுகளுக்கு பிறகு 10 கோத்திரம் அசீரியா ராஜவினாலும், 2 கோத்திரம் பாபிலோன் ராஜாவினாலும் சிறை பிடிக்கப்பட்டு ஒட்டு மொத்தமாக அடிமைகளாக்கப்பட்டு சிறையிருப்புக்கு போவதைப்பார்க்கிறோம்.**

ஒரு அடிமை நிலையிலிருந்து (எகிப்து), மீண்டும் ஒரு அடிமை நிலைக்கு (பாபிலோன்) கடந்து செல்லுதல்.

இதை படிக்கும் முறை

2 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.	பிளவுக்கு பின் உருவான இரு ராஜ்யங்களின் நிலை பற்றிய விளக்கங்கள்	(1 - 17 அதிகாரங்கள்)
2.	அசீரியா ராஜாவினால் 10 கோத்திரம் சிறைபிடிக்கப்பட்டபின் மீதி இருந்த யூதா ராஜ்ஜியம் (2 கோத்திரம்) இதில் வந்த யூதா ராஜாக்களைப் பற்றிய செய்திகள்	(18 - 25 அதிகாரங்கள்)

பிளவுக்குப்பின் உருவான இரு ராஜ்யங்களின் ராஜாக்கள் பற்றிய விபரம்.

இஸ்ரயேல் ராஜ்யம் 10 கோத்திரம்		யூதா ராஜ்யம் 2 கோத்திரம்	
8.	**அகசியா** 2 வருஷம் ஆட்சி (I இராஜா 22 : 51)		யோசபாத்தின் 17-ம் வருஷத்தில்
9.	**யோராம்** (அகசியாவின் சகோதரர்) 12 வருடம் ஆட்சி (II இராஜா 3 : 1)		யோசபாத்தின் 18-ம் வருஷத்தில்
	யோராமின் 5-ம் வருஷத்தில்	5.	**யோராம்** 8 வருஷம் ஆட்சி (II இராஜா 8 : 16)
	யோராமின் 12-ம் வருஷத்தில் (II இராஜா 8 : 25)	6.	**அகசியா** 1 வருடம் ஆட்சி (II இராஜா 8 : 26)
10.	**யெகூ** 28 வருஷம் ஆட்சி (II இராஜா 10 : 36)	7.	**அத்தாலியாள்** 7 வருஷம் ஆட்சி (II இராஜா 11 : 3)
	யெகூவின் 7-வது வருஷத்தில்	8.	**யோவாஸ்** (அகசியாவின் மகன்) 40 வருஷம் ஆட்சி (II இராஜா 12 : 1)
11.	**யோவாகாஸ்** 17 வருஷம் ஆட்சி (II இராஜா 13 : 1)		யோவாஸின் 23-வது வருஷத்தில்
12.	யோவாஸ் 16 வருஷம் ஆட்சி (II இராஜா 13 : 10)		யோவாஸின் 31-வது வருஷத்தில்
	யோவாஸின் 2-வது வருஷத்தில்	9.	**அமத்சியா** 29 வருஷம் ஆட்சி (II இராஜா 14 :1, 2)
13.	**யெரோபெயாம் (இரண்டாம்)** 41 வருஷம் ஆட்சி (II இராஜா 14 : 16)		அமத்சியாவின் 15-வது வருஷத்தில்
	யெரொபெயாமின் 27-ம் வருஷத்தில்	10.	**அசரியா** 52-வருஷம் ஆட்சி (II இராஜா 15 : 1, 2)
14.	**சகரியா** 6 மாதம் ஆட்சி (II இராஜா 15 : 8)		அசரியாவின் 38-வது வருஷத்தில்
15.	**சல்லூம்** 1 மாதம் ஆட்சி (II இராஜா 15 : 10)		அசரியாவின் 39-வது வருஷத்தில்
16.	**மெனாகாம்** 10 வருஷம் ஆட்சி (II இராஜா 15 : 17)		அசரியாவின் 39-வது வருஷத்தில்

17.	**பெக்காகியா** 2 வருஷம் ஆட்சி (II இராஜா 15 : 22)		அசரியாவின் 50-வது வருஷத்தில்
18.	**பெக்கா** 20 வருஷம் ஆட்சி (II இராஜா 15 : 27)		அசரியாவின் 52-வது வருஷத்தில்
	பெக்காவின் 2-ம் வருஷத்தில்	11.	**யோதாம்** 16 வருஷம் ஆட்சி (II இராஜா 15 : 32)
	பெக்காவின் 17-ம் வருஷத்தில்	12.	**ஆகாஸ்** 14 வருஷம் ஆட்சி (II இராஜா 16 : 2)
19.	**ஓசேயா (கடைசி ராஜா)** 9 வருஷம் ஆட்சி II இராஜா 17 : 1		ஆகாஸின் 12-வது வருஷத்தில்
	ஓசேயாவின் 3-வது வருஷத்தில்	13.	**எசேக்கியா** 29 வருஷம் ஆட்சி (II இராஜா 18 : 1)
	அசீரியா ராஜா இஸ்ரயேலை சிறைபிடித்தல்		எசேக்கியாவின் 6-ம் வருஷத்தில்

1. இதுவரை 2 ராஜ்யங்களை (இஸ்ரயேல், யூதா) குறித்து பார்த்து வந்தோம். இனி ஒரு ராஜ்யத்தை (யூதா) குறித்து மட்டுமே பார்க்கப்போகிறோம்.
2. இஸ்ரயேலை சிறை பிடித்தவர் அசீரியா ராஜா சல்மனாசார் (II இராஜா 17 : 3, 6)

3. இஸ்ரயேல் தேவன் அசீரியாவிடம் ஒப்படைக்க காரணம் (II இராஜா 17 : 7 - 23)
4. இஸ்ரயேலர் தங்கள் தேசத்தை விட்டு சென்றபின் இஸ்ரயேலில் குடியேறியவர்கள் குறித்த பதிவுகள் (II இராஜா 17 : 24 - 41)

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 32

II இராஜாக்கள் (II KINGS)

பகுதி – II Part – II

ஆசீரியா ராஜாவினால் இஸ்ரயேல் ராஜ்யம் (10 கோத்திரம்) சிறைபிடிக்கப்பட்டபின் மீதி இருந்த யூதா ராஜ்யத்தில் (2 கோத்திரம்) வந்த ராஜாக்களைப் பற்றிய விபரங்கள்

14. மனாசே

55 வருஷம் ஆட்சி (II இராஜா 21 : 1) (II நாளா 33 : 1 - 20)

15. ஆமோன்

2 வருஷம் ஆட்சி (II இராஜா 21 : 18) (II நாளா 33 : 21 - 25)

16. யோசியா

31 வருஷம் ஆட்சி (II இராஜா 22 : 1) (II நாளா 34, 35)

17. யோவகாஸ்

3 மாதம் ஆட்சி (II இராஜா 23 : 31) (II நாளா 36 : 1 - 4)

இவரைப் பற்றிய குறிப்புகள்

- ❖ யோசியாவின் மகன்
- ❖ எகிப்தின் ராஜா பார்வோன் நேகோ இவரை சிறையாக்கி எகிப்துக்கு கொண்டு செல்கிறார். இவர் எகிப்தில் மரிக்கிறார். (II இராஜா 23 : 32 - 34)

18. யோயாக்கீம்

11 வருஷம் ஆட்சி (II இராஜா 23 : 36)

இவரைப் பற்றி குறிப்புகள்

- ❖ இவர் பெயர் எலியாக்கீம்
- ❖ இவரும் யோசியாவின் மகன்
- ❖ எகிப்தின் ராஜா பார்வோன் நேகோ இவருக்கு யோயாக்கீம் என்று பெயர் மாற்றுகிறார்.

- ❖ இவரை பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் பாபிலோனுக்கு சிறைபிடித்து செல்கிறார் (II நாளா 36 : 5 - 8)
- ❖ இவர் காலத்தில் பாபிலோனுக்கு சிறையிருப்புக்கு சென்றவர்கள் தானியேல் மற்றும் அவருடைய நண்பர்கள் (தானி 1 : 1 - 6)

19. யோயாக்கீன்

3 மாதம் ஆட்சி (II இராஜா 24 : 8)

இவரை பற்றிய குறிப்புகள்

- ❖ இவரையும் பாபிலோன் ராஜா நேபுகாம்நேச்சார் சிறைபிடித்து செல்கிறார் (II இராஜா 25 : 27 - 30) (II நாளா 36 : 8 - 10)
- ❖ இவர் காலத்தில் சிறையிருப்புக்கு சென்றவர் எசேக்கியேல் தீர்க்கதரிசி (எசேக் 1 : 1, 2)

20. சிதேக்கியா

11 வருஷம் ஆட்சி (II இராஜா 24 : 17)

இவரை பற்றிய குறிப்புகள்

- ❖ யூதா ராஜ்ஜியத்தின் (2 கோத்திரம்) கடைசி ராஜா
- ❖ இவருடைய பெயர் மத்தானியா
- ❖ இவருக்கு சிதேக்கியா என்று பெயரிட்டவர் நேபு காத்நேச்சார்
- ❖ இவர் நேபுகாத்நேச்சாருக்கு விரோதமாக கலகம் பண்ணியதால் இவரை சிறை பிடித்து, இவர் குமாரர்களை கொன்று, இவர் கண்களை குருடாக்கி, எருசலேம் தேவாலயத்தை அக்கினியால் சுட்டெரித்து, யூதா ஜனங்களை பாபிலோனுக்கு சிறையாக்கி கொண்டு செல்கிறார். (II இராஜா 25 : 1 - 15) (II நாளா 36 : 11 - 20)

இதோடு சமஸ்த இஸ்ரயேல் ராஜாக்களின் ஆட்சி முடிவுக்கு வருகிறது.
இதன் பிறகு 70 வருடம் கழித்து இஸ்ரயேலர் மீண்டும் பாபிலோனிலிருந்து இஸ்ரயேல் தேசம் திரும்புகின்றனர்.

II இராஜாக்கள் புத்தகத்தில் வருகின்ற மொத்த ராஜாக்கள்

இஸ்ரயேலின் 12 ராஜாக்கள்

9.	யோராம்	(II இராஜா 3 : 1 - 21, 9 : 16 - 25)
10.	யெகூ	(II இராஜா 9, 10 அதிகாரங்கள்)
11.	யோவாகாஸ்	(II இராஜா 13 : 1 - 9)
12.	யோவாஸ்	(II இராஜா 13 : 10 முதல் 14 : 16)
13.	யெரோபெயாம் (இரண்டாம்)	(II இராஜா 14 : 23 - 29)
14.	சகரியா	(II இராஜா 15 : 8 - 12)
15.	சல்லூம்	(II இராஜா 15 : 13 - 15)
16.	மெனாகாம்	(II இராஜா 15 : 14 - 22)
17.	பெக்காகியா	(II இராஜா 15 : 23 - 26)
18.	பெக்கா	(IIஇராஜா 15 : 27 - 31 II நாளா 28 : -5 - 8)
19.	ஓசேயா	(II இராஜா 17 : 1 - 6)

யூதாவின் 16 ராஜாக்கள்

5.	யோராம்	(II இராஜா 8 : 16 - 24, II நாளா 21 அதிகாரம்)
6.	அகசியா	(II இராஜா 8 : 25 - 29, II நாளா 22 : 1 - 9)
7.	அத்தாலியாள்	(II இராஜா 11 அதிகாரம் II நாளா் 22 : 10 முதல் 23 : 21)
8.	யோவாஸ்	(II இராஜா 12 அதிகாரம் II நாளா 24 அதிகாரம்)
9.	அமத்சியா	(II இராஜா 14 : 1 - 22, II நாளா 25 அதிகாரம்)
10.	அசரியா	(II இராஜா 15 : 1 - 17, II நாளா 26 அதிகாரம்)
11.	யோதாம்	(II இராஜா 15 : 32 - 38, II நாளா 27 அதிகாரம்)
12.	ஆகாஸ்	(II இராஜா 16 அதிகாரம், II நாளா 28 அதிகாரம்)

13.	எசேக்கியா	(II இராஜா 18 - 20 அதிகாரங்கள், II நாளா 29 முதல் 32, ஏசா 36 - 39)
14.	மனாசே	(II இராஜா 21 : 1 - 18, II நாளா 33 : 1 - 20 வசனங்கள்)
15.	ஆமோன்	(II இராஜா 21 : 19 - 26, II நாளா 33 : 21 - 25)
16.	யோசியா	(II இராஜா 22 அதிகாரம், II நாளா 34, 35 அதிகாரங்கள்)
17.	யோவாகாஸ்	(II இராஜா 23 : 30 - 34, II நாளா 36 : 1 - 4)
18.	எலியாக்கீம் (எ) யோயாக்கீம்)	(II இராஜா 23 : 36 முதல் 24 : 6, II நாளா 36 : 5 - 8)
19.	யோயாக்கீன்	(II இராஜா 24 : 6 - 16, 25 : 27 - 30, II நாளா 36 : 8 - 10)
20.	மத்தானியா (எ) சிதேக்கியா	(II இராஜா 25 : 7, II நாளா 36 : 11 - 20

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 33

II இராஜாக்கள் (II KINGS)

பகுதி III PART III

II இராஜாக்களின் நாட்களில் வாழ்ந்த தீர்க்கதரிசிகள்

வ. எண்	இஸ்ரயேல் (10 கோத்திரம்)	யூதா (2 கோத்திரம்)	தீர்க்கதரிசி	வேதபகுதி
1.	ஆகாப் (7) அகசியா (8)	-	எலியா	I இராஜா 17 - 19 அதிகாரங்கள் II இராஜா 1, 2 அதிகாரங்கள்
2.	யோராம் (9) யெகூ (10) யோவகாஸ் (11) யோவாஸ் (12)	-	எலிசா	II இராஜா 3 - 13 அதிகாரங்கள்
3.	யெரோபெயாம் (இராண்டாம்) (13)	-	ஆமோஸ்	ஆமோஸ் 1 : 1
4.	-	அசரியா (எ) உசியா (10)	யோனா	II இராஜா 14 : 25
5.	-	உசியா (10) யோதாம் (11) ஆகாஸ் (12) எசேக்கியா (13)	ஏசாயா	ஏசாயா 1 : 1
6.	-	யோதாம் (11) ஆகாஸ் (12) எசேக்கியா (13)	மீகா	மீகா 1 : 1
7.	யெரோபெயாம் (இரண்டாம்) (13)	-	ஓசியா	ஓசியா 1 : 1
8.	பெக்கா (18)	-	ஓதேத்	II நாளா 28 : 9
9.	-	யோசியா (16)	செப்பனியா	செப் 1 : 1
10.	-	யோசியா (16) முதல் சிதேக்கியா (20) வரை	ஏரேமியா	எரேமியா 1 : 2, 3
11.	-	யோயாக்கீம் (18)	தானியேல்	தானி 1 : 1
12.	-	யோயாக்கீன் (எ) எகோனியா (19)	எசேக்கியேல்	எசேக் 1 : 2

ராஜாக்களின் நாட்களில் புறஜாதி ராஜாக்கள்

1. எகிப்து

- சாலமோன் ராஜாவின் நாட்களில் எகிப்தில் **"சீஷாக்"** என்னும் ராஜா ஆண்டு வந்தார். இவர் ரெகோபெயாமின் நாட்களில் எருசலேமின் மேல் படையெடுத்து அதை சூறையாடினார். (II நாளா 12 : 9)
- 10 கோத்திரத்தின் கடைசி ராஜா ஒசேயாவின் நாட்களில் எகிப்தை **"சோ"** என்னும் ராஜா ஆண்டு வந்தார். (II ராஜா 17 : 4)
- யூதா ராஜா யோசியாவின் நாட்களில் **"பார்வோன் நேகோ"** என்பவர் எகிப்தை ஆண்டு வந்தார். இவர் யோசியாவை கொன்றவர் (II இராஜா 23 : 29 - 30)

2. சீரியர்

ராஜாக்களின் நாட்களில் இருந்த இன்னொரு சாம்ராஜ்யம்
சீரிய சாம்ராஜயம் ஆகும்.

இதைப்பற்றிய குறிப்புகள்

1. சீரியாவை கட்டினது ஆராம் (ஆதி 10 : 22)
2. இதன் மறு பெயர் பதான் ஆராம் (ஆதி 28 : 2)
3. சீரியாவின் தலைநகர் தமஸ்கு
4. இதன் படைதளபதியாய் இருந்தவர் நாகமான் (II இராஜா 5 : 1)
5. சீரிய சாம்ராஜ்யம் சுமார் 154 வருஷங்கள் நிலைத்திருந்தது.

வேதத்தில் சீரிய ராஜாவைப் பற்றிய குறிப்புகள்

1. பெனாதாத் (I இராஜா 15 : 18) ஆசா, ஆகாப் ராஜாக்களின் காலம்.
2. ஆசகேல் (II இராஜா 8 : 13) எலிசாவின் நாட்களில் வாழ்ந்தவர்.
3. ரெத்சீன் (II இராஜா 16 : 5) (ஏசாயா 7 : 1) ஆகாஸ் ராஜாவின் காலம்.

3. அசீரியா

ராஜாக்களின் நாட்களில் சீரியாவிற்கு பிறகு வந்தது அசீரியா சாம்ராஜ்யம்.

இதைப்பற்றிய குறிப்புகள்

1. இந்த அசீரியா பட்டணம் **அசூர்** என்பவனால் உருவாக்கப்பட்டது. (ஆதி 10 : 11)
2. அசீரியா பட்டணம் டைகரீஸ் நதி கரையில் இருந்தது.
3. அசீரியா பட்டணத்தின் தலைநகர் **நினிவே** ஆகும் (யோனா தீர்க்கதரிசியை தேவன் இங்குதான் அனுப்பினார்.)
4. அசீரியா சாம்ராஜ்யம் சுமார் 144 வருஷங்கள் நிலைத்து இருந்தது.
5. இஸ்ரயேலின் 10 கோத்திரத்தை சிறைபிடித்து அசீரியாவிற்கு இந்த சாம்ராஜ்யத்தின் நாட்களில்தான் கொண்டு போனார்கள்.
6. இந்த அசீரியா சாம்ராஜ்யத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர் பாபிலோன் ராஜா **நேபுபோலே சார்** (நேபுகாத் நேச்சாரின் தந்தை) ஆவார்.

அசீரியாவின் முக்கிய ராஜாக்கள்

1.	திக்லாத் பிலேசார்	(II இராஜா 15 : 29) – பெக்காவின் நாட்கள்
2.	சல்மனாசார்	(I இராஜா 17 : 3) – ஓசேயாவின் நாட்கள்
3.	சர்கோன்	(ஏசாயா 20 : 1) – எசேக்கியாவின் நாட்கள்)
4.	சனகெரீப்	(II இராஜா 18 : 13 – எசேக்கியாவின் நாட்கள்)
5.	எசரத்தோன்	(II இராஜா 19 : 27 - 37) - எசேக்கியாவின் நாட்கள்)
6.	அசூர்பானிபால்	அசீரியாவின் கடைசி ராஜா (வேதத்தில் குறிப்புகள் இல்லை).

அசீரியா ராஜா 10 கோத்திரத்தை பிடித்தவர் ஏன் 2 கோத்திரமாகிய யூதா ராஜ்யத்தைப் பிடிக்கவில்லை?

அசீரியா ராஜா யூதாவையும் பிடிக்கத்தான் நினைத்தார். யூதாவை சிறைபிடிக்க முற்றுகை போட்டார்கள். ஆனால் அந்த நேரத்தில் யூதாவை எசேக்கிய ராஜா ஆளுகை செய்தார். இவர் தேவ பக்தி மிக்கவர். இவரைப் போல் தேவன் மேல் நம்பிக்கை வைத்தவர் எவருமில்லை.

இவர் தேவன் மேல் வைத்த நம்பிக்கையினால் தேவன் ஒரு தூதனை அனுப்பி இந்த அசீரியர்களில் 1.85.000 பேரை ஒரே இரவில் அழிக்கிறார். அசீரியா ராஜா தோல்வியுடன் திரும்பி போய், முடிவில் தன் குமாரர்கள் மூலம் கொல்லப்படுகிறார். எனவே யூதா ராஜ்யத்தை இவர் நாட்களில் அசீரியா ராஜாவினால் சிறைபிடிக்க முடியாமல் போனது. (II இராஜா 19 : 32 - 37)

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 34

II இராஜாக்கள் (II KINGS)

பகுதி IV **PART IV**

4. பாபிலோன் சாம்ராஜ்யம்

1. இஸ்ரயேல் 10 கோத்திரம் சிறைபிடிக்கப்பட்ட போது உலகத்தில் பெரிய சாம்ராஜ்யமாக இருந்தது அசீரிய சாம்ராஜ்யம்.
2. இந்த அசீரியாவின் மேல் பாபிலோன் ராஜா நெபுபோலசர் (Nabopolossar) கி.மு. 625-ல் படையெடுத்ததார்.
3. கி.மு.612-ல் நேபுகாத் நேச்சார் (நெபு போலசாரின் மகன்) பாபிலோனின் தளபதியாக இருந்து நினிவேயை வீழ்த்தி வெற்றி கொண்டார்.
4. கி.மு.605-ல் பார்வோன் நேகோ என்ற எகிப்தின் ராஜாவோடு குர்குமிஷ் என்ற இடத்தில் நேபுகாத் நேச்சார் யுத்தம் செய்து எகிப்தை வீழ்ச்சியடைய செய்தார்.
5. இதன்பின் எகிப்துக்கு அருகில் எருசலேம் இருந்ததால், அதோடு போரிட்டு அதையும் பிடிக்க நேபுகாத் நேச்சார் சென்றார்.

மொத்தம் 4 முறை யூதாவின் மேல் படையெடுத்து மக்களை சிறைபிடித்து செல்கிறார். இதில் மூன்று முறை படையெடுத்தது வேதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முதல் சிறைபிடிப்பு

முதல் தடவை நேபுகாத் நேச்சார் எருசலேமின் மீது முற்றுகை இதில் தந்தையின் மரண செய்திகேட்டு பாதியில் திரும்புகிறார். அவ்வாறு திரும்பும்போது **யோயாக்கீம் ராஜாவோடு** (18 வது ராஜா) மக்களில் ஒரு கூட்டத்தை சிறைபிடித்து செல்கிறார். இந்த கூட்டத்தில் இருந்தவர்கள் **தானியேல் மற்றும் அவருடைய நண்பர்கள்.** (தானி 1 : 1 - 4)

இரண்டாம் சிறை பிடிப்பு

இரண்டாம் தடவை யூதாவின் மேல் முற்றுகையிட்டு **யோயாக்கீன் ராஜாவோடு (19வது ராஜா) (இவர் பெயர் எகோனியா)** பெருங்கூட்ட மக்களை சிறைபிடித்து பாபிலோனுக்கு கொண்டு போகிறார். இதில் **எசேக்கியேல் தீர்க்கதரிசி, மொர்தேகாய் (எஸ்தரின் சித்தப்பா)** போன்றோர் கொண்டு செல்லப்பட்டனர். (எசேக் 1-1-3, எஸ்தர் 2-6)

11 வருடங்கள் கழித்து

மூன்றாவது சிறை பிடிப்பு

மூன்றாவது தடவை யூதாவின் மேல் முற்றுகையிட்டு எருசலேம் முழுவதையும் அழித்தல். இதில் **சிதேக்கியா ராஜா** சிறைபிடிக்கப்பட்டு கொல்லப்படுகிறார். **சாலமோன் கட்டின தேவாலயம்** அழிக்கப்படுகிறது. (II இராஜா 25 : 11, 12, 22)
(எரேமியா 39 : 11 - 14, 40 : 1 – 6).

4 வருடங்கள் கழித்து

நான்காம் சிறைபிடிப்பு

இதை குறித்த வேத பதிவுகள் இல்லை. சரித்திர குறிப்புகள் உள்ளன. மீண்டும் நேபுகாத்நேச்சார் வந்து யூதாவில் கொஞ்சம் பேரை சிறைபிடித்து செல்கிறார்.

பாபிலோனை குறித்த குறிப்புகள்

1. பாபிலோனை முதன் முதல் கட்டி எழுப்பினவர் **நிம்ரோத்** (ஆதி 10 : 8 - 10)
2. பாபிலோனுக்கு **கல்தேயா, சிநேயார்** என்ற பெயருண்டு.
3. யூதாவிலிருந்து பாபிலோன் சுமார் 960 மைல்துாரம்.
4. எருசலேமிற்கும், பாபிலோனுக்கும் இடையில் பெரும் வனாந்திரம் இருந்தது.
5. கால்நடையாக எருசலேமிலிருந்து பாபிலோன் சென்றடைய 4 மாதங்கள் ஆகும்.
6. பாபிலோன் சாம்ராஜ்யம் சுமார் 73 ஆண்டுகள் இருந்தது.

பாபிலோனை ஆண்ட முக்கிய ராஜாக்கள்

1. பெரோதாக்பலாதான் (Berodachbaladan) – எசேக்கியாராஜாவின் நாட்களில் இருந்தவர். II இராஜா 20 : 12
2. நெபோபோலசார் (Nabopolessar) நேபுகாத் நேச்சாரின் தந்தை.
3. நேபுகாத் நேச்சார் (Nebuchadrezzar) தானி 2 : 1.
   இவரை குறித்து தானியேல் புத்தகத்தில் அநேக பதிவுகள் இருக்கிறது. இவர் அமைத்த தொங்கு தோட்டம் வரலாற்று சிறப்புமிக்கது.
4. ஏவில் மொராதாக் (Evil Merodachi) (II இராஜா 25 : 27 - 29)
5. நெரிக்கிளிசர் (Nerigilisar) – வேத பதிவுகள் இல்லை.
6. லபஷிமார்துக் (Labashi Marduk) – வேத பதிவுகள் இல்லை.
7. நெபோனிடஸ் (Nabonidus) – வேத பதிவுகள் இல்லை.
8. பெல்ஷாத்சார் (Bel Sahazzar) (தானி 5 : 1)

முக்கிய நபர்கள்

1.	எலியா	எலியாவின் ஊழியம், எலியா எடுத்துக் கொள்ளப்படுதல் பதிவு செய்யப்பட்டுள்ளது (II இராஜா 1, 2 அதிகாரங்கள்)
2.	எலிசா	எலிசாவின் அற்புதங்கள், ஊழியம், மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது (II இராஜா 3 - 13 அதிகாரங்கள்)
3.	சூனேம் பெண்மணி	எலிசாவிற்கு பணிவிடை செய்து அற்புதம் பெற்றவர். (இராஜா 4 : 8 - 37
4.	நாகமான்	எலிசாவிடம் அற்புதம் பெற்ற சீரியா நாட்டு படைதளபதி. (II இராஜா 5 அதிகாரம்).
5.	யேசபேல்	ஆகாபின் மனைவி, யெகூவால் கொல்லப்படுகிறாள். (II இராஜா 9 : 31 – 37)
6.	யெகூ	யோராமிற்கு பிறகு ராஜாவானவர். யேசபேலை கொன்றவர். பாகாலின் தீர்க்கதரிசிகளை கொன்றவர் (II இராஜா 10 : 1 - 28)
7.	யோவாஸ்	எலிசா தீர்க்கதரிசியை மதித்தவர் ஆனால் தேவனுக்கு பிரியமில்லாமல் வாழ்ந்தவர். (II இராஜா 13 : 13 - 19
8.	எசெக்கியா	தேவனுக்கு பிரியமான ராஜா. ஜெபித்து 15 வருடங்கள் அதிகம் பெற்று கொண்டவர். முடிவு பகுதியில் தேவனுக்கு பிரியமில்லாமல் நடந்து கொண்டார். (II இராஜா 18 : 20)
9.	மனாசே	எசெக்கியாவின் மகன் (சிறந்த தந்தையின் கெட்ட புதல்வர்) தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்தவர் (II இராஜா 21 அதிகாரம்)
10.	யோசியா	தேவனுக்கு பிரியமாய் வாழ்ந்த ராஜா, (II இராஜா 22, 23 அதிகாரங்கள்)
11.	யோயாக்கீம்	எகிப்து ராஜாவால், யூதாவிற்கு ராஜாவாக நியமிக்கப்பட்டவர். ஏரேமியா தீர்க்கதரிசியை கொல்ல முயற்சித்தவர். நேபுகாத் நேச்சாரால் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டு கொலை செய்யப்பட்டவர்.
12.	சல்மனாசார்	அசீரியா ராஜா 10 கோத்திரத்தை சிறைபிடித்தவர். (II இராஜா 17 : 3 - 6)
13.	சன கெரீப்	அசீரியா ராஜா. எசேக்கியாவிற்கு விரோதமாய் வந்தவர். (II இராஜா 18 : 13)
14.	ஏசாயா	எசேக்கியா ராஜாவின் நாட்களில் வாழ்ந்த மிகப்பெரிய தீர்க்கதரிசி (II இராஜா 20 அதிகாரம்)
15.	சிதேக்கியா	யூதா ராஜ்ஜியத்தின் (2 கோத்திரம்) கடைசி ராஜா (II இராஜா 24 : 17, 25 : 7)
16.	நேபுகாத் நேச்சார்	யூதா ராஜ்ஜியத்தை முடிவுக்கு கொண்டு வந்தவர். (II இராஜா 25)

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 35

ஏசாயா (ISAIAH)

எபிரேய பெயர் - யெஷயாஹு (Y’ Shayahu)

பெயர் அர்த்தம் - கர்த்தர், இரட்சகர்

ஆசிரியர் - ஆமோத்சின் குமாரன் ஏசாயா

வேதத்தின் 23-வது புத்தகம்

அதிகாரங்கள் மொத்தம் 66

வசனங்கள் மொத்தம் 1292

இந்த புத்தகத்தின் சிறப்பு

- தீர்க்க தரிசன புத்தகங்களில் முதல் புத்தகம்.
- இஸ்ரயேல் தேசம் 2-ஆக பிரிந்து, தேவபக்தியிலிருந்து விலகி, ஒழுக்க சீர் குலைவிலும், விக்கிரக ஆராதனையிலும் வீழ்ந்த போது தேவன் தம்முடைய ஜனங்களோடு பேச தெரிந்து கொண்ட தீர்க்க தரிசிகளில் முக்கியமானவர் ஏசாயா தீர்க்கதரிசி.
- ஏசாயா தீர்க்கதரிசன புத்தகம் “வேதாகமத்தின் உள்ளே இன்னொரு வேதாகமம்” என்றழைக்கப்படுகிறது.

  - வேதத்தில் மொத்தம் 66 புத்தகங்கள்.
    இதில் மொத்தம் 66 அதிகாரங்கள்.
  - பழைய ஏற்பாட்டின் 39 புத்தகங்களைப்போல இதில் வருகின்ற 39 அதிகாரங்களின் செய்திகளும், மீதி 27 அதிகாரங்கள் புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் வரும் 27 புத்தகங்களின் செய்திகள் போலவும் இருப்பதாக வேத ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஆசிரியரை (ஏசாயா) குறித்து

- ஏசாயா தீர்க்கதரிசி ராஜ குடும்பத்தில் பிறந்தவர்.
  யூதா ராஜாவான யோவாசின் (8-வது ராஜா) இளைய புதல்வரான ஆமோத்சின் புதல்வர்.
- ராஜ குடும்பத்தில் பிறந்தாலும் தேவ ஜனங்கள் தேவனைவிட்டு விலகும் போது அவர்களுக்கு வரும் நியாயத்தீர்ப்பை தீர்க்கமாக கூறுகிறார்.

- ❖ இவர் மனைவி ஒரு தீர்க்கதரிசி. இவருக்கு இரண்டு மகன்கள் (ஏசா 8 : 3, 8 : 18)
- ❖ எசேக்கியா ராஜாவிற்கு பிறகு வந்த மனாசே தேவனுக்கு பிரியமில்லாத ராஜாவாக இருந்ததினால், ஏசாயாவின் தீர்க்கதரிசனம் இவருக்கு எரிச்சலை ஏற்படுத்தியதால் இவரை இரண்டு மரப்பலகைகளுக்கு நடுவில் கட்டி வைத்து வாளினால் அறுத்து கொலை செய்ததாக வரலாறு கூறுகிறது.
- ❖ பழைய ஏற்பாட்டின் பவுல் என்று இவரை அழைக்கின்றனர்.

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் வாழ்ந்த ராஜாக்கள்.

யூதா ராஜாக்கள் (2 கோத்திரம்)

உரியா (10), யோராம் (11), ஆகாஸ் (12), எசேக்கியா (13),

இஸ்ரயேலின் ராஜாக்கள் (10 கோத்திரம்)

பெக்கா (18), ஓசேயா (19),

இவர்கள் நாட்களில் ஏசாயா தீர்க்கதரிசி ஊழியம் செய்தார். (ஏசா 1 : 1)

- ❖ ஏசாயா 6-ம் அதிகாரத்தில் உசியாவின் மரணம் சொல்லப்பட்டிருப்பதால் 1 முதல் 5 அதிகாரங்கள் உசியாவின் ஆட்சி காலத்தில் எழுதப்பட்டவை என்பதை அறிந்து கொள்ளலாம்.
- ❖ யோதாம் ராஜாவை குறித்து எதுவும் இந்த புத்தகத்தில் குறிப்புகள் இல்லை.
- ❖ யோதாமின் மகன் ஆகாஸ் ராஜாவை குறித்து 7-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ ஆகாஸ் ராஜாவின் நாட்களில் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்கள் 7 முதல் 14 அதிகாரங்கள் வரை இருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

  ஏசாயா 14 : 28-ல் ஆகாஸ் ராஜாவின் மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ எசேக்கியா ராஜாவை குறித்து 36 முதல் 40 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ❖ இவர் நாட்களில் புறஜாதி ராஜாக்களில் அசீரியா சாம்ராஜ்யம் இருந்த போதும், இதற்கு பின் வரப்போகிற பாபிலேன் ராஜாவை குறித்தும், பெர்சியாவின் ராஜா கோரேஸ் குறித்தும் இவர் தீர்க்க தரிசனம் சொல்லியிருக்கிறார். (ஏசாயா 44 : 28)
- ❖ பாபிலோன் சாம்ராஜ்யம் அசீரியாவிற்கு பிறகு பெரிய சாம்ராஜ்யமாக வரும் என்பதையும், அதன் முடிவு, அதற்கு பின் வரப்போகிற மேதிய சாம்ராஜ்யத்தை குறித்தும் முன் கூட்டியே இவர் தீர்க்க தரிசனம் சொன்னது மிக சிறப்பு ஆகும். (ஏசாயா 10 : 5 - 7, 12) (13 : 1, 17, 18)

- **கர்த்தர் இயேசுவை குறித்து (மேசியா) இந்த புத்தகத்தில் அதிகமான தீர்க்க தரிசனங்கள் இவர் கூறி இருப்பதைப் பார்க்க முடிகிறது.**

1. பிறப்பு - (ஏசாயா 7 : 14)
2. குடும்ப பிண்ணனி - (ஏசாயா 11 : 1)
3. அபிஷேகம் - (ஏசாயா 11 : 2)
4. வாழ்க்கை முறை - (ஏசாயா 11 : 3, 7 : 15)
5. ஊழியம் - (ஏசாயா 42 : 1 - 3)
6. மரணம் - (ஏசாயா 53 : 1 - 9)
7. உயிரித்தெழுதல் - (ஏசாயா 53 : 10 - 12)
8. கிறிஸ்துவின் ராஜ்யம் - (அநேக வசனங்கள்)

இதை படிக்கும் முறை

3 பிரிவுகளாக பிரிக்கலாம்.

I. தேசங்களை குறித்த நியாயத்தீர்ப்பு பற்றிய தீர்க்க தரிசனங்கள். (1 - 35 அதிகாரங்கள்)

II. எசேக்கியா ராஜாவின் நாட்களில் நடந்த நிகழ்ச்சி (36 - 39 அதிகாரங்கள்)

III. விடுதலை மற்றும் ஆறுதலின் தீர்க்க தரிசனங்கள். (40 - 66 அதிகாரங்கள்)

I. தேசங்களை குறித்த நியாயத்தீர்ப்பு (1 - 35 அதிகாரங்கள்)
ஏசாயா தீர்க்க தரிசி தீர்க்க தரிசினம் சொன்ன தேசங்கள்.

1. **யூதா** (2 கோத்திரம்)
2. **இஸ்ரயேல்** (10 கோத்திரம்)
3. **பாபிலோன்**
4. **அசீரியா**
5. **பெலிஸ்தியா**
6. **மோவாப்**
7. **சீரியா**
8. **எத்தியோப்பியா**
9. **எகிப்து**
10. **ஏதோம்**
11. **அரேபியா**
12. **தீரு**

போன்ற தேசங்களுக்கு தேவனுடைய செய்தியை தீர்க்க தரிசனமாக சொன்னார்.

II. எசேக்கியா ராஜாவின் நாட்களில் நடந்த நிகழ்ச்சி (36 - 39 அதிகாரங்கள்)

1. அசீரியா ராஜா எசேக்கியா ராஜாவிற்கு விரோதமாக வருதல்
2. எசேக்கியா ராஜாவின் ஜெபம்.
3. ஒரு தேவதூதன் தோன்றி அசீரியா படையினரை முழுவதும் கொன்று குவித்தல்.
4. எசேக்கியா ராஜா வியாதிப்படுதல். எசேக்கியாவிற்கு ஆயுசு நாட்கள் கூட்டிக் கொடுக்கப்படுகிறது. அதனிமித்தம் அவர் பாடுகின்ற நன்றி பாடல்.
5. பாபிலோன் ராஜா எசேக்கியாவிற்கு அன்பளிப்பு கொடுத்து அனுப்புதல். எசேக்கியா ராஜா கருவூல அறை (கஜானா) முழுவதையும் காண்பித்தல். யூதா மக்கள் பாபிலோனுக்கு அடிமைகளாக போக வேண்டி வரும் என்று ஏசாயா தீர்க்கதரிசனம் கூறுகிறார்.

III. விடுதலை மற்றும் ஆறுதலின் தீர்க்கதரிசனங்கள் (40 - 66 அதிகாரங்கள்)

1. இஸ்ரயேலின் விடுதலை.
2. இஸ்ரயேலின் மீட்பர்.
3. இஸ்ரயேலின் மகிமை மிகு எதிர்காலம்.

இது போன்ற காரியங்களை இந்த மூன்றாம் பிரிவில் பார்க்கிறோம்.

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்



வகுப்பு - 36

ஏசாயா (ISAIAH)

1. அதிகாரம்

- யூதாவின் தவறுகள் (1 - 4)
- அவர்களுக்கான மனந்திரும்புதலுக்கான அழைப்பு (5 - 31)

2. அதிகாரம்

- வரப்போகிற கிறிஸ்துவின் ராஜ்யத்தை குறித்த தீர்க்கதரிசனம் (1 - 5)
- தேவன் அவருடைய ஜனங்களை தள்ளிவிட காரணம் அவர்களுடைய துன்மார்க்கமே (6 - 9)
- கர்த்தரின் நாளை குறித்த தீர்க்கதரிசினம் (10 - 22)

3. அதிகாரம்

1. யூதாவின் மேல் வரும் ஆபத்துக்கள் (1 - 15)
2. பெண்களின் அகந்தைக்கான தண்டனை (16 - 26)

4.அதிகாரம்

- பெயர் சபைகளை குறித்த தீர்க்கதரிசனம் (1)
- கிறிஸ்துவின் ராஜ்யத்தின் ஆசிர்வாதங்கள் (2 - 6)

5. அதிகாரம்

- உவமை (1 - 6)
- உவமைக்கான விளக்கம் (7)
- பேராசைக்காரர், மது வெறியர், பக்தியற்றோருக்கான தேவனுடைய நியாயத் தீர்ப்பு (8 - 30)

6. அதிகாரம்

- கர்த்தரின் மகிமையைப்பற்றிய ஏசாயாவின் தரிசனம் (1 - 4)
- தேவன் ஏசாயாவை ஊழியத்திற்கு அழைத்தல் (5 - 10)
- யூதா ஜனங்களுக்கு ஏசாயா சொல்லவேண்டிய தீர்க்கதரிசனம் (11 - 13)

7. அதிகாரம்

- யூதாவின் ராஜா உசியாவின் நாட்களில் நடந்தவை (1 - 13)
- கர்த்தர் இயேசுவை குறித்த தீர்க்கதரிசனம் (14 - 16)
- அசீரியா ராஜாவினால் யூதாவிற்கு வரக்கூடிய தண்டனை (17 - 25)

8. அதிகாரம்

- 10 கோத்திரம் அசீரியா ராஜாவினால் சிறைப்பட்டு போகும் என்பதை தீர்க்கதரிசனமாக சொல்கிறார். (1 - 4)

- யூதாவிற்கு வரும் உபத்திரவங்கள் (5 - 8)
- தேவனின் திட்டங்களை யாராலும் தடுக்க முடியாது (9 - 10)
- தேவனுக்கு பயப்படுவோருக்கு வரும் ஆறுதல், விக்கிரக ஆராதனை செய்பவருக்கு வரும் துயரம் (11 - 22)

9. அதிகாரம்

- கிறிஸ்துவின் பிறப்பு மற்றும் அவருடைய ஊழியம் / ராஜ்ஜியத்தில் பிதா செய்யப்போகின்ற காரியங்கள் (1 - 7)
- அகந்தைக்காரரான இஸ்ரயேலர் மேல் வரும் தண்டனைகள் (8 - 21)

10.அதிகாரம்

- அநியாய தீர்ப்பு செய்வோருக்கான சாபம் (1 - 4)
- அசீரியாவிற்கு வரகூடிய அழிவு (5 - 34)

11. அதிகாரம்

தேவனுடைய ராஜ்ஜியத்தில் நடக்கும் காரியங்கள், ஆசீர்வாதங்கள்.

12. அதிகாரம்

தேவனை துதிக்கும் பாடல்.

13. அதிகாரம்

பாபிலோனுக்கு வரக்கூடிய அழிவை குறித்து தீர்க்கதரிசனமாக ஏசாயா கூறுகிறார்.

14. அதிகாரம்

- இஸ்ரயேலருக்கு வரப்போகிற ஆசீர்வாதம் (1 - 3)
- பாபிலோன் ராஜாவை குறித்த தீர்க்க தரிசனம் (4 - 23)
  (இதில் சாத்தானுக்கு ஒப்பிட்டு பாபிலோன் ராஜாவை குறிப்பிட்டு சொல்வதைப் பார்க்கிறோம்.)
- அசீரியா ராஜாவுக்கான தண்டனை (24 - 27)
- பெலிஸ்தியாவிற்கான எச்சரிக்கை (28 - 32).

15. அதிகாரம், 16. அதிகாரம்

மோவாபிற்கான தேவனுடைய செய்தி

17. அதிகாரம்

தமஸ்கு (சீரியாவின் தலைநகர்) சீரியா தேசத்திற்கான தேவனுடைய செய்தி.

18. அதிகாரம்

எத்தியோப்பியாவிற்கான தேவனுடைய செய்தி.

19. அதிகாரம்

எகிப்துக்கு தேவனுடைய செய்தி.

20. அதிகாரம்

எகிப்தையும், எத்தியோப்பியாவையும் அசீரியா தோற்கடிக்கும் என்று தீர்க்கதரிசனம் ஏசாயா கூறுகிறார்.

21. அதிகாரம்

- பாபிலோனுக்கு தேவனுடைய செய்தி (1 - 10)
- ஏதோமிற்கு தேவனுடைய செய்தி (11 - 12)
- அரேபியாவிற்கு தேவனுடைய செய்தி (13 - 16)

22. அதிகாரம்

- எருசலேமிற்கு தேவனுடைய செய்தி (1 - 14)
- செப்னா, எலியாக்கீமை குறித்த தேவனுடைய செய்தி (15 - 25)

23. அதிகாரம்

தீருவிற்கு தேவனுடைய செய்தி.

24. அதிகாரம்

தேவன் இஸ்ரயேலை தண்டிப்பார் என்ற செய்தி.

25. அதிகாரம், 26 அதிகாரம்

தேவனை துதிக்கும் பாடல்.

தேவன் கடந்த காலத்தில் செய்த நியாயத்தீர்ப்புகள்.

எதிர்கால இரட்சிப்பு.

எதிரிகள் மீதுள்ள அவர்களது வெற்றியை நினைத்து துதித்தல்.

27. அதிகாரம்

இஸ்ரயேலுக்கான தீர்க்கதரிசனம்.

28. அதிகாரம்

10 கோத்திரத்திற்கான எச்சரிக்கை.

29. அதிகாரம்

எருசலேமிற்கான தேவனுடைய செய்தி.

30. அதிகாரம்

- இஸ்ரயேல் எகிப்தை அல்ல, தேவனை நம்பவேண்டும் (1 - 7)
- யூதாவிற்கு தேவனுடைய செய்தி. (8 - 26)
- அசீரியாவின் அழிவு (27 - 33)

31. அதிகாரம்

தேவனை புறக்கணித்து, எகிப்தை நம்புவோரின் முட்டாள்தனம் மற்றும் அசீரியாவின் வீழ்ச்சி.

32. அதிகாரம்

ராஜ்ஜியத்தை குறித்த செய்தி.

33. அதிகாரம்

- ❖ தேவனின் எதிரிகளுக்கு எதிரான தேவனின் நியாயத்தீர்வு (1 - 12)
- ❖ நீதிமான்களுக்கான ஆசிர்வாதங்கள் (13 - 24)

34. அதிகாரம்

- ❖ தேவனின் நியாயத்தீர்ப்பு, இரண்டாம் உலகத்தில் முடிவு (1 - 15)
- ❖ தீர்க் தரிசனத்தின் நிலைமாறா தன்மை (16 - 17)

35. அதிகாரம்

- ❖ கிறிஸ்துவின் ராஜ்யம்.

36. 37. 38. 39. அதிகாரங்கள்

<u>**வரலாற்று சம்பவம் எசேக்கியா ராஜாவின் நாட்களில் நடந்த காரியங்கள்.**</u>

- ❖ அசீரியா ராஜா எசேக்கியா ராஜாவிற்கு விரோதமாக வருதல்.
- ❖ அசீரியா ராஜாவின் படைகளை தேவதூதனை அனுப்பி தேவன் அழித்தல்.
- ❖ மரணத்திற்கு ஏதுவான நோயிலிருந்து எசேக்கியாவிற்கு கிடைத்த விடுதலை.
- ❖ எசேக்கியாவின் புத்தியீனம் (கடைசி கால தவறு)

40. அதிகாரம்

- ❖ இஸ்ரயேலின் சிறையிருப்பு முடியும் என்பதை குறித்த தீர்க்க தரிசனம் (1 - 11)
- ❖ சர்வ வல்ல தேவனில் தனித்துவம் (12 - 26)
- ❖ தளர்வடைந்தவர்களுக்கு தேவன் பெலனளிக்கிறார் (27 - 31)

41. அதிகாரம்

- ❖ தேவன் தம்முடைய ஜனங்களை எப்படி பராமரிக்கிறார் (1 - 20)
- ❖ விக்கிரக தெய்வங்களுக்கு கர்த்தர் விடும் சவால் (21 - 29)

42. அதிகாரம்

- ❖ கர்த்தர் இயேசுவின் (மேஷியா) ஊழியர்கள் குறித்து முன்னறிவிப்பு (1 - 4)
- ❖ அவருக்கு பிதாவாகிய தேவனின் வாக்குதத்தம் (5 - 9)

- ❖ தேவனை துதிக்கும் படியான ஒரு அறிவுரை (10 - 25)

43 அதிகாரம்

- ❖ தமது வாக்குதத்தங்களால் இஸ்ரயேலரை தேவன் ஆற்றுதல் (1 - 13)
- ❖ பாபிலோனின் அழிவு முன்னுறைக்கப்படுகிறது (14 - 17)
- ❖ தேவ மக்களின் மீட்பை பற்றி தேவன் அவர்களுக்கு நினைவுப்படுத்துதல் (18 - 28)

44. அதிகாரம்

- ❖ இஸ்ரயேலருக்கு தேவனின் ஆறுதல் (1 - 8)
- ❖ விக்கிரகங்கள் பயனற்றவை (9 - 20)
- ❖ தமது கருணையின் மீது நம்பிக்கையாயிருக்க தேவன் இஸ்ரயேலருக்கு போதிக்கிறார். (21 - 27)
- ❖ கோரேஸ் ராஜாவை குறித்த தீர்க்கதரிசனம் (28)

45 அதிகாரம்

- ❖ இஸ்ரயேலரை விடுதலை செய்ய தேவன் கோரேஸை தெரிந்தேடுக்கிறார் (1 - 4)
- ❖ தேவன் தமது வல்லமையை உறுதிப்படுத்தி பேசுகிறார். (5 - 21)
- ❖ ராஜ்யத்தை குறித்த தீர்க்கதரிசனம் (22 -25)

46. அதிகாரம்

பொய் தெய்வங்கள் பயனற்றவை என்பதை குறித்த செய்தி.

47. அதிகாரம்

பாபிலோனுக்கு தேவனுடைய செய்தி.

48. அதிகாரம்

- ❖ தேவன் இஸ்ரயேலரின் மனக்கடினத்தை நினைவுப்படுத்தி தமது தீர்க்க தரிசனங்களை அறிவித்தல் (1 - 11)
- ❖ கீழ்படிதல் உள்ளவர்களாக இருக்க தேவன் அவர்களுக்கு அறிவுரை வழங்குகிறார். (12 - 22)

49. அதிகாரம்

- ❖ யூதர்களிடம் கர்த்தர் இயேசு அனுப்பப்படுவதை குறித்த தீர்க்கதரிசனம் (1 - 4)
- ❖ புற ஜாதியாரிடத்திற்கு கர்த்தர் இயேசு அனுப்பப்படுவதை குறித்த தீர்க்கதரிசனம (5 - 12)

❖ தேவனுக்கு தம்மக்களுடனான அன்பு நிலையானது (13 - 26)

50. அதிகாரம்

❖ இஸ்ரயேலரின் அவிசுவாசத்திற்கான காரணம் (1 - 9)

❖ மனிதரை அல்ல, தேவனை நம்பவேண்டும் என்ற போதனை (10 - 11)

51. அதிகாரம்

❖ ஆபிரகாமைப் போல் தம்மை நம்பும்படி தேவன் மக்களை அழைத்தல் (1 - 8)

❖ தேவனுடைய வல்லமை அவா்களை காப்பாற்றும் (9 - 23)

52. அதிகாரம்

❖ இஸ்ரயேல் காப்பாற்றப்படும் (1 - 12)

❖ கா்த்தா் இயேசுவை குறித்து (13 - 15)

53. அதிகாரம்

கிறிஸ்துவின் பாடுகள் அதனை தொடா்ந்து வரும் ஆசீா்வாதம்.

54. அதிகாரம்

கிருபை நிறைந்த வாா்த்தைகளால் தேவன் தேற்றுகிறாா்.

55. அதிகாரம்

❖ திருப்தியளிக்கும் உணவை தேவன் கொடுக்கிறாா். (1 - 6)

❖ அவா்கள் மனந்திரும்பும்படி கேட்கிறாா் (7)

❖ தேவ வாா்த்தையின் வல்லமையை குறித்த வசனங்கள் (8 - 13)

56. அதிகாரம்

❖ புறஜாதிகளுக்கு இருக்கும் தேவனின் வாக்குத்ததம் (1 - 8)

❖ குருடா்களான காவற்காரரால் தேவமக்கள் சீா்குலைகின்றனா். (9 - 12)

57 அதிகாரம்

❖ நீதிமானின் ஆசிா்வாதமான மரணம் (1, 2)

❖ விக்கிரக ஆராதனைக்குள் சென்ற யூதா்களுக்கான தேவனின் கண்டிப்பு (3 - 12)

❖ மனம் வருந்துவோருக்கான வாக்கு தத்தங்கள் (13 - 21)

58. அதிகாரம்

- ❖ மாய்மாலமான உபவாசம் குறித்து (1 - 7)
- ❖ தேவ பக்தியுள்ளவர்களுக்கும் ஓய்வு நாளை சரியாக கடைபிடிப்போருக்குமான வாக்குதத்தங்கள் (8 - 14)

59. அதிகாரம்

- ❖ யூதர்களின் வீழ்ச்சிக்கு அவர்கள் பாவமே காரணம் (1 - 15)
- ❖ கர்த்தர் இயேசுவை குறித்ததான தீர்க்கதரிசனங்கள் (16 - 21)

60. அதிகாரம்

- ❖ சபைக்கான வாக்குதத்தங்கள் (1 - 14)
- ❖ கொஞ்சகால துயரத்திற்கு பிறகு சபைக்கு வரும் ஆசிர்வாதங்கள் (15 - 22)

61. அதிகாரம்

- ❖ கர்த்தர் இயேசுவை (மேஷியா) குறித்ததான தீர்க்கதரிசனங்கள் (1 - 5)
- ❖ சபையின் சீர்திருத்தமும், ஆசிர்வாதமும் (6 - 11)

62. அதிகாரம்

- ❖ சபையை குறித்ததான தீர்க்கதரிசனம்.

63. அதிகாரம்

- ❖ கர்த்தர் இயேசுவை குறித்ததான தீர்க்கதரிசனங்கள் (1 - 6)
- ❖ தேவன் தமது மக்களுக்கு காட்டும் அன்பு, நன்றியுடன் விவரிக்கப்படுகிறது. (7 - 19)

64. அதிகாரம்

சபையை குறித்ததான தீர்க்கதரிசனங்கள்.

65. அதிகாரம்

புறஜாதிகளுக்கான ஆசிர்வாதம்.
ராஜ்யத்துக்குரிய தீர்க்கதரிசனங்கள்.

66. அதிகாரம்

தேவனுடைய நியாயத்தீர்ப்பை குறித்ததான காரியங்கள்.

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 37

ஓசியா (HOSEA)

- **எபிரேய வார்த்தை** - HOSHEA (ஹோஷெய)
- **பெயர் அர்த்தம்** - இரட்சிப்பு
- **எழுதியவர்** - ஓசியா

❖ வேதத்தின் 28-வது புத்தகம்
❖ அதிகாரங்கள் மொத்தம் 14
❖ வசனங்கள் மொத்தம் 197
❖ **சிறிய தீர்க்கதரிசிகளில் முதல் புத்தகம்**

இடம் - இஸ்ரயேல் 10 கோத்திரம்

இவர் வாழ்ந்த காலம்

இஸ்ரயேல் 10 கோத்திரங்கள்	-	இரண்டாம் யெரோபெயாம்
யூதா 2 கோத்திரங்கள்	-	உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா

இப்புத்தகத்தின் சிறப்பு

- இந்த புத்தகம் சாலமோனுக்கு பிறகு இஸ்ரயேல் 2 ஆக பிளவுப்பட்டபின் 10 கோத்திரங்களுக்கு **இரண்டாம் யெரோபெயாம்** ராஜாவாக இருக்கும் போது சொல்லப்பட்ட தீர்க்கதரிசனம் ஆகும்.
- இரண்டாம் யெரோபெயாமின் (13-வது ராஜா) ஆட்சி முறை குறித்தும் பார்க்கும் போது

II இராஜா 14 : 23, 24

- கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தான்.
- இஸ்ரயேலைப் பாவஞ்செய்யப்பண்ணின் **நேபாத்தின் குமாரனாகிய யெரோபெயாமின்** (பிளவுப்பட்ட இஸ்ரயேலின் முதல் ராஜா) பாவங்கள் ஒன்றையும் அவர் விட்டு விலகவில்லை.

இந்த சூழ்நிலையில் எழுதப்பட்டது ஓசியா புத்தகம்.

1. இஸ்ரயேல் மக்கள் சத்தியத்தை பற்றிய அறிவைவிட்டு புறஜாதிகளின் விக்கிரக வழிபாட்டை பின்பற்றினர். தேவன் இவர்களை பற்றி கூறுகையில்,
   - ❖ **என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்.**
   - ❖ **நீ என் வேதத்தை மறந்தாய் (ஓசியா 4 - 6)**

இந்த வசனத்திலிருந்து ஓசியா தீர்க்கதரிசியின் நாட்களில் இஸ்ரயேலரின் நிலையை புரிந்து கொள்ள முடிகிறது.

எனவே இஸ்ரயலேரின் மனந்திரும்புதலுக்காக அவர்களை எச்சரிக்குபடி தேவன் ஓசியாவை கொண்டு இதை எழுதுகிறார்.

❖ தமது நாட்டு மக்களான இஸ்ரயேலரின் **வஞ்சனை, கொலைசெயல், பொய், நன்றியின்மை, விக்கிரகாரதனை** போன்றவற்றையெல்லாம் கண்டிக்கிறார். ஆயினும் இந்த புத்தகத்தில் அவரது செய்தி கருணைமிக்கதும், நம்பிக்கை நிறைந்ததுமாக இருக்கிறது.

ஆசிரியர் (ஓசியா குறித்து)

1. இவர் அரசாங்கத்தில் ஒரு முக்கிய பொறுப்பில் இருந்ததாக கூறுகின்றனர்.
2. தேவன் இஸ்ரயேலரின் பின்மாற்றமான வாழ்க்கையை அவர்களுக்கு தெரியப்படுத்தவும், தாம் இஸ்ரயேல் ஜனங்களை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை காட்டவும் ஓசியாவை கோமேர் என்னும் வேசியை (தன் வேசித்தனத்தினால் குழந்தைகளைப் பெற்றெடுத்த ஒரு வேசியை) திருமணம் செய்வதோடு அந்த குழந்தைகளையும் ஏற்று கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். (ஓசியா 1-2, 3).

❖ **இதில் ஓசியாவின் கீழ்படிதலைப் பார்க்கிறோம்.**

3. திருமணம் செய்த பிறகு மீண்டும் அந்தப்பெண் (கோமேர்) அவரைவிட்டுவிட்டு தவறுக்குள் செல்கிறார். ஆனால் தேவன் ஓசியாவை தொடர்ந்து அந்தப் பெண்ணை நேசிக்கும் படியாவும், மீண்டும் அவரை தன் மனைவியாக்கி அழைத்து வரும் படியாகவும் கூறுகிறார்.

காரணம்

இஸ்ரயேல் ஜனங்கள் கோமேரைப் போல தேவனைவிட்டு விலகி போனாலும் தேவன் அவர்களை நேசிப்பதற்கு அடையாளமாக இதை செய்ய சொல்கிறார்.

- **இதற்கும் ஓசியா கீழ்படிவதைப் பார்க்கிறோம். (3 : 1 - 3)**

3. இப்படியாய் தம்முடைய ஜனங்கள் மீது தேவன் வைத்திருக்கும் அன்பு ஓசியா தீர்க்கதரிசி மூலம் வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.
4. இவருடைய செய்தி இஸ்ரயேலரின் பாவத்தை கடுமையாக கண்டிப்பது போல் இருந்தாலும், இந்த செய்தி **கருணைமிக்கதும் நம்பிக்கை நிறைந்ததுமாக** இருக்கிறது. காரணம் ஓசியா தமது சொந்த வாழ்வில் ஒழுக்க கேடு நிறைந்து வாழ்ந்த மனைவியான கோமேரால் அனுபவித்த துயரம் அவரது இருதயத்தை கருணைமயமாக்கியிருக்கிறது.

இந்தப் புத்தகத்தை படிக்கும் முறை

4 பகுதிகளாக பிரிக்கலாம்.

1. ஓசியாவின் குடும்ப அனுபவம் (1 - 3 அதிகாரங்கள்)
2. இஸ்ரயேலின் பாவ அக்கிரமம் (4 - 6 அதிகாரங்கள்)
3. இஸ்ரயேலுக்கு வந்த தண்டனை (7 - 10 அதிகாரங்கள்)
4. இஸ்ரயேலுக்கு தேவன் காட்டும் இரக்கமும், தீர்ப்பும் (11 - 14 அதிகாரங்கள்)

முக்கிய நபர்கள்

1. ஓசியா
2. கோமேர்
3. அவரது பிள்ளைகள்

இவர் காலத்தில் இருந்த மற்ற தீர்க்கதரிசிகள்

1. யோனா
2. ஆமோஸ்
3. மீகா
4. ஏசாயா

ஓசியா புத்தகத்தில் காணப்படும் முக்கிய செய்தி

ஒழுக்க சீர்குலைவிலும், அவிசுவாசத்திலும் இஸ்ரயேலின் 10 கோத்திரங்கள் சென்று கொண்டு இருந்தது. இஸ்ரயேல் மக்களை திரும்ப தம்மிடம் திருப்ப தேவன் செய்த இறுதி முயற்சியாக ஓசியாவின் தீர்க்க தரிசினத்தை சொல்லலாம்.

கணவன் - மனைவி உறவில் ஒருவர் மட்டும் நேர்மையிலும், அன்பிலும் நிலைத்து இருந்தது போல (ஓசியாவின் குடும்ப வாழ்க்கை) இஸ்ரயேலுக்கும் தேவனுக்கும் இருந்த உறவு இருந்தது.

ஓசியாவின் நேர்மை, அன்பு **பிதாவாகிய தேவனுக்கு ஒப்பிட்டும்,** கோமேரின் தவறான வாழ்க்கை **இஸ்ரயேலரின் பின்மாற்ற வாழ்க்கைக்கு ஒப்பிட்டும்** சொல்லப்பட்டு இருக்கிறது.

கோமேர் தன் கணவனை விட்டு அந்நிய மனிதர்களை பின் தொடர்ந்து போல இஸ்ரயேலர் அந்நிய தேவர்களை பின் தொடர்ந்தனர்.

- துன்மார்க்கம் நிறைந்த மனைவியும், நேர்மையான கணவரும் - இதை இதற்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது.
- விக்கிரகாராதனை நிறைந்த இஸ்ரயேலும், நேர்மைமிக்க தேவனும் - இதற்கு ஒப்பிட்டு சொல்லப்படுகிறது.

மனிதர்கள் பாவத்தில் வீழ்ந்து நேர்மையற்றவர்களாகும் போதும், நேர்மையும் அன்பும் நிலைமாறாது அவர்கள் மனந்திரும்புதலுக்காக அன்புடன் காத்திருக்கும் தேவனின் பண்பை இந்நூலில் நாம் பார்க்கிறோம்.

அதிகாரம் -1

1. ஓசியாவின் மூலமாக கர்த்தருடைய செய்தி (1 - 2)
2. ஓசியாவிற்கு கோமேர் மூலமாக முதல்பிள்ளை பிறத்தல் இதற்கு **யெஸ்ரயேல்** என்று பெயரிடுதல் அதை குறித்த செய்தி (3 - 5)
3. இரண்டாவது பிள்ளை பிறத்தல் அதற்கு **லோருகாமா** என்று பெயரிடுதல் அதை குறித்த செய்தி (6 - 7)
4. மூன்றாவது பிள்ளை **லோகம்மீ** என்று பெயரிடுதல் - அதை குறித்த செய்தி (8)
5. இஸ்ரயேலர் அநேகராயிருப்பார்கள் என்ற தேவனின் வாக்குறுதி (9 - 11)

அதிகாரம் - 2

1. இஸ்ரயேல் ஜனங்களின் விக்கிரகாராதனை (1 - 5)
2. அவர்களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு (6 - 13)
3. திரும்ப அவர்களை சேர்ப்பதற்கான தேவனுடைய வாக்குதத்தம் (14 - 23)

அதிகாரம் -3

1. ஓசியா தவறுக்குள் சென்ற கோமேரை மீண்டும் விலை கொடுத்து வாங்கிவருதல் (1 - 3)
2. அதை ஒப்பிட்டு தேவனுடைய செய்தி (4 - 5)

அதிகாரம் -4

இஸ்ரயேல் ஜனங்கள், ஆசாரியர்கள் இவர்களுடைய பாவங்களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு குறித்ததான செய்தி.

அதிகாரம் - 5

இஸ்ரயேலுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பு.

அதிகாரம் - 6

மனந்திரும்பும்படி தேவன் இஸ்ரயேலுக்கு அறிவரை கூறுகிறார்.

அதிகாரம் -7



1. பல வகையான பாவங்களை குறித்த கண்டிப்பின் செய்தி (1 - 10)
2. மாய்மாலத்தை குறித்த தேவ கோபம் (11 - 16)

அதிகாரம் -8

விக்கிரகாராதனை அழிவை கொடுக்கும் என்ற தேவ எச்சரிப்பின் செய்தி.

அதிகாரம் -9

இஸ்ரயேலரின் பாவங்களினிமித்தம் அவர்களுக்கு நெருக்கமும் சிறையிருப்பும் வரும் என்ற எச்சரிக்கை.

அதிகாரம் -10

இஸ்ரயேலரின் விக்கிரகாராதனை கண்டிக்கப்பட்டு எச்சரிக்கப்படுகிறது.

அதிகாரம் -11

தேவனிடம் நன்மைகளை அனுபவித்த இஸ்ரயேலரின் நன்றியின்மை.

அதிகாரம் -12

எப்பிராயீம் (இஸ்ரயேலின் 10 கோத்திரம்) மற்றும் யூதா கண்டிக்கப்படுதல்.

அதிகாரம்-13

எப்பிராயீமின் பக்தியற்ற நிலை, தேவ கோபம் அவர்கள் மேல் வருவதற்கு காரணம்.

அதிகாரம் -14

1. மனந்திரும்புதலுக்கான அறிவுரை (1 - 3)
2. தேவனின் ஆசீர்வாதங்கள் வாக்குதத்தம் செய்யப்படுகின்றன (4 - 9)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 38

மீகா (MICAH)

எபிரேய வார்த்தை	-	மீகாஹ் (மிகாயா) (Mikhah)
பெயர் அர்த்தம்	-	கர்த்தரைப் போன்றவர் யார் (மீகா 7 : 18)
எழுதியவர்	-	மொரேசா ஊரானாகிய மீகா

- ❖ வேதத்தின் 33-வது புத்தகம்
- ❖ மொத்த அதிகாரங்கள் 7
- ❖ மொத்த வசனங்கள் 105

இடம் - யூதா 2 கோத்திரம்

இவர் வாழ்ந்த காலம்

யூதாவின் 2 கோத்திரம்	-	யோதாம் (11), ஆகாஸ் (12), எசேக்கியா (13)
இஸ்ரயேலின் 10 கோத்திரம்	-	ஓசேயா (19)

இவர்கள் நாட்களில் மீகா வாழ்ந்து தீர்க்க தரிசனம் சொல்லியிருக்கிறார் (மீகா 1 : 1)

யாருக்கு எழுதினார்?

யூதா ராஜாக்களின் நாட்களில் இவர் வாழ்ந்ததாக கூறப்பட்டாலும் இவருடைய செய்தி யூதாவின் 2 கோத்திரங்களுக்கு மட்டுமல்ல, இஸ்ரயேலின் 10 கோத்திரங்களுக்கும் சொல்லப்பட்டுள்ளது.

இவர் இஸ்ரயேலின் 10 கோத்திரங்கள் அசீரியா ராஜாவினால் சிறைபிடிக்க படுமுன் இந்த தீர்க்கதரிசனங்களை சொல்லியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. (மீகா 1 : 5 - 7)

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. இந்த புத்தகம் எபிரேய கவிதை புத்தக வடிவத்தில் இருப்பதாக கூறுகின்றனர்.
2. ஏசாயா தீர்க்கதரிசி சொல்லியிருப்பது போலவே இவரும் தீர்க்கதரிசனம் சொல்லியிருப்பது மிகவும் சிறப்பு ஆகும்.
   (மீகா 4 : 1 - 4 - ஏசாயா 2 : 1 - 4)

3. கர்த்தர் இயேசுவின் பிறப்பை குறித்து, விசேஷமாக அவர் பெத்லகேமில் பிறப்பார் என்பதை பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக தீர்க்கதரிசனமாக சொல்லியிருப்பது இதன் சிறப்பு ஆகும். (மீகா 5 : 2)

   கர்த்தர் இயேசு பிறந்தபோது பிரதான ஆசாரியர்கள், வேதபாரகர் இந்த வசனத்தையே ஏரோது முன்பாக வைத்தார்கள். (மத் 2 : 1 - 6)
4. தேவனுடைய ராஜ்யத்தை குறித்த தீர்க்க தரிசனங்களையும் இவர் சொல்லியிருப்பதை நாம் பார்க்க முடிகிறது. (மீகா 5 : 4, 4 : 1 - 4)
5. பாபிலோன் அசீரியாவிற்கு கீழாக, அசீரியாவின் ஆளுகையின் கீழ் இருக்கும் போதே பாபிலோனுக்கு யூதா சிறைபட்டு போகும் என்பதை முன் கூட்டியே இவர் தீர்க்கதரிசனமாக சொல்லியிருப்பதை நாம் பார்க்கலாம் (மீகா 4 : 10)

ஆசிரியர் (மீகா) குறித்து



1. இவர் ஒரு கிராமவாசி (மொரேசா என்னும் சிறிய கிராமத்தை சேர்ந்தவர். இந்த கிராமம் எருசலேமிலிருந்து 40.கீ.மீ தூரத்தில் இருக்கிறது).
2. இவர் தொழில் என்னவென்று தெரியவில்லை, என்றாலும், மொரேசா ஒரு விவசாய பகுதி என்பதால், இவர் ஒரு விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்று யூகிக்க முடிகிறது.
3. தேவன் இவரை அழைத்து, அவருடைய ஆவியை தந்து இவரை தீர்க்க தரிசியாக அழைத்த போது அதில் இவரை குறித்து, இவருடைய அழைப்பை குறித்து தெளிவுள்ளவராக இருந்தார் என்பதை இந்த புத்தகத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. (மீகா 3 : 8)
4. இவர் ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் வாழ்ந்தவர்.
5. இவருடைய தீர்க்கதரிசனங்களில் காணப்படும் செய்தியைப் பார்க்கும் போது எசேக்கியா ராஜாவின் நாட்களில் ஏற்பட்ட சீர்திருத்தலுக்கு முன் இவர் யூதாவின் தவறுகளை, ஒழுக்க சீர்குலைவுகள் மற்றும் விக்கிரகாராதனையை குறித்து கூறியிருக்கவேண்டும் என்று யூகிக்க முடிகிறது.
6. இவருடைய தீர்க்க தரிசனத்தில் தேவன் இஸ்ரயேலிலும், யூதாவிலும் இருந்த கள்ள தீர்க்கதரிசிகளையும், நேர்மையற்ற தலைவர்களையும், சுயநல வாதிகளையும், ஆசாரியர்களையும் நியாயந்தீர்ப்பார் என்று கூறுகிறார்.
7. தேவாலயத்தில் பலி செலுத்துவதில் மட்டும் தேவன் பிரியமாயிருப்பதில்லை என்று மீகா பிரசங்கித்தார் (மீகா 6 : 6 - 8)

8. இவரை குறித்து ஏரேமியா புத்தகத்திலும் சொல்லியிருப்பதை நாம் பார்க்கலாம். (எரேமியா 26 : 18)

இந்த புத்தகத்தை படிக்கும் முறை

4 பகுதிகளாக பிரிக்கலாம்.

1. இஸ்ரயேல் (10 கோத்திரம்), யூதா (2 கோத்திரம்) மேல் வரப்போகின்ற நியாயத்தீர்ப்பு (1 : 3 அதிகாரங்கள்)
2. இஸ்ரயேலுக்கும், யூதாவிற்கும் நம்பிக்கையின் செய்தி (4, 5 அதிகாரங்கள்)
3. இஸ்ரயேலுக்கு எதிரான கர்த்தரின் கண்டனம் (6 அதிகாரம்)
4. தேவனின் செயல் (வருங்காலங்களில் தேவன் என்ன செய்யப்போகிறார் என்பதை குறித்த செய்தி) (7 அதிகாரம்)

அதிகாரம் -1

1. யாக்கோபின் விக்கிரக ஆராதனையால் கர்த்தரின் கோபம் அவர்கள் மீது வருமென்று மீகா எச்சரித்தல். (1 - 9)
2. புலம்பி அழும்படி அவர்களுக்கு அறிவுரை கூறுகிறார். (10 - 16)

அதிகாரம் - 2

1. மற்றவர்களை துன்பபடுத்துகிறவர்களுக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்ப்பின் செய்தி (1 - 4)
2. ஒரு புலம்பலின் செய்தி (5 - 6)
3. அநீதிக்கும், விக்கிரகாராதனைக்கும் எதிரான கண்டனம் (7 - 11)
4. யாக்கோபை திரும்ப கட்டுவேன் (ஒன்று சேர்ப்பேன்) என்ற வாக்குறுதி (12 - 13)

அதிகாரம் -3



1. தலைவர்கள் அதிபதிகள் செய்கின்ற தீமைகள் (1 - 4)
2. பொய் தீர்க்கதரிசிகள் குறித்த செய்தி (5 - 7)
3. மீகா தீர்க்கதரிசி தன்னை குறித்து சொல்கிறார் (8)
4. தவறுகள் செய்துவிட்டு தேவன் தங்களோடு இருக்கிறார் என்ற தவறான எண்ணம் கொண்ட தலைவர்கள் ஆசாரியர்களுக்கு எதிரான தேவனுடைய செய்தி (9 - 12)

அதிகாரம் -4

1. தேவனுடைய ராஜ்யத்தை குறித்த செய்தி (1 - 5)
2. மீண்டும் ராஜ்யம் தரப்படும் என்ற செய்தி (6 - 8)
3. யூதா பாபிலோனுக்கு சிறைப்பட்டு போகும் என்ற செய்தி (9 - 10)
4. கர்த்தர் மற்ற தேசங்களை அழிப்பார் என்ற செய்தி (11 - 13)

அதிகாரம் - 5

1. கர்த்தர் இயேசு பெத்லகேமில் பிறப்பார் என்ற தீர்க்கதரிசன செய்தி (1 : 3)
2. அவரது அரசாட்சி (4 : 7)
3. ஜனங்கள் அவரை சார்ந்திருப்பார்கள் என்ற செய்தி (8 : 15)

அதிகாரம் -6

1. கொடுமைக்கு எதிரான தேவனின் முறையீடு (1 : 5)
2. தேவன் நம்மிடம் எதை விரும்புகிறார் (6 : 8)
3. இஸ்ரயேலரின் தவறுகளும் அதற்கான தேவனுடைய தண்டனையும் (9 : 16)

அதிகாரம் -7

1. மீகா ஜனங்கள் செய்த பாவங்களால் கலக்கமடைதல் (1 : 4)
2. தண்டனையின் நாள் வருகிறது. மனிதரை நம்பாமல் தேவன் மேல் நம்பிக்கை வைக்க சொல்லுதல் (5 : 6)
3. கர்த்தரே இரட்சகர் (7, 8)
4. கர்த்தரே மன்னிக்கிறவர் (9, 10)
5. யூதா திரும்ப கட்டப்படும் (11 - 14)
6. இஸ்ரயேல் பகைவர்களை வெற்றி கொள்வார்கள் (15 - 17)
7. கர்த்தரை துதிக்கும் துதி (18 - 20)

உம்முடைய வசனமே சத்தியம்”　　　　யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 39

ஆமோஸ் - AMOS

- எபிரேய வார்த்தை - அமாஸ்
- பெயர் அர்த்தம் - சுமை சுமப்பவர்
- எழுதியவர் - ஆமோஸ் தீர்க்கதரிசி



- வேதத்தின் 30-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 9
- மொத்த வசனங்கள் - 146

இடம் : **இஸ்ரயேல் 10 கோத்திரம்**

இவர் வாழ்ந்த காலம்

யூதாவின் 2 கோத்திரம்	-	உசியா (10-வது ராஜா)
இஸ்ரயேலின் 10 கோத்திரம்	-	இரண்டாம் யெலோபெயாம் (13-வது ராஜா)
		(ஆமோஸ் 1 - 1)

யாருக்கு எழுதினார்?

இவர் யூதா தேசத்தில் பிறந்திருந்தாலும், இஸ்ரயேலின் 10 கோத்திரத்திற்கு தீர்க்கதரிசனம் சொன்னார். இஸ்ரயேலின் 10 கோத்திரத்தில் இரண்டாம் யெரோபெயாம் பத்தாவது ராஜாவாக ஆண்ட போது தேசம் வலிமை மிக்கதாகவும், தேசத்தில் செல்வம் பெருகி செழித்து இருந்தது. இந்த செழிப்புக்கு நடுவில் சிற்றின்பங்களும், அநீதியும் பெருகி இருந்தது.

எனவே தேவன் தேசத்தில் பஞ்சம், வறட்சி, கொள்ளை நோய், போர் போன்ற அழிவுகளை அனுமதித்தும் ஜனங்களுக்கு அது மனந்திரும்புதலை ஏற்படுத்தவில்லை.

இந்த நிலையில் **தேசத்தின் மனந்திரும்புதலுக்கு தேவன் தமது வார்த்தையை இஸ்ரயேலுக்கு விரோதமாக சொல்ல** ஆமோஸை பயன்படுத்தினார்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. இஸ்ரயேலின் **10 கோத்திரத்திற்கு வரும் அழிவை** குறித்து இந்த புத்தகத்தில் கூறியுள்ளார்.
2. இஸ்ரயேலின் 10 கோத்திரம் **அசீரியாவினால் சிறைபிடிக்கப்படும்** என்பதை இவர் தீர்க்கதரிசனமாக சொல்லி இருப்பதை இதில் பார்க்கலாம்.
3. இவருடைய நாட்களில் **அசீரியா, பாபிலோன்** போன்ற ராஜ்யங்கள் இஸ்ரயேலை காட்டிலும் மிகவும் பலவீனமான ராஜ்யங்களாக இருந்தன. இவர் சொன்ன "**இஸ்ரயேல் அசீரியாவினால் சிறைப்பட்டு போகும்**" என்ற தீர்க்கதரிசனம் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருந்தது. ஆனால் இதற்கு பின் **30 வருடங்களில்** அசீரியா இஸ்ரயேலை சிறை பிடித்தது.
4. இவர் சொன்ன தீர்க்கதரிசனம் **ஆமோஸ் 1 : 5**

நான் தமஸ்குவின் தாழ்பாளை உடைத்து, குடிகளை ஆவேன் என்னும் பள்ள தாக்கிலும், செங்கோல் செலத்துகிறவனை பெத் ஏதேனினும் இராதபடிக்குச் சங்காரம் பண்ணுவேன். அப்போது சீரியாவின் ஜனங்கள் கீருக்கு சிறைப்பட்டு போவார்கள் என்று கர்த்தர் சொல்கிறார்.

இவர் நாட்களில் சீரியா சாம்ராஜ்யம் இருந்தது. இதன் தலைநகர் தமஸ்கு. இந்த சீரியாவிற்கு பிறகு அசீரியா சாம்ராஜ்யம் வரும் இவர்கள் அசீரியாவின் பட்டணமான "கீரு" க்கு சிறைப்பட்டு போவார்கள் என்பதை முன்கூட்டியே இந்த வசனத்தில் தீர்க்கதரிசனமாக சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்.

5. இந்த புத்தகத்தில் **இஸ்ரயேலின் தவறுகளான பேராசை, அநீதி சுயநீதி** ஆகியவற்றை சுட்டி காட்டியுள்ளார்.
6. புறஜாதி நாடுகளான **சீரியா, பெலிஸ்தியா, தீரு, ஏதோம், அம்மோன் புத்திரர், மோவாப்,** போன்ற தேசங்களுக்கும் விரோதமாக கர்த்தருடைய வார்த்தையை இதில் சொல்லியிருப்பதை பார்க்க முடிகிறது.
7. இந்த புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் **இஸ்ரயேலின் மீட்பை குறித்தும், ஆசிர்வாதத்தை குறித்தும்** கூறி இருப்பதைப் பார்க்கலாம். ஆமோஸ் 9 - 12

ஆசிரியர் (ஆமோஸ்) குறித்து

1. ஆமோஸ் ஒரு மேய்ப்பர்.
2. ஆமோஸ் தன்னை குறித்து சொல்லும்போது

Amos by James Tissot

நான் தீர்க்க தரிசியுமல்ல, தீர்க்கதரிசியின் புத்திரனுமல்ல், நான் மந்தை மேய்க்கிறவனும் காட்டத்திப் பழங்களைப் பொறுக்கிறவனுமாயிருந்தேன்.
ஆனால் மந்தையின் பின்னாலே போகிறபோது என்னை கர்த்தர் அழைத்து, நீ போய் என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்று கர்த்தர் உரைத்தார். (7 : 14, 15)

என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

3. இவருடைய ஊர் **தெக்கோவா** என்ற கிராமம் ஆகும். இது எருசலேமிற்கு தெற்கே 12 மைல் தொலைவில் இருந்தது.
4. இவர் கிராமத்து மனிதராயிருந்தாலும் வேத வசனங்களை குறித்த ஆழமான புலமை இவருக்கு இருந்தது.

ஒழுக்கத்தையும், நீதியையும் பற்றிய அவரது தெளிவு இந்த புத்தகத்தில் புலப்படுகிறது.

5. இவருடைய தீர்க்கதரிசன வார்த்தைகளை இஸ்ரயேல் மக்கள் ஏற்று கொள்ளவில்லை. இவர் யூதா நாட்டை சேர்ந்தவர் என்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.
6. இவர் மக்களின் தவறுகளான பேராசை, அநீதி, சுயநீதி ஆகியவற்றை நேருக்கு நேர் எதிர்த்தபடியால் மக்களின் வெறுப்பை சம்பாதித்தார்.

இதை படிக்கு முறை

5 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. புறஜாதியாரின் நாடுகளுக்கு எதிரான தேவனுடைய அறிவிப்புகள். (1, 2 அதிகாரங்கள்)
2. இஸ்ரயேலருக்கான தேவனுடைய ஆலோசனை (3 : 1 முதல் 5 : 17 வரை)
3. இஸ்ரயேலின் சிறையிருப்பை பற்றிய முன்னறிவிப்பு (5 : 18 – 6 : 14)
4. நியாயத்தீர்ப்பை குறித்த பரலோக தரிசனங்கள் (7 : 1 முதல் 9 : 10 வரை)
5. இஸ்ரயேலின் எதிர்கால நம்பிக்கை (9 : 11 - 15)

அதிகாரம் - 1

1. முகவுரை (1)
2. சீரியாவை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (2 - 5)
3. பெலிஸ்தியாவை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (6 - 8)
4. தீருவை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (9, 10)
5. ஏதோமை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (11, 12)
6. அம்மோனியரை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (13 - 15)

அதிகாரம் - 2

1. மோவாபை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (1 - 3)
2. யூதாவை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (4, 5)
3. இஸ்ரயேலை குறித்த தேவ நியாயத்தீர்ப்பு (6 - 16)

அதிகாரம் - 3

இஸ்ரயேலுக்கு விரோதமான தேவ நியாயத்தீர்ப்பு.

அதிகாரம் - 4

எனியோரை துன்புறுத்தியத்திற்காகவும்,
விக்கிரக ஆராதனைக்காகவும்,
ஒழுக்கக்கேடான வாழ்வுக்காகவும் இஸ்ரயேலை தேவன் கண்டித்தல்.

அதிகாரம் - 5

1. இஸ்ரயேலுக்கான புலம்பல் (1 - 3)
2. மனந்திரும்ப அறிவுரை (4 - 27)

அதிகாரம் - 6

1. இஸ்ரயேலரின் சுகபோகமான வாழ்க்கை (1 - 6)
2. அவர்களுக்கு வரும் தண்டனை (7 - 14)

அதிகாரம் - 7

1. வெட்டுக்கிளி தரிசனம் (1 - 3)
2. அக்கினி (நெருப்பு) தரிசனம் (4 - 9)
3. ஆமோஸை அமச்சியா குற்றம் சாட்டுகிறார். (10 - 13)
4. ஆமோஸ் தனக்கு கிடைத்த தேவ அழைப்பை பற்றி கூறுகிறார். (14 - 17)

அதிகாரம் - 8

1. பழுத்த பழங்களின் தரிசனம் (1 - 3)
2. தேசத்தில் எளியவர்கள் ஒடுக்கப்படுகின்றனர். (4 - 10)
3. தேவனுடைய வார்த்தை கிடைக்காத பஞ்சம் வந்து கொண்டிருக்கிறது என்பதை குறித்து (11 - 14)

அதிகாரம் - 9

1. பலிபீடத்தின் மேல் கர்த்தர் நிற்கும் தரிசனம் (1 - 4)
2. இஸ்ரயேலின் அழிவை குறித்த தேவ வார்த்தை (5 - 10)
3. ராஜ்யத்தை மீண்டும் உண்டாக்குவேன் என்ற தேவனின் வாக்குறுதி (11 - 15)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 40

செப்பனியா ZEPHANIAH

எபிரேய வார்த்தை - ற்செபன்யாற் (Ts’Phanyah)

பெயர் அர்த்தம் - கர்த்தர் மறைக்கிறார்

எழுதியவர் - செப்பனியா

- வேதத்தின் 36-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 3
- மொத்த வசனங்கள் - 53

செப்பனியா தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

யூதா 2 கோத்திரத்திற்கு யோசியா (16-வது ராஜா) ராஜாவாக இருக்கும் போது இவர் வாழ்ந்தார். (செப்பனியா 1 : 1)

யோசியா ராஜா (II இராஜா 22, 23 - 1 - 30 / II நாளா 34, 35)

1. யோசியா 8 வயதான போது ராஜாவானார். இவர் 31 ஆண்டுகள் யூதாவின் மேல் ராஜாவாக அரசாட்சி செய்தார்.
2. யோசியாவின் 16 வயதில் அவரது இருதயம் கர்த்தரிடம் திரும்ப தொடங்கியது.
3. இவருக்கு முன் யூதாதேசம் விக்கிரக வழிபாட்டில் மூழ்கி சீர்கெட்டு போய் இருந்தது.
4. இவர் தமது முதல் சீர்திருத்த வேலையை தனது ஆட்சியின் 12-வது ஆண்டில் தொடங்கினார். பாகாலின் பலி பீடங்களை தகர்த்து, பலி மேடைகளையும், தோப்பு விக்கிரகங்களையும் நீக்கி யூதாவையும், எருசலேமையும் தூய்மைபடுத்தினார்.



5. மீண்டும் 6 ஆண்டுகளுக்கு பிறகு **இல்கியா ஆசாரியர்** தேவாலயத்தில் கண்டு பிடித்த நியாயப்பிரமாணத்தை வாசித்து மீண்டும் ஒரு சுத்திகரிப்பில் ஈடுபட்டார்.
6. தமக்கு முன் ஆண்ட **மனாசே, ஆமோன்** ஆகியோரின் மோசமான (தேவ பயமற்ற) ஆட்சியின் சுவடுகளை யோசியா அகற்ற முயன்றார்.
7. மிக நல்ல அரசராக இவர் ஆட்சி முறை இருந்தது. பிரதான ஆசாரியரான இல்கியாவை கணம் பண்ணி தேவனுக்கு பயந்து நடந்து கொண்டார்.
8. இவருடைய ஆட்சியில் சில சீர்திருத்தங்கள் வர காரணமாக இருந்தவர் **செப்பனியா தீர்க்கதரிசி** ஆகும்.
9. இவருடைய காலத்தில் வாழ்ந்த இன்னொரு தீர்க்கதரிசியாகிய **எரேமியாவின்** சொல் கேட்காமல் எகிப்தின் ராஜாவுடன் போருக்கு சென்றார். போரில் இறந்தார். எரேமியாவும், எல்லா யூதர்களும் இவருக்காக புலம்பி அழுதனர்.

செப்பனியா இந்த தீர்க்தரிசனங்களை யாருக்கு எழுதினார்?

யூதாவிற்கும், பிறநாடுகளுக்கும் (பெலிஸ்தியா, மோவாப், எத்தியோப்பியா)

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. யூதாவிற்கு (2 கோத்திரம்) வரும் நியாயத்தீர்ப்பை குறித்து இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
2. யோசியா ராஜாவின் சீர்திருத்த காலத்தின் ஆரம்பத்தில் இந்த புத்தகம் எழுதப்பட்டு இருக்க வேண்டும்.
3. இவர் சொன்ன தீர்க்கதரிசனங்கள் யோசியா ராஜாவின் சீர்திருத்த பணிக்கு உற்சாக மூட்டுதலாக இருந்திருக்க வேண்டும்.
4. யோசியா ராஜாவின் ஆட்சிகாலம் சிறப்பாக அமைய செப்பனியாவின் தீர்க்கதரிசனங்கள் முக்கிய காரணமாக இருந்திருக்க வேண்டும்.
5. எருசலேமை குறித்து இந்த புத்தகத்தில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளதை நாம் பார்க்கலாம்.

செப் - 1: 9 - 10 **மீன்வாசல், நகரத்தின் இரண்டாம் பாகம்.**

செப் - 3 : 1 - 7 **ஊத்தையும், அழுக்குமான நகரம்**
சத்தத்திற்கு செவி கொடுக்கவில்லை.
கடிந்து கொள்ளுதலை ஏற்று கொள்ளவில்லை.
கர்த்தரை நம்பவில்லை.
தேவனிடத்தில் சேரவில்லை.

செப் 3 -16 **எருசலேம் திரும்ப கட்டப்படும்.**

6. ராஜ்யத்தின் ஆசிர்வாதங்களை குறித்து கடைசி அதிகாரத்தில் கடைசி வசனங்களில் நாம் பார்க்க முடிகிறது. (3 : 14 - 20)

ஆசிரியர் (செப்பனியா) குறித்து

1. செப்பனியா தன் அறிமுகத்தை 4 தலை முறையாக சொல்கிறார். **எஸ்கியா, ஆமரியா, கெதலியா, கூஷ்.**
   (இதில் எஸ்கியா என்பது எசேக்கியா ராஜாவை குறிப்பதாக வேத வல்லுநர்கள் கூறுகின்றனர்).
   இதிலிருந்து செப்பனியா ராஜ குடும்பத்தை சேர்ந்தவர் என்பது தெரிகிறது.
2. செப்பனியா எருசலேமில் வாழ்ந்தவர்.
   செப் 1 : 6 "**இவ்விடத்திலே**" என்று அவர் **எருசலேமில்** இருப்பதால் கூறுகிறார்.
3. இவர் **எரேமியா** மற்றும் **ஆபகூக்** தீர்க்கதரிசிகளின் காலத்தில் வாழ்ந்தவர்.
4. இவருடைய தீர்க்கதரிசனத்தில் **பரிசுத்தமாகுதலுக்கான அழைப்பு** யூதா ஜனங்களின் மத்தியில் புறமாற்றங்கள் சிலவற்றை கொண்டு வந்தன.
   ஆனால் அந்தரங்கமான மாற்றத்தை கொணடு வரவில்லை என்பதை எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகத்தில் இருந்து அறிந்து கொள்ள முடிகிறது.
5. **கர்த்தரின் பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறது. அப்போது பாவமும், சீர்கேடும் கடுமையாக தண்டிக்கப்படும்** என்று கடுமையான தீர்க்கதரிசனம் இவர் உரைத்ததைப் பார்க்க முடிகிறது.
6. இவர் அரசு குடும்பத்தை சேர்ந்தவர் என்பதால் இவருடைய ஆலோசனையினால் யோசியா ராஜா தேசத்தில் சீர்திருத்தலை கொண்டு வந்தார் என்று வேத வல்லுநர்கள் யூகிக்கின்றனர்.

இதை படிக்கும் முறை

2 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. கர்த்தருடைய நாளின் நியாயத்தீர்ப்பு

   (1 அதிகாரம் முதல் 3 : 8 வரை)

2. கர்த்தருடைய நாளின் இரட்சிப்பு (3 : 9 - 20)

அதிகாரம் - 1

1. முகவுரை (1)
2. முழு உலகிற்கும் வரும் நியாயத்தீர்ப்பு (2, 3)
3. யூதாவின் பலவகை பாவங்களுக்கு எதிராக தேவனின் கடினமான நியாயத்தீர்ப்பு உரைக்கப்படுகிறது (4 - 18)

அதிகாரம் - 2

1. மனந்திரும்பி தேவனிடம் வர அறிவுரை (1 - 3)
2. பெலிஸ்தியா, மோவாபியா, எத்தியோப்பியாவிற்கு வரும் நியாயாத்தீர்ப்புகள். (4 - 15)

அதிகாரம் -3

1. எருசலேம் அதிபதிகள் கண்டிக்கப்படுகின்றனர். (1 - 7)
2. இஸ்ரயேலின் திரும்பக் கட்டப்படுதலுக்காக காத்திருக்க அறிவுரை (8 - 20)



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 41

யோயேல் JOEL



எபிரேய வார்த்தை - யோஏல் (Yo 'el)

இதன் அர்த்தம் - கர்த்தரே தேவன்

எழுதியவர் - யோயேல் தீர்க்கதரிசி

வேதத்தின் 29-வது புத்தகம்

மொத்த அதிகாரங்கள் - 3

மொத்த வசனங்கள் - 73

இவர் வாழ்ந்த காலம்

எந்த ராஜாவின் நாட்களில் வாழ்ந்தார் என்று குறிப்பிடப்படவில்லை. இவர் வாழ்ந்த காலத்தை குறித்து இரண்டு வித கருத்துக்கள் கூறப்படுகிறது.

1. எலியா, எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் இவர் யூதாவில் வாழ்ந்திருக்க வேண்டும்.
2. ஆமோஸ் நாட்களில் வாழ்ந்தவர்.

என்ற இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன.

ஆமோஸ் தீர்க்கதரிசியின் சம காலத்தில் யோயேல் வாழ்ந்தவர் என்பதற்கான ஒப்பீடுகள். யோயேலும், ஆமோஸ் தீர்க்கதரிசியும் (ஏசாயா, மீகா போல) ஒன்று போல் தீர்க்கதரிசனம் சொல்லியிருப்பதைப் பார்க்க முடிகிறது.

1. யோயேல் 3 - 16

கர்த்தர் சீயோனிலிருந்து கெர்சித்து, எருசலேமிலிருந்து சத்தமிடுவார், வானமும் பூமியும் அதிரும் ஆனாலும் கர்த்தர் தமது ஜனத்துக்கு அடைக்கலமும் இஸ்ரயேல் புத்திரருக்கு அரணான கோட்டையுமாயிருப்பார்.

ஆமோஸ் 1 - 2

கர்த்தர் சீயோனிலிருந்து கெர்சித்து,

எருசலேமிலி!ருந்து சத்தமிடுவார்.

2. யோயேல் 3 - 18

அக்காலத்தில் **பர்வதங்கள் திராட்சை ரசத்தைப் பொழியும்**

மலைகள் பாலாய் ஓடும்....

ஆமோஸ் 9 – 13

....**பர்வதங்கள் திராட்சை ரசமாய் வடிகிறதும்**

மேடுகள் எல்லாம் கரைகிறதுமான.....

இது போன்ற ஒரே மாதிரியான வார்த்தைகளை இரண்டு புத்தகத்திலும் பார்க்க முடிகிறது.

யாருக்கு எழுதினார்?

தெற்கு நாட்டு யூதாமக்களுக்கும், உலகமெங்குமுள்ள தேவ மக்களுக்கும்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. **கர்த்தரின் பெரிதும், பயங்கரமுமான நாள் வரப்போகிறது** என்பதே யோயேலின் முக்கிய செய்தி.

2. புதிய ஏற்பாட்டில் பெந்தே கோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியை பெற்ற பிறகு **அப்போஸ்தலர் பேதுரு பேசிய முதல் பிரசங்கத்தில்.** இந்த யோயேல் தீர்க்கதரிசன புத்தகத்தில் உள்ள தீர்க்கதரிசன வார்த்தைகளை ஒப்பிட்டு பேசியது இதன் மிகப்பெரிய சிறப்பு ஆகும்.

   யோயேல் 2 : 28 - 32 ⟶ அப் 2 : 14 – 21

   இதன் மூலம் அன்று 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர் என்று பார்க்கிறோம். (அப் 2 : 41)

3. அப் பவுலும் கூட **தேவனுடைய இரட்சிப்பு புறஜாதிகளுக்கும் இருக்கிறது** என்பதை கூற யோயேல் புத்தகத்தின் வசனங்களை மேற்கோள் காட்டுவதைப் பார்க்க முடிகிறது. (ரோமர் 10 : 13)

   புறஜாதிகளுக்கும் (மாம்சனமான யாவர் மேலும்) **தேவனுடைய இரட்சிப்பு, அவருடைய ஆவியின் வழி நடத்துதல்** வரும் என்பதை யோயேல் தீர்க்க தரிசனமாக சொல்லியிருக்கிறார் என்பது இதன் மிகப்பெரிய சிறப்பு ஆகும்.

   தேவன் தமது ஆவியை ஊற்றும்போது ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் மட்டுமல்லாது, **சாதாரண மக்களாகிய அனைவரின் மேலும்** ஊற்றுவார் என்று யோயேல் தெளிவுப்படுத்துகிறார்.

4. வரப்போகிற ராஜ்யத்துக்குரிய காரியங்களையும் தீர்க்கதரிசனமாக **கர்த்தருடைய நாள்** என்று இதில் சொல்லியிருக்கதைப் பார்க்க முடிகிறது.

5. இந்த புத்தகம் முழுவதும் **வெட்டுக்கிளி உபத்திரவம் கொள்ளை நோய்கள், பஞ்சம், தீக்கிரையாதல், படையெடுப்புகள், வானத்திலிருந்து வரும் ஆபத்துக்கள்** என்று உபத்திரவங்கள் குறித்ததான காரியங்களை யோயேல் சொல்லியிருந்தாலும்,

நம்பிக்கையூட்டும் செய்திகளும் இந்த புத்தகத்தில் காணப்படுகின்றன.

யோயேல்	2	:	12 - 14
	2	:	18, 19
	2	:	21 - 27
	3	:	16 – 18

6. இதில் சொல்லப்பட்ட வெட்டுகிளி மூலம் வரும் உபத்திரவம் நியாயப்பிரமானத்தில் தேவ ஜனங்கள் தேவனைவிட்டு விலகும் போது தான் கொடுக்கும் தண்டனை என்பதை முன்பே தேவன் சொல்லியிருப்பதையும் நாம் பார்க்கிறோம். (உபா 28 : 38 – 39)

ஆசிரியர் (யோயேல்) குறித்து

1. வேதத்தில் சுமார் **14 பேர் யோயேல் என்ற பெயரில் இருக்கிறார்கள்.** அதில் ஒருவர் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தை எழுதிய தீர்க்கதரிசி யோயேல் ஆவார்.
2. இந்த புத்தகத்தில் எருசலேம் தேவாலயத்தை குறித்து அடிக்கடி கூறுவதால் இவர் **யூதாவில் வாழ்ந்தவர்** என்று கருதப்படுகிறது.
3. ஆசாரியத்துவத்தை குறித்து இவர் தெளிவாக தீர்க்கதரிசனத்தில் சொல்வதால் இவர் **ஒரு ஆசாரியராகவும், தீர்க்கதரிசியாகவும்** இருந்திருக்கலாம் என்று வேத வரலாற்று ஆசிரியர்கள் யூகிக்கின்றனர்.
4. இந்த புத்தகத்தில் **தெளிவாக, சுருக்கமாக, எளிய நடையில்** மக்களை மனந்திரும்புதலுக்கு இவர் அழைப்பதைப் பார்க்க முடிகிறது.

இதை படிக்கும் முறை

இதை 3 பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. யூதாவின் நிகழ்கால அலங்கோலம் (1 அதிகாரம்)
2. யூதாவின் மேல் வரும் நியாயத்தீர்ப்பு (2 : 1 - 17)
3. எதிர்காலத்தில் வரப்போகிற கர்த்தருடைய நாள் (யூதாவின் திருப்பமும், இறுதி நியாயத்தீர்ப்பு) (2 : 18 - 3 : 21)

அதிகாரம் - 1

1. முகவுரை (1)
2. வெட்டுகிளிகள் விளைச்சலை அழிக்கும் (2 - 4)
3. வெட்டுகிளிகளின் வருகை (5 - 7)
4. யூதா ஜனங்களை புலம்ப, மனந்திரும்ப அறிவுரை (8 - 13)
5. யூதாவின் வறட்சியான நிலை (14 - 20)

அதிகாரம் -2

1. வரப்போகிற கர்த்தருடைய நாள் (1 - 11)
2. ஜனங்களை மனந்திரும்பும்படி யோயேல் கூறுகிறார். (12 - 17)
3. முந்தைய நிலைக்கு தேசம் கொண்டுவரப்படும் (18, 20)
4. தேசம் புதிதாக்கப்படும் (21 - 27)
5. யாவருக்கும் தேவன் தமது ஆவியை கொடுப்பார் என்பதை குறித்த தீர்க்கதரிசனம் (28 - 32)

அதிகாரம் - 3

1. யூதாவை பகைக்கிறவர்கள் மேல் வரும் நியாயத்தீர்ப்பு (1 - 8)
2. யுத்தத்திற்கு ஆயத்தப்படும் படி அறிவுரை (9 - 17)
3. தமது ஜனங்களை தேவன் ஆசிர்வதிக்கிறார். (18 - 21)



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 42

ஆபகூக் (HABAKKUK)

எபிரேய வார்த்தை - ஹவகூக் (Havakuk)

(இது அபக் என்ற சொல்லில் இருந்து வந்தது).

இதன் அர்ததம் - கட்டிப்பிடிப்பவர் அல்லது இறுகப்பற்றுபவர்

எழுதியவர் - ஆபகூக் தீர்க்கதரிசி (1 : 1)

- வேதத்தின் 35-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 3
- மொத்த வசனங்கள் - 56

ஆபகூக் வாழ்ந்த காலம்

ஆபகூக் தீர்க்கதரிசி வாழ்ந்த காலம் நேரிடையாக வேதத்தில் சொல்லப்படவில்லை. இவருடைய தீர்க்கதரிசனத்தில் பார்க்கும் போது பாபிலோனிய படையெடுப்பை குறித்து தீர்க்கதரிசனமாக சொல்வதைப் பார்க்கிறோம்.

ஆபகூக் 1 : 6

இதோ நான் கல்தேய ரென்னும் கொடிதும் வேகமுமான ஜாதியாரை எழுப்புவேன்; அவர்கள் தங்களுடைய தல்லாத வாசஸ்தலங்களைக் கட்டிக்கொள்ள தேசத்தின் விசாலங்களில் நடந்து வருவார்கள்.

இந்த தீர்க்கதரிசன வசனத்திலிருந்து பாபிலோனியர் யூதாவின் மீது படையெடுத்து வருவதற்கு முன்பு ஆபகூக் தீர்க்கதரிசனம் சொல்லியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

யூதாவை ஆண்ட **யோயாக்கீம்** ராஜாவின் ஆட்சிகாலத்தில் இவர் வாழ்ந்திருக்க வேண்டும் என்று யூகிக்கப்படுகிறது.

யாருக்கு எழுதினார்?

யூதாவில் வாழ்ந்த ஜனங்களுக்கும், எங்குமுள்ள தேவ மக்களுக்கும்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. **“இரட்சிப்பு“** என்ற சொல் **மூன்று தடவை** இந்த புத்தகத்தில் வருகிறது.

   ஆபகூக் 3 13

   உமது ஜனத்தின் இரட்சிப்புக்காகவும், நீர் அபிஷேகம் பண்ணுவித்தவனின் இரட்சிப்புக்காகவும் நீர் புறப்பட்டீர்.

   ஆபகூக் 3 : 18

   .. என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூறுவேன்.

2. ராஜ்ஜியத்தில் முழு மனுக்குலமும் தேவனை அறிந்து கொள்வார்கள் என்பதை குறித்து இவர் தீர்க்கதரிசனமாக சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம்.

   ஆபகூக் 2 : 14

   சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல் பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்

3. புதிய ஏற்பாட்டில் பவுல் அப்போஸ்தலன் கூறும் முக்கியமான வசனமான “**விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்**” (ரோமர் 1 : 17) என்ற வார்த்தை இங்கிருந்தே எடுத்து சொல்லப்பட்டுள்ளது.

   ஆபகூக் 2 : 4

   …தன் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்.

   இந்த வசனம்தான் **மார்ட்டின் லுத்தர்** காலத்தில் அவருக்குள் மிகப்பெரிய காரணமாக அமைந்தது.

4. இந்த புத்தகத்தின் கடைசி இரண்டு வசனங்கள் இந்த புத்தகத்திற்கு அமைந்த மிக்பெரிய சிறப்பாகும்.

   ஆபகூக் 3 : 17 - 18

   அத்திமரம் துளிர்விடாமற் போனாலும், திராட்சை செடிகளில் பழம் உண்டாகமற் போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும் வயல்கள் தானியத்தை விளைவியாமற் போனாலும், கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனாலும் தொழுவத்திலே மாடு இல்லாமற் போனாலும்.

   நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களி கூறுவேன்.

5. ஆபகூக் 3-ம் அதிகாரம் ஒரு “**ஜெபப்பாடல்**” போல் இருப்பது இதன் சிறப்பு ஆகும்.

6. குற்றச்சாட்டிலும், சந்தேகத்திலும் கேள்வியிலும் தொடங்கிய ஆபகூக்கின் தீர்க்கதரிசனம் (1 : 2 - 3) (2 : 13)

   முடிவில் உறுதியிலும், நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் முற்றுப் பெறுவது இதன் சிறப்பு ஆகும். (ஆபகூக் 3 : 17 - 19)

7. ஆபகூக் 2 : 2 வசனம் வேத மாணவர்கள் மத்தியில் மிகவும் சிறப்பு வாய்ந்த வசனமாகும்.

   நீ தரிசனத்தை எழுதி, அதைக் கடந்தோடுகிறவன் வாசிக்கும்படிப் பலகைகளிலே தீர்க்கமாக வரை.



ஆசிரியர் (ஆபகூக்)குறித்து

1. ஆபகூக் தீர்க்கதரிசியின் தொழில் தீர்க்கதரிசன முறைத்தல் என்பது போல் வேதம் கூறுகிறது.

   1 : 1 தீர்க்கதரிசனமாய் கண்ட பாரம்

   3 : 1 ஆபகூக் தீர்க்கதரிசி

2. இவர் ஒரு **பாடகர்** என்பதை ஆபகூக் 3:19 கூறுவதோடு இவர் எருசலேம் தேவாலயத்தில் ஆராதனையுடன் தொடர்புடைய ஒரு **ஆசாரியராய்** இருந்திருக்கலாம் என்பது யூகிக்கப்படுகிறது.

ஆபகூக் 3 : 19

...... இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் இராகத்தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்.

3. யூதா பாபிலோனால் சிறைபிடிக்கப்படுவதற்கு முன் கடைசி நாட்களில் இவர் தீர்க்கதரிசியாக எழும்புகிறார்.

4. அநேக எச்சரிப்புகள் தேவன் கொடுத்து வந்தும் யூதா ஜனங்கள் மிகவும் தவறான காரியங்களை, வழிமுறைகளை பின்பற்றி வந்ததால் ***இது எதுவரைக்கும் தொடரும்*** என்று இவர் கேள்வி எழும்புகிறார்.

ஆபகூக் 1 : 2

கர்த்தாவே, நான் எதுவரைக்கும்
உம்மை நோக்கி கூப்பிடுவேன்,
நீர் கேளாமலிருக்கிறீரே,
கொடுமையினிமித்தம்
நான் எதுவரைக்கும் உம்மை நோக்கி கூப்பிடுவேன்,
நீர் இரட்சியாமலிருக்கிறீரே.

ஆபகூக் 1 : 13

தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே, அநியாயத்தை
நோக்கிக் கொண்டிருக்க மாட்டீரே, பின்னை துரோகிகளை
நீர் நோக்கி கொண்டிருக்கிறதென்ன? துன்மார்க்கன்
தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும்போது
நீர் மௌனமாயிருக்கிறதென்ன?

5. பாபிலோனியர் வந்து தேசத்தை கைப்பற்றுவார்கள் என்று தேவன் சொன்னபோது இவர் தேவனிடம் மன்றாடுவதைப் பார்க்கிறோம்.

ஆபகூக் 3 : 2

கர்த்தாவே நீர் வெளிப்படுத்தினதை நான் கேட்டேன், எனக்கு பயமுண்டாயிற்று, கர்த்தாவே, வருஷங்களின் நடுவிலே உம்முடைய கிரியையை உயிர்ப்பியும், வருஷங்களின் நடுவிலே அதை விளங்கப்பண்ணும் கோபித்தாலும் இரக்கத்தை நினைத்தருளும்.

6. தேவனுடைய திட்டங்கள் முழுமையாக புரியாவிட்டாலும் அவரது தனித்துவமிக்க ஞானத்தை புகழ்ந்து துதிப்பாடுகிறார். ஆபகூக் 3 : 3 - 6

இதை படிக்கும் முறை

இந்த புத்தகத்தை இருபகுதிகளாக பிரிக்கலாம்.

1. ஆபகூக் தேவனுக்கு முன்பாக எழுப்பும் கேள்விகளும், அதற்கு தேவன் அளிக்கும் பதில்களும் (1, 2 அதிகாரங்கள்)
2. தேவனின் பதில்களுக்கு ஆபகூக்கின் நன்றிப்பாடல் (3 அதிகாரம்)

I ஆபகூக்கின் கேள்விகளும், தேவனின் பதில்களும் (1, 2 அதிகாரங்கள்)

1. ஆபகூக்கின் முதல் கேள்வி (1 : 1 - 4)
2. தேவன் அளித்த பதில் (1 : 5 - 11)
3. ஆபகூக்கின் இரண்டாவது கேள்வி (1 : 12 முதல் 2 : 1 வரை)
4. தேவன் அளித்த பதில் (2 : 2 - 20)

II ஆபகூக்கின் நன்றிப்பாடல்

1. தேவனின் கருணைக்காக தீர்க்கதரிசி ஜெபிக்கிறார் (3 : 1 - 2)
2. தேவனின் கருணையை நினைத்தும் பார்க்கிறார் (3 : 3 - 15)
3. தேவனின் இரட்சிப்பில் சார்ந்து கொள்ளல் (3 : 16 - 19)

அதிகாரம் - 1

1. தேசத்தின் பதட்ட நிலைப்பற்றி ஆபகூக் குறை கூறுகிறார் (1 - 4)
2. கல்தேய படையால் பெரும் ஆபத்து வருமென்று தேவன் வெளிப்படுத்துகிறார். (5 - 17)

அதிகாரம் - 2

1. பதிலுக்காக காத்திருக்கும் ஆபகூக்கிடம் விசுவாசத்துடன் காத்திருக்கும்படி தேவன் கூறுகிறார். (2 : 1 - 4)
2. கல்தேயரின் பாவங்களால் அவர்களுக்கு வரும் நியாயத்தீர்வு (5 - 20)

அதிகாரம் - 3

1. ஆபகூக்கின் ஜெபம் (1 - 2)
2. தமது மக்களை விடுவிப்பதில் விளங்கும் தேவமகிமை (3 - 16)
3. தீர்க்கதரிசியின் விசுவாச உறுதி (17 - 19)

"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 43

ஒபதியா (OBADIAH)

எபிரேய வார்த்தை - ஒபத்யாஹ் (Ovadyah)

இதன் அர்த்தம் - கர்த்தரின் அடிமை (or) கர்த்தரை சேவிப்பவர்

எழுதியவர் - ஒபதியா



- வேதாகமத்தின் 31-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 1
- மொத்த வசனங்கள் - 21

யாருக்கு எழுதினார்?

ஒபதியா 1 - 1

ஒபதியாவின் தரிசனம் கர்த்தராகிய ஆண்டவர்

ஏதோமைக் குறித்து சொல்லுகிறது என்னவென்றால்

ஏதோமியருக்கும், யூதமக்களுக்கும், எங்குமுள்ள தேவபிள்ளைகளுக்கும் இதை எழுதியுள்ளார்.

யார் இந்த ஏதோமியர்?

ஏசாவின் சந்ததியினர்.

ஏசா

ஏசா, யாக்கோபு - ஈசாக்கின் புதல்வர்கள்.

ஏசாவின் இன்னொரு பெயர் ஏதோம்.

ஏதோம் என்றால் சிவப்பு என்று பொருள்.

ஏசாவிற்கும், சிவப்பு நிறத்திற்கும் அநேக ஒற்றுமைள் உண்டு.

1. ஏசா உடல் நிறம் சிவப்பு (ஆதி 25 : 25)
2. ஏசா சேஷ்ட புத்திரபாகத்தை விற்று குடித்த கூழ், சிவப்பு பயிற்றங்கூழ் (ஆதி 25 : 30)
3. இவர் வாழ்ந்த இடம் சிவப்பு பாறைகள் இருந்த இடம் (ஆதி 36 : 1)

இந்த ஏசாவின் சந்ததியினர் (ஏதோமியர்) யாக்கோபின் சந்ததியான இஸ்ரயேலருக்கு நெருக்கமான உறவு என்பதால் இவர்களுக்கு உதவி செய்ய கூடியவர்களாக இருந்திருக்க வேண்டும். ஆனால் இவர்கள் இஸ்ரயேலரை எதிரிகளாகவே பார்த்தனர்.

1. இஸ்ரயேலர் எகிப்திலிருந்து வரும் போது கானான் செல்வதற்கு தங்கள் தேசத்தின் வழியில் செல்ல அனுமதிக்கவில்லை.
2. ராஜாக்களின் நாட்களில் ஏதோமியருக்கும், இஸ்ரயேலருக்கும் யுத்தம் நடந்து கொண்டு இருந்தது.
3. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சார் எருசலேமின் மீது படையெடுத்த போது இந்த ஏதோமியர் அவர்களுக்கு உதவி செய்தனர். (சங்க 137 : 7)
4. இஸ்ரயேலருக்கு விரோதமாகவே இந்த ஏதோமியர் எப்போதும் இருந்திருக்கின்றனர்.

எனவே இந்த ஏதோமியருக்கு வரப்போகின்ற நியாயத்தீர்ப்பை குறித்து ஒபதியா தீர்க்கதரிசனமாக இந்த புத்தகத்தில் கூறுகிறார்.

ஒபதியா தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

ஒபதியா தீர்க் தரிசி எந்த காலத்தில் வாழ்ந்தவர் என்ற குறிப்புகள் எதுவும் இல்லை. ஒபதியா 10 முதல் 14 வசனங்களைப் பார்க்கும் போது ஒபதியா 10 முதல் 14 வசனங்கள்.

10. நீ உன் சகோதரனாகிய யாக்கோபுக்கு செய்த கொடுமையினிமித்தம் வெட்கம் உன்னை மூடும். நீ முற்றிலும் சங்கரிக்கப்பட்டு போவாய்.

11. நீ எதிர்த்து நின்ற நாளிலும் அந்நியர் அவன் சேனையைச் சிறை பிடித்து போன நாளிலும், மறு தேசத்தார் அவன் வாசல்களுக்குள் பிரவேசித்து எருசலேமின் பேரில் சீட்டுப்போட்ட காலத்தில், நீயும் அவர்களில் ஒருவனைப்போல் இருந்தாய்.

12.உன் சகோதரன் அந்நியர் வசமான நாளாகிய அவனுடைய நாளை நீ பிரியத்தோடே பாராமலும், யூதா புத்திரருடைய அழிவின் நாளிலே அவர்கள் நிமித்தம் சந்தோஷப்படாமலும் அவர்கள் நெருக்கப்படுகிற நாளிலே நீ பெருமையாய்ப் பேசாமலும் இருக்க வேண்டியதாயிருந்தது.

13.என் ஜனத்தின் ஆபத்து நாளிலே நீ அவர்கள் வாசல்களுக்குள் பிரவேசியாமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் அனுபவிக்கிற தீங்கை நீ பிரியத்தோடே பாராமலும், அவர்கள் ஆபத்து நாளிலே அவர்கள் ஆஸ்தியில் கைபோடாமலும்.

14. அவர்களில் தப்பினவர்களைச் சங்கரிக்கும்படி வழி சந்திகளிலே நிற்காமலும், இக்கட்டு நாளில் அவர்களில் மீதியானவர்களைக் காட்டி கொடுக்காமலும் இருக்க வேண்டியதாயிருந்தது.

இந்த வசனங்களில் பார்க்கும் போது,

ஏதோம் தேசம் இஸ்ரயேலருக்கு கொடுமை செய்துள்ளது.
அதனிமித்தம் ஏதோம் தேசத்திற்கு வெட்கம் வரும்,
சங்கரிக்கப்படும் என்று பார்க்கிறோம்.

ஏதோம் தேசம் செய்த கொடுமை என்ன?

இஸ்ரயேலரை அந்நியர் சிறைபிடித்தபோது ஏதோம் தேசத்தார்.

1. அதை பிரியத்தோடு பார்த்தனர்.
2. சந்தோஷப்பட்டார்கள்.
3. பெருமை பேசினார்கள்.
4. அவர்கள் பொருட்களை கொள்ளையடித்தார்கள்.
5. இஸ்ரயேலில் தப்பினவர்களை சங்கரிக்கும்படி வழி சந்துகளில் பதிவிருந்தார்கள்.
6. இஸ்ரயேலில் மீதியானவர்களை காட்டி கொடுத்தார்கள்.

இது எப்போது நடந்தது?

யூத ஜனங்கள் அந்நியரால் சிறைபிடிக்கப்பட்டது இரண்டு தடவை நடந்தது.

1. II நாளா 21 : 16 - 17

   இது பெலிஸ்தியர் யூதா தேசத்தின் மீது நடத்திய சிறைபிடிப்பு
2. பாபிலோன் ராஜாவின் சிறைபிடிப்பு. (II இராஜா 25 அதிகாரம்)

   இது கடைசியாக நடந்தது. இதில் எதை ஒபதியா குறிப்பிடுகிறார்?.

   இங்கு ஒபதியாவில் பாபிலோனியர், கல்தேயர் என்ற குறிப்புகளோ, தேவனுடைய ஆலயத்தின் அழிவை குறித்தோ எந்த குறிப்புகளும் இல்லாததினால், இது யூதாவின் ராஜாவாகிய யோராம் (5-வது ராஜா) நாட்களில் பெலிஸ்தியர் யூதா தேசத்தின் மீது நடத்திய சிறைபிடிப்பாக இருக்கலாம் என்று கருதுகின்றனர்.

இதிலிருந்து ஒபதியா யோராம் ராஜாவின் காலத்தில் வாழ்ந்த தீர்க்கதரிசி என்று யூகிக்கப்படுகிறது.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் **21 வசனம் மட்டுமே கொண்ட மிகச் சிறிய புத்தகம்.**
2. தீர்க்கதரிசன புத்தகங்கள் அதிகமாக இஸ்ரயேல், யூதா தேசத்தை குறித்தே தீர்க்கதரிசிகள் மூலமாக தீர்க்கதரிசனங்கள் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த புத்தகம் **ஏசாவின் சந்ததியாகிய ஏதோமியருக்கு** தீர்க்கதரிசனம் சொல்லியிருப்பது இதன் சிறப்பு ஆகும்.
3. இந்த புத்தகம் மூல பாஷையில் **கவிதை பாணியில்** எழுதப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.
4. 21 வசனங்கள் கொண்ட சிறிய புத்தகம். எனவே இதை **படித்து புரிந்து கொள்வது எளிது.**
5. இது சிறிய புத்தகமாக இருந்தாலும் நியாயத்தீர்ப்பை குறித்த **அழுத்தமான செய்தியை** பதிவு செய்துள்ளது.
6. **ராஜியத்தில் நடக்கும் காரியங்களை** கடைசி வசனத்தில் (21) சொல்லப்பட்டு இருக்கிறது.
7. **ஏரேமியா 49-ம் அதிகாரத்தில்** ஏதோமை குறித்து சொல்லப்பட்டதற்கும், இதற்கும் தொடர்பு இருப்பது இதன் சிறப்பு ஆகும்.
8. தேவன் **ஏதோமியரின் பெருமைக்கு பதில் செய்து, இஸ்ரயேலை மீட்பார்** என்பது இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

ஆசிரியர் (ஒபதியா) குறித்து

1. அறியப்படாத தீர்க்க தரிசிகளில் ஒருவர். இவர் தந்தை பெயர், ஊர்பெயர் எதுவும் குறிப்பிடப்படவில்லை.
2. பழைய ஏற்பாட்டில் ஒபதியா என்ற பெயர் கொண்ட 13 பேர் இருக்கின்றனர்.

இதை படிக்கும் முறை

இதை இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. ஏதோமிற்கு வரும் நியாயத்தீர்ப்பு (1 -14)
2. இஸ்ரயேலின் மீட்பு (அ) கர்த்தருடைய நாளில் நடப்பது (15 - 21)

இஸ்ரயேல் - ஏதோம் வரலாறு

1. இஸ்ரயேல் - யாக்கோபின் மறுபெயர்
   ஏதோம் - ஏசாவின் மறுபெயர்
2. ஏசா, யாக்கோபு - ஈசாக்கு, ரெபேக்காளின் புதல்வர்கள்.
3. இருவரும் தாய் வயிற்றில் இருக்கும் போதே போராடினார்கள். (ஆதி 25 : 19 - 26)
4. ஏசாவின் சேஷ்ட புத்திரபாகம் மற்றும் ஆசீர்வாதம் யாக்கோபுக்கு சென்றது. (ஆதி 28 : 29 - 34)
5. ஏசா இருந்த பகுதி ஏதோம் தேசம் ஆனது. இதன் தலை நகர் சேலா.
6. இஸ்ரயேலர் கானான் செல்லும்போது தங்கள் தேசத்தின் வழியாய் செல்ல எதோமியர் அனுமதிக்கவில்லை (எண். 20 : 14 - 22)
7. இஸ்ரயேல் தேசம் உருவான பிறகு இஸ்ரயேல் ராஜாக்கள் ஏதோமுடன் தொடர்ந்து போர் செய்து வந்தனர்.
   1. சவுல் I சாமு 14 : 47
   2. தாவீது II சாமு 8 : 13 - 14
   3. சாலமோன் I இராஜா 11 : 14 - 22
   4. யோராம் II இராஜா 8 : 20 - 22
   5. ஆகாஸ் II நாளா 28 : 16

8. நேபுகாத்நேச்சார் யூதாவை சிறைபிடித்து எருசலேமை அழித்தபிறகு **5 ஆண்டுகளுக்கு பிறகு** ஏதோமையும் வெற்றி கொண்டார் எனறு வரலாறு கூறுகிறது.
9. **மக்கபேயரின் காலத்தில்** ஏதோம் மீண்டும் வலிமை பெற்றது.
10. கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் காலத்தில் **யூதாவில் ஆளுநராயிருந்த ஏரோது** ஓர் ஏதோமியர் ஆவார்.
11. கி.பி. 70-ல் **டைட்டஸ் ராஜாவின்** காலத்தில் முற்றிலுமாக ஏதோம் அழிக்கப்பட்டது.

மத்திய
தரைக்கடல்
இஸ்ரயேல்
அம்மோன்
எருசலேம்
சவக்கடல்
பெலிஸ்தியா
மோவாப்
இதுமேயா
ஏதோம்


மோவாப்
சாக்கடல்
சேரெத் பள்ளத்தாக்கு
சீன் பாலைவனம்
ஓர் மலை
பஸ்ரா
காதேஸ் - பர்னேயா
அராபா
ஏதோம்
பெட்ரா
தேமான்
அரேபிய பாலைவனம்
ஏதோம்
நாடு
எசியோன் கேபேர்
ஏலாத்
அக்குவாபா வளைகுடா

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 44

யோனா (JONAH)

எபிரேய வார்த்தை - யோனாஹ் (Yonah)

இதன் அர்த்தம் - புறா

எழுதியவர் - யோனா தீர்க்கதரிசி (யோனா 1 : 1, 2)

- ❖ வேதாகத்தின் 32-வது புத்தகம்
- ❖ மொத்த அதிகாரங்கள் - 4
- ❖ மொத்த வசனங்கள் - 48

யோனா தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

II இராஜா 14:25 -வது வசனத்தின்படி பார்க்கும் போது யோனா தீர்க்கதரிசி இஸ்ரயேலின் 13-வது ராஜாவான இரண்டாம் யெரோபெயாம் நாட்களில் வாழ்ந்திருக்கிறார் என்று அறிந்து கொள்ள முடிகிறது.

யாருக்கு எழுதினார் ?

இஸ்ரயேலுக்கும், உலகமெங்குமுள்ள தேவமக்களுக்கும்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. அசீரியாவின் தலைநகரான நினிவே-க்கு (புற ஜாதி நாடு) தீர்க்கதரிசனம் உரைக்க யோனா அனுப்பபடுவதை இந்த புத்தகம் கூறுகிறது.
2. யோனாவை தேவன் நினிவே பட்டணத்திற்கு அனுப்பும்போது அவர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாமல் தர்சு பட்டணத்திற்கு போவதற்காக யோப்பாவுக்கு போய் கப்பல் ஏறுவதும், கப்பல் கடல் கொந்தளிப்பில் மாட்டியபோது அதிலிருந்து தப்ப கப்பலில் இருந்தவர்கள் அவரை கடலில் தூக்கி எறிகின்றனர். அங்கு யோனாவை பாதுகாக்க ஒரு பெரிய மீனை தேவன் ஏற்படுத்துகிறார். அந்த பெரிய

மீன் யோனாவை விழுங்குகிறது. அதன் வயிற்றில் இருந்து கொண்டு யோனா தேவனிடம் வேண்டுகிறார். தேவன் மீனுக்கு கட்டளை கொடுக்க மீன் யோனாவை கரையில் கக்கிவிடுகிறது.

இப்போது தேவனுடைய கட்டளைக்கு கீழ்படிந்து யோனா நினிவே-க்கு சென்று

“இன்னும் 40 நாள் உண்டு அப்போது நினிவே கவிழ்க்கப்பட்டு போகும்”

என்று பிரசங்கம் செய்கிறார்.

இதனிமித்தம் நினிவே பட்டணத்தில் மிகப்பெரிய மனந்திரும்புதல் வருகிறது. அழிக்கிறேன் என்று சொன்ன தேவன் அவர்கள் மனந்திரும்புதலை கண்டு மனஸ்தாபப்பட்டு அழிக்காமல் விட்டு விடுகிறார். இதுதான் இந்த புத்தகத்தின் சுருக்கம்.

3. இந்த புத்தகம் ஒரு கதை வடிவில் மிக சிறிய புத்தகமாக இருப்பதால் அநேகருக்கு இந்த புத்தகம் மிகவும் எளிதாக புரிந்து கொள்ள கூடியதாகவும், சிறுபிள்ளைகள் கூட ஞாயிறு பள்ளிகளில் அறிந்து கொண்ட ஒரு சம்பவமாகவும் இருக்கிறது.
4. இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் இந்த புத்தகத்தில் சம்பவங்கள் இடம் பெற்று இருப்பது இதன் தனி சிறப்பு ஆகும்.
5. புறஜாதிகளுக்கும் தேவனுடைய ஆசிர்வாதம், மன்னிப்பு உண்டு என்பதை புதிய ஏற்பாட்டில் தான் பார்க்கிறோம். ஆனால் பழைய ஏற்பாட்டில் அசீரியர்கள் மனந்திரும்பியபோது தேவன் அவர்களை மன்னித்தது ஒரு நிழலாக இருப்பதை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
6. தேவனுடைய கருணையும், அன்பும் மிக அழுத்தமாக இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைப் பார்க்க முடிகிறது.
7. யோனா தீர்க்கதரிசியை குறித்து புதிய ஏற்பாட்டில் கர்த்தர் இயேசு பேசியிருப்பது இதன் சிறப்பு ஆகும். (மத் 12 : 39 - 41)

ஆசிரியர் (யோனா) குறித்து

1. தன்னுடைய ஊழியம், தான் செய்த தவறு எதையும் மறைக்காமல் தன் சொந்த அனுபவத்தை அப்படியே யோனா தீர்க்கதரிசி எழுதியிருப்பது இவருடைய அருமையான குணலட்சணத்தை வெளிப்படுத்துகிறது.
2. தேவன் எவ்வளவு கருணை, அன்பு நிறைந்தவர் என்பதை யோனா 4 : 10, 11 வசனங்களில் யோனா தீர்க்கதரிசி குறிப்பிடுவதன் மூலம் அறிந்து கொள்கிறோம்.
3. அசீரியா இஸ்ரயேலின் பெரும் எதிரி நாடு ஆகும். இதற்கு தீர்க்கதரிசனம் சொல்ல தேவன் யோனாவை அனுப்பும்போது இவர் அங்கு செல்லாமல் தர்சு பட்டணத்திற்கு புறப்பட்டது. இவருக்கு தன் நாட்டின் மீது (இஸ்ரயேல்) இருந்த பற்றை (நாட்டுப்பற்று) இது காட்டுகிறது.

4. அசீரியா தேசம் இஸ்ரயேலின் பகைநாடாக இருந்தபடியாலும், அங்கு இருந்த அசீரிய ஜனங்கள் கொடுரமானவர்களாகவும், கொலை செய்ய அஞ்சாதவர்களாகவும் இருந்தப்படியால் அது நாசமடைய வேண்டும் என்று யோனா விரும்பினார். ஆனால் தேவ அன்பு வெளிப்பட்ட போது அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை.
5. ஒரே பிரசங்கம்! ஒரு தேசமே மனந்திரும்புகிறது. ஆனால் பிரசங்கி சோர்வடைந்தவரும், கோபமூண்டவருமாக இருப்பது எவ்வளவு விசித்திரம்.!!
6. இவருடைய பிரசங்கத்தால் 1,20,000 பேர் மனந்திரும்புகிறார்கள். ஆனால் இதில் யோனாவுக்கு எந்த சந்தோஷமும் இல்லை. இதையும் மறைக்காமல் எழுதிவைக்கிறார்.
7. தேவ இருதயம் எவ்வளவு கருணைமிக்கது என்பதை யோனா இந்த புத்தகத்தின் முடிவில் புரிந்து கொள்கிறார்.

இதை படிக்கும் முறை

இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. தேவன் யோனாவுக்கு கொடுத்த முதல் அழைப்பு (1, 2 அதிகாரங்கள்)
2. தேவன் யோனாவுக்கு கொடுத்த இரண்டாவது அழைப்பு (3, 4 அதிகாரங்கள்)

அதிகாரம் -1

1. நினிவே-க்கு அனுப்பப்பட்ட யோனா தர்சு பட்டணத்திற்கு போகிறார். (1 - 3)
2. கப்பலை புயல் தாக்குதல் (4 - 10)
3. யோனா கடலில் வீசப்படுதல் (11 - 16)
4. யோனாவை ஒரு பெரிய மீன் விழுங்குகிறது (17)

அதிகாரம் - 2

1. மீன் வயிற்றிலிருந்து யோனா ஜெபிக்கிறார் (1 - 9)
2. மீன் வயிற்றிலிருந்து யோனா விடுவிக்கப்படுகிறார். (10)

அதிகாரம் -3

1. யோனா நினிவேயில் பிரசங்கிக்கிறார் (1 - 4)
2. நினிவே மக்கள் மனந்திரும்புதல் (5 - 9)
3. தேவன் நினிவே மக்களுக்கு சொன்ன தண்டனையை செய்யாதிருத்தல் (10)

அதிகாரம் -4

1. தேவனின் கருணையை பார்த்து யோனா கோபப்படுதல் (1 - 5)
2. ஆமணக்கு செடியின் ஒப்புமை மூலம் யோனாவுக்கு தேவன் தன் நிலையை வெளிப்படுத்துதல் (6 - 11)





உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 45

நாகூம் (NA HUM)

எபிரேய வார்த்தை	-	நாஹூம் (Nakhum)
		நெகேமியா என்பதின் சுருக்கம் நாகூம்
இதன் அர்த்தம்	-	ஆறுதல்
எழுதியவர்	-	நாகூம்



- வேதாகமத்தின் 34-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 3
- மொத்த வசனங்கள் - 47

நாகூம் தீர்க்கதரிசி யாருக்கு எழுதினார்?

நினிவே மற்றும் யூத மக்களுக்கு.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. இது நினிவே (அசீரியாவின் தலைநகர்) பட்டணத்திற்கு எழுதப்பட்ட தீர்க்கதரிசனம் ஆகும்.

   உள்ளுர் தீர்க்கதரிசிகள் வெளிநாட்டுக்கு சொன்ன தீர்க்க தரிசனங்களில் இது மூன்றாவது புத்தகம்.

   1. ஒபதியா - ஏதோம்
   2. யோனா - நினிவே
   3. நாகூம் - நினிவே

(இந்த மூன்று தீர்க்க தரிசன புத்தகங்களையும் மற்ற தீர்க்கதரிசன புத்தகங்களிலிருந்து தனியாக பிரித்து படிக்க வேண்டும்.)

2. யோனாவின் பிரசங்கத்தை கேட்டு நினிவே மக்கள் மனந்திரும்பிய நிகழ்ச்சி கி.மு. 759-ல் நடந்தது. இந்த மனந்திரும்புதல் வெறும் தற்காலிகமானதாயிருந்தது. அசீரியர்கள் மீண்டும் தங்கள் கொடுமைகளுக்கு திரும்பினர். (நாகூம் 3 : 1 - 6)

- **கி.மு. 722-ல்** அசீரியாவின் ராஜாவாகிய **இரண்டாம் சர்கோன்** இஸ்ரயேலின் 10 கோத்திரங்களை சிறைபிடித்து அசீரியாவிற்கு கொண்டு சென்றார்.
- இதன்பின்பு அசீரியாவின் ராஜாவாகிய **சனகெரிப்** யூதாவின் 2 கோத்திரத்தை சிறைபிடிக்க முயற்சித்து (எசேக்கியா ராஜாவின் காலத்தில்) தோல்வி அடைந்து திரும்புகிறார்.
- இதன்பின்பு வந்த அசீரியா ராஜா **அசூர் பானிபால்** காலத்தில் அசீரியாவின் புகழ் உச்சத்தில் இருந்தது.
- இந்த அசீரியா தேசத்தின் **கோட்டையை (மதில்) குறித்தும் பார்க்கும் போது** 100 அடி உயரம், மூன்று இரதங்கள் நிறுத்த கூடிய அளவு அகலம் கொண்ட கோட்டையாக இருந்தது. இந்த கோட்டையை சுற்றிலும், 150 அடி அகலமும், 60 அடி ஆழமுள்ள நீர் அகழியும் காணப்பட்டது.

இப்படி பாதுகாப்பாக கட்டப்பட்ட நினிவே பட்டணம் அழிக்கப்படும் என்ற நாகூமின் தீர்க்கதரிசனம் அக்காலத்தில் **நம்ப கூடாததாக** இருந்தது.

நாகூம் 1 : 8 -ல் நினிவே வெள்ளப்பெருக்கினால் அழியும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது.

ஆனாலும் நினிவேயின் ஸ்தானத்தை புரண்டு வருகிற
வெள்ளத்தினால் சர்வ சங்காரம் பண்ணுவார்.
இருள் அவர் சத்துருக்களைப் பின் தொடரும்.

இந்த தீர்க்கதரிசன வசனத்தின்படியே டைகரீஸ் நதி கரைபுரண்டோடி நினிவேயின் ஒரு பகுதி கோட்டையை தகர்த்தது.

கோட்டையின் இப்பிளவு வழியாக கி.மு. 612-ல் பாபிலோனியபடை முன்னேறியது. நகரத்தை கைப்பற்றி அதை தீக்கிரையாக்கினர். இதைக்குறித்து நாகூம் கூறும்போது.

நாகூம் 3 : 11 - 17



11. நீயும் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய், நீயும் உன் சத்துருவுக்குத் தப்ப அரணான கோட்டையைத் தேடுவாய்.

12. உன் அரண்களெல்லாம் முதல் பழுக்கும் பழங்களுள்ள அத்தி மரங்களைப் போல் இருக்கும். அவைகள் குலுக்கப்பட்டால் அவைகளின் பழம் தின்கிறவன் வாயிலே விழும்.

13. இதோ உன் நடுவில் இருக்கிற ஜனங்கள் பேடிகள், உன் தேசத்தின் வாசல்கள் உன் சத்துருவுக்கு முன் திறவுண்டு போகும். **அக்கினி உன் தாழ்ப்பாள்களைப் பட்சிக்கும்**

14. முற்றிகைக்குத் தண்ணீர் மொண்டு வை, உன் அரண்களைப் பலப்படுத்து, சேற்றிலே போய்ச் களைமண்ணை மிதி, சூளையைக் கெட்டிப் படுத்து.

15. அங்கே **அக்கினி உன்னைப் பட்சிக்கும்** ***பட்டயம் உன்னைச் சங்கரிக்கும், அது பச்சைக்கிளிகளைப் போல் உன்னைப் பட்சித்துப் போடும். உன்னைப் பச்சைக்கிளிகளத் தனையாக்கிக்கொள், உன்னை வெட்டுக்கிளிகளத் தனையாக்கிக்கொள்.***

16. உன் வர்த்தகரை வானத்து நட்சத்திரங்களிலும் அதிகமாக்கினாய், இந்தப் பச்சைக் கிளிகள் பரவிப் பரந்து போகும்.

17. உன் மகுட வர்த்தனர் வெட்டுக்கிளிகளுக்கும், உன் தளகர்த்தர் பெருங்கிளிகளுக்கும் சமானமாயிருக்கிறார்கள். அவைகள் குளிர்ச்சியான நாளில் வேலிகளில் பாளையமிறங்கி, சூரியன் உதித்த மாத்திரத்தில் பறந்து போகும், **பின்பு அவைகள் இருக்கும் இடம் இன்னதென்று தெரியாது.**

1. **கி.மு. 612-ல்** அழிந்த நினிவே இருந்த இடம் தெரியாமல் போனது.
2. **கி.பி 1842-ல்** அகழ்வாராய்ச்சியாளர்கள் ஈராக்கின் டைகரீஸ் நதி ஓரத்தில் இதன் இருப்பிடத்தை கண்டு பிடித்தனர்.

இதன் சுருக்கம்.

1. கி.மு. 759-ல் **நினிவே பட்டணம் யோனா பிரசங்கத்தால் மனந்திரும்பியது.**
2. கி.மு. 722-ல் **இஸ்ரயேலின் 10 கோத்திரங்களை அசீரியாராஜா இரண்டாம் சர்கோன் சிறைபிடித்தல்.**
3. கி.மு. 701-ல் **யூதாவை சனகெரிப் சிறைபிடிக்க முயற்சித்து தோல்வி அடைதல்.**
4. கி.மு. 669-633 **அசூர்பானிபால் காலத்தில் அசீரியாவின் புகழ் உச்சத்தில் இருந்தது.**
5. கி.மு. 612-ல் **பாபிலோனியர் அசீரியாவை பிடித்து அக்கினியால் சுட்டெரித்தல்.**

நினிவேயின் அழிவை குறித்து நாகூம் தீர்க்கதரிசனத்தில் சொல்லியபடி நடந்து இருப்பது இதன் சிறப்பு ஆகும்.

3. நாகூம் 1 : 2முதல் 7 வசனங்களைப் பார்க்கும் போது இந்த வசனங்கள் **ராஜ்யத்தின் செய்திகளை** சொல்வதாக கருதப்படுகிறது.
4. ஒரே உண்மை தேவனை அறிவதற்கான வாய்ப்பு யோனா மூலமாக நினிவேக்கு கிடைத்தது. அவர்கள் மனந்திரும்பிய போது அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நியாயத்தீர்ப்பை தேவன் நிறுத்தி வைத்தார். **(எரே 18 : 7, 8)**

இதன் பிறகு அவர்கள் கொடுமைக்கும், அக்கிரமத்திற்கும், விக்கிரகராதனைக்கும் திரும்பிய போது, தேவன் நாகூம் தீர்க்கதரிசி மூலம் அவர்களுக்கு வரப்போகிற அழிவை அறிவிக்கிறார். **இந்த புத்தகத்தில் சொல்லிய பிரகாரம் நினிவேக்கு அழிவு வந்தது.**

நினிவேயின் மீது **தேவனின் கோபத்தை** வெளிப்படுத்தும் புத்தகமாக இது காணப்பட்டாலும் தேவ ஜனங்கள் மேல் **தேவன் தரும் பாதுகாப்பையும், சமாதானத்தைப் பற்றியும்** இது கூறுகிறது.

நாகூம் 1 : 15



இதோ சமாதானத்தைக் கூறுகிற
சுவிஷேகனுடைய கால்கள்
மலைகளின் மேல் வருகிறது.
யூதாவே உன் பண்டிகைகளை
ஆசரி, உன் பொருத்தனைகளைச்
செலுத்து, துஷ்டன் இனி உன் வழியாய்க்
கடந்து வருவதில்லை. அவன் முழுவதும்
சங்கரிக்கப்பட்டான்.

நாகூம் தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

கி.பி 612-ல் நினிவே அழிக்கப்பட்டது.

இந்த நாகூம் தீர்க்கதரிசன புத்தகத்தில் **நோ அம்மோனின்** அழிவை குறித்து சொல்லப்பட்டுள்ளது.

நாகூம் 3 : 8 - 10

நதிகள் மத்தியிலிருந்த நோ அம்மோனிப்பார்க்கிலும் நீ சிரேஷ்டமோ?

… ஆயினும் அவள் குடி விலக்கப்பட்டு சிறையிருப்பிலே கொண்டு போகப்பட்டாள்.

இது **கி.மு. 663-ல்** நடந்தது. இதை நாகூம் சொல்லியிருக்கும் போது இவர் வாழ்ந்த காலம் **கி.மு. 663-612 க்கும்** இடைப்பட்ட காலமாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

இந்த நாட்களில் யூதாவை ஆண்ட ராஜா எசெக்கியாவின் புதல்வரான **மனாசே** ஆகும்.

ஆசிரியர் (நாகூம்) குறித்து

1. எல்கோசானாகிய நாகூம் (1 : 1) என்று சொல்லப்பட்டுள்ளது. இவரை குறித்து வேறு எந்த பதிவுகளும் இல்லை.
2. நாகூம் 1 : 15 வசனத்தில் யூதாவை பற்றி குறிப்பிடுவதால் இவர் யூதா ராஜ்ஜியத்தை (2 கோத்திரம்) சேர்ந்தவர் என்று யூகிக்கப்படுகிறது.

இதை படிக்கும் முறை

3 பிரிவுகளாக பிரிக்கலாம்

1. நினிவேயின் அழிவு.
2. நினிவேயின் அழிவைப் பற்றிய விளக்கம்.
3. நினிவேயின் அழிவுக்கான காரணங்கள்.

அதிகாரம் - 1

1. தேவனின் கோபமும் வல்லமையும் (1 - 8)
2. நினிவேயின் அழிவு (9 - 14)
3. யூதாவின் விடுதலை (15)

அதிகாரம் -2

1. யுத்தத்திற்கான அழைப்பு (1, 2)
2. நினிவே அழிகிறது (3 - 13)

அதிகாரம் - 3

நினிவேயின் பரிதாப அழிவு (1 - 19)

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 46

எரேமியா (JEREMIAH)

எபிரேய வார்த்தை	-	யிர்மெயஹீ ('Yir 'mi' yahu)
இதன் அர்த்தம்	-	கர்த்தர் உயர்த்துவார்
எழுதியவர்	-	எரேமியா (1 : 1)

- வேதாகமத்தின் 24-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 52
- மொத்த வசனங்கள் - 1364

யாருக்கு எழுதினனர் ?

யூதாவின் 2 கோத்திரங்களுக்கு (தெற்கு தேசம்)

எரேமியா புத்தகத்தின் சிறப்பு

1. தீர்க்க தரிசன புத்தகங்களில் பெரிய புத்தகம்
2. யூதா ராஜ்ஜியத்திற்கு அழிவு நெருங்கி இருக்கிறது. யூதாராஜ்யம் தப்புவதற்கான ஒரே வழி தேவனுக்கு கீழ்படிவதே என்று எரேமியா அவர்களுக்கு அறிவுரை கூறுவதே இந்த புத்தகத்தின் சாரம்சம் ஆகும்.
3. யூதா ஜனங்கள் சிறைப்பட்டு போவதற்கு முன் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இறுதி எச்சரிப்புகளை இந்த புத்தகம் கூறுகிறது.
4. யூதாவின் 2 கோத்திரங்கள் பாபிலோன் ராஜா நேபுகாத் நேச்சாரால் சிறை பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்ட வரலாற்று சம்பவங்களை தெளிவாக இந்த புத்தகம் கூறுகிறது.
5. யூத வரலாற்றின் இருளடைந்த கால கட்டத்தில் மிகப்பெரிய தீர்க்கதரிசிகளில் ஒருவர் செய்த ஊழியத்தின் பதிவே இந்த புத்தகம்.
6. கவிதை மற்றும் வாழ்க்கை வரலாறு கலந்த புத்தகமாக இது காணப்படுகிறது.
7. யூத ஜனங்கள் சிறையிருப்புக்கு செல்வார்கள் என்பதையும், 70 வருடம் கழித்து திரும்பி வருவார்கள் என்பதையும் தேவனுடைய ராஜ்ஜியத்தில் ஒவ்வொருவரும் தேவனை அறிந்து கொள்வார்கள் என்பதையும் இப்புத்தகத்தின் செய்திகளாகப் பார்க்கிறோம். (எரே 25 : 11 - 14) (எரே 29 : 10) (எரே 31: 33, 34)

8. இந்த புத்தகத்தை படிக்கும் போது நினைவில் வைக்க வேண்டிய காரியம்.

இந்த புத்தகத்தின் செய்திகள் வரிசையாக இல்லை

இதை மறந்து விட கூடாது

எரேமியாவின் ஊழிய ஆரம்பத்தில் இருந்து யோயாக்கீம் ராஜா அரசாட்சி செய்யும் வரை நடந்த காரியங்களை (தீர்க்கதரிசனங்களை) எரேமியா வரிசையாக ஒரு சுருளில் எழுதி வைத்திருந்தார்.

இதை யோயாக்கீம் ராஜா, வாசிக்கும்படி எரேமியா கொடுத்து அனுப்பிய போது இதை யோயாக்கீம் ராஜா வாசிக்க கேட்ட போது அதை கிழித்து தீயில் போட்டுவிட்டார்.

தேவன் எரேமியாவை மீண்டும் அந்த தேவ எச்சரிப்பான தீர்க்கதரிசனங்களை எழுதும்படி கூறுகிறார். (எரேமியா 36 - 38 அதிகாரங்கள்)

இதன்பிறகு உரைத்த தீர்க்கதரிசனங்களும் இதனுடன் சேர்க்கப்பட்டன. எனவே மீண்டும் எழுதும் போது சம்பவங்கள் வரிசையாக எழுத முடியாமல் போனது.

எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தில் சம்பவங்கள், நிகழ்ச்சிகள் வரிசையாக இல்லை என்பதை நாம் அறிந்து உணர்ந்து, புரிந்து படிக்க வேண்டும்.

இல்லையென்றால் இந்த புத்தகத்தின் செய்திகளை புரிந்து கொள்ள முடியாது.

எரேமியா தீர்க்கதரிசியின் நாட்களில் வாழ்ந்த ராஜாக்கள்

1. யோசியா (16-வது ராஜா) (31 ஆண்டுகள் ஆட்சி)

1. மிக நல்ல அரசராக, பிரதான ஆசாரியரான இல்கியாவை கணம் பண்ணி வாழ்ந்தார்.

2. இவர் காலத்தில் நியாயப்பிரமான நூல் கண்டெடுக்கப்பட்டது ஆட்சி அமைதியான நிலையில் இருந்தது.

3. இவருடைய இறுதி நாட்களில் எரேமியாவின் சொல் கேட்காமல் எகிப்துடன் போருக்கு சென்றார். போரில் இறந்தார்.

4. எரேமியாவும் எல்லா யூத ஜனங்களும் இவருக்காக புலம்பல் பாடினார்கள்.

(II இராஜா 22 அதிகாரம் II நாளா 34 -35 அதிகாரங்கள்)

இவரை குறித்து எரேமியா 3 : 6 ல் வாசிக்கிறோம்.

2. யோவாகாஸ் (17-வது ராஜா) (3 மாதங்கள் ஆட்சி)

- ❖ யோசியாவின் நான்காவது புதல்வர். (I நாளா 3 : 15)
- ❖ எகிப்தின் ராஜா இவரை சிறையாக்கி கொண்டு சென்றார். (II இராஜா 23 : 30 - 34 II நாளா 36 : 1 - 4)
- ❖ இவருக்கு **சல்லூம்** என்ற பெயரும் உண்டு.

இவரை குறித்து எரேமியா 22 : 11-ல் வாசிக்கிறோம்

3. யோயாக்கீம் (18-வது ராஜா) (11 ஆண்டுகள் ஆட்சி)



1. எகிப்தின் பார்வோனால் நியமிக்கப்பட்டவர்.
2. கர்த்தருக்குப் பிரிய மற்றவைகளை செய்தார்.
3. எரேமியா தீர்க்க தரிசியை கொலை செய்ய முயன்றார்.
4. இவரை நேபுகாத் நேச்சார் பாபிலோனுக்கு சிறை பிடித்து சென்றார்.
5. இவருக்கு **எலியாக்கீம்** என்ற பெயரும் உண்டு.
6. எரேமியாவின் புத்தகத்தை கிழித்து, சுட்டெரித்தவர் இவரே (எரேமியா 36 அதிகாரம்)

(II இராஜா 23 : 36 - 24 : 6, II நாளா 36 : 5 – 8)

இவரை குறித்து எரேமியா 26, 27, 25, 35, 36, 24, 29 அதிகாரங்களில் பார்க்கிறோம்.

4. யோயாக்கீன் (19-வது ராஜா) (3 மாதங்கள் 10 நாட்கள் ஆட்சி)

- இவருக்கு **எகோனியா** என்ற பெயரும்உண்டு.
- இவர் கர்த்தருக்கு பிரியமற்றவைகளை செய்தார்.
- இவரை பாபிலோன் ராஜா சிறைபிடித்து சென்றார்.
- இவரோடு எசேக்கியேல் தீர்க்கதரிசியும் யூதர்களும் சிறைபிடித்து செல்லப்பட்டனர்.
- இவர் 40 ஆண்டுகள் அங்கு அடிமையாக வாழ்ந்து அங்கு இறந்தார்.

(II இராஜா 24 : 6 - 1 7,25 : 27 - 30, II நாளா 36 : 8 - 10)

இவரை குறித்து எரேமியா 24 மற்றும் 29 அதிகாரங்களில் பார்க்கிறோம்.

5. சிதேக்கியா (20-வது ராஜா) (11 ஆண்டுகள் ஆட்சி)

- யூதா ராஜ்ஜியத்தின் கடைசி அரசர்.
- கர்த்தருக்கு பிரியமற்றவைகளைச் செய்தார்.
- எரேமியா தீர்க்கதரிசிக்கு முன்பு பெருமையுடன் நடந்து கொண்டார்.
- இவர் காலத்தில் பாபிலோன் ராஜா நேபுகார் நேச்சார் வந்து, இவர் பிள்ளைகளை கொன்று, இவர் கண்களை குருடாக்கி பாபிலோனுக்கு கொண்டு போனார். இவர் அங்கே மரணமடைந்தார்.
- தேவாலயம் கொள்ளையடிக்கப்பட்டது. ஆலயமும் அரண்மனைகளும் சுட்டெரிக்கப்பட்டன. எல்லோரும் அடிமைகளாக சிறைபிடித்து கொண்டு செல்லப்பட்டனர்.

(II இராஜா 25 : 7 II நாளா 36 : 11 – 20)

இவரை குறித்து எரேமியா 21, 28, 32, 37, 39, 52 அதிகாரங்களில் பார்க்கிறோம்.

9. எரேமியா 52-வது அதிகாரம் எரேமியா எழுதியது அல்ல. II இராஜாக்கள் 24 : 18 முதல் 25 : 30 வரை உள்ள வசனங்களோடு மிகுந்த தொடர்புடைய இந்த வசனங்கள் பிற்பாடு **எரேமியாவின் உதவிக்காரர் பாரூக்கால்** எழுதி சேர்க்கப்பட்ட பிணைப்பாக இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

10. எரேமியாவின் தீர்க்கதரிசனத்தை தானியேலும் வாசித்து தெரிந்து கொண்டார் என்று தானியேல் புத்தகத்திலும் பார்க்கிறோம். (தானி 9 : 2).

எரேமியா தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

1. **செப்பனியா, ஆபகூக், தானியேல், எசேக்கியேல்** தீர்க்கதரிசிகளின் காலத்தில் வாழ்ந்த சமகாலத்து தீர்க்கதரிசி எரேமியா ஆவார்.
2. **யோசியா (16), யோவாகாஸ் (17), யோயாக்கீம் (18), யோயாக்கீன் (19), சிதேக்கியா (20)** ஆகிய 5 யூதராஜாக்களின் நாட்களில் எரேமியா வாழ்ந்திருக்கிறார்.
3. இவர் நாட்களில் **அசீரியா, எகிப்து, பாபிலோன்** ஆகிய பெரிய ராஜ்யங்கள் இருந்தன. இதில் பாபிலோன் சாம்ராஜ்யம் எகிப்தையும், அசீரியாவையும் வெற்றி கொண்டு தன் ஆதிக்கத்தை நிலை நாட்டினது. சுமார் 70 ஆண்டுகள் பாபிலோன் உலக சாம்ராஜ்யமாக இருந்தது.

ஆசிரியர் (எரேமியா) குறித்து

1. எரேமியாவின் தகப்பன் பெயர் **இல்க்கியா.** இவர் ஒரு ஆசாரியன். இந்த இல்க்கியா யோசியா ராஜாவின் காலத்தில் நியாயப் பிரமாணத்தை கண்டு பிடித்து கொடுத்தவர் (II இராஜா 32 அதிகாரம்)
2. இவர் **லேவி கோத்திரத்தை** சேர்ந்தவர்.
3. இவர் பிறந்த இடம் **ஆனதோத்**. இது எருசலேமிற்கு வடக்கே 5.கி.மீ தொலைவில் இருந்தது.
4. மிகுந்த பயந்த சுபாவம் கொண்ட எரேமியாவை மிகவும் எச்சரிப்பான தீர்க்கதரிசனத்தை சொல்ல தேவன் தெரிந்து கொண்டார்.
5. இவருக்கு **“கண்ணீரின் தீர்க்கதரிசி “** என்ற பெயரும் உண்டு.
6. எரேமியா சுமார் **40 ஆண்டுகள்** ஊழியம் செய்தார்.
7. இவருடைய ஊழியங்கள் **உலகப்பார்வையில் ஒரு தோல்வி அடைந்த ஊழியம் போலவே தோன்றும்.**
   1. யூத மக்களின் மனதை தேவனிடம் திருப்ப இவர் எடுத்த கடின முயற்சியை யாரும் கவனித்ததாக தெரியவில்லை.
   2. பிரபுக்களால் அடிக்கப்பட்டு சிறைவயில் போடப்படுகிறார். (37 அதிகாரம்)



3. துரவிலே போடப்படுகிறார். (39 அதிகாரம்)
4. அவர் விருப்பத்திற்கு மாறாக எரேமியா எகிப்துக்கு கொண்டு போகப்படுகிறார். (43)
5. அயல கத்தாரால் வெறுக்கப்பட்டார். (11 : 19 - 21)
6. சொந்த வீட்டார் பகைத்தனர் (12 : 6)
7. கள்ள தீர்க்கதரிசிகளால் கொடுமைப்படுத்தப்பட்டார் (20)
8. நண்பர்கள் எதிரிகளாயினர் (20 : 10)
9. மொத்த மக்களும் எதிர்த்தனர் (26 : 8)
10. ராஜாவும் எதிரி ஆனார் (36 : 26)

8. **கர்த்தர் இயேசு கிறிஸ்துவை** எரேமியாவிற்கு ஒப்பிட்டு சொல்லப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம் காரணம்.

- ❖ எரேமியாவைப் போல கர்த்தரும் துக்கம் நிறைந்தவராய், இருந்தார்.
- ❖ பாடுகள் அனுபவித்தார்.
- ❖ சொந்த ஜனங்களால் பகைக்கப்பட்டார்.
- ❖ அவமானப்படுத்தப்பட்டார்.

இதை படிக்கும் முறை

நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. எரேமியா அழைக்கப்படுதல் (1 அதிகாரம்)
2. யூதர்களுக்கு தீர்க்கதரிசனம் (2 முதல் 45 அதிகாரங்கள்)
3. புறஜாதி நாடுகளுக்கு தீர்க்கதரிசனம் (46 முதல் 51 வரை)
4. யூதாவின் அழிவும் பாபிலோன் சிறைவாசமும் (52 அதிகாரம்)



உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 47

எரேமியா - பாகம் II

1. அதிகாரம்



1. எரேமியா அழைக்கப்படுகிறார் (1 - 11)
2. தேவன் சீக்கிரத்தில் நிறைவேற்றப்போகிற அவருடைய நியாயத்தீர்ப்புகளை குறித்த அவரது தரிசனங்கள் (12 - 16)
3. எரேமியாவிற்கு தேவன் கொடுக்கும் உறுதி (வாக்குதத்தம்) (17 - 19)

2. அதிகாரம்

1. தேவன் யூதா ஜனங்களுக்கு செய்ததும், யூதா ஜனங்கள் தேவனுக்கு விரோதமாக செய்ததும் (1 -1 1)
2. தேவனின் கண்டிப்பு (12 - 19)
3. யூதாவின் கடினபாவம் (20 - 34)
4. அவர்களுடைய வெற்று விசுவாசத்தை தேவன் நிராகரித்தல் (35 - 37)

3. அதிகாரம்

1. யூதாவின் அருவருப்பின் நடத்தையிலும் தேவனின் மகாதயவு (1 - 5)
2. இஸ்ரயேலின் 10 கோத்திரத்தை விட யூதாவின் 2 கோத்திரம் ஒழுக்க கேடாக நடப்பதாக தேவன் கூறுகிறார். (6 - 11)
3. மனந்திரும்புவோருக்கான நற்செய்தி (12 - 19)
4. தேவன் இஸ்ரயேலை கடிந்து கொண்டு திரும்பி வரும்படி அழைத்தல் (20 - 25)

4. அதிகாரம்

1. தேவன் தம்முடைய வாக்கு தத்தங்களை நினைப்பூட்டி இஸ்ரயேலரை தம்மண்டை அழைத்தல் (1 - 2)
2. யூதாவை மனந்திரும்பும்படி அறிவுரை கூறுதல் (3 - 18)
3. யூதாவிற்கான புலம்பல் (19 - 31)

5.அதிகாரம்

1. யூதா செய்கின்ற அநியாயம், விபச்சாரம், உண்மையின்மை ஆகியவற்றிக்கு எதிரான தேவனுடைய நியாயத்தீர்பின் செய்திகள் (1 - 29)
2. கள்ளதீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள் குறித்த செய்தி (30 - 31)

6.அதிகாரம்

1. யூதாவிற்கு வருகிறதான அழிவு (1 - 5)
2. எருசலேமின் மேல் படையெடுக்க தேவன் உத்தரவு கொடுக்கிறார். (6 - 17)
3. தேவனின் நியாயத்தீர்ப்புகளை எரேமியா கூறுகிறார். (18 - 25)
4. மனந்திரும்புவோருக்கான அழைப்பு (26 - 30)

7.அதிகாரம்

1. யூதா மக்கள் உண்மையாய் மனந்திரும்ப வேண்டும் என்று சொல்ல எரேமியாவை தேவன் அனுப்புகிறார். (1 - 7)
2. யூதர்களின் மாய்மால விசுவாசத்தை தேவன் வெறுத்தல் (8 - 17)
3. தேவனுடைய கோபம் அறிவிக்கப்படுகிறது. (18 - 34)

8.அதிகாரம்

1. யூத மக்களுக்கு வரும் வீழ்ச்சி (1 - 3)
2. யூத மக்களின் இதயகடினம் கண்டிக்கப்படுகிறது. (4 - 12)
3. யூத மக்களுக்கு வரம்போகும் பயங்கரமான நியாயத்தீர்ப்பும் அவர்களின் பயங்கர நிலையும் (13 - 22)

9.அதிகாரம்

1. தமது மக்களின் பாவங்களை நினைத்து தீர்க்கதரிசி புலம்புகிறார். (1 - 8)
2. யூதர்களுக்கான தண்டனை (9 - 16)
3. யூதர்களுக்கு வரப்போகும் அழிவைப்பார்த்து அழும்படி மக்களிடம் கூறுகிறார். (17 - 26)

10.அதிகாரம்

1. விக்கிரக தெய்வங்களை தேவனோடு ஒப்பிட முடியாது (1 - 16)
2. வரப்போகும் ஆபத்திலிருந்து ஓடி செல்ல தீர்க்கதரிசி மக்களுக்கு போதிக்கிறார் (17, 18)

3. யூதர்களின் அழிவை நினைத்து எரேமியா புலம்புகிறார். (19 - 25)

11.அதிகாரம்

1. தேவனுடைய உடன்படிக்கையை எரேமியா அறிவித்தல் (1 - 7)
2. கீழ்படியாத யூதர்களை கண்டித்தல் (8 - 10)
3. யூதர்களுக்கும், ஆனதோத் (எரேமியாவின் ஊர்) ஊராருக்கும் வரப்போகின்ற தீஙகை அறிவித்தல் (11 - 23)

12.அதிகாரம்

1. எரேமியா தேவனிடம் முறையிடுதல் (1 - 4)
2. எரேமியாவிற்கு தேவனுடைய பதில் (5 - 6)
3. யூதா ஜனங்களை தேவன் ஏற்க மறுத்தல் (7 - 13)
4. புறஜாதிகளுக்கும், யூதர்களுக்குமான செய்தி (14 - 17)

13.அதிகாரம்

1. சணல் கச்சையை கொண்டு தேவ ஜனங்களுக்கான எச்சரிப்பு (1 - 11)
2. யூதாவிற்கு ஜாடிகளில் திராட்சை ரசம் நிறைந்திருப்பதை சுட்டி காட்டி ஒரு எச்சரிப்பு (12 - 14)
3. மனந்திரும்ப அறிவுரை (15 - 27)

14.அதிகாரம்

1. பஞ்சத்தை குறித்த கர்த்தருடைய வார்த்தை (1 - 6)
2. தீர்க்கதரிசியின் ஜெபம் (7 - 12)
3. கள்ள தீர்க்கதரிசிகள் குறித்தும், அவர்களை நம்புவோரை குறித்தும் (13 - 22)

15.அதிகாரம்

1. யூதர்களின் முழுமையான நிராகரிப்பும், அவர்களுக்கு வரப்போகும் பலவித தண்டனைகளும் (1 - 9)
2. தேவனிடமிருந்து எரேமியாவிற்கு கிடைக்கும் வாக்குதத்தம் (10, 11)
3. தேவன் எரேமியாவிற்கு கொடுத்த பதில் (12 - 14)
4. எரேமியாவின் வேண்டுதல் (15 - 18)
5. தேவனின் பதில் (19 - 20)

16.அதிகாரம்

1. யூதர்களுக்கு வரப்போகும் அழிவை குறித்து இரண்டு ஒப்புமைகள் மூலம் தேவன் எச்சரித்தல். (1 - 13)
2. இஸ்ரயேலர் எகிப்திலிருந்து விடுதலை பெற்று வந்ததைப்போல பாபிலோன் சிறை வாசத்திலிருந்தும் விடுதலை பெற்று வருவார்கள் என்று கூறுதல். (14 - 21)

17.அதிகாரம்

1. யூதாவின் பாவம் அதற்கான தண்டனை (1 - 4)
2. மனிதரை நம்புகிறவர் சபிக்கப்படுவர். தேவனை நம்புகிறவர் ஆசிர்வதிக்கப்படுவர் (5 - 8)
3. பொல்லாத இருதயமுள்ளவர்கள் தேவனை ஏமாற்ற முடியாது (9 - 11)
4. தேவனிடம் மட்டுமே உண்மையான இரட்சிப்பு உண்டு (12 - 27)

18.அதிகாரம்

1. குயவனும், களிமண்ணும் ஒப்புமை (1 - 17)
2. எரேமியாவின் ஜெபம் (18 - 23)

19.அதிகாரம்

மண் ஜாடியை கொண்டு தேவ எச்சரிப்பை யூத ஜனங்களுக்கு எரேமியா சொல்லுதல்.

20.அதிகாரம்

1. எரேமியாவை பஸ்கூர் என்ற ஆசாரியன் அடித்தல், அவருக்கு புதிய பெயர் கொடுத்தல் (1 - 3)
2. பஸ்கூருக்கு வரும் தண்டனை கூறப்படுதல் (4 - 6)
3. பரிகாசத்தை குறித்தும், நேர்மையின்மையை குறித்தும், சொந்த பிறந்த நாளை குறித்தும் எரேமியா அழுது புலம்புதல் (17 - 18)

21.அதிகாரம்

1. சிதேக்கியா ராஜா எரேமியாவிடம் பாபிலோனுடன் போர் செய்தால் அதன் விளைவு என்ன என்று கேட்க ஆட்களை அனுப்புதல் (1 - 2)
2. யூதர்கள் அடிமைகளாக கொண்டு போக படுவார்கள் என்று எரேமியா கூறுதல் (3 - 7)
3. பாபிலோன் ராஜாவுக்கு பணிந்து போகும்படி எரேமியா மக்களிடம் கூறுதல் (8 - 14)

22.அதிகாரம்

1. அரண்மனைக்கு போய் மனந்திரும்ப அறிவுரை சொல்ல தேவன் எரேமியாவை அனுப்புகிறார். (1 - 9)
2. யூதா ராஜாக்களான சல்லூம் (யோவகாஸ்), யோயாக்கீம், எகோனியா (யோயாக்கீன்) இவர்களுக்கான நியாயத்தீர்ப்புகள் உரைக்கப்படுகின்றன (10 -30)

23.அதிகாரம்

1. யூதர்கள் திரும்பி வருவதை குறித்து எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தல் (1 - 4)
2. கிறிஸ்துவின் ராஜயத்தை குறித்த வாக்குதத்தங்கள் (5 - 8)
3. கள்ள தீர்க்கதரிசிகளுக்கு எதிரான தீர்க்கதரிசனம் (9 - 40)

24.அதிகாரம்

நல்ல அத்திப்பழங்களையும், கெட்ட அத்திப்பழங்களையும் எரேமியாவிற்கு தேவன் காட்டி பாபிலோன் சிறையிருப்புக்கு செல்லும் இஸ்ரயேலரில் சிலர் திரும்பிவருதல், மற்றும் அங்கு சிதேக்கியா ராஜாவும் எருசலேமின் மீதியானவர்களும் அழிக்கப்படுவார்கள் என்று முன்னுரைத்தல்.

25.அதிகாரம்

1. எரேமியா யூதர்களின் கீழ்படியாமையைக் கண்டிக்கிறார் (1 - 7)
2. 70 வருட சிறையிருப்பை குறித்து முன்னுரைத்தல் (8 - 11)
3. பாபிலோனுக்கு வரக்கூடிய அழிவு (12 - 14)
4. சகல ஜாதிகளுக்கும் வரக்கூடிய அழிவு (15 - 33)
5. மேய்ப்பர்களின் அழுகை (34 - 38)

26.அதிகாரம்

1. யூதர்கள் அனைவரும் மனம் வருந்த வேண்டும் என்று கூறுகிறார் (1 - 7)
2. ஆசாரியர்களும், தீர்க்கதரிசிகளும் எரேமியாவை கொல்ல முயல்கின்றனர். (8 - 15)
3. விசாரணைக்கு பிறகு எரேமியா விடுதலை செய்யப்படுகிறார். (16 - 24)

27.அதிகாரம்

1. இஸ்ரயேலை சுற்றி இருக்கிற நாடுகளும் பாபிலோனுக்கு அடிமைகளாகும் என்று எரேமியா ஒப்புமை மூலம் கூறுதல் (1 - 7)
2. கள்ள தீர்க்கதரிசனம் சொல்கிறவர்களை நம்பாமல் பாபிலோன் ராஜாவை சேவிக்கும்படி எரேமியா அறிவுரை கூறுகிறார். (8 - 18)
3. எருசலேம் தேவாலயத்தில் இருக்கிற மீதி பணிமுட்டுகள் பாபிலோன் கொண்டு போகப்படும் என்று எரேமியா முன்னுரைத்தல். (19 - 22)

28.அதிகாரம்

1. அனனியாவின் பொய் தீர்க்கதரிசனம் (1 - 9)
2. எரேமியா கழுத்தில் வைத்திருந்த நுகத்தை அவர் உடைக்கிறார் (10, 11)
3. இதற்கு எரேமியா சொல்லும் தீர்க்கதரிசனம். (12 - 17)

29.அதிகாரம்

1. பாபிலோனுக்கு ஏற்கனவே பிடித்துக் கொண்டு போகப்பட்ட யூதர்களுக்கு எரேமியா எழுதிய கடிதம் (1 - 7)
2. கள்ள தீர்க்க தரிசிகளின் வார்த்தைகளை நம்பவேண்டாம் என்று கூறுதல். (8 - 19)
3. ஆகாப், சிதேக்கியா, செமாயா ஆகிய கள்ள தீர்க்கதரிசிகளுக்கு வரப்போகும் பரிதாப முடிவு (20 - 32)

30.அதிகாரம்

1. யூதர்களின் விடுதலையை குறித்து தேவன் எரேமியாவிற்கு கூறுகிறார். (1 - 9)
2. இஸ்ரயேலரை தேவன் ஆற்றுகிறார். (10 - 17)
3. இஸ்ரயேலருக்கான நமபிக்கையின் வாக்குறுதிகள் (திரும்பவும் அர்களுக்கு தேசம் கொடுக்கப்படும்) (18 - 24)

31.அதிகாரம்

1. இஸ்ரயேல் சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவதை குறித்த காரியங்கள் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்படுகிறது. (1 - 14)
2. புலம்பும் ராகேல் தேற்றப்படுதல் (15 - 17)
3. மனம் வருந்திய எப்பிராயீமை வீட்டுக்கு திரும்பவும் கொண்டு வருதல் (18 - 21)
4. கிறிஸ்து வாக்குதத்தம் செய்யப்படுகிறார். (22 - 30)
5. புதிய உடன்படிக்கையை குறித்து வாக்குத்தத்தம் (31 - 39)

32.அதிகாரம்

1. எரேமியாவின் தீர்க்கதரிசனத்தால் சிதேக்கியா அவரை சிறையில் அடைத்தல் (1-5)
2. எரேமியா அனாமெயேல் நிலத்தை வாங்குதல் (6 - 15)
3. தேவனிடம் எரேமியா கூறும் குறை (16 - 25)
4. இஸ்ரயேலின் சிறை வாசத்தை தேவன் உறுதிப்படுத்துகிறார். (26 - 35)
5. இஸ்ரயேலர் சிறையிருப்புக்கு சென்றாலும் மீண்டும் ஆசிர்வாதமான நிலையில் அவர்கள் திரும்பி வருவார்கள் என்று தேவன் வாக்குதத்தம் செய்தல் (36 - 44)

33.அதிகாரம்

1. தேவன் இஸ்ரயேலர் மீது கோபத்துடன் பாபிலோனுக்கு சிறையிருப்புக்கு அனுப்பினாலும் அவர்களை பத்திரமாக திரும்பி வரபண்ணுவேன் என்று கூறுகிறார். (1 - 14)
2. நீதியின் கிளையாகிய கிறிஸ்து வாக்குதத்தம் செய்யப்படுதல். (15 - 26)

34.அதிகாரம்

1. எருசலேமின் அழிவைப்பற்றியும் சிதேக்கியாவின் சிறைவாசம் குறித்தும் எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தல் (1 - 7)
2. எபிரேய அடிமைகளை அந்த அடிமை தனத்திலிருந்து விடுதலை செய்துவிட்டு மீண்டும் அடிமைகளாய் ஆகும்படி அழைப்பித்து அடிமைப்படுத்தி கொண்டவர்களுக்கு விரோதமான தேவனுடைய வார்த்தை (8 - 22)

35.அதிகாரம்

1. ரேகாபிய குடும்பத்தினரின் கீழ்படிதலை சுட்டி காண்பித்து எரேமியா யூதர்களின் கீழ்படியாமையை கண்டித்தல் (1 - 17)
2. கீழ்படிவதால் ரேகாபியருக்கு வரும் ஆசிர்வாதம் (18 - 19)

36.அதிகாரம்

1. எரேமியாவின் தீர்க்க தரிசனங்களை பாருக்கு புஸ்தக சுருளில் எழுதுகிறார். (1 - 7)
2. தேவாலயம் சென்று அச்சுருளின் வசனங்களை வெளியரங்கமாக வாசிக்கிறார். (8 -19)
3. யோயாக்கீம் அந்த புத்தகத்தை எரிக்கிறார். (20 - 26)
4. யோயாக்கீமுக்கு எதிரான நியாயத்தீர்ப்பை எரேமியா அறிவிக்கிறார். (27 - 31)
5. புதிய புஸ்தக சுருளில் மீண்டும் பாருக்கு எழுதுகிறார். (32).



37.அதிகாரம்

1. சிதேக்கியா தனக்காக வேண்டுதல் செய்யும்படி எரேமியாவிடம் ஸ்தானாதிபதிகளை அனுப்புதல். (1 - 5)
2. கல்தேய படை (பாபிலோனியபடை) எருசலேமை அழிக்கும் என எரேமியா கூறுதல் (6 - 10)
3. இதனிமித்தம் எரேமியா அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுதல் (11 - 21)

38. அதிகாரம்

1. எரேமியாவை குற்றம் சாட்டி அவரை துரவில் போடுகின்றனர். (1 - 6)
2. எபேத்மேலேக் அவரை துரவிலிருந்து காப்பாற்றுதல் (1 - 13)
3. எரேமியா ராஜாவுக்கு வேண்டிய ஆலோசனையை இரகசியமாக கூறுதல் (14 - 28)

39.அதிகாரம்

1. பாபிலோன ராஜா, யூதா ராஜாவாகிய சிதேக்கியாவின் கண்களை குருடாக்கி பாபிலோனுக்கு கொண்டு போதல் (1 - 7)
2. எருசலேம் அழிக்கப்பட்டு மக்கள் பாபிலோனுக்கு அடிமைகளாக கொண்டு போகப்படுதல் (8 - 10)
3. எரேமியாவிற்கு கிடைத்த பாதுகாப்பு (11 - 18)

40.அதிகாரம்

1. பாபிலோன் ராஜவால் அதிகாரியாக்கப்பட்ட கெதலியாவுன் சென்று யூதாவில் தங்கியிருந்தல். (1 - 6)
2. சிதறிப்போன மக்கள் கெதலியாவிடம் சென்று சேருதல் (7 - 13)
3. இஸ்மயேலின் சூழ்ச்சி (14 - 15)

41.அதிகாரம்.

1. இஸ்மயேல் கெதலியாவை, உடன் இருந்தவர்களையும் தந்திரமாக கொலை செய்த பின்பு மீதியான மக்களுடன் சேர்ந்து அம்மோனியரிடம் செல்கிறார். (1 - 10)
2. இஸ்மயேலால் கைது செய்யப்பட்டவர்களை யோகனான் என்பவர் விடுவித்தல் (11 - 16)
3. கல்தேயருக்கு பயந்து மீதி இருந்து யூதர்கள் எகிப்துக்கு செல்ல புறப்படுதல் (17 - 18)

42.அதிகாரம்

1. தேவனின் ஆலோசனையை அறிய யோகனான் எரேமியாவிடம் கேட்டல் (1 - 6)
2. தேவனின் வார்த்தையை எரேமியா ஜனங்களுக்கு அறிவித்தல் (7 - 22)

43. அதிகாரம்

1. எரேமியா சொன்ன தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாது யோகனான் மக்களை எகிப்துக்கு அழைத்து கொண்டு செல்லுதல் (1 - 7)
2. எகிப்தை பாபிலோன் ராஜா படையெடுத்து வெற்றி கொள்வார் என்று எரேமியா எச்சரித்தல் (8 - 13)

44. அதிகாரம்

1. யூதாவின் அழிவுக்கான காரணம் அவர்களுடைய விக்கிரக ஆராதனையே என்று அவர்களுக்கு எரேமியா நினைவுப்படுத்துதல் (1 - 14)
2. யூதர்களின் மனக்கடினத்தை பற்றி கூறுகிறார். (15 - 19)
3. அவர்களுக்கு வரப்போகிற பயங்கரமான அழிவை குறித்து கூறுதல் (20 - 28)
4. எகிப்தின் அழிவை பற்றி முன்னுரைத்தல் (29 - 30)

45.அதிகாரம்.

1. பாருக்கின் சஞ்சலம் (1 - 3)
2. எரேமியா அவரை ஆற்றுதல் (4 - 5)

46.அதிகாரம்

1. பாபிலோன் ராஜா எகிப்தை தோற்கடிப்பதை குறித்து எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தல் (1 - 26)
2. இஸ்ரயேலை ஆறுதல் படுத்துதல் (27 - 28)

47.அதிகாரம்

பெலிஸ்தியரின் அழிவைப்பற்றிய தீர்க்கதரிசனம்.

48.அதிகாரம்

1. மோவாபை குறித்த தீர்க்கதாசினங்கள்.
2. மோவாபின் அக்கிரமங்களுக்காக வரும் நியாயத்தீர்ப்பு (1 - 46)
3. மோவாப் திரும்ப கட்டப்படும் (47)

49. அதிகாரம்

அம்மோனியரை பற்றிய தீர்க்க தரிசனங்கள்.

1. அமமோனியருக்கு வரும் நியாயத்தீர்ப்பு (1 - 22)
2. தமஸ்கு, கேதார், காத்சோர், ஏலாம் ஆகிய நகரங்களுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு (23 - 39)

50. அதிகாரம்

பாபிலோனின் நியாயத்தீர்ப்பும் இஸ்ரயேலின் மீட்பும்.

51.அதிகாரம்

1. பாபிலோனுக்கு எதிராக தேவனின் மிக பயங்கர நியாயத்தீர்ப்புகள் (1 - 58)
2. பாபிலோனுக்கு எதிராக எழுதிய தீர்க்க தரிசனங்கள் அடங்கிய புத்தகத்தை ஐபிராத்து நதியில் எரிந்து விடும்படி செராயாவிடம் எரேமியா கூறுதல் (59 - 63)

52.அதிகாரம்

1. சிதேக்கியாவின் புரட்சி (1 - 3)
2. எருசலேம் முற்றுகையிடப்படுகிறது (4 - 7)
3. சிதேக்கியாவின் புதல்வர்கள் கொல்லப்படுகின்றனர். (8 - 23)
4. யூதர்கள் சிறையாக பாபிலோனுக்கு போகின்றனர். (24 - 34)

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 48

புலம்பல் (LAMENTATIONS)

எபிரேய வார்த்தை	-	எய்காஹ் (Eikhah)
பெயர் அர்த்தம்	-	ஐயோ
எழுதியவர்	-	எரேமியா (புத்தகத்தின் தலைப்பு எரேமியாவின் புலம்பல்)

- வேதத்தின் 25-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 5
- மொத்த வசனங்கள் - 154

புத்தகம் எழுதப்பட்ட காலம்

இந்த புத்தகம் எழுதப்பட்ட காலத்தை அறிந்து கொள்ள **எரேமியா புத்தகத்தை குறித்து அறிந்திருக்க வேண்டும்.** சிதேக்கியா ராஜாவின் காலத்தில் பாபிலோன் ராஜா நேபுகாத் நேச்சார் யூதாவின் மேல் படையெடுத்து எருசலேம் நகரம் மற்றும் எருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டு, **யூத ஜனங்கள் சிறையிருப்புக்கு சென்ற தொடக்க ஆண்டுகளில் இந்த புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும்.**

யூத ஜனங்கள் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு அடிமைகளாக கொண்டு போகப்பட்டனர். மீதி எருசலேமில் இருந்த ஜனங்களோடு **எரேமியா எகிப்துக்கு செல்லும் முன் இந்நூலை எழுதியிருக்க வேண்டும்.**

எரேமியா 40-ம் அதிகாரம் வாசிக்கும் போது
இந்த புத்தகம் வாசிக்க வேண்டும். அந்த காலகட்டத்தில்
எரேமியா இந்த புத்தகத்தை எழுதியிருக்க வேண்டும்
என்று யூகிக்கப்படுகிறது.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. **தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படியாதிருந்தால் அது அழிவுக்கு கொண்டு செல்லும்** என்பதையும் தேவ ஜனங்களின் பாடுகள் தேவனின் இருதயத்தை வேதனைப்படுத்தும் என்பதையும் இந்த புத்தகம் கூறுகிறது.
   (புலம்பல் 3 : 22, 23, 31, 32, 33)
2. இந்த புத்தகம் **எபிரேய ஒப்பாரி** புத்தகமாக காணப்படுகிறது.
3. யூதர்களின் பெருமை மிகு பட்டணமாக விளங்கிய எருசலேம் பாபிலோனிய படையெடுப்பால் மணல் மேடாக ஆக்கப்பட்டதைப் பார்த்து **கண்ணீரின் மொழியில்** இந்த புத்தகத்தை எரேமியா எழுதுகிறார்.

4. இந்த புத்தகத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் **22 வசனங்கள்** (3-ம் அதிகாரம் மட்டும் 22 x 3 = 66 வசனங்கள்) இருப்பதைப் பார்க்கலாம். எபிரேய மொழியில் மொத்தம் 22 எழுத்துக்கள் என்று நமக்கு தெரியும் இதில் ஒவ்வொரு வசனத்தின் ஆரம்பமும் எபிரேய மொழியின் ஒவ்வொரு எழுத்தைக் கொண்டு அதாவது முதல்

எழுத்தில் தொடங்கி கடைசி எழுத்தில் முடிவதைப் போன்று மூல மொழியில் எபிரேயு பானஷயில் எழுதப்பட்டு இருப்பது இதன் சிறப்பு ஆகும்.

5. இந்நூலின் எழுதப்பட்டுள்ள காரியங்கள் **நேரிடையாக பார்த்து எழுதியிருப்பது** இதன் சிறப்பு ஆகும். (1 : 13, 15/ 2 : 6, 9/ 4 : 1 - 12)
6. எரேமியா எருசலேம் நகரம் அழிக்கப்படுவதையும், யூதர்கள் அடிமைகளாக கொண்டு போகப்படுவதையும் நேரடியாக பார்த்து கொண்டு இருக்கிறார். அதன்பின்பு சில நாட்கள் யூதாவில் தங்கி இருக்கிறார்.

   எனவே இந்த புத்தகத்தில் **நேரிடையாக அவர் பார்த்து, அதனிமித்தம் ஏற்பட்ட புலம்பலை வரிகளாக எழுதியிருப்பதை** இதில் பார்க்க முடிகிறது.
7. 40 ஆண்டுகளுக்கு மேலாக எருசலேமிற்கு வரப்போகும் நியாயத்தீர்ப்பை குறித்து எரேமியா தீர்க்கதரிசனமாக சொல்லிக் கொண்டிருந்தார். இப்போது அவர் சொன்னபடியே நேபுகாத் நேச்சர் வந்து சிறைபிடித்து செல்கிறார்.

தான் சொன்னபடி நடந்ததிற்காக எரேமியா தீர்க்கதரிசி சந்தோஷப்படவில்லை. அந்த யூதர்களை குற்றஞ்சாட்டவில்லை. மாறாக எருசலேமின் கேடான நிலையைப் பார்த்து கதறி அழுகிறார். அவர்களை விட்டு செல்லாமல் அவர்களுடன் இணைந்து வாழ்கிறார். (எரேமியா 40 : 1 - 6)

இதில் **எரேமியாவின் இரக்கமுள்ள குணம், தன் ஜனங்களிடத்தில் அவர் வைத்திருந்த அன்பு** வெளிப்படுவதைப் பார்க்கிறோம்.

இதை படிக்கும் முறை

5 அதிகாரங்கள் 5 பிரிவுகள்

1. எருசலேமின் அழிவு (1 அதிகாரம்)
2. தேவனின் கோபம் (2 அதிகாரம்)
3. தேவனுடைய கருணைக்காக வேண்டுதல் (3 அதிகாரம்)
4. எருசலேம் மீதான தாக்குதலின் பயங்கரங்கள் (4 அதிகாரம்)
5. தேவனிடத்தில் மீட்புக்கான விண்ணப்பம் (ஜெபம்) 5 அதிகாரம்)

நேபுகாத் நேச்சார் சிதேக்கியா ராஜாவை சிறைபிடித்தல்

அதிகாரம் - 1

1. எருசலேமின் பாவத்தால் அவளுக்கு வந்த இக்கட்டு (1 - 11)
2. அவளது பாடுகளை நினைத்து அவள் புலம்புகிறாள். தன் பாவங்களை அறிக்கை யிடுகிறாள்.(12-22)

(இங்கு எருசலேம் நகரம் பெண்ணிற்கு ஒப்புமைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது.)

அதிகாரம் - 2

1. எருசலேமின் துன்பத்தை நினைத்து எரேமியா புலம்புகிறார். (1 - 19)
2. அதைப்பற்றி தேவனோடு வழக்காடுகிறார். (20 - 22)

அதிகாரம் - 3



1. தமக்கு வந்த வேதனைகளை நினைத்து எரேமியா புலம்புதல் (1 - 21)
2. தேவனின் கருணையில் அவர்களது நம்பிக்கை பூக்கிறது (22 - 36)
3. தேவனின் நீதியை அவர்கள் அங்கிகரிக்கின்றனர். (37 - 54)
4. விடுதலைக்காக எரேமியா ஜெபித்தல். (55 - 66)

அதிகாரம் - 4

1. தனக்கு கருணை காட்டப்படாத நிலையை நினைத்து சீயோன் புலம்புதல் (1 - 12)
2. தன்பாவங்களை சீயோன் அறிக்கையிடுதல் (13 - 20)
3. ஏதோமை குறித்த செய்தி (21)
4. சீயோனுக்கு ஆறுதல், ஏதோமிற்கு நியாயத்தீர்ப்பு (22)

அதிகாரம் - 5

தேவனிடத்தில் எருசலேமின் மீது (சீயோன்) கருணை கேட்டுகும் ஜெபம்

உம்முடைய வசனமே சத்தியம்”   யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 49

எசேக்கியேல் - EZEKIEL (பாகம் -I)



எபிரேய வார்த்தை : யெஹேலஸ்கேல் (Y' Khezquel)

பெயர் அர்த்தம் . : தேவன் பெலப்படுத்துகிறார்

எழுதியவர் : எசேக்கியேல்

எழுதப்பட்ட இடம் : கேபார் நதி – பாபிலோன்

(கேபார் நதி இது பாபிலோனிலிருந்து 70.கி.மீ தூரத்தில் இருக்கிறது. டெல் அபீப் (Tel Abib) என்ற இடத்திற்கு அருகே இருந்த நதி ஆகும். இங்கு அகதிகளைப்போல் அடிமைகளாக யூதர்கள் தங்க வைக்கப்பட்டு இருந்தனர். இதன் மத்தியில் இருந்து தேவனுடைய வார்த்தையை சொன்னவர் எசேக்கியேல் தீர்க்கதரிசி ஆவார்)

- வேதாகமத்தின் 26-வது புத்தகம்
- மொத்த அதிகாரங்கள் - 48
- மொத்த வசனங்கள் - 1273

யாருக்கு எழுதினார் ?

பாபிலோனில் சிறைப்பட்டிருந்த யூதர்களுக்கும்
எல்லா இடங்களிலுமுள்ள தேவ மக்களுக்கும்

எசேக்கியேல் தீர்க்கதரிசி வாழ்ந்த காலம்

எசேக்கியேல் தீர்கதரிசி யூதாவின் ராஜவாகிய யோயாக்கீன் காலத்தில் வாழ்ந்தவர். இதைக்குறித்து இன்னும் அறிந்து கொள்ள வேண்டுமானால்.

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்தநேச்சார் எருசலோமை 3 தடவை போர் தொடுத்தார்.

முதல்முறை : முதல் தடவை யூதாவின் மீது போர்தொடுத்து யோயாக்கீம் ராஜாவை வென்று, சிறைபிடித்து சென்றார். அப்போது இவருடன் சென்றவர்கள் தானியேல் மற்றும் அவருடைய நண்பர்கள்

இரண்டாம் முறை : இரண்டாவது தடவை யூதாவின் மீது போர் தொடுத்து யோயாக்கீன் ராஜாவை சிறைப்பிடித்தார். அப்போது இவருடன் சென்றவர்கள் எசேக்கியேல், மோர்தேகாய், எஸ்தர் போன்றவர்கள்.

மூன்றாம் முறை : மூன்றாவது தடவை போர் தொடுத்தபோது சிதேக்கியா ராஜாவை சிறைபிடித்து எருசேலேமை முற்றிலும் அழித்தார்.

நான்காம் முறை : யூதாவில் மீதி இருந்த யூதர்களை சிறைபிடித்து சென்றார் - (இதற்கு வேத பதிவுகள் இல்லை)

எசேக்கியேல் 1:1

முப்பதாம் வருஷம் நாலாம் மாசம் ஐந்தாம் தேதியில் நான் கேபார் நதியண்டையிலே சிறைப்பட்டவர்கள் நடுவில் இருக்கும்போது சம்பவித்தது என்னவென்றால்

இதில் முப்பதாம் வருஷம் என்பது எசேக்கியேலின் வயதை குறிப்பதாக வேத வல்லுநர்கள் கருதுகின்றனர்.

எசேக் 1:2

அது யோயாக்கீன் ராஜவுடைய சிறையிருப்பின் ஐந்தாம் வருஷமாயிருந்தது

இந்த வசனங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் காரியம்

எசேக்கியேல் வாழ்ந்த காலம்

1. யோயாக்கீன் ராஜாவை சிறைபிடிக்கும் போது எசேக்கியேலும் சிறைபிடிக்கப்பட்டார்.
2. சிறைப்பிடிக்கப்பட்ட காலத்தில் இருந்து 5 வருடம் கழித்து அவருடைய 30-வது வயதில் தேவனால் தீர்க்கதரிசனம் சொல்ல அழைக்கப்பட்டு இருக்கிறார்.
3. எசேக்கியேல் சிறைப்பிடிக்கபட்டபோது அவருடைய வயது 25 என்பதை அறிந்து கொள்கிறோம்
4. இந்த காலகட்டத்தில் இருந்து எசேக்கியேல் தீர்க்கதரிசியின் ஊழியம் ஆரம்பித்து சுமார் 22 வருடங்கள் இவர் ஊழியம் செய்ததாக கருதப்படுகிறது.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. இந்த புத்தகம் எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு தேவன் காண்பித்த தரிசனங்கள், உவமைகள், உருவகங்கள் கொண்டு எழுதப்பட்டு இருக்கிறது.
2. இந்த புத்தகம் அதிகமாக தரிசனங்கள் மற்றும் அடையாளங்கள் குறித்து எழுதப்பட்டு இருப்பதால் இதைப்புரிந்து கொள்வது சற்று கடினமாக இருக்கிறது.

3. இந்த அடையாளங்கள், அவைகளின் அர்த்தங்கள் புரியும்போது இதை புரிந்து கொள்வது எளிதாயிருக்கும். (இதை குறித்து பின்வரும் வகுப்புகளில் பார்க்கலாம்)

4. இந்த புத்தகத்தில் அடையாளங்கள், தரிசனங்கள் குறித்து எழுதப்பட்டு இருந்தாலும், எசேக்கியேலின் குடும்பம் அவருடைய ஊழியங்கள், கஷ்டங்கள் குறித்தும் பார்க்கிறோம்.

5. நான் மற்றும் என்னை நோக்கி, மனுபுத்திரனே என்ற வார்த்தைகள் அதிகமாக எசேக்கியேல் பயன்படுத்தி இருப்பதை பார்க்கிறோம். இதிலிருந்து அவருக்கு நேரிடையாக வெளிப்படுத்தப்பட்ட காரியங்களையே இவர் எழுதி வைத்திருப்பதை பார்க்க முடிகிறது.

6. பாபிலோனில் சிறை கைதிகளாக வாழ்ந்து கொண்டிருந்த தேவமக்களை அவர்களுக்கு நேரிட்ட அழிவுக்கு காரணம் அவர்களது பாவங்களே என எசேக்கியேல் கூறுவது இந்த புத்தகத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

7. எந்த நம்பிக்கையும் இல்லாமல் பாபிலோன் சிறையிருப்பில் இருந்த யூதர்களுக்கு அவர்கள் வாழ்க்கை மாறும், மீண்டும் சொந்த தேசத்திற்கு செல்வோம் என்ற செய்தியை இந்த புத்தகத்தில் எசேக்கியேல் கூறுகிறார்.

8. "உலர்ந்த எலும்புகளை குறித்த தரிசனம்" மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு காரியமாக இந்த புத்தகத்தில் இடம் பெற்று இருக்கிறது. இஸ்ரயேல் ஜனங்கள் எப்படி கூட்டி சேர்க்கப்படுவார்கள் என்பதற்கு இது மிகவும் தெளிவாக (அடையாள பாஷையில்) இருக்கிறது.

9. தேவன் எருசலேமில் மட்டுமல்ல. பாபிலோனிலும் இருக்கிறார் என்ற உண்மையை மக்கள் அறிய வேண்டுமென்று எசேக்கியேல் இதை எழுதியுள்ளார்.

10. எருசலேம் தேவாலயத்தை விட்டு, தேவமகிமை கடந்து சென்ற தரிசனத்தை எசேக்கியேல் கண்டார். (எசேக் 10:18)

11. எசேக்கியேல் பார்த்த புதிய தேவாலய காட்சியில் தேவமகிமை திரும்பி வருவதாக பார்க்கிறார் (எசேக் 43 :1-6)

தேவன் தமது மக்களின் நடுவில் மீண்டும் வாசம் செய்வதற்கு ஒப்புமையாக இந்த தரிசனம் காணப்படுவது இதன் சிறப்பு ஆகும்.

ஆசிரியர் (எசேக்கியேல்) குறித்து

1. பாபிலோனுக்கு சிறைப்பட்டு போன யூதர்கள் மத்தியில் தேவனால். தேவ வார்த்தையை சொல்லும்படி எற்படுத்தப்பட்டவர் எசேக்கியேல் ஆவார்

2. இவர் ஒரு ஆசாரியரும், தீர்க்கதரிசியு - மாயிருந்தார்

3. யூத வரலாற்றின் மிக இருண்ட காலமான 70 ஆண்டுகால பாபிலோன் சிறை வாச காலத்தில் தேவனுக்காக எதிரி நாடான பாபிலோனில் எசேக்கியேல் தமது தீர்க்க தரிசன ஊழியத்தை நிறைவேற்றினார்.

4. எருசலேம் அழிக்கப்படுவதற்கு முன் பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்ட எசேக்கியேல், தம்முடன் சிறையில் இருந்த மக்களுக்கு தரிசனங்கள், உவமைகள், உருவகங்கள் மூலம் தேவ வார்த்தையை வெளிப்படுத்தினார்.

5. எசேக்கியேல் தீர்க்கதரிசியின் சமகாலத்தில் வாழ்ந்தவர் எரேமியா தீர்க்கதரிசி, எரேமியா எருசலேமில் தேவ வார்த்தை சொல்லி வந்தார். எசேக்கியேல் பாபிலோனில் எருசலேம் அழிக்கப்படுவதை குறித்தும், மீண்டும் இஸ்ரயேலர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்புவார்கள் என்பதையும் தீர்க்கதரிசனமாக சொன்னார்.

6. எசேக்கியேல் திருமணமானவர், அவர் மனைவி பாபிலோனில் மரிப்பதை குறித்தும் நாம் வேதத்தில் பார்க்கிறோம் (எசேக் 24: 16-19)

7. எசேக்கியேலும் தனது ஊழியத்தை முடித்து பாபிலோனில் மரித்தார் என்று வேத பிண்ணனி கூறுகிறது.

இதைப்படிக்கு முறை

நான்கு பிரிவுகளாக பிரித்து இந்த புத்தகத்தைப் படிக்கலாம்

1. எசேக்கியேலுக்கு கிடைத்த தேவதரிசனமும், தேவ நடத்துதலும் (அதிகாரம் 1 முதல் 3 வரை)
2. யூதாவின் மேல் வரும் நியாயத்தீர்ப்பு (அதிகாரம் 4 முதல் 24 வரை)
3. புறஜாதியாரின் (அம்மோனியர். மோவாபியர், சேயீர்குடிகள், பெலிஸ்தியர், தீரு. எகிப்து, பாபிலோன். அசீரியா) தேசங்களை குறித்து நியாயத்தீர்ப்பு. (அதிகாரம் 25 முதல் 32 வரை)
4. இஸ்ரயேலரின் மீட்சியும், தேவாலயத்தின் சீரமைப்பும் (அதிகாரம் 33 முதல் 48 வரை)

உம்முடைய வசனமே சத்தியம்”   யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 50

எசேக்கியேல் –EZEKIEL (பாகம் –II)

அதிகாரம் -1

1. நான்கு கேருபீன்கள். நான்கு சக்கரங்கள் குறித்து எசேக்கியேல் பார்த்த தரிசனம் (1-25)
2. கர்த்தரின் மகிமையை தீர்க்கதரிசி தரிசித்தல் (26-28)

அதிகாரம் -2

1. எசேக்கியேலுக்கு கிடைத்த உத்தரவு (1-5)
2. எசேக்கியேலுக்கு தேவன் கொடுத்த ஊழியம், அறிவுரை (6-8)
3. எசேக்கியேலுக்கு தேவன் கொடுத்த புஸ்தக சுருள் (9-10)

அதிகாரம் -3

1. தேவன் தந்த புஸ்தக சுருளை எசேக்கியேல் புசித்தல் (1-3)
2. தேவன் எசேக்கியேலை தைரியமூட்டுதல் (4-14)
3. எசேக்கியேல் சொல்ல வேண்டிய காரியம் (15-21)
4. எசேக்கியேலை பள்ளதாக்கிற்கு அனுப்புதல் (22-27)

அதிகாரம் -4

எசேக்கியேலுக்கு எருசலேமின் முற்றுகை முன் அறிவிக்கப்படுகிறது. இதை ஒரு ஒப்புமையின் மூலம் எசேக்கியேல் செய்து காட்டுகிறார்

அதிகாரம் -5

எருசலேமுக்கு வரும் நியாயத்தீர்ப்பை குறித்து தலைமுடியின் ஒப்புமை மூலம் தேவன் எச்சரித்தல்

அதிகாரம் -6

1. விக்கிரக ஆராதனையால் எருசலேமுக்கு வரும் நியாத்தீர்ப்பு (1-7)
2. மீதியானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்ற செய்தி (8-14)

அதிகாரம் -7

1. இஸ்ரயேலரின் இறுதி அழிவு (1-15)
2. இரட்சிக்கபட்டவர்களின் துயரமான மனந்திரும்புதல் (16-22)
3. சங்கிலியின் ஒப்புமை மூலம் அவர்களுக்கு வரும் கடுமையான சிறைவாசம் குறித்து எச்சரிக்கப்படுகிறது (23-27)

அதிகாரம் -8

1. அக்கினி சாயலான ஒருவரின் தரிசனம் (1-6)
2. பரிசுத்த ஸ்தலத்தில் விக்கிரகங்கள் வரையப்பட்டுள்ளன (7-16)
3. இஸ்ரயேலரின் விக்கிரக ஆராதனையால் தேவ கோபம் பொங்குகிறது (17-18)

அதிகாரம் -9

நீதிமான்களின் பாதுகாப்பு மற்றும் துன்மார்க்கரின் அழிவையும் பற்றிய தீர்க்க தரிசனம்

அதிகாரம் -10

1. எருசலேம் நகரத்தின் மேல் இறைக்கப்படும் அக்கினித்தழல் பற்றிய தரிசனம் (1-7)
2. கேரூ பீன்களையும். தேவ மகிமையையும் பற்றிய தரிசனம் (8-22)

அதிகாரம் -11

1. பிரபுக்களின் எண்ணங்கள் குறித்து (1-4)
2. பிரபுக்களின் பாவமும், நியாயத்தீர்ப்பும் (5-12)
3. பெனாயாவின் குமாரன் பெலத்தியாவின் மரணம்.
   எசேக்கியேலின் முறையிடுதல் (13)
4. மீதியானவர்களை இரட்சிப்பேன் என்று கர்த்தர் சொல்லுதல் (14-25)

அதிகாரம் -12



1. தூரப்பயணம் செல்வது போல் எசேக்கியேலை தேவன் ஆயத்தப்பட சொல்லுதல் (1-7)
2. இதைக்குறித்த கர்த்தருடைய வார்த்தை (8-16)
3. எசேக்கியேலின் தத்தளிப்பும் , விசாரமும் யூதர்களின் அழிவைச் சுட்டி காட்டுகிறது. (17- 28)

அதிகாரம் -13

1. கள்ள தீர்க்கதரிசிகள் கண்டிக்கப்படுதல் (1-16)
2. கள்ள தீர்க்கதரிசிகள் எச்சரிக்கப்படுகின்றனனர் (17-23)

அதிகாரம் -14

1. மாய்மாலகாரர்களான விக்கிரக ஆராதனையார்களை கண்டித்தல் (1-11)
2. பாவத்திற்கான நியாயத்தீர்ப்புகள் அறிவிக்கப்படுதல் (12-21)
3. மீதியானவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுதல் (22-23)

அதிகாரம் -15

காட்டுத் திராட்சையின் ஒப்புமையை காட்டி எருசலேம் தள்ளிவிடப்படுவதை கூறுதல்

அதிகாரம் -16

1. ஒரு குழந்தையை சுட்டிகாட்டி எருசலேமின் உண்மை நிலையை தேவன் வெளிப்படுத்துதல் (1-5)
2. தேவன் எருசலேமை நேசித்தல் (6-34)
3. பயங்கர தண்டனை எருசலேமிற்கு வரும் என்று கூறுதல் (35-59)
4. முடிவில் எருசலேமிற்கு கருணை காட்டப்படும் என்று வாக்குதத்தம் செய்யப்படுகிறது (60-63)

அதிகாரம் -17

1. பாபிலோனுக்கு எதிர்த்து நின்று எகிப்துடன் உறவு வைத்த சிதேக்கியா ராஜாவுக்கு வரப்போகும் தண்டனையை கழுகு- திராட்சை செடி ஆகியவற்றின் உவமைகளால் எச்சரித்தல் (1-11)
2. தேவனுடைய ராஜ்யத்தை குறித்த ஒரு வாக்குதத்தம் (12-24)

அதிகாரம் -18

1. திராட்சை காய்களை குறித்ததான பழமொழி (1-4)
2. தகப்பன் நீதிமானாயிருந்து மகன் தீயவனாயிருந்தால் வரும் தண்டனை (5-13)
3. தகப்பன் கெட்டவனாயிருந்து மகன் நல்லாவனாயிருந்தால் வரும் ஆசீர்வாதம் (14-24)
4. தேவன் தமது செயல்களை குறித்து கூறுதல் (25-30)
5. இஸ்ரயேல் ஜனங்களை மனந்திரும்பும்படி தேவன் அழைத்தல் (31-32)

அதிகாரம் -19

1. இஸ்ரயேலின் அதிபதியை படுகுழியில் அகப்பட்ட பால சிங்கத்திற்கு ஒப்பிட்டு சொல்லப்பட்ட உவமை (1-11)
2. எருசலேமை உலர்ந்த திராட்சை செடிக்கு ஒப்பிட்டு சொல்லப்பட்ட உவமை (12-14)

அதிகாரம் -20



1. இஸ்ரயேல் மூப்பர்களுக்கு பதில் கொடுக்க தேவன் மறுத்தல் (1-3)
2. மூப்பர்களின் முரட்டு குணம் (4-32)
3. தேவன் அவர்களை கோபமாக ஆண்டாலும், திரும்பவும் சேர்த்து கொள்வேன் என்று வாக்குதத்தம் செய்தல் (33-49)

அதிகாரம் -21

1. இஸ்ரயேலுக்கு எதிராக எசேக்கியேல் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்தல் (1-27)
2. அம்மோனியருக்கு எதிரான தீர்க்க தரிசனம் (28-32)

அதிகாரம் -22

1. யூதர்களின் பாவங்கள் (1-14)
2. யூதர்கள் அந்நிய நாடுகளில் சிதறப்படுவதை குறித்த தீர்க்க தரிசனம் (15- 22)
3. தீர்க்கதரிசிகளின், ஆசாரியர்களின் தீய செயல்கள் (23-31)

அதிகாரம் -23

1. அகோலாள், அகோலிபாள் ஆகியோரின் இழிவான நடக்கை (1-35)
2. அவர்களது விபச்சாரத்தை தீர்க்கதரிசி கண்டித்தல் (36-44)
3. அவர்களது நியாயத்தீர்ப்பு (45-49)

உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 51

எசேக்கியேல் – EZEKIEL (பாகம் –III)

அதிகாரம் -24

1. எருசலேமிற்கு வரும் அழிவை பொங்கும் கொப்பரைக்கு ஒப்பிட்டு முன்னுரைத்தல் (1-14)
2. எசேக்கியேலின் மனைவி இறந்து போதல். அதை யூதர்களுக்கு வரப்போகும் அழிவிற்கும், துயரத்திற்கும் ஒப்பிட்டு தீர்கக்தரிசனம் சொல்லுதல் (15-27)

அதிகாரம் -25

1. அம்மோனியர் (1-7), மோவாபியர் (8-11), சேயீர் குடிமக்கள் (12-14), பெலிஸ்தியர் (15-17) ஆகியோருக்கு விரோதமான தேவனுடைய வார்த்தை

அதிகாரம் -26

1. பாபிலோன் ராஜ மூலமாக தீரு ஜனங்களுக்கு வரும் அழிவு முன்னறிவிக்கப்படுதல் (1-14)
2. தீருவின் அழிவினிமித்தம் தீவுகள் அழுது புலம்புதல் (15-21)

அதிகாரம் -27

1. தீருவின் செல்வ செழிப்பு (1-25)
2. தீருவின் அழிவை குறித்த தீர்க்க தரிசனம் (26-36)

அதிகாரம் -28

1. சாத்தானுக்கு அடையாளனமான தீரு அதிபதிக்கு வரும் நியாயத்தீர்ப்பு (1-19)
2. சீதோன் தேசத்துக்கு வரும் நியாயத்தீர்ப்பு (20-24)
3. இஸ்ரயேல் திரும்ப கட்டப்படுவதை குறித்த தீர்க்க தரிசனம் (25-26)

அதிகாரம் -29

1. எகிப்தின் ராஜா பார்வோனுக்கு வரும் நியாயத்தீர்ப்பு (1-7)
2. இஸ்ரயேலின் அழிவு (8-12)
3. இஸ்ரயேலர் திரும்ப கட்டப்படுதல் (13-21)

அதிகாரம் -30

1. எகிப்துக்கும், அதற்கு உதவி செய்வோருக்கும் வரும் அழிவு (1-23)
2. பாபிலோன் ராஜாவின் மூலமாக எகிப்துக்கு வரும் அழிவு (24-26)

அதிகாரம் -31

1. அசீரியாவின் மகிமை (1-9)
2. அசீரியாவின் மேட்டிமையால் அதற்கு வந்த அழிவு (10-17)
3. எகிப்தின் அழிவு (18)

அதிகாரம் -32

எகிப்தின் பயங்கர அழிவை எண்ணிப் புலம்புதல்

அதிகாரம் -33

1. ஒரு காவற்காரன் என்ற நிலையில் தன்னுடைய பணியை நிறைவேற்ற தேவன் எசேக்கியேலுக்கு அறிவுரை கூறுதல் (1-29)
2. தீர்க்கதரிசியை ஏளனம் செய்வோருக்கான் நியாயத்தீர்பபு (30-33)

அதிகாரம் -34

1. இஸ்ரயேலின் மேய்ப்பர்கள் கண்டிக்கப்படுதல் (1-19)
2. நல்ல மேய்ப்பராகிய கர்த்தர் இயேசு வாக்குதத்தம் செய்யப்படுதல் (20-31)

அதிகாரம் -35

1. சேயீர் மலைக்கு எதிராக தேவனின் நியாயத்தீர்ப்பு

   சேயீர் மலை – ஏதோம் தேசத்தை குறித்கிறது (35:15)

அதிகாரம் -36

1. இஸ்ரயேலுக்கு தேவன் சொல்லும் ஆறுதல்(1-24)
2. தேவனுடைய ராஜ்யத்தின் ஆசிர்வாதங்கள் (25-38)

அதிகாரம் -37

1. உலர்ந்த எலும்புகளை பற்றிய தரிசனம் (1-20)
2. கிறிஸ்துவின் ராஜ்யம் (தேவனுடைய ராஜ்யம்) வாக்குதத்தம் செய்யப்படுகிறது (21-28)

அதிகாரம் -38

1. கோகுக்கு விரோதமான தீர்க்கதரிசனம் (1-13)
2. கோகுக்கு வரும் நியாயத்தீர்ப்பு (14-23)

அதிகாரம் -39

1. கோகின் மேல் வரும் தேவ நியாயத்தீர்பபு (1-7)
2. இஸ்ரயேலின் வெற்றி (8-22)
3. இஸ்ரேயல் திரும்ப கட்டப்படுதல் (23-29)

அதிகாரம் -40

1. எசேக்கியேலுக்கு காண்பிக்கப்பட்ட ஆலயத்தின் தரிசனம் (1-5)
2. மண்டபங்கள் (6-38)
3. பீடங்கள் (மேஜைகள்) (39-47)
4. தூணாதாரம் (48-49)

அதிகாரம் 41

1. தேவாலயத்தின் அளவுகள் மற்றும் அங்குள்ள பொருட்களின் விவரங்கள்

அதிகாரம் -42

1. ஆசாரியர்களின் அறை வீடுகள் (1-14)
2. பிரகாரத்தின் அளவுகள் (15-20)



அதிகாரம் -43

1. தேவனின் மகிமை ஆலயத்துக்குத் திரும்ப வருகிறது(1-17)
2. பலிபீட ஊழியங்கள் (18-37)

அதிகாரம் -44

1. கிழக்கு வாசல் கர்த்தருக்கு மாத்திரம் உரியது என்பது குறித்து (1-3)
2. ஆசாரியர்கள் கண்டிக்கப்படுகின்றனர் (4-8)
3. விக்கிரக ஆராதனை செய்வோருக்கு ஆசாரிய ஊழியத்தில் பங்கு இல்லை (9-16)
4. ஆசாரியர்களுக்கான கடமைகள் (ஆசரிக்க வேண்டியவைகள்) (17-31)

அதிகாரம் -45

1. பரிசுத்த பயன்பாட்டிற்காக நிலம் பிரிக்கப்படுதல் (1-20)
2. பஸ்கா பண்டிகையின் போது கொடுக்க வேண்டிய காணிக்கைள் (21-25)
3. அவர்களது நியாத்தீர்ப்பு (4-49)

அதிகாரம் -46

1. அதிபதியின் ஆராதனைக்கான ஆசார ஒழுங்குகள்

அதிகாரம் -47

1. ஆலயத்திலிருந்து புறப்படும் நதியை குறித்த தரிசனம் (1-12)
2. தேசத்தின் எல்லைகள் (13-21)
3. தேசம் சீட்டு போட்டு பங்கிடப்படுதல் (22-23)

அதிகாரம் -48

1. பன்னிரண்டு கோத்திரஙகளுக்கான நில பகுதிகள் (1-20)
2. அதிபதியின் சிறப்புப் பகுதி (21-35)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 52

தானியேல் - DANIEL

எபிரேய வார்த்தை	:	தானீஏல் (DANIEL)
பெயர் அர்த்தம் .	:	தேவன் (என்) நியாயாதிபதி
எழுதியவர்	:	தானியேல் மற்றும் நேபுகாத்நேச்சார்
எழுதப்பட்ட இடம்	:	பாபிலோன்

வேதாகமத்தின் 27-வது புத்தகம்

மொத்த அதிகாரங்கள் - 12

மொத்த வசனங்கள் - 357

யாருக்கு எழுதினார் ?

பாபிலோனில் கைதிகளாகியிருந்த யூதர்களுக்கும், எங்குமுள்ள தேவ மக்களுக்கும்.

தானியேல் வாழ்ந்த காலம்



யோயாக்கீம் ராஜாவின் (யூதாவின் 18-வது ராஜா) காலத்தில் தானியேல் மற்றும் அவருடைய நண்பர்கள் பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் மூலமாக சிறை பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு போகப்படுகிறார்கள் (தானி 1.1-6)

இதன்பிறகு யூதா தேசத்தில் யோயாக்கீன் (19), சிதேக்கியா (20) போன்ற ராஜாக்கள் ஆட்சி செய்யும் பொதும் தானியேல் பாபிலோனில் இருக்கிறார்.

இதற்கு பின்பு சிதேக்கியா ராஜாவின் 11-வது வருஷத்தில் யூதர்கள் அனைவரும் சிறைப்பிடிக்கப்பட்டு பாபிலோனுக்கு கொண்டு வரப்படும்போதும் தானியேல் பாபிலோனில் இருக்கிறார்.

பாபிலோன் சாம்ராஜ்யம் முடிந்து மேதோ- பெர்சியா சாம்ராஜ்யம் வரும்போதும் தானியேல் பாபிலோனில் இருக்கிறார்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. பெரிய தீர்க்கதரிசிகளின் புத்தகத்தின் கடைசி புத்தகம்
2. யூதா தேசத்திலிருந்து பாபிலோனுக்கு சிறைப்பிடிக்கப்பட்டுபோன யூத வாலிபர்களின் வரலாற்றை குறித்து இந்த புத்தகம் கூறுகிறது.
3. யூத வாலிபர்களின் நேர்மையான வாழ்க்கையை குறித்து இதில் பார்க்கிறோம்.

4. தேவன் எவ்வித சூழ்நிலையில் தம்முடைய மக்களை பராமரிக்கிறார்? நாடுகளின் எதிர்காலத்தை எப்படி நிர்ணயிக்கிறார்? என்பதை குறித்து கூறுவது இதன் சிறப்பு ஆகும்.
5. பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேசச்சார் குறித்தும். தேவன் அவருக்கு கொடுத்த செல்வாக்கு, அவருக்கு வந்த பெருமையினால் அதை இழத்தல் போன்ற காரியங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
6. புறஜாதி ராஜாக்கள் "இஸ்ரயேலின் தேவனை உண்மை தேவன்" என்பதை இந்த எபிரேய புருஷர்கள் (தானியேல் மற்றும் அவருடைய நண்பர்கள்) மூலம் அறிந்து கொள்ள தேவன் செய்த காரியங்களை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்
7. சாத்ராக், மேஷாக். ஆபேத்நேகோ எரிகிற அக்கினி சூளையில் போடப்படுதல், தானியேல் சிங்க கெபியில் போடப்படுதல், நேபுகாத்நேச்சார் பார்த்த சிலை. தானியேல் பார்த்த தரிசனங்கள் போன்றவை இந்த புத்தகத்தின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

8. ஒவ்வொரு அதிகாரத்தின் முதல் வசனமும் (12 அதிகாரம் தவிர) ராஜாவின் பெயரில் வருவது இதன் சிறப்பு ஆகும்.

9. ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு செய்தியை கூறி முடிப்பது இதன் சிறப்பு ஆகும்.
10. தானியேல் புத்தகம் 1,8,9,10,11,12 அதிகாரங்கள் எபிரேய மொழியிலும், 2-7 அதிகாரங்கள் அராமிக் மொழியிலும் எழுதப்பட்டது.

இந்த புத்தகத்தில் கவனிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள்

1. இந்த புத்தகத்தில் அதிகாரங்கள் வரிசையாக இல்லை
2. இந்த புத்தகம் 2 சாம்ராஜ்யங்களை குறித்து கூறுகிறது.
    1. பாபிலோன் சாம்ராஜ்யம்
    2. மேதோ பெர்சிய சாம்ராஜ்யம்

3. பாபிலோன் சாம்ராஜ்யத்தில் என்ன நடந்தது? இந்த சாம்ராஜ்யம் எப்படி முடிவுக்கு வந்தது? என்பதையும் , அடுத்து மேதோ- பெர்சிய சாம்ராஜ்யத்தில் தானியேலுக்கு நடந்த விஷயங்கள் பற்றியும் இந்த புத்தகம் கூறுகிறது.
4. பாபிலோன் சாம்ராஜ்யத்தை குறித்து 1,2,3,4,5,7,8 அதிகாரங்களும் , மேதோ-பெர்சிய சாம்ராஜ்யத்தை குறித்து 6,9-12 அதிகாரங்களும் கூறுகிறது.
5. சாத்ராக். மேஷாக், ஆபேத்நேகோ இவர்களை அக்கினியில் போட்டது.
   "பாபிலோன் சாம்ராஜ்யம்"
   தானியேலை சிங்ககெபியில் மேதோ- பெர்சிய சாம்ராஜ்யம்



6. பாபிலோன் சாம்ராஜ்யம் முழுவதும் ராஜாவால் ஆளப்பட்டது
7. மேதோ- பெர்சிய சாம்ராஜ்ஜியத்தில் ராஜா இருந்தாலும், தேசாதிபதிகள் (Governer) ஆட்சி முறை இருந்தது.
   பாபிலோனுக்கு வரும் போது தானியேல் வாலிபனாக இருந்தார்.
   சிங்க கெபியில் போடும் போது வயதானவர்.

8. பாபிலோன் ராஜாக்கள்



BELSHAZZAR
பெல்ஷாத்சார்

1. நேபுகாத் நேச்சார்
   (தானி 2:1, 3:1, 4:1)
2. ஏவில் மொராதாக்
3. நெரிக்கிளிசர்
4. பெஷி மார்துக்
5. நெபோனிடஸ்
6. பெல்சாத்சார்
   (தானி 5:1 7:1 ,8:27)

இதில் இரண்டு ராஜாக்களை குறித்து மட்டும் வேதத்தில் பதிவு இருக்கிறது.

9. மேதிய ராஜாக்கள்

1. தரியு - தானிய 5:28,31/6:1/9:1/11:1)
2. கோரேஸ் - தானி 10.1

பழைய ஏற்பாட்டின் முடிவு வரை இந்த சாம்ராஜ்யம் இருக்கிறது.

10. யூதாவின் சிறையிருப்பு

இது வேதத்தின் முக்கிய மைய நிகழ்ச்சி ஆகும். இதை மையமாக கொண்டு ஒரு சில முக்கிய நிகழ்ச்சிகள் அடங்கியிருக்கிறது.

- சிறையிருப்புக்கு முன்
- சிறையிருப்பின் போது
- சிறைப்பிடித்த பின்

மூன்று கோணங்களில் சரித்திரத்தைப் பிரிக்கலாம். இதை மையமாக வைத்து வேதத்தில் முக்கியமான புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன.

1. சிறையிருப்புக்கு முன் - ஏசாயா, ஓசியா மற்றும் ஒரு சில புத்தகங்கள்
2. சிறையிருப்பின் போது - எரேமியா
3. சிறைப்பிடித்த பின் - எசேக்கியேல், தானியேல்

11. பாபிலோன் சாம்ராஜ்ய காலத்தின் சம்பந்தப்பட்ட புத்தகங்கள்

1. எசேக்கியேல் 2. தானியேல்

மேதோ – பெர்சியா ராஜ்யங்கள் காலத்தின் சம்மந்தப்பட்ட புத்தகங்கள்

1. எஸ்றா. 2. நேகேமியா 3. எஸ்தர் 4. ஆகாய் 5. சகரியா 6. மல்கியா
7. I- நாளாகமம் 8. II – நாளாகமம்

12. இராஜாக்கள்

1. சவுல்
2. தாவீது
3. சாலமோன்

} I.சாமுயேல், II சாமுயேல் , 1. இராஜாக்கள் 1-10

தேசம் 2 ஆக பிளவுப்படுதல்

1. இராஜா 11. அதிகாரம் முதல் II இராஜாக்கள் முடிய

சிறையிருப்பின் போது - ஏரேமியா

சிறைபிடிக்கப்பட்டபின் - எசேக்கியேல் , தானியேல்

சிறையிருப்பிலிருந்து திரும்பிய பின் - ஆகாய், எஸ்றா, எஸ்தர். நெகேமியா.

சகரியா – மல்கியா



"உம்முடைய வசனமே சத்தியம்" யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 53

ஆசிரியர் (தானியேல்) குறித்து



- விசுவாசம்,ஜெபவாழ்க்கை, அஞ்சாமை, உண்மை தன்மை போன்ற குணலட்சணங்கள் நிறைந்தவராக தானியேல் இருக்கிறார்.
- பாபிலோன் ஆட்சியின் போது நேபுகாத்நேச்சாரால் உயர்த்தப்பட்ட தானியேல், பாபிலோன் சாம்ராஜ்யம் வீழ்ந்து மேதோ- பெர்சிய பேரரசு உருவான போதும் தமது சிறப்புமிகு பதவியில் தொடர்வதை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
- நேபுகாத் நேச்சார் தொடங்கி, பெல்ஷாத்சார் வரையிலும், தரியு, கோரேஸ் காலத்திலும் ஒரு உயர்பதவியில் தானியேல் இருப்பதை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
- தேவனால் தானியேலை குறித்து சொல்லும்போது " நீ மிகவும் பிரியமானவன்" (தானி 9.23). " பிரியமான புருஷனாகிய தானியேலே" (தானி 10.11) என்று சொல்வதைப் பார்க்கிறோம்.
- தானியேல் வாலிப வயதில் பாபிலோனுக்கு சென்று பாபிலோனிலேயே வயது முதிர்ந்தவராகி பாபிலோனிலேயே மரித்தார் என்று வரலாற்று பிண்ணனி கூறுகிறது.
- தானியேலை மாத்திரம் இந்த புததகம் கூறாமல் தானியேலின் நண்பர்களான சாத்ராக், மேஷாக். ஆபேத்நேகோ அவர்களின் விசுவாசமும், சாதனைகளும் இதில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

தானியேல் புத்தகத்தை படிக்கும்முறை

- 12 அதிகாரங்களை தொடர்ச்சியாக படிக்க கூடாது
- தொடர்ச்சியான பதிவுகள் இல்லை
- ஒவ்வொரு அதிகாரமும் ஒவ்வொரு செய்தியை கூறி முடிக்கிறது

அதிகாரம் -1

- தானியேல் அவருடைய நண்பர்கள் (அனனியா மிஷாயேல், அசரியா) பற்றி கூறுகிறது



அதிகாரம் -2



- நேபுகாத் நேச்சாரின் இரண்டாம் வருஷத்தில் நடந்த நிகழ்ச்சிகளை இந்த அதிகாரம் கூறுகிறது.

- நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பணம். அதன் விளக்கம் இதில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

அதிகாரம் - 3.

நேபுகாத் நேச்சாரின் ஆட்சி தொடர்கிறது

- அவர் பண்ணின பொற்சிலை
- தானியேலின் நண்பர்கள் அக்கினி சூளையில் போடப்படுதல்
- தேவன் அவர்களை விடுவித்தல்.





அதிகாரம் -4

நேபுகாத் நேச்சாரின் ஆட்சி தொடர்கிறது





- ♣ இந்த அதிகாரம் நேபுகாத் நேச்சார் எழுதியது ஆகும்
- ♣ நேபுகாத் நேச்சார் பார்த்த கனவு
- ♣ தானியேல் கனவுக்கு விளக்கம் அளிக்கிறார்
- ♣ கனவு நிறைவேறுகிறது.

அதிகாரம் -5

- ♣ பெல்ஷாத்சார் ராஜாவின் ஆட்சியில் நடந்தவை பாபிலோனின் 7-வது ராஜா இவர். (இடைகாலத்தில் வந்த ராஜாக்களை குறித்து எந்த விபரமும் பதிவு செய்யப் படவில்லை)
- ♣ பெல்ஷாத்சார் செய்த அகந்தை மிகுந்த விருந்தை குறித்தும், அதனிமித்தம் தேவன் சுவரில் எழுதிய எழுத்துக்கள் குறித்தும் பார்க்கிறோம்.
- ♣ இதற்குரிய விளக்கத்தை தானியேல் வரவழைக்கப்பட்டு பெல்ஷாத்சார் தெரிந்து கொள்கிறார்.
- ♣ பெல்சாத்ஷார் எவ்வாறு கொலை செய்யப்பட்டார் என்பதை இந்த அதிகாரம் கூறி முடிக்கிறது.

அதிகாரம் -6

மேதிய - பெர்சிய சாம்ராஜ்யம் இந்த அதிகாரத்தில் ஆரம்பிக்கிறது

மேதியனாகிய தரியுவின் ஆட்சிகாலம்

- ♣ தானியேலுக்கு கிடைத்த உயர் பதவி
- ♣ தானியேலுக்கு எதிரான சதிதிட்டம்
- ♣ தானியேல் சிங்க குகையில் போடப்படுதல்
- ♣ தானியேல் அற்புதமாக விடுவிக்கப்படுதல்

அதிகாரம் -7

மீண்டும் பாபிலோன் சாம்ராஜ்யத்தில் நடந்த காரியங்கள் (பெல்ஷாத்சாரின் முதலாம் வருஷம்) இந்த அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- ♣ நான்கு பெரிய மிருகங்களை குறித்த தானியேலின் தரிசனம்
- ♣ அதற்குரிய விளக்கங்கள் தானியேலுக்கு அறிவிக்கப்படுதல்

அதிகாரம் -8

பாபிலோன் சாம்ராஜ்யத்தை பற்றி கூறுகிறது

பெல்ஷாத்சாரின் மூன்றாம் வருஷம்

- ♣ ஆட்டுக்கடா, வெள்ளட்டு கடா ஆகியவற்றை குறித்து தானியேல் பார்த்த தரிசனம்
- ♣ காபிரியேல் தூதன் தானியேலை ஆறுதல்படுத்தி கனவின் பொருளை விளக்கி காண்பிக்கிறார்.

அதிகாரம் -9

மேதிய – பெர்சிய சாம்ராஜ்யத்தில் நடந்த காரியங்களை இந்த அதிகாரம் கூறுகிறது (தரியுவின் முதலாம் வருஷத்தில் நடந்தது)

- ♣ தானியேல் தனது மக்களுக்காக ஜெபித்தல்
- ♣ 70 வாரங்கள் குறித்து தானியேலுக்கு காபிரியேல் அறிவித்தல்.

அதிகாரம் - 10

பெர்சிய ராஜா கோரேஸின் மூன்றாம் வருஷத்தில் நடந்த காரியங்களை இந்த அதிகாரம் கூறுகிறது

- ♣ தானியேல் பார்த்த மகிமையான தரிசனம் குறித்து இந்த அதிகாரம் கூறுகிறது.

அதிகாரம் - 11 மற்றும் 12

மேதிய பெர்சிய சாம்ராஜ்யத்தில் நடந்த காரியங்கள் (மேதியனாகிய தரியுவின் முதலாம் வருஷம்)

- ♣ தனியேலுக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவ இரகசியங்கள்

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 54

எஸ்றா - (EZRA)



எபிரேய வார்த்தை : எய்ஸ்றா

பெயர் அர்த்தம் . : உதவி

எழுதியவர் : எஸ்றா

எழுதப்பட்ட இடம் : பெர்சியா (பாபிலோன்) மற்றும் எருசலேம்

எபிரேய வேதத்தில் எஸ்றா, நெகேமியா இரண்டும் ஒரே புத்தகங்களாக இருக்கிறது.

வேதாகமத்தின் 15-வது புத்தகம்

மொத்த அதிகாரங்கள் - 10

மொத்த வசனங்கள் - 280

எஸ்றா வாழ்ந்த காலம்



பெர்சிய ராஜாவான கோரேஸின் காலத்தில் கி.மு. 538-ல் இஸ்ரயேலர் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்புவதற்கும் எருசேலம் தேவாலயத்தை கட்டுவதற்குமான ஆணையை பிறப்பித்தார் (எஸ்றா 1:1 - 4)

இப்போது செருபாபேல் தலைமையில் சுமார் 49,897 பேர் எருசலேமிற்கு புறப்பட்டு வந்தனர். இதன் பிறகு அர்த்தசஷ்டா ராஜாவின் காலத்தில் (சுமார் 82 ஆண்டுகளுக்கு பிறகு) எஸ்றா தலைமையில் (1754 பேர்) எருசலேம் வருகின்றனர்.

எஸ்றா புத்தகம் வாசிக்கும் போது கவனிக்க வேண்டிய முக்கிய காரியங்கள்

பாபிலோன் ஆட்சியின்போது சிறைப்பிடிக்கப்பட்டு சென்ற யூதர்கள் மேதோ- பெர்சியா சாம்ராஜ்யத்தின்போது 3 கட்டங்களில் எருசலேமிற்கு திரும்பி வந்தனர்.

1. முதல் தடவை

   செருபாபேல் தலைமையில்

2. இரண்டாவது தடவை

   எஸ்றா தலைமையில்

3. மூன்றாவது தடவை

   நெகேமியா தலைமையில்

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. தமது மக்களை (இஸ்ரயேலரை) அவர்களுடைய நாட்டிற்கு திரும்ப வரப்பண்ணுவேன் என்ற வாக்குத்தத்ததில் தேவன் எவ்வளவு நேர்மையுள்ளவராயிருந்தார் என்பதை இந்த புத்தகம் கூறுகிறது.

2. பல ஆண்டுகளுக்கு முன்பாக கோரேஸ் ராஜாவை குறித்து ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுவதை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
3. 70 வருடம் பாபிலோனிலிருந்து இப்போது எருசலேம் வந்த யூதர்கள், தேவனுடைய ஆலயம் கட்ட எடுத்த முயற்சிகள், அங்கிருந்த புறஜாதிகள் மூலம் வந்த தடைகள், தேவன் தம்முடைய தீர்க்க தரிசிகள் மூலம் கொடுத்த உற்சாகம், திரும்ப தேவனுடைய ஆலயம் கட்டப்படுதல் போன்ற காரியங்கள் இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.
4. ஆசாரியனாகிய எஸ்றா பாபிலோனிலிருந்து வருதல், அவருடைய ஆசாரிய ஊழியம், சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்களின் தவறு, அவர்களின் மனந்திரும்புதல் போன்ற காரியங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் (எஸ்றா) குறித்து

1. எஸ்றா புத்தகத்தை எழுதியவர் ஆசாரியனாகிய எஸ்றா. ஆனால் தான் இதை எழுதியதாக அவர் குறிப்பிடவில்லை
2. இவர் ஆரோனின் வம்சத்தில் வந்தவர் (எஸ்றா 7: 1 - 5)

3. அவர் பாபிலோனில் இருந்தாலும் நியாப்பிரமானத்தை நன்கு கற்று தேர்ந்தவராக இருந்தார் (எஸ்றா 7:10)
4. சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்களிடம் ஒரு சில தவறுகளை கண்டபோது தேவனுடைய சமுகத்தில் அழுது விண்ணப்பிக்க கூடியவராக இருந்தார்.

இந்த புத்தகத்தை படிக்கும் முறை

2 பகுதிகளாக பிரிக்கலாம்

1. செருபாபேல் தலைமையில் தேவலாயத்தை திரும்பகட்டுதல் (1 - 6 அதிகாரங்கள்)
2. எஸ்றா தலைமையில் மக்களை சீர்திருத்தும் பணி (7 -16 அதிகாரஙகள்)

அதிகாரம் -1



♣ தேவாலயம் கட்டுவதற்கான கோரேசின் விளம்பரம் (1-6)

♣ எருசலேமிலிருந்து பாபிலோன் ராஜா நேபுகாத்நேச்சார் எடுத்துவந்த தேவாலயத்தின் பணிமுட்டுகளை கோரேசு திரும்பக் கொடுக்கிறார்.

அதிகாரம் -2

பாபிலோனிலிருந்து திரும்பி வந்த மக்கள் தொகை குறித்த விபரங்கள்

அதிகாரம் -3

♣ பலிபீடம் கட்டப்படுதல் (1-3)

♣ பலிகள் திரும்பவும் செலுத்தப்படுதல் (4-7)

♣ தேவாலயம் கட்ட அஸ்திபாரம் போடப்படுகிறது (8-13)

அதிகாரம் -4

♣ தேவாலயம் கட்டும் பணி தடைப்படுகிறது (1 - 6)

♣ எருசலேமில் இருந்த புறஜாதிகள் பெர்சிய ராஜாவிக்கு கடிதம் அனுப்புதல் (7-16)

♣ தேவாலயம் கட்டுவதை நிறுத்தி வைக்கும்படி பெர்சியா ராஜா கட்டளையிடுதல் (17-24)

அதிகாரம் -5



- ♣ தேவனுடைய ஆலயத்தை கட்ட தொடங்கும்படி ஆகாய், சகரியா தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுதல் (1)
- ♣ யோசுவாவும், செருபாபேலும் தேவனுடைய ஆலயத்தை கட்ட தொடங்குதல் (2-5)
- ♣ ஆலயப் பணியை யூதர்கள் ஆரம்பித்திருப்பதை குறித்து பெர்சிய ராஜா தரியுவிற்கு புறஜாதிகள் கடிதம் அனுப்புதல்

அதிகாரம் -6

- ♣ தேவாலயப் பணி தொடர தரியு கட்டளையிருகிறார் (1-12)
- ♣ ஆலயப்பணி முடிவடைதல் (13-15)
- ♣ ஆலயப் பிரதிஷ்டை குறித்து ஆலோசனை (16 -18)
- ♣ ஜனங்கள் பஸ்கா ஆசரித்தல்(19-24)

அதிகாரம் -7

- ♣ எஸ்றா பாபிலோனிலிருந்து எருசலேமிற்கு வருதல் (1 -10)
- ♣ பெர்சிய ராஜாவான அர்த்தசஷ்டா எஸ்றாவை எருசலேமிற்கு செல்லும்படி எழுதிய கடிதம் (11 -26)
- ♣ தேவனின் தயவையும், கருணையும் நினைத்து எஸ்றா புகழ்ந்து போற்றுதல் (27 -28)

அதிகாரம் -8

- ♣ பாபிலோனிலிருந்து எஸ்றாவுடன் வந்தவர்கள் குறித்த விபரம் (1-14)
- ♣ தேவாலய பணிக்காக லேவியர்களை அனுப்பி வைக்கும்படி கேட்டல்(15 -20)
- ♣ பாதுகாப்பான ஒரு பயணத்திற்காக உபவாசம் கடைபிடிக்கப்படுதல்(21 -36)

அதிகாரம் -9

- ♣ இஸ்ரயேலர் புறஜாதி பெண்களை திருமணம் செய்தபடியால் எஸ்றா புலம்புதல் (1-4)
- ♣ தேவனிடம் எஸ்றா விண்ணப்பம் செய்தல் (5-15)

அதிகாரம் -10

- ♣ புறஜாதி பெண்களை தள்ளிவிட கட்டளையிட்டு எஸ்றா செய்யும் சீர்திருத்தம் (1 -11)
- ♣ புறஜாதி பெண்களை திருமணம் செய்தவர்கள் யார் என்ற விபரம் (12-44)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 55



I.நாளாகமம் - (I CHRONIGLES)

எபிரேய வார்த்தை : திவ்றேஹய்யாமீம் (Divrei Hayamim)

பெயர் அர்த்தம் . : நாள் குறிப்புகள்

எழுதியவர் : எஸ்றா

எழுதப்பட்ட இடம் : எஸ்றா (யூத பாரம்பரை நம்பிக்கையின்படி)

எபிரேய மூலபதத்தில் 1. நாளாகமம், 2 - நாளாகமம் ஒரே புத்தகங்களாக இருக்கிறது.

வேதாகமத்தின் 13-வது புத்தகம்

மொத்த அதிகாரங்கள் - 29

மொத்த வசனங்கள் - 942

யாருக்கு எழுதினார் ?

தேவனுடைய ஜனங்களான இஸ்ரயேலருக்கு

ஆசிரியர் (எஸ்றா) குறித்து

எஸ்றா புத்தகத்தில் பார்க்கவும்

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. II சாமுயேல் புத்தகத்தில் சொல்லப்பட்ட காரியங்கள், அதன் விளக்க உரையாக இந்த புத்தகம் இருக்கிறது.
2. இதை சாமுயேல் ராஜாக்களின் புத்தகத்தின் மறுபதிப்பு என்றும் கூட சொல்லலாம்.
3. சாமுயேல், இராஜாக்கள் புத்தகத்தில் உள்ள அனைத்து செய்திகளும் இதில் பதிவிடப்படாமல் **தாவீதிலிருந்து தொடங்கப்பட்ட யூத ராஜ குடும்பத்தின் ஒரு வரலாறாக** இது இருக்கிறது.

4. தாவீதின் முன்னோர்களின் பட்டியலுடன் தொடங்கும் இந்த புத்தகம் தாவீதின் நீதியான ஆட்சியின் ஆவிக்குரிய சிறப்புகளை வெளிப்படுத்தி முடிவடைகிறது.
5. 1-நாளாகமம் அதிகாரம் 1 முதல் 9 வரை ஆதாம் முதல் தாவீது வரையிலான வம்ச பட்டியலை குறிப்பிடுகிறது.

6. சிறையிருப்பிலிருந்து வந்த யூதமக்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக இந்த புத்தகத்தை எஸ்றா எழுதியிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.
7. பாபிலோனிலிருந்து இஸ்ரயேலின் மீதியானவர்களாக திரும்பிய தேவமக்களுக்கு அவர்களது பழங்கால வாழ்வைப் பற்றிய ஒரு ஆவிக்குரிய பார்வையை வழங்குவதற்காக இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

புத்தகத்தை படிக்கும் முறை

இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்

1. தாவீதின் தலைமுறைப்பட்டியல் (1-9 அதிகாரங்கள்)

இதில் தாவீது மற்றும் இஸ்ரயேலின் முற்பிதாக்களின் வரலாறு ஆதாம் முதல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. தாவீதின் வாழ்க்கையில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகள் (10 -29 அதிகாரங்கள்)

1. சவுலுக்கு பயந்து தாவீது வாழ்ந்த நாடோடி வாழ்க்கை
2. தாவீது எபிரோனில் 7 ஆண்டுகள் யூதா கோத்திரத்தை மட்டும் ஆண்டது மற்றும் பத்சேபாள் நிகழ்ச்சி இதில் பதிவு செய்யப்படவில்லை.
3. தாவீதுக்கு தேவன் ஆலயத்தை கட்ட அனுமதி அளிக்காவிட்டாலும், அதற்கான பொருட்கள் ஆயத்தம் செய்ய வாய்ப்பளித்த விபரங்கள் இந்த புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.
4. தாவீதின் துதி மற்றும் சாலமோனின் ஆட்சியின் ஆரம்பத்துடன் இந்த புத்தகம் முடிவடைகிறது.

அதிகாரம் -1

1. ஆதாம் முதல் நோவா வரை வம்சவரலாறு (1 -4)
2. சேம், காம், யாப்பேத் ஆகியோரின் வம்சம் (5 -23)
3. சேம் முதல் ஆபிரகாம் வரை (24 -28)
4. இஸ்மயேலின் வம்ச வரலாறு (29 -42)
5. ஏதோமின் ராஜாக்கள் (43 -54)

அதிகாரம் -2

1. இஸ்ரயேலின் (யாக்கோபின்) புதல்வர்கள் (1 -2)
2. யூதாவின் புதல்வர்கள் (3 -12)
3. ஈசாயின் புதல்வர்கள் (13 -17)
4. காலேபின் வம்சத்தினர் (18 -20)
5. எஸ்ரோன் , யொமெயேல்,சேசான் வம்சம் (21-55)

அதிகாரம் -3

1. தாவீதின் புதல்வர்கள் (1 - 9)
2. சாலமோன் முதல் சிதேக்கியா வரை (10 -16)
3. எகோனியாவின் புதல்வர்கள் (17 - 24)

அதிகாரம் -4

1. யூதாவின் புதல்வர்கள் (1 - 4)
2. அசூரின் புதல்வர்கள் (5 - 8)
3. யாபேசின் சகோதர்கள் (9 - 10)
4. யாபேசின் ஜெபம் (11 - 14)
5. காலேபின் வம்சம் (15 - 43)

அதிகாரம் -5

1. யூதாவின் வம்சம் (1 -8)
2. யூதா வம்சம் குடியிருந்த இடம் (9 -10)
3. காத்தின் வம்சம் (11 -17)
4. இரண்டரை கோத்திரத்தாரை குறித்த விபரங்கள் (18 -26)

அதிகாரம் -6

1. லேவியின் குமாரர்கள் (1 -3)
2. ஆசாரியர்களின் வம்சம் (4 -48)
3. ஆரோனின் புதல்வர்களின் வேலைகள் (49 -53)
4. அவர்களின் குடியிருப்பின் பகுதிகள் (54 -80)

அதிகாரம் -7

1. இசக்காரின் குமாரர்கள் (1 -5)
2. பென்யமீன் வம்சம் (6 -12)
3. நப்தலி வம்சம்(13)
4. மனாசே (14-19)
5. எப்பிராயீம் (20-29)
6. ஆசேர் (30-40)

அதிகாரம் -8

1. பென்யமீன் கோத்திர வம்சம் (1 -32)
2. சவுல் மற்றும் யோனத்தானின் புதல்வர்கள் (33 -39)



அதிகாரம் -9

1. இஸ்ரயேல் மற்றும் யூதாவின் வம்ச பட்டியல் (1 -26)
2. லேவியரின் சிறப்பு வேலைகள் (27 -34)
3. சவுலின் வம்சம் (35 -44)

அதிகாரம் -10



1. சவுலின் மரணம் (1 -7)
2. பெலிஸ்தியர் வெற்றி பெறுதல் (8 -10)
3. யாபேஸ் மனிதர், சவுல் மற்றும் சவுலின் குமாரர் உடல்களை அடக்கம் செய்தல் (11-13)

அதிகாரம் -11



1. தாவீதை ராஜாவாக அபிஷேகம் செய்கின்றனர் (1 -3)
2. தாவீது எபூசியரிடமிருந்து சீயோன் கோட்டையை கைப்பற்றுதல் (4 -9)
3. தாவீது படைவீரர்களின் பட்டியல் (10 -47)

அதிகாரம் -12

1. சிக்லாகில் தாவீது இருக்கும்போது அவரிடம் வந்த பராக்கிரமசாலிகள் (1 - 22)
2. எபிரோனில் தாவீதிடம் வந்த வீரர்கள் (23 -40)

அதிகாரம் -13

1. தாவீது கீரியாத் - யாரீமிலிருந்து உடன்படிக்கை பெட்டியை கொண்டு வருதல் . ஊசா பெட்டியை தொட்டு மரித்தல். பெட்டி ஒபேத்- ஏதோமின் வீட்டிற்கு கொண்டு போகபடுதல்.

அதிகாரம் -14

1. ஈராம் தாவீதுக்கு உதவிசெய்தல் (1)
2. தாவீதின் புகழ் (2)
3. தாவீதின் மனைவிகள் (3 -7)
4. பெலிஸ்தியரின் மேல் தாவீதின் வெற்றி (8 -17)

அதிகாரம் -15

1. தாவீது ஓபேத் ஏதோமின் வீட்டிலிருந்து உடன்படிக்கை பெட்டியை எடுத்து வருதல் (1 -24)
2. தாவீதின் நடனம் (25 -28)
3. மீகாள் தாவீதை அவமதித்தல் (29)

அதிகாரம் -16

1. தாவீதின் சமாதான பலிகளும் கொண்டாட்டமும் (1-6)
2. தாவீதின் துதிபாடல் (7-43)

அதிகாரம் -17

1. தேவாலயத்தை கட்ட தாவீது விரும்புதல் . தேவன் மறுத்தல் (1-10)
2. தாவீதின் சந்ததிக்கு தேவன் தரும் வாக்குதத்தம் (11-15)
3. தாவீதின் ஜெபமும் , துதி ஸ்தோத்திரங்களும் (16-17)

அதிகாரம் -18

1. தாவீதின் வெற்றிகள் (1 -13)
2. தாவீதின் ஆட்சி குறித்து (14 -17)

அதிகாரம் -19

1. அம்மோனியர் செய்த தவறு . அதனிமித்தம் அவர்களை முறியடித்தல்.

அதிகாரம் -20

தாவீதின் வெற்றிகள் (ரப்பா, அம்மோனியர், பெலிஸ்தியர்)

அதிகாரம் -21

1. மக்களை தொகையிட்டு தாவீது செய்த பாவம் (1-13)
2. அதனால் ஏற்பட்ட விளைவு (14-30)

அதிகாரம் -22

1. தேவனுடைய ஆலயம் கட்ட தாவீது எடுத்த முயற்சிகள்

அதிகாரம் -23

1. தாவீது சாலமோனை ராஜாவாக்குதல் (1)
2. லேவியரின் தொகையும் , அவர்களது ஊழியமும் (2-32)

அதிகாரம் -24

ஆரோனின் புதல்வர்கள்,

கோகாத்தியர், மெராரியரின் புதல்வர்கள் குறித்த தகவல்கள்

அதிகாரம் -25

1. சங்கீதகாரர்களின் ஊழியமும் அவர்கள் தொகையும்(1 -7)
2. சங்கீதகாரர்களில் 24 பிரிவுகள் குறித்து (8-31)

அதிகாரம் -26

1. வாசல் காக்கிறவர்களின் வேலைகள் இடங்கள் குறித்து (1-19)
2. பண்டக சாலையில் பொருட்கள் சேர்ப்பது குறித்த காரியங்கள் (20-32)

அதிகாரம் -27

1. விசாரிப்புகாரர்கள் குறித்த விபரங்கள் (1 -15)
2. 12 கோத்திரங்களின் தலைவர்கள் (16 -34)

அதிகாரம் - 28

தாவீதின் போதனை (மக்களுக்கு, சாலமோனுக்கு)

அதிகாரம் -29

1. தேவாலய பணிக்காக மனபூர்வமாக கொடுக்க ஜனங்களை தாவீது உற்சாகப்படுத்துதல் (1-9)
2. தாவீதின் துதி மற்றும் அவரது ஆட்சியின் முடிவு (10-30)

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 56

II.நாளாகமம் - (II CHRONIGLES)

I நாளாகமம், II நாளாகமம் எபிரேய மூலபதத்தில் ஒரே புத்தகங்களாக இருக்கிறது.

வேதாகமத்தின் 14-வது புத்தகம்

மொத்த அதிகாரங்கள் - 36

மொத்த வசனங்கள் - 822

இந்த புத்தகத்தின் சிறப்பு

- ♣ 1.இராஜாக்கள் II இராஜக்கள் புத்தகத்தில் காணப்படும் வரலாற்று பதிவுகள் இந்த புத்தகத்திலும் இடம் பெற்றுள்ளது.
- ♣ யூதா தேசத்தில் (2 கோத்திரம்) வந்த ராஜாக்கள், அவர்கள் ஆட்சி முறை குறித்து மட்டுமே ஏறக்குறைய இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ♣ தேவ ஜனங்கள் தேவனை தள்ளிவிட்டு, தங்கள் சொந்த வழிகளில் செல்லும்போது தேவன் தமது ஆசிர்வாதத்தை திரும்ப எடுத்துக்கொள்கிறார். அவரை சார்ந்து பிரமாணங்களுக்கு கீழ்படியும் போதோ வெற்றி பாதையில் நடத்துகிறார் என்பதை இந்த புத்தகத்தில் ஆசிரியர் (எஸ்றா) பலமுறை எடுத்துக் காட்டியுள்ளதைப் பார்க்கிறோம்.

புத்தகத்தை படிக்கும் முறை

2 பிரிவுகளாக பிரிக்கலாம்

1. சாலமோனின் ஆட்சிகாலம் (1-9 அதிகாரங்கள்)
2. யூத ராஜாக்களின் ஆட்சி (10-36 அதிகாரங்கள்)

1. சாலமோனின் ஆட்சிகாலம் (1-9 அதிகாரங்கள்)



சாலமோனின் ஆட்சிகாலம் குறித்துப் பார்க்கும்போது **சமாதானம், செல்வம்** ஆகியவற்றின் பொற்காலமாயிருந்தது. இக்காலத்தில் சாலமோனின் **செல்வ பெருக்கு, ஞானம், அரண்மனை, தேவாலயம்** ஆகியவை சிறப்பு செய்திகளாக விளங்கின. இந்த முதல் பிரிவில் 9 அதிகாரங்களில் முதல் 6 அதிகாரங்கள் தேவாலயம் கட்டுதல் அர்பணிப்பு போன்றவற்றை மையமாக

கொண்டு எழுதப்பட்டுள்ளது. ஏன் இவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்பட்டது என்றால் இதை எழுதிய எஸ்றா (இஸ்ரயேல் ஜனங்கள் பாபிலோனிலிருந்து திரும்பி வந்து இப்போது மீண்டும் தேவாலயம் கட்டி முடித்துள்ளனர்) இஸ்ரயேல் ஜனங்களுக்கு முன்பிருந்த தேவாலயத்தை குறித்த செய்திகளை அவர்கள் அறிந்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இதை எழுதியிருக்க வேண்டும்.

2. யூத ராஜாக்களின் ஆட்சி

சாலமோனின் மரணத்திற்கு பிறகு தேசம் இரண்டாக பிரிகிறது.

இதில் யூதா தேசத்தில் வந்த ராஜாக்களின் ஆட்சி முறை குறித்து இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் 20 ராஜாக்கள் வந்து ஆட்சி செய்தனர். இதில் 8 ராஜாக்கள் மக்களை விக்கிரகராதனையிலும், ஒழுக்க சீர் குலைவுகளிலிமிருந்து தூக்கி விட முயன்றனர். ஆனால் அது அநேக நாட்கள் நீடிக்கவில்லை என்பதைப் பார்க்கின்றோம்.

இறுதியில் யோசியாவிற்கு பின் வந்த நான்கு ராஜாக்களின் ஆட்சி காலத்தில் யூதா தேசம் முழுமையான அழிவை நோக்கி சென்றது. சிதேக்கியா ராஜாவின் காலத்தில் எருசலேம் நகரமும் தேவாலயமும் முற்றிலும் அழித்து ஒழிக்கப்பட்டது.

இதன்பிறகு 70வருடம் கழித்து பெர்சிய ராஜாவான கோரேஸ் யூதர்கள் நாடு திரும்பவும். எருசலேம் தேவாலயத்தை கட்டவும் ஆணை பிறப்பித்தார்.

அதிகாரம்-1

1. சாலமோன் கிபியோனில் தகனபலியிடுகிறார் (1 -6)
2. தேவன் சாலமோனுக்கு ஞானத்தை தருதல் (7 -12)
3. சாலமோனின் செல்வமும், புகழும் (13 -17)

அதிகாரம்-2

1. தேவாலயம் கட்டின சாலமோனின் பணியாட்கள் (1 -2)
2. கொத்து வேலை செய்ய திறமையான ஒருவரை அனுப்பும்படி ஈராமிடம் கேட்கிறார்(3-10)
3. ஈராமின் பதில் (11-18)



அதிகாரம்-3

1. தேவாலயம் கட்ட வேண்டிய இடமும் காலமும் (1 -2)
2. ஆலயத்தின் அளவும் அலங்காரமும் (3 -7)
3. மகாபரிசுத்த ஸ்தலம் குறித்து (8 -13)
4. திரைசீலையும், தூண்களும் குறித்து (14 -17)

அதிகாரம்-4

1. வெண்கலப் பலிபீடம் (1)
2. கடல் தொட்டி (2-5)
3. கொப்பரைகள் (6-7)
4. மேசைகள் (8-10)
5. கலங்கள், சட்டிகள்(11-22)

அதிகாரம்-5

1. நேர்ந்து கொண்ட பொருட்களை தேவனுடைய ஆலயத்தின் பொக்கிஷங்களில் வைத்தல் (1)
2. கர்த்தருடைய பெட்டி தேவாலயத்திற்கு கொண்டுவரப்படுதல் (2 - 14)

அதிகாரம்-6

1. சாலமோன் மக்களை ஆசிர்வதித்து தேவனைத்துதித்தல் (1 -11)
2. தேவாலய பிரதிஷ்டையின் போது சாலமோனின் ஜெபம் (12 -42)

அதிகாரம்-7

1. சாலமோனின் ஜெபத்திற்கு தேவனின் அங்கிகாரம் (1-2)
2. மக்கள் தேவனை பணிகின்றனர் (3)
3. சாலமோனின் பலிகள் (4 -11)
4. தேவன் சாலமோனுக்கு தரிசனமாதல் (12 -22)

அதிகாரம்-8

1. சாலமோனின் கட்டிட வேலைகள் கானானியரை அவர் வேலைக்கு பயன்படுத்துதல் (1-11)
2. சாலமோனின் பண்டிகை கால பலிகள்(12-18)

அதிகாரம்-9

1. சேபாவின் ராஜஸ்திரீ சாலமோனை சந்தித்தல்(1-12)
2. சாலமோனின் செல்வப்பெருக்கு(13-28)
3. சாலமோனின் ஆட்சியும் முடிவும்(29-31)

<u>அதிகரம்-10</u>

1. ரெகோபெயாம் ராஜாவாகுதல். முதியோரின் ஆலோசனையை ரெகோபெயாம் தள்ளி விடுதல் (1 -15)
2. 10 கோத்திரங்கள் ரெகோபெயாமை எதிர்த்தல் (16 -17)
3. ரெகோபெயாம் எருசலேமிற்கு செல்லுதல் (18 -19)

<u>அதிகாரம் -11</u>

1. இஸ்ரயேலின் மீது போர் செய்ய ரெகோபெயாம் முயற்சித்தல் அதை செமாயா தீர்க்கதரிசி தடுத்தல் (1 -17)
2. ரெகோபெயாமின் குடும்பம் (18 -23)

<u>அதிகாரம் -12</u>

1. தேவனை தள்ளிவிட்ட ரெகோபெயாமை சீஷாக் வெற்றி கொள்கிறார்.(1-12)
2. ரெகோபெயாமின் ஆட்சியும் முடியும்(13-16)



<u>அதிகாரம் -13</u>

1. அபியா ராஜாவாகுதல் (1)
2. அபியாவிற்கும் யெரோபெயாமிற்கும் யுத்தம். யெரோபெயாம் தோற்கடிக்கப்படுதல் (2 -22)

<u>அதிகாரம்-14</u>



1. ஆசா ராஜாவாகுதல் (1)
2. ஆசா விக்கிரகங்களை ஒழித்தல் (2 -5)
3. ஆசாவின் ஆட்சி காலத்தில் அமைதி நிலவியதால் தேசத்தை வலிமைப்படுத்துதல் (6 -8)
4. எத்தியோப்பியரான சேராவை தோற்கடித்தல் (9-15)

<u>அதிகாரம்-15</u>

1. ஆசாவும் தேவ ஜனங்களும் தேவனோடு ஓர் உடன்படிக்கை செய்தல் (1 -15)
2. ஆசா விக்கிரக ஆராதனை செய்து வந்த தன் தாயை அரசி பதவியில் இருந்து அகற்றுதல் (16 -19)

அதிகாரம்-16

1. சீரிய ராஜாவுடன் ஆசா உடன்படிக்கை செய்தல் (1 -6)
2. ஞானதிருஷ்டிகாரன் அனானி ஆசாவை கண்டித்தல் (7 -11)
3. ஆசாவின் மரணமும் அடக்கமும் (12 -14)

அதிகாரம்-17

1. யோசபாத் ராஜாவாகுதல் (1)
2. யோசபாத்தின் நல் ஆட்சியும் வளர்ச்சியும் (2 -6)
3. யூத மக்களுக்கு போதிப்பதற்கு லேவியரை அனுப்புதல் (7 -11)
4. யோசபாத்தின் உயர்வு, படைதலைவர்கள் படைகள் குறித்து (12 -19)

அதிகாரம்-18

1. யோசபாத், ஆகாப் இணைந்து ராமோத்தின் மேல் படையெடுத்தல் (1 -3)
2. ஆகாபின் கள்ளத் தீர்க்கதரிசிகள் பொய்தீர்க்கதரிசனம் உரைத்தல் (4 -13)
3. மிகாயாவின் தீர்க்க தரிசனம் (14 -31)
4. ஆகாபின் மரணம் (32 -34)

அதிகாரம்-19

1. யோசபாத்தை யெகூ தீர்க்கதரிசி சந்தித்தல்(1-4)
2. நியாயாதிபதிகளுக்கு யோசபாத் அளிக்கும் அறிவுரைகள்(5-7)
3. ஆசாரியருக்கும் லேவியருக்கும் அறிவுரைகள்(8-11)

அதிகாரம்-20

1. மூன்று ஜாதிகள் யோசபாத்திற்கு விரோதமாக வருதல், அதனிமித்தம் யோசபாத்தின் ஜெபம் (1 -21)
2. எதிரி படைகளின் படு தோல்வி (22 -30)
3. யோசபாத்தின் ஆட்சி (31 -37)

அதிகாரம்-21



1. யோசபாத்தின் மரணத்திற்கு பின்பு யோராம் ராஜாவாகுதல் (1 -4)
2. யோராமின் தவறான செயல்பாடுகள் (5 -7)
3. ஏதோமியர் கலகம் செய்தல் (8 -17)
4. யோராமிற்கு ஏற்பட்ட தீராத நோய், அவரது மரணம் (18 -20)

அதிகாரம்-22

1. அகசியா ராஜாவாகுதல் (1)
2. அகசியாவின் தவறான ஆட்சி முறை (2 -4)
3. யெகூவால் அகசியா கொல்லப்படுதல் (5 -9)
4. அத்தாலியாளின் ஆட்சி (10 -12)

அதிகாரம்-23

1. யோவால் ராஜாவாகுதல் (1 -11)
2. அத்தாலியாள் கொல்லப்படுதல் (12-15)
3. யோய்தா தேவ ஆராதனையை சீரமைத்தல் (16-21)

அதிகாரம்-24

1. யோய்தா ஆசாரியன் காலம்வரை நல்லாட்சி நடத்தும் யோவாஸ் (1 -14)
2. யோய்தாவின் மரணத்திற்கு பின் யோவாஸின் தவறான ஆட்சிமுறை (15 -22)
3. யோவாஸ் தன் ஊழியர்களால் கொலை செய்யப்படுகிறாா (23 -27)

அதிகாரம்-25



1. அமத்தியா ராஜாவாகுதல் (1-4)
2. ஏதோமியரை தோற்கடிப்பதில் அமத்சியா தேவ வாா்த்தைக்கு கீழ்படிதல் (5-10)
3. ஏதோமியரை தோற்கடித்தல் (11-16)
4. இஸ்ரயேல் ராஜா யோவாசுடன் போா் செய்து அமத்சியா மரணமடைதல் (17-28)

அதிகாரம்-26

1. உசியா ராஜாவாகுதல் (1 -4)
2. சகரியா தீர்க்கதரிசி போதித்த காலம்வரை உசியா தேவனுக்கு பிரியமானவைகளை செய்தல் (5 -8)
3. உசியாவின் ஆட்சிமுறை (9 -15)
4. பெருமையினால் உசியா குஷ்டரோகியாதல் (16 -21)
5. உசியாவின் மரணம் (22 -23)

அதிகாரம் -27



1. யோதாம் ராஜாவாகுதல் (1)
2. யோதாமின் நல்லாட்சி (2 -4)
3. அம்மோனியரை தோற்கடித்தல் (5 -8)
4. யோதாமின் மரணம் (9)

அதிகாரம் -28

1. ஆகாஸ் ராஜாவாகுதல் (1)
2. ஆகாஸின் தவறான ஆட்சி முறையால் சீரியர் அவரை தோற்கடித்தல் (2 -15)
3. அசீரியரின் உதவியை ஆகாஸ் நாடுதல் (16 -21)
4. வேதனையான சூழ்நிலையிலும் ஆகாஸ் விக்கிரக ஆராதனையில் மூழ்குதல் (22 -26)
5. ஆகாஸின் மரணம் (27)

அதிகாரம் -29

1. எசேக்கியா ராஜாவாகுதல் (1)
2. எசேக்கியாவின் ஆட்சி முறை, ஆலயத்தை சுத்திகரித்தல் (2 -36)

அதிகாரம் -30

1. எசேக்கியா பஸ்கா ஆசரித்தல் (1 -12)
2. விக்கிரக பலிபீடங்கள் அழிக்கப்படுதல் (13-19)
3. எசேக்கியாவின் ஜெபத்தை தேவன் கேட்டல் (20 -27)

அதிகாரம் -31

1. பலிமேடைகள் , பலிபீடங்கள் உடைக்கப்படுகின்றன (1 -10)
2. தசமபாகங்கள், காணிக்கைகள் பாதுகாக்க விசாரிப்புகாரரை ஏற்படுத்துதல் (11 -19)
3. விசாரிப்புகாரர் அப்பணியை நேர்மையுடன் செய்தல் (20)

அதிகாரம் -32

1. சனகெரிப் யூதாவை முற்றுகை இடுதல் (1 -20)
2. தேவதூதன் அசீரியப் படைவீரர்களை கொலை செய்தல் (21 -23)
3. எசேக்கியாவின் வியாதியும், விடுதலையும் (24 -26)
4. எசேக்கியாவின் சேமிப்புகள் (27 -31)
5. எசேக்கியாவின் மரணம் (32 -33)

அதிகாரம் - 33



1. மனாசே ராஜாவாகுதல் (1)
2. மனாசேயின் தவறான ஆட்சி (2-10)
3. மனாசே பாபிலோனுக்கு கொண்டு போகபடுதல் (11)
4. மனாசே தன்னை தாழ்த்தினதினால் மீண்டும் ராஜாவாகுதல் (12-19)

அதிகாரம் -34



1. யோசியா ராஜாவாகுதல் (1)
2. யோசியாவின் நல்லாட்சி (2 -18)
3. நியாயப் பிரமாணத்தை வாசித்துக் கேட்கிறார் (19 -28)
4. உடன்படிக்கையை புதுபித்தல் (29 -33)

அதிகாரம் -35

1. யோசியா பஸ்கா ஆசரித்தல் (1 -19)
2. எகிப்து ராஜாவுடன் யுத்தத்திற்கு செல்லுதல் (20 -22)
3. யோசியாவின் மரணம் (23 -27)

<u>அதிகாரம் -36</u>

1. யோவாஸ் ராஜாவாகுதல் (1)
2. எகிப்து ராஜா அவரை தள்ளிவிட்டு எலியாக்கீமை ராஜாவாக்குதல் (2 -4)
3. எலியாக்கீம் (யோயாக்கீம்) தவறான ஆட்சி (5)
4. யோயிக்கீம் பாபிலோனுக்கு கொண்டு போகப்படுதல் (6 -7)
5. யோயாக்கீன் ராஜாவாக்குதல் (8)
6. யோயாக்கீன் தவறான ஆட்சி, அவரை பாபிலோன் ராஜா சிறைபிடித்தல் (9 -10)
7. சிதேக்கியா ராஜாவாகுதல் (11)
8. சிதேக்கியாவின் தவறான ஆட்சி (12 -21)
9. பெர்சிய ராஜாவான கோரேஸின் விளம்பரம் (22 -23)



உம்முடைய வசனமே சத்தியம்”　　　　யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 57

ஆகாய் - (HAGGAI)



Prophet Haggai

எபிரேய வார்த்தை　:　கஹ்ஹாய்

பெயர் அர்த்தம் .　:　திருவிழா (கர்த்தரின் பண்டிகை)

எழுதியவர்　:　ஆகாய்

1. வேதாகமத்தின் 37வது புத்தகம்
2. மொத்த அதிகாரங்கள் - 2.
3. மொத்த வசனங்கள் - 38.

யாருக்கு எழுதினார் ?

எருசலேமில் குடியிருக்கும் மக்களுக்கும்,
சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுக்கும்.

இந்த புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கம்

கி.மு 538ல் பெர்சிய ராஜா கோரேஸ் யூதர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு திரும்ப கட்டளையிட்டார். முதலாவது வந்த குழுவில் செருபாபேல், யோசுவா தலைமையில் வந்தவர்கள் தேவாலயத்தை கட்ட தொடங்கினார்கள். ஏற்கனவே அங்கு இருந்த புறஜாதியார் ஆலயம் கட்டப்படுவதை தடைசெய்தனர். இதை குறித்து எஸ்றா புத்தகத்தில் (அதிகாரம் 1 முதல் 6 வரை) பார்கிறோம்.

இதனால் அவர்கள் தேவாலய பணியை தொடர்ந்து செய்வதில் சோர்வடைந்தனர். தாய் நாட்டிற்கு திரும்பி வரும்போது அவர்களுக்கு இருந்த நல்நம்பிக்கையை தேசத்தின் பாழடைந்த நிலை, விளைச்சல் இன்மை, கடின உழைப்பு, எதிர்ப்பு ஆகிய தடைகள் மிகவும் சோர்வடைய செய்தன.

எதிரிகளுடன் சண்டை இடுவதை விட ஆலய பணியை நிறுத்துவதே நல்லது என்று அவர்களுக்கு தோன்றியது. மக்களின் சோர்வு அவர்களை ஆன்மீக பின்வாங்குதலுக்கு வீழ்த்திவிட்டது. எனவே தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் தங்களுக்கு வீடுகளை கட்டவும் முதலிடம் கொடுத்தனர்.

தேவாலயம் கட்டப்படாமல் இருப்பதற்கு பல காரணங்களை சாக்கு போக்காக சொல்ல ஆரம்பித்தனர். இந்த நேரத்தில் ஆலய பணியை நிறைவு செய்யும்படி மக்களுக்கு உணர்வூட்ட தேவன் தமது ஊழியக்காரரான ஆகாயையும் சகரியாவையும் எழுப்பினார்.

இவர்கள் சொன்ன தீர்க்கதரிசனத்தின் விளைவாக 14 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தேவனுடைய ஆலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது. நிறுத்தப்பட்ட தேவாலய பணியை தொடங்குவதற்காக எழுதப்பட்டது இந்தப் புத்தகத்தின் நோக்கம் ஆகும்.

எழுதப்பட்ட காலம்

இரண்டாம் தரியு (கி.மு 521-486) பெர்சியாவை ஆண்டு கொண்டிருந்த காலத்தில் இந்த புத்தகம் எழுதப்பட்டது.

ஆசிரியர் (ஆகாய் குறித்து)

1. ஆகாய் இஸ்ரயேலர் 70 வருடம் கழித்து பாபிலோனிலிருந்து வந்த முதல் குழுவில் (செருபாபேல் தலைமையில்) இவரும் அவர்களோடு வந்து இருக்கிறார்.
2. இவர் எருசலேமிலிருந்து வந்த பிறகு தேவாலயத்தை ஜனங்கள் கட்டும்படி உற்சாகப்படுத்தினார்.
3. இவர் யூதாவில் பிறந்து பாபிலோனுக்கு கொண்டு போகப்பட்டவர் என்றும், பாபிலோனுக்கு யூதர்கள் சிறைபிடித்து கொண்டு போகப்பட்ட போது பாபிலோனில் பிறந்தவர் என்ற இரண்டு கருத்துக்கள் உண்டு.
4. இவரை குறித்து எஸ்றா 5:1 மற்றும் 6:14 வசனங்களில் குறிப்பிட்டு இருப்பதைப் பார்க்கிறோம்.
5. இந்த (ஆகாய்) புத்தகத்தில் ஆகாயின் பெயர் 9 தடவை வருவதைப் பார்க்கிறோம்.

1: 1,3,12,13

2: 1,10,13,14,20

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. ஆலயத்தை புதுபித்து கட்டுதல். அதற்கான தேவனுடைய வார்த்தை ஆகாய் மூலம் வெளிப்படுதல்.
2. முக்கிய வசன பகுதி

ஆகாய் 2:9 முந்தின ஆலயத்தின் மகிமையைப் பார்க்கிலும் இந்தப் பிந்தின ஆலயத்தின் மகிமை பெரிதாயிருக்கும்.

ஆகாய் 2 :7

….சகல ஜாதிளாலும் விரும்பப்பட்டவர் வருவார்.

இந்த வசனங்கள் தேவன் ஆகாய் மூலம் சொல்லிய வார்த்தைகள் ஆகும். இவை இந்த புத்தகத்தின் சிறப்புகள் ஆகும்.

இதை படிக்கும் முறை

4 பிரிவுகளாக பிரிக்கலாம்

1. ஆலயத்தை கட்டி முடிக்க ஜனங்களை உற்சாகமூட்டுதல் (1: 1-15)
2. ஆலயத்தில் பிந்தின மகிமை (2: 1-9)
3. கீழ்படிவதினால் வரும் தற்போதைய ஆசிர்வாதங்கள் (2: 10-19)
4. வாக்குதத்தம் செய்யப்பட்ட ஆசிர்வாதங்கள் (2 : 20-23)

அதிகாரம் -1

1. தேவாலயம் கட்ட சோர்வு கொண்ட மக்களை ஆகாய் கண்டித்தல் (1-6)
2. தேவாலயம் கட்டும்படி அவர்களை தூண்டுதல் (7 -11)
3. தேவாலயம் கட்ட ஆரம்பித்தல், தேவனுடைய உதவி அவர்களுக்கு கிடைக்குமென்று வாக்குறுதி அளித்தல் (12-15)

அதிகாரம் -2

1. இரண்டாவது தடவை அவர்கள் கட்டப் போகும் தேவாலயமானது மகிமையுடன் விளங்கும் என்று வாக்குத்தம் அளித்து ஆலயம் கட்ட மக்களை உற்சாகப்படுத்துகிறார் (1 -9)
2. அவர்கள் பாவங்களே ஆலயம் கட்ட தடை என்று சுட்டி காட்டுதல் (10-23)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 58

சகரியா - (ZECHARIAH)

எபிரேய வார்த்தை : செகறியாஹ்

பெயர் அர்த்தம் . : கர்த்தர் நினைக்கிறார்

எழுதியவர் : சகரியா

1. வேதாகமத்தின் 38 வது புத்தகம்
2. மொத்த அதிகாரங்கள் - 14.
3. மொத்த வசனங்கள் - 211.

யாருக்கு எழுதினார் ?

பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த யூதர்களுக்கும் உலகமெங்குமுள்ள தேவ பிள்ளைகளுக்கும்

இந்த புத்தகம் எழுதபட்டதின் நோக்கம்

பாபிலோன் சிறையிருப்பிலிருந்து வந்த யூதர்கள் தேவாலயத்தை புதுப்பித்துக் கட்ட முயற்சித்தனர். ஆனால் அங்கிருந்த புறஜாதி மக்களால் தேவாலயம் கட்டும் பணி தடைப்பட்டது. சகரியாவும். ஆகாயும் தேவாலயத்தை கட்டுவதற்கு உற்சாகப்படுத்தினர் பணி நிறைவடைந்தது.

எழுதப்பட்ட காலம்

- சகரியா 1 முதல் 8 வரையுள்ள அதிகாரங்கள் கி.மு. 520 – கி.மு. 518-க்கு இடைப்பட்ட காலங்கள்
- சகரியா 9 முதல் 14 வரையுள்ள அதிகாரங்கள் ஏறக்குறைய கி.மு. 480 என்று யூகிக்கப்படுகிறது.

ஆசிரியர் (சகரியா குறித்து)

- சகரியா பாபிலோனிலிருந்து வந்த யூதர்களில் முதல் குழுவில் செருபாபேல் தலைமையில் வந்தவர்களில் ஒருவர்.
- இவர் பாபிலோனில் பிறந்த ஒரு லேவியர் (நேகே 12 :16)

- ♣ ஒரு ஆண் குழந்தை பிறந்ததிற்காக தேவனுக்கு நன்றி கூறும் வகையில் இப்பெயரை (சகரியா- கர்த்தர் நினைக்கிறார்) இவருக்கு இவருடைய பெற்றோர்கள் வைத்து இருக்கலாம்)



- ♣ ஆகாய் தீர்க்கதரிசி இவர் சமகாலத்தவர்
- ♣ மேசியாவை குறித்த பல தீர்க்க தரிசனங்களை இவர் எழுதியிருக்கிறார்.
- ♣ சிறையிலிருப்பிலிருந்து திரும்பி வந்த போதும் யூதர்கள் திருப்தியற்றவர்களாயிருந்தனர். அதனால் தேவாய பணியை முடிக்க அவர்களால் இயலவில்லை. சகரியா அப்பணியை செய்வதற்கு அவர்களை உற்சாகப்படுத்தினார். தேவன் அவர்களை தமது ஆவியினால் பெலப்படுத்தியதால் தேவாலய பணியை நிறைவேற்றுவதில் அவர்கள் வெற்றி கண்டனர்.
- ♣ ஆகாயை போல கண்டிப்பான போதனை முறையை சகரியா கையாளவில்லை. தங்கள் தேசம் சிறப்பாக இருக்க தேவாலய பணி எவ்வளவு முக்கியம் என்பதை அவர் எடுத்து காட்டினார். மக்கள் தேவாலய பணியை செய்வதில் மும்முரமாயினர்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

1. ஆலயத்தை புதுபித்து கட்ட தேவ ஜனங்களை உற்சாகப்படுத்த இந்த புத்தகம் எழுதப்பட்டது.
2. எதிர்காலத்தில் நடக்கப் போகும் அநேக காரியங்களை சகரியா தீர்க்கதரிசனமாக இதில் சொல்லியிருப்பதைப் பார்க்கலாம்.
3. மேசியாவை குறித்து அநேக காரியங்களை தீர்க்கதரிசனமாக இதில் சகரியா சொல்லியிருப்பதைப் பார்க்க முடியும்.
    - ♣ நீதியுள்ள கிளை (3:8)
    - ♣ ராஜரீக ஆசாரியர் (6:13)
    - ♣ தாழ்மையுள்ள ராஜா (9: 9)
    - ♣ 30 வெள்ளிகளுக்கு காட்டிக் கொடுக்கப்படுதல் (11:10-13)
    - ♣ வரப்போகும் நீதியுள்ள ராஜா (14)

4. சகரியா தீர்க்கத்தரிசியின் 8 தரிசனங்கள் இதில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- ♣ சிவப்பு குதிரையின் மேல் ஏறியிருந்த புருஷன் (1:7-17)
- ♣ நான்கு கொம்புகள் (1.18-21)
- ♣ கையில் அளவு நூல் பிடித்திருந்த புருஷன் (2: 1 - 13)
- ♣ பிரதான ஆசாரியன் யோசுவா அழுக்கான வஸ்திரம் தரித்திருத்தல் (3: 1-10)
- ♣ வற்றாத எண்ணெய் உள்ள விளக்கு (4: 1-14)
- ♣ பறக்கின்ற புத்தக சுருள் (5: 1-4)
- ♣ மரக்காலில் உட்கார்ந்திருந்த பெண் (5: 5-11)
- ♣ நான்கு குதிரைகள் (6: 1-8)

5. **இரண்டாம் உலகத்தின் முடிவு, மூன்றாம் உலகத்தின் ஆரம்பம்** மிக அருமையாக இந்த புத்தகத்தின் கடைசி அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம்.

இதை படிக்கும் முறை

இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்

1. தேவாலயத்தை கட்டிமுடிக்க யூதர்களுக்குக் கொடுக்கப்படும் ஏவுதல்கள் (1-8 அதிகாரங்கள்)
2. வரபோகும் மேசியாவிற்காக ஜனங்களை காத்திருக்க அறிவுறுத்தல் (9-14 அதிகாரங்கள்)

அதிகாரம் -1

1. மனந்திரும்ப மக்களை சகரியா அழைத்தல் (1 -6)
2. குதிரைகளின் தரிசனம் (7 -11)
3. எருசலேமிற்கு ஆறுதலின் வாக்குதத்தம் (12 -17)
4. நான்கு கொம்புகள் மற்றும் நான்கு தொழிலாளர்களின் தரிசனம் (18 -21)

அதிகாரம் -2

1. எருசலேமை அளக்கும்படி ஒரு தூதரை தேவன் அனுப்புகிறார் (1 -3)
2. தேவனின் பாதுகாப்பில் எருசலேம் செழிப்படையும் என்று தீர்கக்தரிசனம் உரைக்கப்படுகிறது (4- 13)

அதிகாரம்-3

1. யோசுவாவை ஒப்பிட்டு தேவமக்களின் சீர்படுதல் வாக்குதத்தம் செய்யப்படுகிறது (1-7)
2. கிறிஸ்து (கிளை) வாக்குதத்தம் செய்யப்படுதல் (8-10)

அதிகாரம் - 4

1. பொன்னினால் செய்யப்பட்ட விளக்கு தண்டை காண்பித்து தேவாலயத்தின் காரியங்களை விளக்குதல் (1-10)
2. இரண்டு ஒலிவ மரங்களை குறித்த காரியங்கள் (11-14)

அதிகாரம் - 5

1. பறக்கிற புஸ்தக சுருளை குறித்த தரிசனம் (1-4)
2. மரக்கால் மேல் அமர்ந்திருக்கும் பெண்ணை குறித்த தரிசனம் (5-11)

அதிகாரம் -6

1. நான்கு இரதங்களை குறித்த தரிசனம் (1-8)
2. யோசுவா என்னும் பிரதான ஆசாரியனை சுட்டிகாட்டி கிளையாகிய கர்த்தர் இயேசுவின் ராஜ்யத்தை தீர்க்கதரிசனமாக உரைத்தல் (9 -15)

அதிகாரம் -7

1. உபவாசத்தை பற்றி சிறையிருப்பில் இருப்பவர்கள் சகரியாவிடம் விசாரித்ல் (1-3)
2. கபடம் நிறைந்த அவர்கள் உபவாசத்தை சகரியா கண்டித்தல் (4 -7)
3. மனத்திரும்பும்படி அவர்களுக்கு கூறுதல் (8 -14)

அதிகாரம் - 8

1. எருசலேம் திரும்ப கட்டப்படும் என்பதை குறித்த தீர்க்க தரிசனம் (1 -6)
2. தேவகிருபையால் ஆலயம் கட்ட யூதர்கள் தூண்டப்படுதல் (7 -17)
3. மகிழ்ச்சியும், இளைப்பாறுதலும் வாக்குதத்தம் செய்யப்படுகின்றன (18 -23)

அதிகாரம் -9

1. பிறநாடுகளுக்கு எதிரான நியாயத்தீர்ப்பு (1 -8)
2. மேசியாவின் வருகையில் மகிழ சீயோனுக்கு அறிவுரை (9-11)
3. தேவ ஜனங்களின் வெற்றியை பற்றிய தேவனின் வாக்குதத்தம் (12-17)

அதிகாரம் -10

1. விக்கிரகங்களையல்ல, தேவனையே தேடவேண்டும் (1 -2)
2. தமது ஜனங்களின் பாவங்களுக்காக தேவன் அவர்களை தண்டித்தாலும், அவர் அவர்களை இரட்சித்து திரும்பவும் நிலைப்படுத்துவார் (3 -12)

அதிகாரம் - 11

1. எருசலேமின் அழிவு (1-3)
2. கிறிஸ்து தமது மந்தையை மேய்ப்பது பற்றிய ஒரு ஒப்புமை கூறப்படுகிறது (4-14)
3. மதியற்ற மேய்ப்பரின் ஒப்புமை (15-17)

அதிகாரம் -12

1. எருசலேம் அதன் பகைவர்களுக்கு பாரமான ஒரு கல்லாக மாறுதல் (1-5)
2. யூதர்களின் வெற்றி சிறந்த எழுச்சி (6-9)
3. எருசலேமின் மனந்திரும்புதல் (10-14)

அதிகாரம் -13

1. பாவத்தை நீக்க திறக்கப்பட்ட நீறுற்று (1)
2. விக்கிரக ஆராதனையும், கள்ள தீர்க்கதரிசனமும் நின்று போகும் (2 -6)
3. கிறிஸ்துவின் பாடுகளை குறித்த தீர்க்க தரிசனம் (7)
4. மூன்றில் ஒரு பங்கு புடமிடப்படுதல் (8 -9)

அதிகாரம்- 14

1. எருசலேமின் அழிவு மற்றும் கிறிஸ்துவின் ராஜ்யம் அதன் ஆசிர்வாதங்கள் (1-11)
2. எருசலேமின் எதிரிகளுக்கு வரும் அழிவு (12-15)
3. மீதியானவர்கள் கர்த்தரிடம் திரும்புவர் (16-19)
4. அவர்களது கொள்ளை கர்த்தருக்கும் பரிசுத்தமாயிருக்கும் (20 -21).

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 59

எஸ்தர் (ESTHER)

எபிரேய வார்த்தை : அத்சால் (எஸ் 2 : 7)

பெயர் அர்த்தம் . : நட்சத்திரம்

எழுதியவர் : மொர்தேகாய் என்று கருதப்படுகிறது

- ♣ வேதாகமத்தின் 17 வது புத்தகம்
- ♣ மொத்த அதிகாரங்கள் - 10.
- ♣ மொத்த வசனங்கள் - 167.

யாருக்கு எழுதினார் ?

பாபிலோன் சிறையிருப்புக்கு பிறகு 70 வருடம் முடிந்து எருசலேமிற்கு திரும்பி போகாமல் பாபிலோனில் தங்கிவிட்ட யூதர்களுக்காக இது எழுதப்பட்டது

இந்த புத்தகம் எழுதபட்டதின் நோக்கம்

தமது மக்களை (இஸ்ரயேல் ஜனங்கள்) குறித்த **தேவனின் அதிகாரம், அன்பு, கரிசனை** ஆகியவற்றை வெளிப்படுத்துதல்.

இப்புத்தகம் எழுதப்பட்ட காலம்

- ♣ மேதோ- பெர்சிய ராஜாக்கள்



1. கோரேஸ் – கி.மு. 559 - 530
2. காம்பைசிஸ் - கி.மு. 529 -522
3. ஸ்மெர்திஸ் - கி.மு. 523 - 521
4. தரியு ஹிஸ்டாஸ் பெஸ் (மகாதரியு)- கி.மு. 522 -486
5. அகாஸ்வேரு (செர்சஸ்) – கி.மு. 486 -465
6. அர்த்தசஸ்டா – கி.மு. 465 - 423
7. மூன்றாம் தரியு -- கி.மு. 335 -331

1. கோரேஸ்

   இஸ்ரயேலர் தங்கள் தாய்நாட்டிற்கு திரும்ப உத்தரவிட்டவர்

2. தரியு ஹிஸ்டாஸ் பெஸ்

   எருசலேம் தேவாலய புதுப்பித்தல் பணியை நிறுத்தி வைக்க உத்திரவிட்டார்.

3. அகாஸ்வேரு (செர்செஸ்)

   எஸ்தர் ராணியின் கணவர்

4. அர்தததசாஸ்டா

   இவரது பானபாத்திரகாரராக நெகேமியா இருந்தார்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

- பெண்களின் பெயர்களில் காணப்படும் இரண்டு புத்தகங்களில் இதுவும் ஒன்று. (இன்னொன்று ரூத் புத்தகம்)
- **இந்த புத்தகத்தில் தேவன், கர்த்தர் என்ற சொற்கள் இடம் பெறவில்லை.** ஆனால் இதில் இருக்கும் சம்பவங்கள் பின்பாக தேவ ஆளுகை. தேவ நடத்துதல் இருப்பதைப் பார்க்க முடிகிறது.
- வேதாகமத்தில் இந்தியாவை குறிப்பிடும் இரண்டு வசனங்கள் இந்து தேசம் (1:1, 8 : 9) ஆகிய இடம் பெற்று இருப்பது இதன் சிறப்பு ஆகும்.
- வேதத்தில் நெகேமியாவிற்கு பிறகு எஸ்தர் புத்தகம் இடம் பெற்றிருந்தாலும் நெகேமியாவின் நிகழ்ச்சிகளுக்கு சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் எஸ்தர் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.
- சவுல் ராஜாவாக இருந்தபோது அமலேக்கியரை முழுவதும் கொல்லாமல் தேவ தண்டனைக்கு ஆளானார். அவரைப்போல் பென்யமீன் கோத்திருத்தில் வந்த மொர்தேகாய் அமலேக்கிய வம்சத்தில் வந்த ஆமானை வணங்காமல் இறுதியில் இந்த வம்சத்தை எஸ்தரின் துணையோடு அழித்ததைப் பார்கிறோம்.
- மொர்தேகாய்க்கு தூக்கு மரத்தை செய்த ஆமான் அதே தூக்குமரத்தில் தூக்கி போடப்பட்டது. இந்த புத்தகத்தின் முக்கியமான சம்பவம் ஆகும் (7 : 9)
- ஒரு சரித்திர சம்பவமாக இந்த புத்தகம் இருப்பதால் இதை படித்து புரிந்து கொள்வது எளிதாக இருக்கிறது.

இதை படிக்கும் முறை

1. எஸ்தர் பட்டத்து ராணியாக தேர்ந்தெடுக்கப்படுதல் (1 - 2 அதிகாரங்கள்)
2. ஆமானின் சதி திட்டம் உருவாகுதல் (3 -5 அதிகாரங்கள்)
3. ஆமானின் மேல் மொர்தேகாயின் வெற்றி (6 -8 அதிகாரங்கள்)
4. எதிரியின் மேல் யூதர்களின் வெற்றி (9-10 அதிகாரங்கள்)



அதிகாரம் - 1

1. அகாஸ்வேரு ராஜாவின் ராஜவிருந்து (1-9)
2. ராஜஸ்திரீ வஸ்தி ராஜாவை கோபபட வைத்தல் (10-22)

அதிகாரம் -2

1. எஸ்தர் ராணியாக தேர்ந்தெடுக்கப்படுதல் (1-20)
2. ராஜ துரோகம் செய்யும் காரியம் மொர்தேகாயினால் கண்டுபிடிக்கப்படுதல். அது ராஜாக்களின் புத்தகத்தில் எழுதப்பட்டது (21-23)

அதிகாரம் -3



மொர்தேகாய் ஆமானை மதிக்காததினால், ஆமான் கோபமுண்டவராகி யூதர்களை முற்றிலுமாக கொன்று அழிக்க வாய்ப்பை தேடுகிறார்.

அதிகாரம் -4

1. மொர்தேகாயும், யூதர்களும் அபயமிடுதல் (1-14)
2. எஸ்தர் உபவாசத்தை ஏற்படுத்துகிறார்.அவரது தைரியமிக்க தீர்மானம் (15-17)

அதிகாரம் -5

1. ராஜாவையும், ஆமானையும் விருந்துக்கு வரும்படி எஸ்தர் அழைப்பு கொடுத்தல்.

அதிகாரம் - 6

1. மொர்தேகாயின் பாராட்டுக்குரிய சேவைக்கு அகாஸ்வேரு ராஜா அவரை கணப்படுத்துதல் (1-9)
2. மொர்தேகாயை கணப்படுத்த ஆமானுக்கு கட்டளையிடப்படுகிறது (10-14)

அதிகாரம் - 7

1. தன்னுடைய மற்றும் யூதர்களுடைய உயிரை காப்பாற்றும்படி எஸ்தர் ராஜாவிடம் வேண்டுதல் (1 -8)

2. ஆமான் உண்டாக்கிய தூக்கு மரத்தின் மேல் ஆமானையே தூக்கிப் போடும்படி ராஜா கட்டளையிடுதல் (9-10)

அதிகாரம் -8

1. மொர்தேகாய் நாளுக்கு நாள் புகழ்பெறுதல் (1 -6)
2. பழிக்குப்பழி வாங்கும்படி யூதர்களுக்கு ராஜாவிடம் இருந்து அனுமதி கிடைக்கிறது (7 -14)
3. மொர்தேகாயின் உயர்வும், யூதர்களின் மகிழ்ச்சியும் (15-17)

அதிகாரம் -9

1. ஆமானின் 10 குமாரர்கள் மற்றும் தங்கள் எதிரிகள் யாவரையும் யூதர்கள் வென்று அழிக்கின்றனர் (1-19)
2. இரண்டு பூரீம் நாட்கள் பண்டிகை நாட்களாக அறிவிக்கப்படுகின்றன. (20-32)

அதிகாரம் - 10

1. அகாஸ்வேரு ராஜாவின் வளர்ச்சி (1-2)
2. மொர்தேகாயின் மகிமை (3)

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 60

நேகேமியா (NEHEMIAH)

எபிரேய வார்த்தை : நேகேம்யாஹ்

பெயர் அர்த்தம் . : கர்த்தர் ஆற்றுகிறார்

எழுதியவர் : நெகேமியா என்று கருதப்படுகிறது. எஸ்றா என்ற கருத்தும் உண்டு.

- வேதாகமத்தின் 16 வது நூல்
- மொத்த அதிகாரங்கள் - 13.
- மொத்த வசனங்கள் - 406.

யாருக்கு எழுதினார் ?

எங்குமுள்ள யூத ஜனங்களுக்கு

இந்த புத்தகம் எழுதபட்டதின் நோக்கம்

பாபிலோனிய சிறையிருப்புக்கு பின்பு எருசலேமிற்கு மூன்று குழுக்களாக யூதர்கள் திரும்பி வந்தனர்.

1. முதல் குழு **செருபாபேல் தலைமையில்** (கி.மு 537-ல்) எருசலேமிற்கு வந்தது (எஸ்றா புத்தகம்)
2. இரண்டாவது குழு **எஸ்றா தலைமையில்** (கி.மு 458-ல்) வந்தது.
3. மூன்றாவது குழு **நெகேமியா தலைமையில்** (கி.மு 445-ல்) வந்தது.

நெகேமியா தலைமையில் வந்த குழு எவ்வாறு இடிந்து கிடந்த எருசலேமின் அலங்கங்களை மீண்டும் எடுத்து கட்டினார்கள் என்பதை குறித்து கூறுவது இந்த புத்தகத்தின் நோக்கம் ஆகும்.

இந்த புத்தகம் எழுதப்பட்ட காலம்

சுமார் கி.மு 445 முதல் 432 வரை ஆகும்.

ஆசிரியர் (நெகேமியா) குறித்து

1. பெர்சிய ராஜாவான அர்த்தசஷ்டாவிற்கு பானபாத்திரகாரர் என்ற நிலையில் நெகேமியா பெர்சிய அரண்மனையில் உன்னதமான பதவியை உடையவரும், மதிப்பிற்குரிய மனிதருமாய் விளங்கினார்.
2. கி.மு 516-ல் தேவாலயம் கட்டும் வேலை முடிவடைந்த பின்பும் அலங்கம் பாழடைந்து கிடந்தது. எருசலேம் நகரத்தையும் தேவாலயத்தையும் பாதுகாக்க இக்கோட்டை சுவரை கட்டியெழுப்ப வேண்டியது மிகவும் அவசியமாயிருந்தது. அலங்க கட்டுமான பணிககான ஆர்வத்தை நெகேமியாவின் உள்ளத்தில் வைத்தார் தேவன். அதை சரிவர நெகேமியா செய்து முடித்ததைப் பார்க்கிறோம்.
3. அலங்கம் கட்டி முடிக்கும் வேலையில் மிக நல்லதொரு தலைமையை நெகேமியா வெளிப்படுத்தினார். தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்க அவர் எப்போதும் தயாராயிருந்தார்.வியக்கத்தகு விசுவாசம் கொண்டவராய் ஒரு நல்ல தலைமைத்துவத்திற்கு தேவையான அதிக வேலையை செய்வதற்கு அவர் தயக்கம் காண்பிக்காதவராய் இருந்தார்.
4. அலங்கம் கட்டும் வேலை தொடங்கிய பின்பு எதிரிகளின் நிந்தையும், பயமுறுத்தலையும் நெகேமியா சந்திக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் எடுத்த பணியை செய்து முடிப்பதில் யாரும் இவரை தடுத்து நிறுத்த முடியவில்லை.
5. மிகுந்த ஜெப வீரராக நெகேமியா இருந்ததைப பார்க்கிறோம்.
6. கி.மு 433-ல் பெர்சியாவிற்கு திரும்பி சென்ற நெகேமியா கி.மு 432-ல் மக்களை உற்சாகப்படுத்த, சரிசெய்ய, தேவனிடம் சேரப்பண்ண மீண்டும் ஒரு தடவை வந்ததைப் பார்க்கிறோம்.



7. நெகேமியாவின் சொந்த நினைவுகளின் வரி வடிவமாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. எனவே இதன் ஆசிரியர் நெகேமியா என்று கருதப்படுகிறது.

8. விசுவாசம், தேவபக்தி, சிறந்த தலைமைத்துவம் நிறைந்த மனிதராக நெகேமியா விளங்கினார்.
9. மல்கியாவும், எஸ்றாவும் நெகேமியாவின் இதே காலகட்டத்தில்தான் வாழ்ந்தார்கள்.

இந்த புத்தகத்தின் சிறப்பு

- எருசலேமின் அலங்கம் மீண்டும் கட்டப்படும் என்று தானியேல் மற்றும் சகரியா தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனம் நிறைவேறுதலை இந்த புத்தகம் கூறுகிறது.
- மூலபதத்தில் எஸ்றா, நெகேமியா ஒரே புத்தகமாக உள்ளது.
- ஒரு ஆசாரியர் என்ற நிலையில் எஸ்றா ஒரு ஆவிக்குரிய எழுப்புதலுக்கு தலைமை தாங்குகிறார்.

  நெகேமியா ஒரு ஆளுநர் என்ற நிலையில் உலகியல், அரசியல் சார்ந்த சீர்திருத்தங்களை செய்கிறார்.
- இந்த புத்தகம் பழைய ஏற்பாட்டு வரலாற்றின் இறுதி காலகட்டத்தில் அதாவது கிறிஸ்துவுக்கு சுமார் 400ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்டது.
- அன்றைய காலகட்டங்களில் நகரம் அலங்கமில்லாது இருந்ததினால் மக்கள் கொள்ளை கூட்டத்தினருக்கு பலியாக வாய்ப்பு இருந்தது. ஆகையால் பாதுகாப்பு கருதி, யூதமக்கள் எருசலேமில் தங்காமல் சுற்றிலும் இருந்த கிராமங்களில் தங்கி வந்தனர். இதனால் புறஜாதியாருடன் கலப்பு ஏற்பட்டு மொழியும், கலாச்சாரமும், தூயவிசுவாசமும் இழந்து போகின்ற நிலை ஏற்பட்டது. அலங்கத்தை பழுது நீக்கி கட்டினால் ஒரு உண்மை யூத நகரை உருவாக்கவும் உள்ளே வருவோரையும், வெளியே செல்வோரையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

அத்தேசத்தில் இருந்த புறஜாதி மக்களின் எதிர்ப்பையும் மீறி **52 நாட்களில் அலங்கம் கட்டி முடிக்கப்பட்டது.** இந்த ஆச்சர்யமான காரியத்தை கர்த்தரே செய்து முடித்தார் என்று புறஜாதிகளும் புரிந்து கொண்டனர். அலங்கம் எவ்வாறு கட்டி முடிக்கப்பட்டது. என்பதை கூறுவது இந்த புத்தகத்தின் சிறப்பு ஆகும்.

- எருசலேம் அலங்க வேலை முடிந்தவுடன் எருசலேம் நகரம் ஒரு பாதுகாப்பு மிக்க நகரமாயிற்று. அதன்பின்பு மக்களின் சீர்திருத்த வாழ்விற்காக எஸ்றாவும் நெகேமியாவும் இணைந்து செயல்படுவதை குறித்து கூறுவது இந்த புத்தகத்தின் சிறப்பு ஆகும்.

இதை படிக்கும் முறை

இரண்டு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. அலங்கம் சீர்திருத்தப்படுதல் (கட்டப்படுதல்) (1-7 அதிகாரங்கள்)
2. மக்கள் சீர்திருத்தப்படுதல் (8 -13 அதிகராங்கள்)

அதிகாரம் - 1

1. எருசலேமின் பரிதாபமான நிலைமையைக் குறித்து கேள்விப்பட்ட நெகேமியா துயரப்பட்டு உபவாசித்து ஜெபித்தல் (1 -3).
2. இதயம் உடைந்த அவரது ஜெபம் (4 -11).

அதிகாரம் -2

நெகேமியாவின் மனவேதனையைப் பற்றி புரிந்து கொண்ட அர்த்தசஷ்டா எருசலேமின் அலங்கத்தை கட்ட தேவையான கடிதங்களை கொடுத்து நெகேமியாவை அனுப்பி வைத்தல்.

அதிகாரம் -3

எருசலேமின் அலங்கங்களும் அவற்றை கட்டியோரின் பெயர்களும் வரிசைப்படி கொடுக்கப்படுகின்றன.

அதிகாரம் -4

1. எதிரிகள் நிந்தித்த போதும் தேவனிடம் ஜெபித்தபடி வேலையை தொடர்கிறார் நெகேமியா(1 -6)
2. எதிரிகள் நிமித்தம் அவர் காவலர்களை நியமித்தல் (7-23)

அதிகாரம் -5

1. தங்கள் அனுதின வருமானத்தை குறித்தும், பணம், அடிமைத்தனம் ஆகியவற்றை குறித்தும் மக்கள் முறையிடுதல் (1-5)
2. வட்டி வாங்கு வோரை நெகேமியா கடிந்துரைத்தல் (6-19)

அதிகாரம் - 6

1. நெகேமியாவிற்கு எதிராக சன்பலாத் குழுவினர் சூழ்ச்சி செய்தல் (1-14).
2. அலங்கம் கட்டும் பணி முடிவுக்கு வருகிறது (15-16)
3. நெகேமியாவின் எதிரிகளும், யூதாவின் பிரபுக்களும் சேர்ந்து இரகசியமாக சூழ்ச்சி செய்தல்.(17-19)

அதிகாரம் - 7

1. எருசலேமில் அதிகாரிகள் நியமிக்கப்படுதல் (1 -4)
2. பாபிலோனில் இருந்து முதலில் திரும்பி வந்தோரின் பட்டியல்(5 -73)

அதிகாரம் -8

1. தங்கள் முறைமையின்படி நியாயப் பிரமாண நூல் வாசித்து கேட்டல் (1-8)
2. மக்கள் ஆறுதலடைதல் (9 -15)
3. கூடார பண்டிகையை திட்டமிடுதல் (16-18)

அதிகாரம் -9

1. மக்களின் மனம் வருந்துதலும், உபவாசமும் (1 -3)
2. தங்களின் பாவங்களையும், தேவன் செய்த பலவகை நன்மைகளையும் லேவியர் அறிக்கையிடுகின்றனர் (4-38)

அதிகாரம் - 10

1. உடன்படிக்கையில் முத்திரையிட்டோர் பெயர் விபரம் (1 -27)
2. மற்ற ஜனங்களும் அதற்கு கீழ்படிவோம் என ஆணையிடுதல் (28-37)
3. லேவியேருக்கு கிடைக்கும் தசமபாகத்தில், தசமபாகம் தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்று திட்டம் பண்ணுதல் (38-39)

அதிகாரம் - 11

1. பிரபுக்களில் பத்து பேருக்கு ஒருவர் எருசலேமில் வாழ தீர்மானிக்கின்றனர் (1- 2)
2. பிரபுக்களின் பெயர்கள் (3 -19)
3. மற்றவர்கள் பிற பட்டணங்களில் வாழ்கின்றனர் (20 -36)

அதிகாரம் - 12

1. செருபாபேலுடன் வந்த ஆசாரியர்களும், லேவியர்களும் (1 -9)
2. பிரதான ஆசாரியர்களின் வழி மரபினர் (10 -47)

அதிகாரம் - 13

1. நியாயப் பிரமாணம் வாசிக்கப்பட்ட பின் கலப்பின மக்கள் பிரித்து நிறுத்தப் படுகின்றனர் (1 -9)
2. தேவாலய ஊழியத்தில் சீர்திருத்தம் நெகேமியா செய்கிறார்(10-14)
3. ஓய்வு நாளை மீறுவோரை அவர் கண்டிக்கிறார்.(15-31)

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 61

மல்கியா (MALACHI)

எபிரேய வார்த்தை : மலாஹியாஹ்

பெயர் அர்த்தம் . : கர்த்தரின் தூதன்

எழுதியவர் : மல்கியா

- வேதாகமத்தின் 39 வது நூல்
- மொத்த அதிகாரங்கள் - 4.
- மொத்த வசனங்கள் - 55.

யாருக்கு எழுதினார் ?

எருசலேமில் வாழ்ந்த யூதர்களுக்கும், உலகம் எங்குமுள்ள தேவமக்களுக்கும்

இந்த புத்தகம் எழுதபட்டதின் நோக்கம்

பாபிலோனிய சிறையிருப்புக்கு பின் வந்த யூதர்களின் கால கட்டங்களில் தீர்க்க தரிசிகளாக ஊழியம் செய்தவர்கள்

1. ஆகாய்
2. சகரியா
3. மல்கியா

ஆகாய்,சகரியா ஆலயம் கட்டப்படுவதற்கு ஜனங்களை உற்சாகப்படுத்த தீர்க்கதரிசனம் சொன்னவர்கள்.

தேவாலயம் கட்டிய பிறகு தேவாலயத்தை அசட்டை செய்து, தேவ பயமின்றி அற்பமான காணிக்கைகளை தேவனுக்கு கொண்டு வந்த யூத ஜனங்களுக்கு தேவனை தொழுது கொள்வது முழு மனதுடனும், தேவமகிமைக்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும் என்று மல்கியா தீர்க்க தரிசனம் உரைத்தார்.

இந்த புத்தகம் எழுதப்பட்ட காலம்

நெகேமியா வாழ்ந்த கால கட்டத்தில் மல்கியா வாழ்ந்திருக்கிறார். சுமார் கி.மு 425.

ஆசிரியர் (மல்கியா) குறித்து

1. நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்திருந்த தீர்க்கதரிசியான மல்கியா **இஸ்ரயேலரின் ஆன்மீக பின் வாங்குதலுக்கு எதிராக** தேவ செய்தி உரைக்க ஏற்படுத்தப்பட்டவர்.
2. இழிவான ஆசாரிய ஊழியம், துன்மார்க்கம் நிறைந்த, தேவ பயமற்ற மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை சொல்லும்படி இவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்.
3. இவரை குறித்து, **இவர் குடும்பத்தை குறித்து, பெற்றோரை குறித்து எந்த குறிப்புகளும் பதிவு செய்யப்படவில்லை.**
4. இவருக்கு **சமகால தீர்க்கதரிசி எவருமில்லை.**

இந்த புத்தகத்தின் சிறப்பு

- ♣ பழைய ஏற்பாட்டின் **கடைசி புத்தகம்.**
- ♣ 400 ஆண்டுகளுக்குப் பிறகு வரப்போகிற ஆண்டவராகிய **இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரது முன்னோடியான யோவான் ஸ்நானகனைப் பற்றியும்** தீர்க்க தரிசனமாக இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
- ♣ எருசலேம் நகரமும், தேவாலயமும் புதுப்பிக்கபட்டு சுமார் 100 ஆண்டுகள் கடந்திருந்தது. மக்கள் தங்கள் சடங்காச்சார ஆராதனையில் திருப்தியடைந்து இருந்தனர். இவர்களை கண்டித்து இந்த புத்தகம் எழுதப்பட்டது.
- ♣ பாவத்தால் தேவனோடுள்ள உறவு, அன்றைய நாட்களில் ஜனங்கள் மத்தியில் முறிந்திருந்தது. சீக்கிரத்தில் அவரகள் தண்டிக்கப்பட போகின்றனர். ஆனால் மனந்திரும்புகிற கொஞ்சம் பேருக்கு தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும் என்று இந்த புத்தகத்தில் தேவனுடைய வார்த்தையை மல்கியா கூறியிருப்பதைப் பார்க்க முடிகிறது.
- ♣ தேவனை சரியான நிலையில் ஆராதிக்க மனமற்ற ஆசாரியர்களையும், தேவ வசனத்திற்கு கீழ்படிய மனமற்ற மக்களையும் மல்கியா கடுமையாக சாடுகிறார்.

- சொந்த மனைவியை தள்ளிவிட்டு புறஜாதி பெண்களை திருமணம் செய்தவர்கள் அந்நாளில் காணப்பட்டார்கள் இவர்களை மல்கியா கண்டிப்பதை இந்த புத்தகத்தில் பார்க்கிறோம்.
- **தேவனும், தேவமக்களும் மாறி மாறி கேள்வி கேட்பது போன்ற நடையில் இஸ்ரயேல் மக்களின் முன் பழைய ஏற்பாட்டின் ஒரு சுருக்கத்தையே இதில் பதிவு செய்து இருப்பதைப் பார்க்க முடிகிறது.**
- இஸ்ரயேல் (யாக்கோபு) ஜனங்களை தேவன் எப்படி சிநேகித்தார்?
- அவர்கள் தேவனுக்கு பிரியமில்லாது செய்த காரியங்கள்.
- இனி அவர்கள் மத்தியில் மேசியாவை அனுப்பபோகும் காரியம் இவைகள் எல்லாம் இந்த 4 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டு இருப்பதைப் பார்க்க முடிகிறது.

இதை படிக்கும் முறை

நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. யூத ஜனங்களின் பக்தியற்ற நடக்கைகள் (1-அதிகாரம்)
2. ஆசாரியர்களின் பத்தியற்ற நடக்கைகள் (2-அதிகாரம்)
3. ஜனங்களின் வருமானமும் , காணிக்கையும் (3 -அதிகாரம்)
4. கர்த்தருடைய நாளில் அவருடைய வருகை (4-அதிகாரம்)

அதிகாரம் - 1

1. இஸ்ரேயேலரின் நன்றியின்மைகளைப் பற்றி மல்கியா வழியாக தேவன் குறை கூறுதல் (1 -5).
2. அவர்களது பக்தியின்மை (6 -11).
3. அவர்களது இழிவான நடக்கை (12-14)

அதிகாரம் -2

1. ஆசாரியர்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளைகளை அவர்கள் தள்ளிவிட்டதால் கடினமான கண்டனத்துக்குள்ளாகின்றனர். (1 -10)
2. மக்களின் விக்கிரகாராதனை. (11 -12)
3. உண்மையின்மை (13 -16)
4. பக்தியின்மை (17)

அதிகாரம் -3

1. கிறிஸ்துவின் முன்னோடி, கிறிஸ்துவின் மகிமை. கிருபை ஆகியவை பற்றிய செய்திகள் (1-6)
2. மக்களின் முரட்டாட்டம், பக்தியற்ற செயல்கள், அவிசுவாசம் ஆகியவை கண்டிக்கப்படுதல். (7-15)
3. தேவனுக்கு பயப்படுவோருக்கான ஆசீர்வாதம் வாக்குதத்தம் செய்யப்படுகிறது. (16-18)

அதிகாரம் -4

1. துன்மார்க்கருக்கான தேவ நியாயத் தீர்ப்பு. (1)
2. தேவனுக்கு பயப்படுவோருக்கான வாக்குத்தத்தங்கள். (2-4)
3. எலியாவின் வருகையைப் பற்றியும், அவரது ஊழியங்களைப்பற்றியும் தேவன் கூறுகிறார். (5,6)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 62

சங்கீதங்கள் (PSALMS)

எபிரேய வார்த்தை : தெஹில்லீம்

பெயர் அர்த்தம் . : துதிகள்

எழுதியவர் : தாவீது (73), ஆசாப் (12), கோராகு புத்திரர் (9), சாலமோன்(2), ஏமான்(1), ஏத்தான் (1) மோசே (1)

ஆசிரியர் அறியப்படாதவை

51 சங்கீதங்கள்.

(இதில் சங்கீதம் 2 மற்றும் 95 தாவீது எழுதியதாக புதிய ஏற்பாடு கூறுகிறது அப் 4:25 , எபி 4:7)

யூத பரம்பரை நம்பிக்கையின்படி 10 சங்கீதங்கள் எசெக்கியா ராஜாவும், 10 சங்கீதங்கள் (119 சங்கீதம் உட்பட) எஸ்றா எழுதியதாகவும் யூகிக்கப்படுகிறது.

- வேதத்தின் 19-வது புத்தகம்
- மொத்தம் அதிகாரங்கள்-150
- மொத்தம் வசனங்கள் - 2461

இந்த புத்தகம் எழுதப்பட்ட காலம்

மோசேயின் காலம் முதல் எஸ்றா, நெகேமியா காலம் வரையிலான விரிவான கால எல்லைக்குள் சங்கீதங்கள் எழுதப்பட்டுள்ளன.

இந்த புத்தகத்தின் சிறப்பு

- கவிதை வழியில் துதியும் ஜெபமும் இடம் பெற்றுள்ளது.
- வேதாகமத்தின் இதயத்திலிருந்து எழும்பும் இசை போல சங்கீதங்களின் புத்தகம் வேதாகமத்தின் நடுவில் அமைந்துள்ளது.

- வேதாகமத்தின் மிக அதிக அதிகாரங்கள் (சங்கீதங்கள்) 150 கொண்ட புத்தகம்.
- வேதாகமத்திலேயே மிக அதிக வசனங்கள் கொண்ட அதிகாரம்(119) இதில் உள்ளது.
- வேதத்தின் 66 புத்தகங்களில் கிறிஸ்தவர்களால் அதிகமாக பயன்படுத்தப்படும் புத்தகம் சங்கீதங்களின் புத்தகம் தான்.
- இதில் சங்கீதம்-23 மற்றும் 91 மிகவும் புகழ் பெற்றவை.
- இதில் இருக்கும் 150 சங்கீதங்கள் உலக சிருஷ்டிப்பு முதல் இஸ்ரயேலின் சிறைவாசத்திற்கு பிற்பட்ட காலம் வரை உள்ள சம்பவங்களை உள்ளடக்கி இருக்கிறது.
- இந்த சங்கீதங்களில் மகிழ்ச்சி, துக்கம், புலம்பல், பாவ அறிக்கை, வெற்றி, தீர்க்கதரிசனம் என பல நிலைகளை உள்ளடக்கியதாக இருக்கிறது.
- இதில் பாடப்பட்டுள்ள பாடல்களில் அநேக பாடல்கள் தேவாலயத்தில் இசை கருவிகளுடன் பாடப்பட்டவை.
- கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை குறித்து அநேக சங்கீதங்கள் தீர்க்கதரிசனமாக பாடப்பட்டுள்ளது.
- கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் உடன்படிக்கையின் வாழ்க்கையின் ஆரம்பம் (தேவனே உம்சித்தம் செய்ய வருகிறேன்)மற்றும் கடைசி (என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்) காரியங்கள் பதிவு செய்யப்பட்டு இருப்பது இதன் சிறப்பு ஆகும்.
- சங்கீதங்களின் நோக்கம் வரலாற்று விளக்கம் தருவதல்ல. எனினும் பல நேரங்களிலும் அவை வரலாற்றுடன் இணைந்து செல்கின்றன. உதாரணமாக தாவீது சவுலிடமிருந்து தப்பி ஓடுவது, பத்சேபாளுடன் பாவத்தில் வீழ்ந்தது, இஸ்ரயேலர் சிறையிருப்பில் அடிமைகளாக பாபிலோன் சென்றது. இஸ்ரயேலரின் வனாந்திர பிரயாண அனுபவங்கள் போன்ற நிகழ்ச்சிகள் வரலாற்றுடன் இணைந்து செல்வதை காணலாம்.

கவனத்தில் கொள்ள வேண்டியது

சங்கீதங்கள் 1 முதல் 150 வரை வரிசையாக சேர்க்கப்படவில்லை. கலந்து இருக்கிறது. படிக்கும் போது சங்கீதங்களின் தலைப்பை படித்து பின்பு கீழே இருக்கும் வசனங்களை படிப்பது நல்லது.

இதை படிக்கும் முறை

ஐந்து பிரிவுகளாக பிரிக்கலாம்.



1. 1 - 41
2. 42 - 72
3. 73 - 89
4. 90 - 106
5. 107 - 150

இந்த புத்தகத்தின் ஒவ்வொரு பிரிவின் கடைசி வசனம் துதியுடன் முடிவதைப் பார்க்கலாம்.

முதல் பிரிவு

இந்த முதல் பிரிவில் 1முதல் 41 சங்கீதங்கள் அடங்கியுள்ளது. இதில் மனிதனின் ஆசிர்வாத நிலை, வீழ்ச்சி, மீட்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இரண்டாம் பிரிவு

இதில் 42 முதல் 72 வரை உள்ள சங்கீதங்கள் உள்ளன. இதில் இஸ்ரயேல் ஜனங்களின் நிலையை குறித்த காரியங்கள் இஸ்ரயேலரின் வீழ்ச்சி, அவர்களது மீட்பு, அவர்களது மீட்பர், அவர்களுக்கு கிடைக்கும் மீட்பு பற்றி கூறுகின்றன.

மூன்றாம் பிரிவு



73 முதல் 89 வரை உள்ள சங்கீதங்கள். தேவாலயத்தை மையப்படுத்தி இந்த சங்கீதங்கள் அமைந்துள்ளன.

நான்காம் பிரிவு

சங்கீதம் 90 முதல் 106 வரை. பூமியை மையப்படுத்தி இந்த சங்கீதங்கள் அமைந்துள்ளன.

ஐந்தாம் பிரிவு

சங்கீதம் 107 முதல் 150 வரை. தேவ வார்த்தையை மையப்படுத்தி இந்த சங்கீதங்கள் அமைந்துள்ளன.

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17



பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 63

சங்கீதங்கள் (PSALMS)

சங்கீதம் -1

நீதிமான்களும், துன்மார்க்கரும் ஒப்பீடு செய்யப்படுதல்.

சங்கீதம் -2

தேவனுடைய ராஜ்யத்தில் நடக்கும் நிகழ்ச்சி இதில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டுள்ளது.

சங்கீதம் -3

தேவனுடைய பராமரிப்பை குறித்து சொல்கிறது.

சங்கீதம் -4

1. தாம் கூப்பிடும் போது தேவன் பதில் தரவேண்டும் என்று தாவீது ஜெபித்தல் (1-5)
2. மனிதனுக்கு மகிழ்ச்சி தேவ உறவினால் உண்டாகிறது (6-8)

சங்கீதம் -5

1. துன்மார்க்கருக்கு தேவன் துணை நிற்பதில்லை என்பதை குறித்து (1-6)
2. தம்மை வழி நடத்தும்படி தேவனிடம் தாவீது வேண்டுதல் (7-12)

சங்கீதம் -6

தமது நோயினால் தாவீது வழக்காடுதல்.

சங்கீதம் -7

1. தாவீது தமது குற்றமின்மையை அழுத்தமாக கூறியபடி எதிரிகளின் தீமைக்கு எதிராக ஜெபித்தல்(1-9)

2. அவரது பாதுகாப்பு தேவனிடம் இருப்பதாக கூறுதல், துன்மார்க்கருக்கு வரும் அழிவை குறித்து கூறுதல் (10-17).

சங்கீதம் -8

1. தேவனின் மகிமை அவரது செயல்களால் மேன்மைபடுகிறது.(1-5)
2. மனுஷகுமாரனுக்கு அவர் ஆளுகையை கொடுக்கிறார் (6-9)

சங்கீதம் -9

1. தேவனுடைய நீதியை குறித்து தாவீது துதித்தல் (1-10)
2. மற்றவர்களும் தேவனை துதிக்க அவர் அறிவுரை கூறுதல் (11-20)

சங்கீதம் -10

துன்மார்க்கரின் அகங்காரத்தை குறித்து தாவீது தேவனிடம் குற்றம் சாட்டுதல்.

சங்கீதம் -11

தேவனுடைய பாதுகாப்பையும், நீதியையும் குறித்து பாடுதல்.

சங்கீதம் -12

1. மனித ஆறுதல்களை இழந்து போனதால் தாவீது தேவ உதவியை நாடுதல் (1-2)
2. தீயோர் மேல் வரும் தேவ நியாயத்தீர்ப்பு (3-8)

சங்கீதம் -13

தன் எதிரிகள் வெற்றி முழக்கம் செய்யாதபடிக்கு தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -14

1. உலக மக்களின் (விசேஷமாக இஸ்ரயேலரின்) அன்றைய நிலை (1-4)
2. தேவபிள்ளைகளின் நிலை (5-7)

சங்கீதம் -15

தேவனுடைய பரிசுத்த ப்ர்வதத்தில் வாசம் பண்ணுகிறவரின் பூமிக்குரிய வாழ்க்கை

சங்கீதம் -16

1. தேவ பாதுகாப்பை தேடி தேவனிடம் செல்லுதல் (1-5)
2. தேவன் மீது உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துதல் (6-11)

சங்கீதம் -17

தமது எதிரிகளிடமிருந்து தன்னை தப்புவிக்கும்படி தேவனிடம் தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -18

தேவனின் அற்புதமான, பலவகை ஆசிர்வாதங்களுக்காக தாவீது துதி ஸ்தோத்திரங்களை செலுத்துதல்.

சங்கீதம் -19

1. ஆகாய மண்டலத்தை, தேவனின் படைப்புகளை வ்ர்ணித்தல் (1-6)
2. தேவ வார்த்தையை குறித்து (7-11)
3. தேவ கிருபைக்காக தாவீது ஜெபித்தல் (12-14)

சங்கீதம் -20

தேவன் உதவுவார் என்பதில் தாவீதின் அசைவற்ற நம்பிக்கை

சங்கீதம் -21

வெற்றிக்கான துதி, தேவன் மேல் உள்ள விசுவாசம்.

சங்கீதம் -22

மேசியாவின் (க்ர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்) பாடுகளை குறித்த ஒரு தீர்க்கதரிசனம்.

சங்கீதம் -23

மேய்ப்பராக தேவனை ஒப்புமைப்படுத்தி பாடுபட்ட சங்கீதம்.

சங்கீதம் -24

1. தேவனுடைய சிருஷ்டிப்பு(1-2)
2. கர்த்தருடைய பர்வதத்தில் வாசம் பண்ண போகிறவரின் செயல்பாடுகள்(3-5)
3. மகிமையின் ராஜவை வரவேற்க அறிவுரை (6-10)

சங்கீதம் -25

1. ஜெபத்தின் மேல் தாவீதுக்கு இருந்த விசுவாசம் (1-6)
2. பாவமன்னிப்புக்காக வேண்டுதல்(7-15)
3. தமது துயரங்களில் உதவ விண்ணப்பம் பண்ணுதல் (16-22)

சங்கீதம் -26

1. தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை தான் வாழ்வதை குறித்து தாவீதின் சாட்சி (1-7)
2. தேவனுடைய ஆலயத்தின் மீது அவருடைய வாஞ்சை (8-12)

சங்கீதம் -27

1. தேவ வல்லமையால் தாவீது தமது விசுவாசத்தை தாங்கி நிறுத்துகிறார் (1-3)
2. தேவனை சேவிக்க தாவீதுக்கு இருந்த வைராக்கியம் (4-14)

சங்கீதம் -28

1. தனது எதிரிகளுக்கெதிராக தாவீதின் ஜெபம் (1-5)
2. தாவீதின் துதி (6-8)
3. மக்களுக்காக தாவீதின் ஜெபம் (9)

சங்கீதம் -29

1. தேவனுக்கு மகிமையை செலுத்த அழைப்பு (1-2)
2. கர்த்தரின் சத்ததின் வல்லமை (3-11)

சங்கீதம் -30

1. தேவன் தன்னை தூக்கி எடுத்ததை நினைத்து தாவீது துதித்தல் (1-3)
2. தேவனை துதிக்க மற்றவர்களை உற்சாகப்படுத்துதல் (4-12)

சங்கீதம் -31

1. தேவன் மேலுள்ள தமது விசுவாசத்தின் அடிப்படையில் உதவி கிடைக்க வேண்டுமென்று தாவீது வாஞ்சித்தல் (1-6)
2. தேவ தயவில் தாவீதின் மகிழ்ச்சி (7-24)

சங்கீதம் -32

1. பாவங்களின் மன்னிப்பில் தான் ஆசீர்வாதம் சொந்தமாகிறது (1-4)
2. பாவங்களை அறிக்கையிடும் போது மனதில் சமாதானம் உண்டாகிறது (5-11)

சங்கீதம் -33

1. தேவனின் ஈவுகளையும், அவரது வல்லமையையும் நினைத்து துதித்தல் (1-19)
2. நமது நம்பிக்கை தேவன் மீது இருக்க வேண்டும் (20-22)

சங்கீதம் -34

1. தாவீது தேவனை துதிப்பதுடன் பிறரையும் அவ்வாறு செய்ய ஏவுகிறார் (1-7)
2. தேவன் மீது நம்பிக்கை வைப்போர் பாக்கியவான்கள் (8-14)
3. நீதிமான்களுக்கான பதவிகள் (15-22)

சங்கீதம் -35

1. தன்னுடைய பாதுகாப்புக்காக தாவீது ஜெபித்தல் (1-10)
2. தீமை செய்கிறவர்களின் தீய செயல்களுக்காக குற்றம் சாட்டுதல் (11-21)
3. தமக்கு நீதி கிடைக்க தேவனிடம் கெஞ்சுதல் (22-28)

சங்கீதம் -36

1. துன்மார்க்கருடைய நிலை (1-4)
2. தேவ கருணையின் மகிமை (5-12)

சங்கீதம் -37

தேவ பக்தியுள்ளோரின் நிரந்தரமான ஆசிர்வாதங்களையும், துன்மார்க்கரின் ஆசிர்வாதம் நிரந்தரமல்ல என்பதையும் புரிந்து கொண்ட தாவீது தேவன் மேல் நம்பிக்கை வைக்க அறிவுறுத்துதல்.

சங்கீதம் -38

தமது பரிதாபமான சூழ்நிலையில் தேவ கருணை கிடைக்கவேண்டுமென்று தாவீது தேவனிடம் பிடிவாதம் செய்கிறார். தமது பாவங்களை அறிக்கையிடவும் செய்கிறார்.

சங்கீதம் -39

தன் மன எண்ணங்களை கூர்மையாக ஆராய்கிறார் தாவீது. மனித வாழ்நாள் குறுகியது என்பதையும், அற்பமான நிலையையும் நினைவூட்டுதல்.

சங்கீதம் -40

1. தேவனை நம்புவோர்க்கான ஆசிர்வாதம் (1-5)
2. கீழ்படிதலே மிகச்சிறந்த பலி (6-10)
3. தாவீது தமது ஆபத்துகளுக்காக அதிக பாரத்துடன் ஜெபித்தல் (11-17)
4. தமக்கு நீதி கிடைக்க தேவனிடம் கெஞ்சுதல் (22-28)

சங்கீதம் -41

1. எளியோரை ஆதரிப்போருக்கான ஆசிர்வாதங்கள் (1-3)
2. தமது எதிரிகளின் மாய்மாலங்களைப்பற்றி தாவீது வேதனைப்படுகிறார்.(4-13)

சங்கீதம் -42

1. நெருக்கடி நேரங்களில் தேவ சமூகம் செல்ல கோராகின் புத்திரர் வாஞ்சித்தல் (1-3)
2. தேவாலயத்தில் சென்று அவரை சேவிக்க அவர்கள் விரும்புகின்றனர் (4-11)

சங்கீதம் -43

தேவாலயத்திற்கு சென்று தேவனோடு உறவாட சங்கீதகாரன் விரும்புதல். மகிழ்ச்சியோடு அவரை ஆராதிப்பேன் என தீர்மானமும் எடுக்கிறார்.

சங்கீதம் -44

1. தேவ ஜனங்கள் கடந்த காலத்தில் தேவன் செய்த நன்மைகளை நினைவு கூர்ந்தபடி, தற்காலத்தில் அனுபவிக்கும் பாடுகளுக்காக தேவனிடம் வழக்காடுகின்றனர். (1-22)
2. உதவிக்காக பாரத்துடன் ஜெபித்தல் (23-26)

சங்கீதம் -45

1. கிறிஸ்துவின் அரசாட்சியின் மகிமையும், ஆசிர்வாதங்களும் அறிவிக்கப்படுதல் (1-8)
2. கிறிஸ்துவின் மணவாட்டியின் மகிமை வருணிக்கப்படுகிறது (9-15)
3. இராஜ்ஜியத்தில் முற்பிதாக்களின் வேலை (16-17)

சங்கீதம் -46

சபையின் உறுதியான விசுவாசம்.

சங்கீதம் -47

தேவனுடைய ராஜ்ஜியத்தில் மகிழ்ச்சியுடன் ஆர்பரிக்க ஜாதிகளுக்கு அறிவுரை.

சங்கீதம் -48

தேவனுடைய ராஜ்ஜியத்தில் நடக்கும் காரியங்கள்

சங்கீதம் -49

இந்த உலகத்தில் வாழும் ஐசுவரியவான்களின் நிலை.

சங்கீதம் -50



1. தேவனின் மகிமை (1-6)
2. மிருக ஜீவன்களின் பலிகளில் தேவன் பிரியப்படுவதில்லை (7-13)
3. தேவன் எதில் பிரியம் கொள்கிறார் (14,15)
4. துன்மார்க்கருக்கு தேவன் தரும் எச்சரிப்பு (16-23)

உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 64

சங்கீதங்கள் (PSALMS)

சங்கீதம் -51

1. தனது பாவங்களுக்காக தாவீது ஜெபித்தல் (1-5)
2. பரிசுத்தப்படுத்தலுக்காக அவரது ஜெபம் தொடர்கிறது (6-19)

சங்கீதம் -52

ஏதோமியனாகிய தோவேக்கு தாவீதை காட்டி கொடுக்க முயற்சிக்க, தோவேக்குக்கு விரோதமாக தாவீது பாடின சங்கீதம்.

சங்கீதம் -53

1. மாம்சீக மனிதரின் இழிவான மனநிலையை விளக்குகிறார் தாவீது (1-5)
2. தேவனுடைய இராட்சிப்பை அவர் புகழ்தல் (6)

சங்கீதம் -54

சீப் ஊராரைக் குற்றஞ்சாட்டியபடி தமது விடுதலைக்காக தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -55

1. தமது ஆபத்தான நிலையைப் பற்றி கூறுகிறார் தாவீது (1-16)
2. மூன்று வேளையும் ஜெபத்தில் போராடுகிறார் தாவீது (17-23)

சங்கீதம் -56

தமது எதிரிகளை குற்றஞ்சாட்டி தாவீது பாடும் சங்கீதம்.

சங்கீதம் -57

தாவீது தனது ஆபத்தைக் குறித்து கூறுகிறார். தேவனை துதிக்க தம்மை திடப்படுத்திக் கொள்ளுகிறார்.

சங்கீதம் -58

துன்மார்க்கர் குணங்களைப்பற்றி தாவீது விவரிக்கிறார்.

சங்கீதம் -59

தமது எதிரிகளிடமிருந்து விடுவிக்க தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -60

தேவ வாக்குத்தத்தங்களுக்கு தம்மை அர்பணித்து தாவீது பாடின சங்கீதம்.

சங்கீதம் -61

தேவ சமூகத்திற்கு ஓடிச் செல்கிறார் தாவீது. தேவ ஆலயத்தில் நிலைத்திருக்க அவர் தம்மை அர்பணிக்கிறார்.

சங்கீதம் -62

தேவன் மேலுள்ள தமது விசுவாசத்தை அறிக்கையிடும் தாவீது. தேவபக்தியுள்ளவர்களை உற்சாகப் படுத்துதல்.

சங்கீதம் -63

1. பரிசுத்த கூடாரத்தில் தேவனுக்கு ஊழியம் செய்ய தாவீது வாஞ்சித்தல் (1-3)
2. தேவபிள்ளைகளின் நிலை (4-7)

சங்கீதம் -64

தமது எதிரிகளிடமிருந்து விடுவிக்கப்பட தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -65

1. தேவ கிருபைக்காக தேவனை துதித்தல் (1-3)
2. தேவன் தெரித்தெடுத்த பரிசுத்தர்களுக்கான ஆசீர்கள் (4-13)

சங்கீதம் -66

1. தேவனை துதிக்க தாவீது அழைப்பு கொடுக்கிறார் (1-4)
2. தேவனின் வல்ல செயல்களை ஆராய்தல் (5-20)

சங்கீதம் -67

தேவனுடைய ராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள்.

சங்கீதம் -68

தேவனுடைய பெட்டி புறப்படும் போது ஏறெடுக்கும் ஜெபம்.

சங்கீதம் -69

தாவீது தமது துன்பத்தில் ஜெபிக்கிறாா்.

சங்கீதம் -70

துன்மாா்க்ககுடைய சீக்கிரமான அழிவுக்கு, நீதிமான்களின் நல்வாழ்வுக்குமாக தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -71

தனக்காகவும், தனது எதிரிகளுக்கு எதிராகவும் தாவீது ஜெபித்தல். முதிா் வயதில் தன்னை பராமரிக்க வேண்டுமென்று ஜெபம் செய்கிறாா்.

சங்கீதம் -72

தேவனுடைய ராஜ்யத்தின் ஆசிா்வாதத்தை குறிக்கும் பாடல்.

சங்கீதம் -73

சோதனையில் வீழ்ந்த சங்கீதகாரன் அதன் சூழலைக் குறிப்பிடுதல்.

சங்கீதம் -74

1. பரிசுத்த ஆலயத்தின் அழிவு(1-9)
2. தேவ வல்லமையின் உதவிக்காக வாஞ்சித்தல் (10-23)

சங்கீதம் -75

1. சங்கீதகாரா் தேவனை துதித்தல் (1-3)
2. பெருமைக்காரரை அவா் கண்டித்தல் (4-10)

சங்கீதம் -76

தேவ மகிமையை குறித்ததான சங்கீதம்.

சங்கீதம் -77

தைரியத்தை வீழ்த்த கூடிய போரட்டத்தையும், அதன் மீது சங்கீதகாரர் அடைந்த வெற்றியையும் காட்டிகிறார்.

சங்கீதம் -78

1. தேவ நியாயப்பிரமாணத்தை படிக்கவும், போதிக்கவும் அறிவுரை(1-7)
2. அவிசுவாசிகளுக்கும், கீழ்படியாதவர்களுக்கும் வரப்போகும் தேவ கோபம் (8-66)
3. இஸ்ரயேலரை தள்ளி விடுதல் (67-72)

சங்கீதம் -79

1. எருசலேம் அழிவை குறித்து சங்கீதகாரர் புலம்புதல் (1-7)
2. விடுதலைக்காக அவர் ஜெபித்தல் (8-13)

சங்கீதம் -80

1. இஸ்ரயேலரின் நெருக்கங்களைப் பற்றி சங்கீதகாரரின் வேதனை (1-7)
2. தேவனின் முந்தைய ஆசிர்வாதங்கள் தண்டனைகளாக மாறுகின்றன (8-19)

சங்கீதம் -81

தேவனின் வல்லமையுள்ள செயல்களுக்காக அவரை துதிக்க அழைப்பு விடுத்தல்.

சங்கீதம் -82

நியாயாதிபதிகளுக்கு அறிவுரை கூறி அவர்களது கவனமின்மையை கண்டிப்பதோடு, அவர்களை நியாயந்தீர்க்க தேவனிடம் ஜெபிக்கிறார் சங்கீதகாரர்.

சங்கீதம் -83

1. எதிரிகளின் சூழ்ச்சிகளுக்கு எதிரே குற்றம் சாட்டுதல் (1-8)
2. தேவ ஜனங்களை துன்புறுத்துவோருக்கு எதிரான ஜெபம் (9-18)

சங்கீதம் -84

1. பரிசுத்த ஸ்தலத்தின் ஐக்கியத்தை நாடும் சங்கீதங்காரர் (1-3)
2. தேவனுடைய வீட்டில் வாழ்வோரின் ஆசிர்வாதங்கள் (4-12)

சங்கீதம் -85

முன்பு கிடைந்த ஆசிர்வாதங்களைப் போல் தொடர்ந்து கிடைக்க வேண்டுமென்று சங்கீதகாரர் ஜெபித்தல்.

சங்கீதம் -86

1. தேவ நன்மையிலும்,தேவ வல்லமையிலும் சார்ந்து தாவீது ஜெபித்தல் (1-10)
2. முற்கால கிருபைகள் தொடர அவர் வாஞ்சித்தல் (11-17)

சங்கீதம் -87

சபையை குறித்ததான தீர்க்க தரிசன பாடல்.

சங்கீதம் -88

குற்றச்சாட்டுகள் உள்ளடக்கிய ஜெபமாகிய ஒருபாடல்.

சங்கீதம் -89

1. தேவ உடன்படிக்கையையும், நேர்மையையும் நினைத்து சங்கீதகாரர் தேவனை துதிக்கிறார். (1-18)
2. தாவீதின் மீதுள்ள தேவ கரிசனையை குறித்ததான காரியங்கள். (19-52)

சங்கீதம் -90

1. மோசே தேவனிடம் ஜெபித்தல்.(1-9)
2. மனிதனுடைய குறுகிய வாழ்நாட்கள் குறித்து. (10-17)

சங்கீதம் -91

1. தேவ பிள்ளைகளின் அருமையான நிலை (1-2)
2. தேவனின் பாதுகாப்பு (3-8)
3. தேவன் அடைக்கலம் (9-16)

சங்கீதம் -92

1. தேவனை துதிக்க சங்கீதகாரர் அழைத்தல் (1-11)
2. நீதிமானுக்கு செய்யப்படும் நன்மைகளுக்காக துதி (12-15)

சங்கீதம் -93

தேவனின் மகிமையும், வல்லமையும், பரிசுத்தமும்.

சங்கீதம் -94

1. துன்மார்க்கரின் அநீதி, பக்தியின்மை ஆகியவற்றை குற்றம் சாட்டி, நீதிக்கு அழைப்பு விடுத்தல் (1-17)
2. துன்ப படுகிறவர்களுக்கு தேவன் அடைக்கலமானவர் (18-23)

சங்கீதம் -95

1. தேவனை துதிக்க அழைப்பு (1-7)
2. தேவனை பரிட்சைப் பார்க்க கூடாது (8-11)

சங்கீதம் -96

தேவனின் நீதியான தீர்ப்புகளை நினைத்து அவரை துதிக்க அழைப்பு.

சங்கீதம் -97

தேவராஜ்யத்தின் மகிமை.

சங்கீதம் -98

அனைத்து சிருஷ்டிப்புகளும் தேவனை துதிக்க சங்கீதகாரர் அழைப்பு விடுத்தல்.

சங்கீதம் -99

தங்களது முற்பிதாக்களின் முன்மாதிரியின் அடிப்படையில் பரிசுத்த தேவனை, அவரது பரிசுத்த ப்ாவத்தில் ஆராதிக்க அனைத்து மக்களுக்கும் சங்கீதகாரா் அழைப்பு கொடுத்தல்.

சங்கீதம் -100

மகிழ்ச்சியுடன் க்ாத்தரை துதிக்க அழைப்பு.

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 65

சங்கீதங்கள் (PSALMS)

சங்கீதம் -101

தேவபக்தியை அறிக்கையிடும் தாவீதின் ஒரு சங்கீதம்.

சங்கீதம் -102

1. தன்னுடைய நிலையை தேவனிடம் சங்கீதகாரன் தெரிவிக்கிறார் (1-11)
2. தேவ கருனையிலும் மாறாத தன்மையிலும் ஆறுதல்படுதல். (12-28)

சங்கீதம் -103

தேவன் செய்த நன்மைகளை நினைத்து அவரைப் போற்ற அழைப்பு.

சங்கீதம் -104

தேவ மகிமையையும், கரிசனையையும் பற்றிய ஒரு தியானம்.

சங்கீதம் -105

தேவன் தமது மக்களைப் பாதுகாத்து, பராமரிப்பதை பற்றி கூறும் பாடல்.

சங்கீதம் -106

1. தேவனை துதிப்பதற்கு அறிவுரை (1-6)
2. ஜனத்தின் முரட்டாட்டமும் தேவனின் கருணையும் (7-48)

சங்கீதம் -107

மீட்கப்பட்ட மக்கள் தேவனின் எண்ணற்ற பராமரிப்புகளை நினைத்து அவரை துதிக்க சங்கீதகாரர் அறிவுரைத்தல்.

சங்கீதம் -108

தேவன் தமது வாக்குதத்தப்படி தமக்கு உதவ வேண்டுமென்று சங்கீதகாரர் வேண்டுகிறார்.

சங்கீதம் -109

1. தமது எதிரிகளை தாவீது குற்றம் சாட்டுதல் (1-15)
2. அவர்களது பாவங்களை அவர் சுட்டி காட்டுதல் (16-25)
3. உதவிக்காக தாவீது ஜெபித்தல் (26-31)

சங்கீதம் -110

கிறிஸ்துவின் ராஜ்யம், ஆசாரியத்துவம், வெற்றி, பாடுகள் ஆகியவை விவரிக்கப்படுகின்றன.

சங்கீதம் -111

தேவனின் மகிமைமிக்க செயல்களை நினைத்து அவரை போற்ற சங்கீதகாரர் ஏவுகிறார்.

சங்கீதம் -112

நீதிமானின் பாதுகாப்பு.

சங்கீதம் -113

தேவ மகிமையையும், கருணையையும் நினைத்து அவரை துதிக்க போதனை.

சங்கீதம் -114

பற்பல ஒப்புமைச் சான்றுகளைக் காட்டியபடி தேவனைப் போற்ற போதனை.

சங்கீதம் -115

தமது நாமம் மகிமைப்படுவதில் தேவன் கவனமுள்ளவர்.

சங்கீதம் -116

தேவனோடுள்ள தமது அன்பை பாடலசிரியர் அறிக்கையிடுகிறார்.

சங்கீதம் -117

தேவனை துதிக்க அழைப்பு.

சங்கீதம் -118

தேவனின் தயவை நினைத்து அவரைத் துதிக்க அழைப்பும், கிறிஸ்து தமது ராஜ்யத்தில் வருவதைப் பற்றிய விளம்பரமும்.

சங்கீதம் -119

எபிரேய எழுத்துக்களை கொண்டு தேவனுடைய வார்த்தைகளை மகிமைப்படுத்தி எழுதப்பட்ட சங்கீதம்.

$22\times8=176$

சங்கீதம் -120

தாவீது தோவேக்கிற்கு எதிராக ஜெபிக்கிறார். தோவேக்கின் உளவுப் பணியால் தாவீது அந்நிய நாட்டில் பரதேசியாக வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டது.

சங்கீதம் -121

தேவனை நம்பும் நீதிமானின் சங்கீதம். தேவன் தனது பாதுகாப்பு என்பதை கூறுதல்.

சங்கீதம் -122

1. தேவாலயத்திற்கு போவதில் தனக்கிருந்த மகிழ்ச்சியை தாவீது வெளிப்படுத்துதல் (1-5)
2. எருசலேமிற்காக அவர் ஜெபித்தல். (6-9)

சங்கீதம் -123

நீதிமான்கள் தங்கள் நம்பிக்கை தேவன் மீது என்று அறிக்கையிடும் சங்கீதம்.

சங்கீதம் -124

தேவன் அற்புதமாக தங்களை விடுவித்ததை நினைத்து தேவ ஜனங்கள் அவரைப் போற்றித் துதிக்கின்றனர்.

சங்கீதம் -125

1. தேவனை நம்பு வோருக்குள்ள பாதுகாப்பு (1-3)
2. தேவ மக்களின் நன்மைக்காகவும், தீயோரின் தண்டனைக்காகவும் ஜெபிக்கப்படுகிறது.(4-5)

சங்கீதம் -126

1. இஸ்ரயேல் ஜனங்கள் அற்புதமான நிலையில் சிறை மீண்டு வந்தததை எண்ணிப் பார்க்கின்றனர்.(1-4)
2. அவர்களுக்கு கிடைக்கும் நன்மைகளை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்படுகிறது.(5,6)

சங்கீதம் -127

1. தேவனுடைய ஆசீர்வாதமில்லாத மனித முயற்சிகள் வீண். (1-3)
2. பிள்ளைகள் தேவன் கொடுக்கும் பரிசு. (4-6)

சங்கீதம் -128

தேவனுக்குப் பயப்படுவோருக்கான பற்பல ஆசிர்வாதங்கள்.

சங்கீதம் -129

இஸ்ரயேலரின் பெரும் நெருக்கடியான வேளைகளில் அவர்களைத் தப்புவித்த தேவனின் நற்செயலை நினைத்து தேவனை துதித்தல்.

சங்கீதம் -130

1. ஆபத்தான சூழ்நிலையில் அகப்பட்ட சங்கீதகாரர் தமது நம்பிக்கையை அறிக்கையிடுகிறார்.(1-4)
2. நம்பிக்கையின் மீதான பொறுமை. (5,6)
3. தேவன் மீது நம்பின்கை வைக்க அவர் இஸ்ரயேலுக்குப் போதிக்கிறார். (7,8)

சங்கீதம் -131

1. தாவீது தமது அர்பணிப்பை அறிக்கையிடுகிறார். (1-2)
2. கர்த்தரில் நம்பிக்கை வைக்க இஸ்ரயேலுக்கும் போதிக்கிறார் (3)

சங்கீதம் -132

1. தேவனுடைய பெட்டியை கொண்டு போகும் போது ஜெபித்த சங்கீதகாரரின் ஜெபம் (1-10)
2. தேவ வாக்குத்தத்தங்களை அவர் திரும்ப, திரும்ப நினைக்கிறார்.(11-18)

சங்கீதம் -133

சகோதர ஐக்கியத்தினால் வரும் ஆசிர்வாதங்கள்.

சங்கீதம் -134

தேவனைப் போற்ற அறிவுரை.

சங்கீதம் -135

1. தேவனின் கருணையையும், மகிமையையும் சிந்தித்து அவருடைய ஊழியக்காரர்கள் துதிக்கும்படி போதித்தல். (1-14)
2. விக்கிரகங்கள் வீண் (15-18)
3. தேவனைப் போற்ற அறிவுரை (19-21)

சங்கீதம் -136

தேவனின் தனித்துவ கருணையை நினைத்து அவரை துதிப்பதற்கான ஏவுதல்.

சங்கீதம் -137

1. சிறையிருப்புக்கு சென்ற இடத்தில் இஸ்ரயேலர் நம்பிக்கை நிறைந்தவர்களாயிருந்தனர். (1-6)
2. ஏதோமையும், பாபிலோனையும் இஸ்ரயேலர் சபித்தல் (7-10)

சங்கீதம் -138

தேவ வசனத்தின் நேர்மைக்காக தாவீது தேவனை துதித்தல்.

சங்கீதம் -139

எல்லாவற்றையும் சோதித்து அறியும் தேவனின் கரிசனையை நினைத்து தாவீது தேவனை துதித்தல்.

சங்கீதம் -140

சவுல் மற்றும் தேவேக்கு ஆகியோரிமிருந்து தம்மை விடுவிக்கும்படி தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -141

தனது மனசாட்சி மாசற்றதாக இருக்க வேண்டுமென்று தாவீது வேண்டுகிறார்.

சங்கீதம் -142

தமது பாடுகளில் ஆறுதல் எல்லாம் தேவனிடம் ஜெபிப்பதில்தான் என்று தாவீது சுட்டிகாட்டுகிறார்.

சங்கீதம் -143

தேவ வழிநடத்துதலுக்காகவும், பாதுகாப்புக்காகவும் தாவீது ஜெபித்தல்.

சங்கீதம் -144

தேவ தயவை நினைத்து தாவீது தேவனை வாழ்த்துதல்.

சங்கீதம் -145

தேவ நம்பிக்கையையும், தம் பிள்ளைகளுடன் அவரது சிறப்பான கிருபையையும் நினைத்து தாவீது தேவனை துதித்தல்.

சங்கீதம் -146

நம்பத்தகுந்தவர் தேவன் மட்டுமே.

சங்கீதம் -147

தேவ ஜனங்களை காத்து பராமரிக்கும் தேவனை துதிக்க சங்கீதகாரர் அழைத்தல்.

சங்கீதம் -148

பரலோகத்தில் இருப்பவர்களும், உலகில் இருப்பவர்களும் சிறந்த புத்தியுள்ளவர்களும் தேவனை துதிக்க சங்கீதகாரர் அழைத்தல்.

சங்கீதம் -149

தம் மக்களிடம் தேவன் வைத்திருக்கும் அன்பை நினைத்து அவரை துதிக்க சங்கீதகாரர் போதித்தல்.

சங்கீதம் -150

அனைத்து வகையான இசைக் கருவிகளுடன் தேவனை துதிக்க அழைப்பு.



"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 66

மல்கியாவுக்கும் மத்தேயுவுக்கு இடைப்பட்ட 400 வருட வரலாற்று சம்பவங்கள

பகுதி – 1

வேதத்தை **கிராமமாக** வாசிக்க கூடிய தேவபிள்ளைகள், வேதத்தின் முழு காரியங்களை அறிந்து கொள்ள விரும்பும் தேவனுடைய பிள்ளைகள் **புதிய ஏற்பாடு படிப்பதற்கு முன் மல்கியாவுக்கும், மத்தேயுவுக்கும் இடையில் உள்ள 400 வருட கால பகுதியில் நடந்த சம்பவங்கள்** குறிந்து அறிந்திருக்க வேண்டும்.

ஏன் இவைகளை அறிந்திருக்க வேண்டும் ?

1. புதிய ஏற்பாட்டில் **பரிசேயா், சதுசேயா்** என்ற ஒரு கூட்டடத்தாரைப் பற்றி படிக்கிறோம். இவா்களை குறித்துப் பழைய ஏற்பாட்டில் பாா்ப்பதில்லை.

இவா்கள் எப்படி புதிய ஏற்பாட்டுக்குள் வந்தாா்கள்? இவா்கள் யாா் ? என்பதை குறித்து அறிந்து கொள்ள வேண்டுமானால் இந்த 400 வருட சம்பவங்கள் மிகவும் அவசியமாக இருக்கிறது.

2. கா்த்தராகிய இயேசு கிறிஸ்து யூத ஜனங்கள் மத்தியில் யூதனாக பிறந்தாா், வாழ்ந்தாா். அவரை அவருடைய ஜனங்கள் கொலை செய்ய முடிவெடுத்ததின் காரணம் தெரிய வேண்டுமானால், இந்த 400 வருட காலபகுதியின் சம்பவங்களை நாம் அறிந்திருக்கவேண்டும்.

3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து கொலை செய்ய முதலாவது பிரதான ஆசாரியரிடம் கொண்டு செல்கிறார்கள். அதன் பின்பு பிலாத்துவிடம் கொண்டு செல்கிறார்கள். அவர் ஏரோதிடம் அனுப்புகிறார்.



பிரதான ஆசாரியர், பிலாத்து, ஏரோது 3 பேர் விசாரிக்கிறார்கள். இந்த ஏரோது யார்? பிலாத்து யார்? பிரதான ஆசாரியன் யார்?

இந்த ஏரோது, பிலாத்து இவர்களை குறித்து பழைய ஏற்பாட்டில் இல்லை. இவர்கள் யார்? எங்கிருந்து வந்தார்கள்? என்பதை குறித்து அறிந்து கொள்ள இந்த 400 வருட செய்திகளை நாம் அறிந்திருக்கவேண்டும்.

4. பரிசுத்த வேதத்தை 3 பகுதிகளாக படிக்க வேண்டும்.

- **பழைய ஏற்பாடு (ஆதியாகமம் - மல்கியா)**
- **400 வருட காலபகுதி (மல்கியா – மத்தேயு)**
- **புதிய ஏற்பாடு (மத்தேயு - வெளிப்படுத்தினவிசேஷம்)**

இதில் இந்த 400 வருட காலபகுதி மிக முக்கியம் . இது ஒரு சிறிய காலபகுதி என்றால் பரவாயில்லை. மிக நீண்ட கால பகுதி. 400 வருடத்தில் உலகத்தில் எவ்வளவோ மாற்றங்கள் நடந்திருக்க வாய்ப்புண்டு. எனவே இந்த கால பகுதியில் நடந்த சம்பவங்களை ஒரு தேவனுடைய பிள்ளை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

5. மல்கியாவை முடித்து வரலாற்று பிண்ணனி தெரியாமல் நாம் புதிய ஏற்பாட்டை படிக்க துவங்கினால் எல்லா காரியங்களையும் படிக்கலாம். புரிந்து கொள்ள முடியாது.

பழைய ஏற்பாட்டு சரித்திரத்தின் சுருக்கம்.

1. முற்பிதாக்களின் காலம்

- ஆதாம் முதல் யோசேப்பு வரை

ஆதியாகமம்.

2. இஸ்ரயேலரின் விடுதலை காலம்.

- மோசே எகிப்திலிருந்து ஜனங்களை மீட்டது.
- 10 கற்பனைகளை பெற்றது.
- வனாந்திர பிரயாணம்.
- கானான் போய் குடியேறியது.

(யாத்திராகமம், லேவியராகமம்,எண்ணாகமம், உபாகம்ம், யோசுவா)

3. நியாயாதிபதிகளின் காலம்

- நியாயாதிபதிகள், ரூத்.

4. இராஜாக்களின் காலம்.

- I சாமுயேல் **புத்தகம்** - சவுல் ராஜா



5. தாவீதின் ஆட்சிகாலம்

- தாவீது பெலிஸ்தியரை முறியடித்தது, தேவனுடைய பெட்டியை கொண்டு வந்தது – II சாமுயேல் புத்தகம்.

6. சாலமோனின் ஆட்சிகாலம்

- தேவாலயம் கட்டியது. I இராஜாக்கள், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு.



7. ராஜ்ஜியங்கள் பிரிந்த காலம்

❖ பத்து கோத்திரங்கள், இரண்டு கோத்திரங்கள் (இஸ்ரயேல், யூதா)

8. இஸ்ரயேலரின் சிறை பிடிப்பின் காலம்.

❖ இஸ்ரயேல் - பத்து கோத்திரம் - அசீரியா ராஜா சிறைபிடித்தார்

❖ யூதா - இரண்டு கோத்திரம் - பாபிலோன் ராஜா சிறை பிடித்தார்.

❖ **I இராஜாக்கள், II இராஜாக்கள் எரேமியா, புலம்பல்** புத்தகங்கள்.

9. சிறையிருப்பின் காலம்

❖ யூதா ஜனங்கள் சிறையிருப்பில் இருந்தது. நேபுகாத் நேச்சார், பெல்ஷாத் சார், தரியு போன்ற ராஜாக்களின் காலம்.

❖ **தானியேல், எசேக்கியேல்.**

10. விடுதலையின் காலம்

❖ பாபிலோன் சிறையிருப்பில் இருந்து செருபாபேல் தலைமையில் யூதர்கள் புறப்பட்டு வந்தது. எஸ்றா, நெகேமியா வந்தது.

❖ **எஸ்றா,நெகேமியா,எஸ்தர், ஆகாய்,சகரியா,மல்கியா** புத்தகங்கள்

❖ **I நாளாகமம், II நாளாகமம்.**

11. பிற ராஜாக்களின் காலம்.



- ❖ கிரேக்க சாம்ராஜ்யம் உலகத்தை ஆண்டது.
- ❖ கிரேக்க கலாச்சாரம் உலகத்தில் பரவினது.

12. ஆராய்ச்சியின் காலம்.

- ❖ யூதர்கள் வேதத்தை அதிகமாக தேடினார்கள்.
- ❖ ஆராய்ச்சி செய்தனர் - **தள்ளுபடி ஆகமங்கள்** இந்த காலத்தில் எழுதப்பட்டது.

13. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

- ❖ ரோமர்கள் ஆட்சி செய்தனர்.
- ❖ ஏரோது , பிலாத்து இஸ்ரயேலரை ஆண்டனர்.

14. ஏரோது புதிய தேவாலயத்தை கட்டுதல்.

- ❖ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு.

இதில் இஸ்ரயேல் ஜனங்கள் சிறையிருப்பில் இருந்து வந்தது வரை குறித்த செய்திகளோடு பழைய ஏற்பாடு முடிகிறது.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் புதிய ஏற்பாடு ஆரம்பிக்கிறது. இடையில் 400 வருடத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் குறித்து அடுத்த பாடத்தில் பார்க்கலாம்.

"உம்முடைய வசனமே சத்தியம்" **யோவான் 17 : 17**

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 67

மல்கியாவுக்கும் மத்தேயுவுக்கு இடைப்பட்ட 400 வருட வரலாற்று சம்பவங்கள்

பகுதி – 2

இஸ்ரயேல் தேசத்தில் 400 வருடத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள்

6 இராஜ்ஜியங்கள்

1. மேதோ- பெர்சிய சாம்ராஜ்யம்.
2. கிரேக்க சாம்ராஜ்யம்.
3. எகிப்தின் தாலமி ராஜ்யம்.
4. சிரியா ராஜ்யம்.
5. மக்கபேயர் ஆட்சி
6. ரோம் சாம்ராஜ்யம்

இவர்கள் **இஸ்ரயேலையும், இஸ்ரயேலை சுற்றியும்** ஆட்சி செய்தனர்.

1. மேதோ – பெர்சிய சாம்ராஜ்யம்

கோரேசு, காம்பைசிஸ்,ஸ்மெர்திஸ், தரியு ஹிஸ்டாஸ்பெஸ் (மகா தரியு) அகாஸ்வேரு (செர்செல்), அர்த்தசஸ்டா, மூன்றாம் தரியு போன்ற ராஜாக்கள் ஆட்சி செய்தனர்.

- இவர்கள் ஆட்சி காலத்தில் **70 வருட சிறையிருப்புக்கு** பின்பு யூதர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.
- **தேவாலயம் கட்ட அனுமதி** கொடுக்கப்பட்டது. (யோசுவா,செருபாபேல் தலைமையில்..)
- **ஆசாரியன் எஸ்றா** அனுப்பி வைக்கப்பட்டது.
- புதிய ஏற்பாட்டில் அராமிக் மொழி பேசப்பட்டதாகப் பார்க்கிறோம். இந்த **அராமிக் மொழி** பேசப்படுவதற்கு இந்த பெர்சிய அரசு காரணமாக இருந்தது. இவர்களால் அறிமுகம்படுத்தப்பட்டது இந்த அராமிக் மொழி.

❖ இயேசுகிறிஸ்து பேசியது அராமிக் மொழி என்கிறார்கள் **“ தலித்தாகூமி ” இது அராமிக் மொழி.**

❖ இந்த சாம்ராஜ்ஜியத்தின் கடைசி ராஜாவான **மூன்றாம் தரியுவின் நாட்களில்** கி.மு 331-ல் நினிவேக்கு அண்மையில் நடந்த **அர்பேலா** போரில் கிரேக்க ராஜா **மகா அலெக்சாண்டரால்** தோற்கடிக்கப்பட்டார்.இதோடு பெர்சிய சாம்ராஜ்யம் முடிவிக்கு வந்தது.

2. கிரேக்க சாம்ராஜ்யம்.

❖ கிரேக்க சாம்ராஜ்ஜியத்திற்கு **மாசிடோனியன் (Macedonian)** என்ற பெயரும் உண்டு.

❖ மாசிடோனியா என்ற இடத்திலிருந்து இவர்கள் ஆட்சி ஆரம்பித்தது. எனவே இந்த பெயரும் உண்டு.

❖ இயேசுகிறிஸ்து பூமிக்கு வருவதற்கு முன்பு (முதலாம் வருகை) சுமார் 300 வருடத்திற்கு முன்பு மேதோ - பெர்சிய சாம்ராஜ்ஜியத்தை கிரேக்க சாம்ராஜ்யம் வீழ்த்தி வெற்றி பெற்றது.

❖ கிரேக்க சாம்ராஜ்யம் **பிலிப்பு - II** (கி.மு 360 - 336) (அலெக்சாண்டரின் தந்தை) என்பவர் தலைமையில் உலகை ஆளத் துவங்கியது.

❖ கிரேக்க பேரரசின் சிறந்த அரசராக பெயர் பெற்றவர் மகா அலெக்சாண்டர்.

❖ கிரேக்கர்களின் வீரக்காவியங்களாக **இலியட், ஒடிஸி** ஆகியவற்றை எழுதிய **கண்பார்வையற்ற கவிஞரான ஹோமர்** கிரேக்க நாட்டில் பிறந்தவர்.

❖ **முதலாம் ஒலிம்பிக் போட்டி நடந்த கி.மு. 776-ம் ஆண்டில் இருந்து கிரேக்க வரலாறு மிகத் தெளிவாக எழுதப்பட்டு கிடைத்துள்ளது.**

❖ கி.மு 490-ல் கிரேக்கர்கள் பெர்சியாவின் மேல் பெற்ற சரித்திர வெற்றியை அறிவிக்க ஒரு கிரேக்க சாதனையாளர் மாரத்தானிலிருந்து 26 மைல்கள் ஓடி ஏதேன் சுக்கு சென்றதின் நினைவாக இன்றும் மாரத்தான் நடக்கிறது.



❖ பெரிக்ளிஸ் , சாக்ரடீஸ் போன்றோர் கிரேக்க சாம்ராஜ்ஜியத்தின் காலத்தில் வாழ்ந்தவர்கள்.

❖ கிரேக்க சாமராஜ்ஜியத்தின் மிக முக்கிய ராஜாவாக மகா அலேக்சாண்டர் விளங்குகிறார்.

❖ கி.மு 336-ல் தமது 20- வது வயதில் அலேக்சாண்டர் தமது ஆட்சியை தொடங்குகிறார்.

❖ இவரது ஆட்சியின் போது எகிப்து, அசீரியா, பாபிலோன், பெர்சியா முதலிய நாடுகளைக் கைபற்றினார். **வெறும் 5 ஆண்டுகளில் இனி கைபற்ற நாடுகள் இல்லை என்னும் அளவுக்கு இவருடைய வெற்றி இருந்தது.**



❖ கி.மு 332-ல் இவர் பாலஸ்தீனத்தை கைப்பற்றும் போது தன்னைப்பற்றி **200 ஆண்டுகளுக்கு முன்பு தானியேல் தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் உரைத்துள்ளார்.** (சிலையில் வெண்கலப் பகுதி கிரேக்க சாம்ராஜ்யம்) என்பதை அறிந்து கொண்டார். எனவே அவர் ஏராளம் நல்ல காரியங்களை யூதாவுக்கு செய்தார். அவர் எருசலேமை அழிக்க வில்லை மட்டுமல்ல, அலேக்சாண்டிரியாவில் குடியேறும் அனுமதியை யூதர்களுக்கு அளித்தார். அலேக்சாண்டிரியா நகரம் பிற்காலங்களில் யூதர்களின் முக்கிய குடியேற்ற இடங்களில் ஒன்றாயிற்று.

❖ அலேக்சாண்டர் கைபற்றிய இடங்களில் எல்லாம் விருப்பம் போல் குடியேறிய யூதர்கள் உலகின் எல்லா பகுதிகளிலும் குடியேறியதால் **“சிதறியிருக்கிறவர்கள்”** என்ற பெயரைப் பெற்றனர் (யோவான் 7 :35).

❖ அலேக்சாண்டர் இந்தியா வந்து பஞ்சாபை அடைந்த போதுதான் பெர்சியாவில் புரட்சி ஏற்பட்ட செய்தி அவருக்கு வந்தது. கி.மு 323-ல் பாபிலோனை அடைந்த அலேக்சாண்டர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு **33 வது வயதில் மரித்தார்.**

❖ அலெக்சாண்டர் மரணத்துக்கு பின் இவரது சாம்ராஜ்யத்தை இவரது தளபதிகள் **கெசண்டர், லிசிமாகஸ், டாலமி, செலுக்கஸ்** என்பவர்கள்

தலைமையில் பிரித்து ஆளப்பட்டது. இந்த நான்கு பேரில் செல்யூகஸும், டாலமியும் வரலாற்று சிறப்புடையவர்களாக விளங்கினர்.

- ❖ டாலமி (Ptolmey) எகிப்தை ஆண்டார் (கி.மு 323 – 285)
- ❖ செலுக்கஸ் (Seleucus) பெர்சியா மற்றும் சிரியாவை ஆண்டார் (கி.மு 312 -280)
- ❖ லிசிமாகஸ் - ஆசியாமைனர் , திரேஸ்.
- ❖ கெசண்டர் - மாசிடோனியா - கிரீஸ் பகுதிகளை ஆண்டனர்.

3. எகிப்தில் தாலமி அரசு

❖ அலெக்சாண்டர் மரணத்திற்கு பின்பு எகிப்திய பகுதியை டாலமி (Ptolemy) என்பவர் ஆண்டார். இவர் ஆட்சியின் கீழ் இஸ்ரயேல் தேசம் வந்தது.

❖ டாலமி அலெக்சாந்திரியாவில் இருந்து கொண்டே யூதர்களையும், பாலஸ்தீனர்களையும் ஆட்சி செய்தார். இவர் ஆட்சி காலத்தில் யூதர்கள் அலெக்சாண்டிரியாவில் குடியேறினர்.

❖ இவர் ஆட்சியின் போது " தானாக்" எனப்பட்ட எபிரேய வேதம் கிரேக்க மொழிக்கு (செப்டுவஜண்ட்) மொழி பெயர்க்கப்பட்டது.

- ❖ எகிப்தில் டாலமிகளின் ஆட்சி இருந்தவரை யூதர்களுக்கு பிரச்சனை எதுவும் இல்லாதிருந்தது. எகிப்தில் தாங்கள் குடியேறின பகுதிகளிலெல்லாம் யூதர்கள் ஜெப ஆலயங்களைக் கட்டினார்கள். மெல்ல, மெல்ல எகிப்தின் அலெக்சாண்டிரியா யூதா மதத்தின் மையமாக விளங்க தொடங்கியது.
- ❖ கிரேக்க ஆட்சி காலத்தில் சிரியாவிற்கும், எகிப்துக்கும் இடையில் இருந்த செழிப்பான பாலஸ்தீனத்தை குறித்த வாக்குவாதம் உண்டானது.இந்த பாலஸ்தீனத்தை சொந்தமாக்க இரு நாடுகளும் முயன்றன.
- ❖ பாலஸ்தீனத்தை சொந்தமாக்க நடந்த போரில் முதல் வெற்றி சிரியாவுக்காயிருந்தது. பிறகு நடந்த போரில் எகிப்து வெற்றி பெற்றது. கி.மு 198 வரை அதனை தமது நாட்டின் ஒரு பகுதியாக அது வைத்திருந்தது.

continue

“உம்முடைய வசனமே சத்தியம்” யோவான் 17 : 17

பரிசுத்த வேதாகமம்

வகுப்பு - 68

மல்கியாவுக்கும், மத்தேயுவுக்கும் இடைப்பட்ட 400 வருட வரலாற்று சம்பவங்கள்

பகுதி – 3

4. சிரியா ராஜ்யம்

❖ கிரேக்கர்களிடம் பாலஸ்தீனத்தை இழந்தது சிரியாவிற்கு தீராத வேதனையை ஏற்படுத்தியது.அதனை திரும்ப கைப்பற்றுவது என்பது அவர்களைப் பொருத்த வரை மானப்பிரச்சனையாக இருந்தது. சிரியாவின் **மகா அந்தியோகஸ்** தக்க நேரம் பார்த்து கி.மு.198-ல் அதனை திரும்ப பிடித்தார். மீண்டும் பாலஸ்தீனா சிரியாவின் கை வசமாயிற்று.

❖ கூர்மையான அறிவாளியும், வெற்றி வீரருமான அந்தியோகஸ் யூதர்களின் நட்பை நாடினார். சிரியாவில் குடியேற வாய்ப்பளித்தார்.

❖ இதனால் இந்த கால கட்டத்தில் யூதர்கள் சிரியாவிலும், அந்தியோகியாவிலும், ஆசியா மைனரிலும் குடியேற தொடங்கினார்கள்.

❖ இந்த சமாதான நாட்கள் யூதர்களுக்கு அதிக நாட்கள் நீடிக்கவில்லை. கி.மு 175-ல் சிரியா ராஜாவாக **அந்தியோகஸ் எப்பிபானஸ்** ஆட்சிக்கு வந்தார். அவர் தனது முற்பிதாக்களைப் போல் இல்லாமல் மிக கொடியவராக இருந்தார்.

❖ யோசேப்பை அறியாத பார்வோனைப் போல் இவர் யூதர்களை வெறுத்து குல எதிரிகளாக எண்ணி பழி வாங்க தொடங்கினார். கி.மு. 168-ல் 40,000 யூதர்களை கொன்று குவித்தார். யூத பெண்களையும் , பிள்ளைகளையும் அடிமைகளாக்கி விற்றார்.

❖ எருசலேமை தகர்த்து மண்மேடாக மாற்றினார். தேவாலய பலி பீடத்தில் ஒரு பெண் பன்றியை பலியிட்டு அங்கு ஜீபிடர் தேவனுக்கு

ஒரு பலிபீடத்தையும் கட்டினார். யூத மக்கள் தேவாலயம் செல்ல தடைவிதித்தார்.

❖ விருத்த சேதனத்தை தடைசெய்து நியாயப்பிரமான நூல்களை கிழித்தெரிந்தார். யூதர்களை பன்றி இறைச்சி உண்ண பலவந்தம் செய்தார்.

❖ மூன்றாண்டுகள் ஆராதனையின்றி கிடந்த தேவாலயத்தை கிரேக்க தேவனான ஜோ- வை ஆராதிக்க பிரதிஷ்டை பண்ணினார்.

❖ கிரேக்க கலா சாரத்தை யூதர்கள் ஏற்கவேண்டும் என கட்டாயப் படுத்தினார்.

❖ யூத மதத்தை வேரோடு அழிக்க நினைத்தார்.அப்போதுதான் **"யூதாஸ் மக்கபேயேஸ்"** என்பவர் யூத மதத்தை காக்க எழுந்தார்.

5. மக்கபேயர்

❖ யூதாஸ் மக்கபேயஸ் என்பவர் ஒரு யூத ஆசாரியனின் மூத்த மகன்.

❖ இவர் யூதர்களுக்கு தனி சுதந்திரம் வேண்டும் என போராட துவங்கினார்.

❖ இவரும் இவருடைய மூன்று சகோதரர்களும் சீரியர்கள் மீது போரிட்டு அதில் முன்னேற்றம் அடைந்தனர்.

❖ சிரியா படையை வெற்றி கொண்டு எருசலேமை கைப்பற்றினர்.

❖ தீட்டான தேவாலயத்தை தூய்மையாக்கி பிரதிஷ்டை செய்தனர். இந்த நிகழ்ச்சியின் நினைவாக யூதர்கள் கொண்டாடுவதே யோவான் 10:22-ல் கூறப்படும் **தேவாலய பிரதிஷ்டை பண்டிகை.**

❖ இதற்கிடையே கடுமையாக நோய்வாய்பட்ட அந்தியோகஸ் எப்பிபானஸ் இறந்தார்.

❖ மக்கபேயருடைய ஆட்சியின் போது சற்று அமைதி உருவானது. ஆனால் அது தற்காலிக அமைதியே.

❖ இந்த அமைதி யூதர்கள் தாங்கள் ஒருவரோடுவர் போரிட்டு கொள்ளும் காலம் வரையே நீடித்தது.

❖ **கத்தோலிக்க வேதத்தில் மக்கபெயர் என்ற பெயரில் இரண்டு புத்தகங்கள் இருக்கிறது.**

இந்த மக்கபேயர் காலத்தில் நடந்த ஒருசில முக்கியமான காரியங்கள்.

- இந்த காலத்தில் ஒரு சில பிரிவினர் யூதர்கள் மத்தியில் உருவாயினர்.
- **தள்ளுபடி ஆகமங்கள்** இந்த காலத்தில் எழுதப்பட்டது.

- தேவனுடைய ஆலயத்தில் ஆராதனை செய்ய ஒரு சில குழுவினர் பிரிக்கப்பட்டது இந்த காலகட்டத்தில்தான். **பரிசேயர், சதுசேயர், வேதபாரகர்** போன்றோர் ஏற்படுத்தப்பட்டனர்.
- இவர்கள் ஒருசில கொள்கை ரீதியான பிரிவினைகளை கொண்டிருந்தனர். உயிர்த்தெழுதல் உண்டு என்று நம்பும் ஒரு பிரிவினர், உயிர்த்தெமுதல் இல்லை என்று நம்பும் ஒரு பிரிவினர் இருந்தனர்.

- எனவே இவர்கள் மத்தியில் வரும் கருத்துக்களை, பிரச்சனைகளை பரிசீலிக்க **ஆலோசனை சங்கத்தை** ஏற்படுத்தினர்.இதற்கு "**பிரதான ஆசாரியன்**" தலைவராக இருந்தார். இதில் முடிவெடுத்து காரியங்கள் செய்தனர்.

6. ரோமப் பேரரசு.

- கி.மு 753-ல் இத்தாலியாவின் தைபர் நதி ஓரத்தில் உள்ள ஒரு மலையின் மேல் **இரண்டு சகோதரர்களால் சேர்ந்து நிறுவிய பட்டணமே ரோம நகரம்** என்று பரம்பரை கதைகள் கூறுகின்றன.
- "**ஜன நாயகத்தின் தொட்டில்**" என்ற பெயர் இதற்கு உண்டு.
- கொடுங்கோல் ஆட்சி செய்த ஒரு ராஜாவை தள்ளிவிட்ட ரோம மக்கள் "**கோன்சல் ஆட்சி**" முறையை கொண்டு வந்தனர்.

❖ மக்கள் பிரதிநிதிகளான இந்த கோன்சல்ா்கள் 500 பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இந்த 500 பேர் தங்களுக்கான ராஜாவை தேர்ந்தெடுப்பார்கள்.

❖ தேர்ந்ததெடுக்கப்பட்ட ரோம கோன்சர்களில் சிறந்தவராக விளங்கியவர் **“ பாம்பி எனப்பட்ட க்னேயூஸ் பாம்பியஸ் மாக்னஸ் ”.**

❖ இவர்காலத்தில் சிரியாவையும், பாலஸ்தீனத்தையும் ரோமப் பேரரசின் பகுதியாக மாற்றினார்.

❖ ரோம அரசர்களில் பெரியவர் யார் என்றால் **“ ஜீலியஸ் சீசர் ”.**

❖ இவர் சிறந்த போர்வீரன். அரசியல் சூழ்ச்சி மிக்கவர், சிறந்த பேச்சாளர், எழுத்தாளர், வரலாற்று அறிஞர், ஆகிய பல நிலைகளில் சிறந்தவர். இவர் பொறுமை மிக்கவரும், கருணை மிக்கவருமாயிருந்த போதிலும் மனதைரியமும், துணிச்சலும் மிகுந்தவராக இருந்தார்.



❖ இவர் “அந்திப்பேட்டர்” என்பவரை யூத ஆளுனராக கி.மு.47-ல் நியமித்தார். அந்திப்பேட்டர் தனது மகனான ஏரோதை கலிலேயாவின் அதிகாரியாக்கினார்.

❖ **ஜீலியஸ் சீசரை கி.மு 44 மார்ச் 15 –ந் தேதி “ புரூட்டஸ்” என்பவர் சூழ்ச்சி செய்து கொன்றார்.**

❖ ஜீலியஸ் சீசருக்கு பின்பு ரோமப் பேரரசை ஆண்ட மூவரில் ஒருவர் **மார்க் அந்தோணி**. இந்த மார்க் அந்தோணியின் அன்பையும், ஆதரவையும் ஏரோது பெற்றார். எனவே ஏரோதுக்காக ரோம ஆட்சிக் குழுவில் தலையிட்டு **ஏரோதை யூதரின் ராஜாவாக மார்க் அந்தோணி நியமித்தார்.**

❖ இந்த ஏரோதுவின் காலத்தில்தான் **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்த பூமியில் கன்னி மரியாளின் வயிற்றில் பிறந்தார்.**

❖ ஏரோதின் மரணத்திற்கு பிறகு பாலஸ்தீனா பிரிந்து அவரது 3 மகன்களால் ஆளப்பட்டது.



1. **ஏரோது அந்திப்பாஸ்** - **கலிலேயா , பெரேயா**
2. **பிலிப்பு** - **தெக்கப்போலி**
3. **அர்கெலாயு** -**யூதாயா/சமாரியா/ இதுமேயா**



❖ இந்த **அர்கெலாயு** கொடூரமானவராக இருந்தார். இவர்கள் ஆட்சி காலத்தில் இவர்கள் ஆட்சியை மேற்பார்வையிட கவர்னரை (தேசாதிபதி) ரோம அரசு நியமித்தது.

❖ இந்த நாட்களில் யூதர்கள் சந்தித்த 3 காரியங்கள்

1. **எபிரேய மதம்**
2. **கிரேக்க கலாச்சாரம்**
3. **ரோம அரசியல்.**

யூதர்கள் நியாயப் பிரமாணத்தில் மிகுந்த வைராக்கிய முள்ளவர்களாய் இருந்தனர். எனவே கிரேக்க கலாசாரத்திற்கு எதிராக அவர்கள் வாழவேண்டி இருந்தது.

❖ இந்த மூன்றும் (மதம், கலாச்சாரம் , அரசியல்) புதிய ஏற்பாட்டில் மிக முக்கியத்துவம் வகிக்கிறது. **அப்பவுல் தனது ஊழியத்தில் கிரேக்க கலாசாரத்தையும், ரோம ஆட்சியையும் சமாளித்து ஊழியம் செய்ய வேண்டி இருந்தது.**

❖ ரோமர்களின் அரசியல் சட்டங்கள் மிக கடுமையானதாக இருந்தது. அதில் முக்கியமானது **“ சிலுவை மரணம்”** இது ரோமர்கள் கொண்டு வந்தது. இவை பழைய ஏற்பாட்டில் இல்லை.

புதிய ஏற்பாட்டு காலத்தில் இஸ்ரயேல் தேசம்

1.	கி.பி 70 முதல் கி.பி 313 வரை	-	ரோமர் ஆட்சிகாலம்
2.	கி.பி 313 முதல் கி.பி 636 வரை	-	பிசான்டின்ஸ் (BYZANTINES)என்பவர்கள் வசம் இருந்தது.
3.	கி.பி 637 முதல் கி.பி 1091 வரை	-	அரேபியர்கள் வசம் இருந்தது.
4.	கி.பி 1091 முதல் கி.பி 1098 வரை	-	செல்யூக்கஸ் (Selukus) என்ற இனத்தாரிடம் இருந்தது.
5.	கி.பி 1099 முதல் கி.பி 1291 வரை	-	சிலுவைப் போர் புரிந்த மன்னர்களிடம் இருந்தது.
6.	கி.பி 1291 முதல் கி.பி 1516 வரை	-	மம்லுக்ஸ் (Mamluks) என்ற வம்சத்தாரிடம் இருந்தது.
7.	கி.பி 1517 முதல் கி.பி 1917 வரை	-	துருக்கியரின் ஆட்சியின் கீழ் இருந்தது.
8.	கி.பி 1918 முதல் கி.பி 1948 வரை	-	பிரிட்டிஷ் ஆட்சியரிடம் இருந்தது.
9.	கி.பி 1948- ல் இஸ்ரயேல் தனி நாடாக உருவானது.		

For more details contact:

9442791359, 6382973399